
# நித்திலம்

# නිත්තිලම්

# 2013





**வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை**

CSDI பிரிவு வெளியிடும் வருடாந்த சஞ்சிகை

**කලාප අධ්‍යාපන කාර්යාලය - ත්‍රිකුණාමලය**

CSDI කොට්ඨාශය ඉදිරිපත් කරන වාර්ෂික සඟරාව


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/Vipulananda College * TRINCOMALEE *
SCHOOL LIBRARY RESOURCE CENTRE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நித்திலம்

# නිත්තිලම්

# 2013

**வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை**

CSDI பிரிவு வெளியிடும் வருடாந்த சஞ்சிகை

**කලාප අධ්‍යාපන කාර්යාලය - ත්‍රිකුණාමලය**

**CSDI** කොට්ඨාශය ඉදිරිපත් කරන වාර්ෂික සඟරාව

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு .N. விஜேந்திரன்<br>(வலயக் கல்விப் பணிப்பாளர்) |
| பதிப்பாசிரியர் | : | திரு. R. நிமலரஞ்சன்<br>உதவிக் கல்விப் பணிப்பாளர் – (அழகியல்) |
| உதவிப் பதிப்பாசிரியர் | : | திரு. K. செல்வநாயகம்<br>கோட்டக் கல்விப் பணிப்பாளர் – (குச்சவெளி) |
| ஆலோசகர்கள் | : | திரு. K. அரியநாயகம்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (நிர்வாகம்) |
| | : | திருமதி .S. வரதசீலன்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (அபிவிருத்தி) |
| | : | திருமதி. P. ஜெரால்ட்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (திட்டமிடல்) |
| | : | திருமதி. D.H. மாலினி<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (சிங்களம்) |
| | : | திரு. A. செல்வநாயகம்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (முகாமைத்துவம் ) |
| | : | ஜனாப். M.K .அனீஸ்<br>(நிர்வாக உத்தியோகத்தர்) |
| | : | திருமதி .R. அமிர்தலிங்கம்<br>ஆசிரிய ஆலோசகர் – (இந்துசமயம்) |
| | : | திருமதி. I. ரகுந்திரராஜா<br>ஆசிரிய ஆலோசகர் – (தமிழ்மொழி) |
| | : | செல்வி. T. சாரதா<br>ஆசிரிய ஆலோசகர் – (சமூக விஞ்ஞானம்) |
| | : | கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் |
| | : | உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் |
| | : | ஆசிரிய ஆலோசகர்கள் |
| | : | வலயக் கல்வி அலுவலர்கள் |
| நிதி நிர்வாகம் | : | செல்வி. S. அமுதா<br>(கணக்காளர்) |
| உதவி அலுவலகர்கள் | : | ஜனாப். T. முகமது இன்சாப்<br>(முகாமைத்துவ உதவியாளர்) |
| | : | திரு. K. ராஜா<br>(அலுவலக உதவியாளர்) |
| அச்சுப் பதிப்பு | : | S.S.Digital's<br>No: 58, Vidyalayam Road ,<br>Trincomalee. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை கல்வி வலயக் கீதம்

வாழ்க.....................வாழ்கவே!
எங்கள்திருமலைக்கல்விவலயம்
வாழ்க...............வாழ்கவே!

பழி இழிபாவ இருள்மறைந்திடவே
தமிழர், சிங்களவர், முஸ்லீம், பறங்கியரும்
அன்போடுஒன்றாய்விழித்தெழுந்திடவே
வாழ்க...............வாழ்கவே!
(எங்கள் திருமலை)

மறிகடலோதம்எழில்நலம்பெருகி
அறிவொளிமாந்தர்அனுதினம்ஊட்டும்
சாகித்ய இசை மலை வான்புகழோங்க!
வாழ்க...............வாழ்கவே!
(எங்கள் திருமலை)

உடலுறு கல்வி உயர்வுடன் ஈந்து
உள்ளங்களெல்லாம்உன்னதம்பெறவே
சீர்பெறஉழைக்கும்திருமலை வலயம்
வாழ்க...............வாழ்கவே!
(எங்கள் திருமலை)

புலன்வழிக்கல்வி பயனுற அளிக்கும்
வினைத்திறன்உறுதிவிளைந்திடும்சமூகம்
கதிரொளிதீபம்கொழித்திடும்திருமலை,
வாழ்க...............வாழ்கவே!
(எங்கள் திருமலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# කලාප ගීතය

ජයවේ ජයවේවා !
අපේ ත්‍රිමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !
අපේ ත්‍රිමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !

අඳුරු ලොවේ භය දුරු වී සැනසි//
සැම ජාතීන් සතුටින් එකමුතු වී
දියුණුව වෙත යමු එකම සිතින් අපි //
ජයවේ ජයවේවා !

මුහුදේ රැලි සුන්දර බව වැඩිවී//
සැමදා දියුණුවූ බුද්ධියේ මැණිය
අපේ ත්‍රිමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !

නැණ ගුණ වැඩිවී දියුණුව සැලසී //
සැම සිත් සැමදින එකමුතු කරමින්
දියුණුව උදෙසා වෙහෙස දරණ ඔබ//
ජයවේ ජයවේවා !

ආර්.ජේ.එම්.රාජපක්ෂ මිය.
ගුරු උපදේශිකා (සංගීත)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vision

A Community of Efficient and
an Effective Personalitys.

# Mission

Providing Educational Activities to
attain a balanced Personality
with physical ,moral,Cultural
'Spiritual and Economic
Standards among the societies

# Motto

Education, Discipline and
Completeness



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.........


**01. ஆசிச் செய்தி**

எம்.நஜீப் அப்துல் மஜீத்
முதலமைச்சர்,
கிழக்கு மாகாணம்.

**02. නැගෙනහිර පළාත් අධ්‍යාපන අමාත්‍යතුමාගේ පණිවුඩය**

**විමලවීර දිසානායක**
**නැගෙනහිර පළාත් අධ්‍යාපන ,**
**ඉඩම් ,ඉඩම් සංවර්ධන,**
**ප්‍රවාහන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍ය**

**03. නැගෙනහිර පළාතේ ප්‍රධාන ලේකම්ගෙපණිවිඩය.**

**ඩී.එම්.එස්.අබයගුණවර්ධන**
**ප්‍රධාන ලේකම්**
**නැගෙනහිර පළාත.**

**04. Felicitation massage**

N.A.A Pushpakumara
Secretary.
(Ministry of education, Cultural Affairs,
Land & Land Administration Transport Authority)
Eastern Province

**05. வாழ்த்துரை**

ஜனாப் எம். ரி.ஏ.நிஸாம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

**06. வாழ்த்துரை**

கலாநிதி.சி.சிவநிர்த்தானந்தா,
உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்)
மாகாணக் கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்
திருகோணமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. வலயக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி**

நடேசலிங்கம் விஜேந்திரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
திருகோணமலை

**08. பதிப்பாசிரியரின் இதயத்திலிருந்து.....**

இ.நிமலரஞ்சன்,
உதவிக்கவிப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை

**09.සුභ පැතුම්**

**තිරියාය ගිරිහඬුසෑය රජමහ විහාරාධිපති
සිරි ආනන්ද වංශාවතංස සද්ධර්ම කීර්ති ශ්‍රී
ත්‍රි / කලාප අධ්‍යාපන කාර්යාලය ගුරු උපදේශක
ශාස්ත්‍රපති පූජ්‍ය දෙවිනුවර චන්දිම නාහිමි**

**10.ஆசிச் செய்தி**

வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ.சோ.இரவிச்சந்திரக் குருக்கள்.j.p
ஆலய பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும்,
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.

**11.ஆசிச் செய்தி**

மௌலவி.M.Y.ஹதியதுல்லாஹ் (SLPS)
பிரதி அதிபர்,
தி/அல்-ஹம்றா மகா வித்தியாலயம்,
இறக்கக்கண்டி

**12. ஆசிச் செய்தி**

அதிவந். கலாநிதி. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

திருகோணமலை மறை மாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

01. மனிதத்தின் துயரத் தவிப்பு 01

திரு.க.சதாசிவம்
அதிபர்
தி/கன்னியா அ.த.க.பாடசாலை

02 தமிழ்மொழி 02

திருமதி.சு.யுவராஜா (ஆசிரியை)
தி/ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியாலயம்
திருகோணமலை

03 கவிஞன் 04

அ.கௌரிதாஸன்

04 தண்மை உன் தனித்துவம்! 05

கவிஞர்.ஷெல்லிதாசன்

05 மொழித்திறன் விருத்தியில் வாசிப்பின் பங்கு 07

திருமதி.பத்மசிறி ஜெயகாந்தன்
I.S.A, Pri.Trd, B.A
Dip in Ed, PGDEM

06 புருணரின் அறிவுசார் வளர்ச்சிக் கொள்கையும் பிள்ளையின் எண்ணக்கருவாக்கமும் 10

C.Arulmoly,
B.Sc (Agri), PGDE, PGDEM (Merit), M.Sc (Edu.Mgt) CTHE, M.Phil, SLEAS
Senior Lecturer in Education, Department of Education and Childeare
Faculty of Arts and Culture , Eastern University, Sri Lanka

07 பிள்ளை விருத்தி பற்றிய விஞ்ஞான ரீதியிலான ஆய்வுகள் 17

ரூசாபா பாலசுந்தரம்
விரிவுரையாளர் - கல்வி பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

08 வலயக்கல்வி அலுவலக நிர்வாகக் கிளை எதிர்நோக்கிய சவால்களும், முன்னேற்றமும் - 2013 26

திரு.க.அரியநாயகம்
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
நிர்வாகப்பிரிவு

09. வருடாந்த சேவை விபர அறிக்கை நிர்வாகக் கிளை (ஜனவரி 2013 தொடக்கம் டிசம்பர் 2013 வரை) வலயக் கல்வி அலுவலகம் திருகோணமலை 31




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 සිල් සුවඳ 35
ඩබ්.ආර්.සී.වික්‍රමසිංහ
ත්‍රි/එරක්කණ්ඩි සිංහල විද්‍යාලය
ගුරු වෘත්තිය

11 கல்விப் பின்னடைவுகள் ஓர் கண்ணோட்டம் 39

திரு.அ.ஹரிகரன்
பிரதி அதிபர்
தி/குளக்கோட்டன் த.வி
தம்பலகாமம்

12. ஆசிரியத்துவம் 42

திருமதி.உருத்திரா அமிர்தலிங்கம்
(B.A.Dip in Edu)
ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம்
திருகோணமலை

13. உரிமை பெற்று வாழ வைப்பீர் எமை 47

திருமதி.சிவகௌரி மோகன் (ஆசிரியை)
தி/அல்-மின்ஹாஜ் மு.ம.வி
மட்கோவ்,
திருகோணமலை

14. இளைஞரை அழைக்கிறது இஸ்லாம் 50

ஜீ.ரீ.இக்பால்
அதிபர்
தி/அல்-மின்ஹாஜ் முஸ்லிம் ம.வி,
மட்கோ
திருகோணமலை

15 மறைந்தும் மறையாத மனிதர்கள் யார்? 52

திரு.வ.செல்வநாயகம் (அதிபர்)
தி/ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியாலயம்,
திருகோணமலை

16. கல்வியின் முக்கியத்துவம் 53

செல்வி.T.சாரதா
I.S.A Social Science

17 ඉගෙන්වීම් ක්‍රියාවලියේ නිසි ලෙස යෙදීම ගුරුවෘත්තියේ වගකීමයි. 55
එම්.එම්.එන්.ධනුෂ්ක මයා
ත්‍රි/නාලන්දා මහ විද්‍යාලය
ගුරු වෘත්තිය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பண்பாளர் ஆக்கிடுங்கள் 58

திருமதி.இ.காளிராசா (ஆசிரியை)
தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்.
திருகோணமலை

19. வகுப்பறை முகாமைத்துவம் 59

திருமதி.ஜீ.மதியழகன்,
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்)
B.BA. Dip.in.Edu, M E D , SLPS II

20. **Science and Islam** 65

21. இன்றைய மாணவர்கள்மீதும், அவர்களின் கல்விமீதும் சமூக வலைத்தளங்களின் தாக்கம் 70
**The Impact of social Networking sites on Education and Students**

மா.பாலசிங்கம்
பிரதி அதிபர்
தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி,
திருகோணமலை

22. கற்பித்தலில் 75

Mrs.C.Sounderarajah
T/Methodist Girls' College

23. சமூகமாற்றத்தின் முகவர் ஆசிரியர் 78

Mrs.T.Vishnukumar
T/Konalingham M.V.

24. அவன் மட்டும் வகுப்பில் இல்லை 80

Mr.S.Vimalathason
Nilaveli T.M.V.

25. ஆத்துமாவின் அழுகை 83

Mrs.Sivagowri Mohan
Al-min-Haj M.V.

26. மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி 89

Mrs.K.Kamalendrakumar

27. ஆத்துமாவின் அழுகை 92

Mrs.Reetta Fernando,
T/St.Loudes R.C.School



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. பிள்ளையின் பழக்க வழக்கத்திறனில் பெற்றோரின் பங்களிப்பு 95

பௌசுல் அமீர் றிஸானா (ஆசிரியர்)
தி/அல்-மின்ஹாஜ் மு.ம.வி
மட்கோவ்.

29. கல்வி கலாசாரத்தில் ஆசிரியரின் நடிபங்கு 98

திருமதி.இ.ரகுந்திரராஜா,
ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
வலயக் கல்வி அலுவலகம்,
திருகோணமலை.

30 கற்பித்தலில் 102

Mr.A.J.Mohamed Sally
Jamaliya Muslim M.V.

31 **සතුටින් උගනිමු.** 105

**එම්.එස්.තිලකසිලී**
**ගුරු උපදේශක(ප්‍රාථමික)**
**කලාප අධ්‍යාපන කාර්යාලය.**
**ත්‍රිකුණාමලය**

32 மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர்களின் பணி 106

Mrs.S.M.Lafeer
Kumbrupiddy MMTMS

33. ඇදුරිඳු සඳකි නුඹ ලොව එකලු කළ....... 109
යූ.එච්.පී.ප්‍රියංගනි
ත්‍රි/නාලන්දා මහ විද්‍යාලය
ගුරු වෘත්තිය

34. பாடசாலை ஆசிரியர்கள்: 111
பிரச்சினைகளும் அறைகூவல்களும்

35 கற்பித்தலில் 117

Mr.Uthesh Vickneshwaramoorthy
T/Sri Shanmuga Hindu Ladies College

36 கல்விக்கல்லூரிகளும் - ஆசிரியர் கல்வி தொடர்பான 119
சேவை முன் தொழிற்பயிற்சிகளும்.

37 "**සිසුන් සොයා යන ආලෝකය ඔබයි අප ගුරුතුමෙනි.**" 127
බී.ජී.එස්.ප්‍රසාදිනි
ත්‍රි/සිංහල මධ්‍ය මහ **විද්‍යාලය**
**ගුරු වෘත්තිය**

38 இன்றைய பாடசாலைத் தலைவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் 129
தீர்வுக்கான சில உபாயங்களும்
திரு. ஆ.செல்வநாயகம்,
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,(கல்விமுகாமைத்துவம்)
வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி...



திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்படுகின்ற ஐந்தாவது "நித்திலம்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஏனைய கல்வி வலயங்களைவிட திருகோணமலைக் கல்வி வலயம் சிறப்பிடம் பெறுகின்றது. காரணம் அது மூவினமக்களையும் இணைத்துக் கொண்டு சிறப்பாகக் கல்விச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதாகும். இந்நித்திலம் சஞ்சிகையில் கூட மூவின அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து அவர்களது ஆற்றல்களை வெளிக்கொணர சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதானது பாராட்டத்தக்கதோர் அம்சமாகும். அது மட்டுமல்ல கல்வியில் சிறந்த அறிஞர்கள், விரிவுரையாளர்கள், கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் போன்றோர்களது ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் பல்வகையான ஆக்கங்களை சுமந்து வந்திருப்பதானது இச்சஞ்சிகையை மேலும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளது.

எதிர்காலத்திலும் இவ்வாறான பல தகவல்களை நவீன உலக மாற்றத்திற்கேற்ப சுமந்து வரவேண்டுமென வாழ்த்துகின்றேன். இச்சஞ்சிகையை வெளியிடுவதற்காக அயராது உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ அல்-ஹாஜ் நஜீப் ஏ.மஜீத்.**
முதலமைச்சர்,
கிழக்குமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# නැගෙනහිර පළාත් අධ්‍යාපන අමාත්‍යතුමාගේ පණිවුඩය



ත්‍රිකුණාමලය අධ්‍යාපන කලාපයේ පාසල්වල අධ්‍යාපන ක්‍රියාවලියේ ප්‍රගතිය කුමනාකාරද යන්න පැහැදිළි කරමින් වාර්ෂිකව එළිදක්වන "නිත්තිලම්" සඟරාවේ 2013 කලාපයට පණිවුඩයක් නිකුත් කිරීම සඳහා ලද අවස්ථාව සතුටින් භාර ගනිමි.

වාර්ෂිකව එළිදක්වන මෙම සඟරාවේ ත්‍රිකුණාමලය අධ්‍යාපන කලාපයේ සිංහල මාධ්‍ය පාසැල් 14 ක් හා දෙමළ මාධ්‍ය පාසැල් 72 ක් වශයෙන් වූ සිසු දරුවන්ගේ, ගුරු භවතුන්ගේ හා ගුරු උපදේශක වරුන්ගේ නිර්මාණ දක්ෂතා විදහා පෙන්වනු ලබයි.

විනාශකාරී යුද්ධයෙන් උපරිමව පීඩාවට පත් මෙම ප්‍රදේශයේ සංවර්ධනය උදෙසා අප විසින් හැකි පමණින් සාපේක්ෂව විශාල වශයෙන් භෞතික හා මානව සම්පත් යෙදවීම සිදු කරන ලදි. එසේ නමුත් එය ප්‍රමාණවත් වූවා යැයි පැවසිය යුතු නැත. පවතින්නා වූ බොහෝ ඌනතා මධ්‍යයේ මෙම කලාපයේ උසස් පෙළ සාමාර්ථ ප්‍රගතිය නැගෙනහිර පළාතේ කලාප 17 අතරින් 03 වන ස්ථානය ගෙන තිබීම පැසසුම් කටයුතු ය. ඒ සඳහා දායක වූ ගුරු භවතුන්ට, ගුරු උපදේශක තුමන්ට හා නිලධාරි මහතුන්ට ස්තූති කළයුතු වෙමු.

වාර්ෂිකව මෙවැනි සඟරාවකින් එළිදක්වන තොරතුරු මගින් කලාපයේ පාසැල් තම අධ්‍යාපන ක්‍රියාවලිය තුළ අත්කර ගෙන ඇති ජයග්‍රහණ හා පසු බැසීම් සන්සන්දනාත්මක ලෙස විමසා බැලීමට හැකිවීම ඉදිරි ජයග්‍රහණ සඳහා වැදගත් වේ. මෙවන් කටයුත්තක් සාර්ථකව සංවිධානය කර එළිදැක්වීම සඳහා කැපවූ කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ එන්. විජේන්ද්‍රන් මහතා ඇතුලු සියලු නිලධාරීන්ට හා විදුහල්පති තුමන්ලා හා ගුරු භවතුන්ට මාගේ ප්‍රශංසාව පිරිනමමි.

විමලවීර දිසානායක
නැගෙනහිර පළාත් අධ්‍යාපන, ඉඩම්, ඉඩම් සංවර්ධන,
ප්‍රවාහන සංස්කෘතික කටයුතු අමාත්‍ය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# නැගෙනහිර පළාත් සභා ප්‍රධාන ලේකම්තුමාගේ පණිවුඩය.

නැගෙනහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුවේ ත්‍රිකුණාමලය කලාප අධ්‍යාපන කාර්යාලය මගින් වාර්ෂිකව නිකුත් කරනු ලබන "නිත්තිලම්" සඟරාවේ 2013 කලාපයට පණිවුඩයක් නිකුත් කිරීමට ලැබීම සතුටකි.



පුරා වසරක කාලයක් කලාප අධ්‍යාපන කාර්යාලය මගින් දියත් කරන ලද සංවර්ධන කර්යයන් පිළිබඳ මනා සැළසුම්කරණයක් සඳහා ගනු ලබන උත්සහායක් ලෙස මම මෙම සඟරාව දකිමි. රටක සංවර්ධන ක්‍රියාවලියේදී අධ්‍යාපන සංවර්ධනය සඳහා යොදවනු ලබන ආයෝජනය ඉතා දීර්ඝ කාලීන හා ස්ථිරසාර ප්‍රතිඵල ලබන ආයෝජනයක් වන බැවින් එය ඉතාමත් සැළසුම් සහගතව ක්‍රියාත්මක කිරීම අත්‍යවශ්‍ය කරුණකි.

විශේෂයෙන් ශ්‍රී ලංකාව වැනි සංවර්ධනය වෙමින් පවතින රටක මෙය ඉතාමත් වැදගත් වේ. එබැවින් කලාප අධ්‍යාපන කාර්යාලය මේ පිළිබඳ අවධානය යොමු කිරීම පැසසිය යුතුය.

පුරා වසර 30 කට අධික කාලයක් පැවති ත්‍රස්තවාදී ක්‍රියා හේතුවෙන් පසුගාමීව පැවති මෙම ප්‍රදේශයේ අධ්‍යාපන සංවර්ධන කටයුතු මේ වන විට ඉතාමත් වේගයෙන් ක්‍රියාත්මක වන අතර, ඒ පිළිබඳව මහ ජනතාවට දැනගැනීමටත්, එතුළින් ජනතා විශ්වාසය වර්ධනය කර ගැනීමටත් ලැබිය හැකි තවත් ප්‍රතිලාභයකි.

ඒ බැවින් මෙම සඟරාවට මාගේ සුබ පැතුම් පිළිගන්වන අතර මෙම සඟරාව දෙමාපියන්ට හා දරුවන්ට වඩාත් සමීප සඟරාවක් වේවායි පතමි.

ඩී. එම්. එස්. අබයගුණවර්ධන
ප්‍රධාන ලේකම්
නැගෙනහිර පළාත

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “Felicitation massage”



It is a pleasant privilege to send this massage of felicitation on the eve of publication of “NITHTHIZHAM” of the Zonal Education office Trincomalee.

I realize the importance of the manuscript among the students of the eastern province since 2008, which enhanced the skill of manuscript writing among the students of this Province. The much anticipated publication of “NITHTHIZHAM” is to be the first among book on manuscript competition of the Eastern Province. This book greatly brings our students talents not only to the people of the Eastern Province, but also nationwide. after the publication of this book, I hope the students of my province would be interested and more creative on skill art, literature etc. on the other hand the teachers would provide invaluable skill on how to bring our students’ hidden talent on manuscript the writing. This book gives more interest on writing manuscript among students, teachers as well as parents.

The publication of this book will not only give moral boost to students and teachers but will make the parents aware of the articles published by the zonal educational office Trincomalee.

I wish to congratulate them and wish them all success as the secretary for the ministry of education, eastern province, Trincomalee.

N.A.A Pushpakumara
Secretary.
(Ministry of education, Cultural Affairs, Land & Land Administration Transport Authority)
Eastern Province

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



திருக்கோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவினால் வெளியிடப்படும் "நித்திலம்" கல்விச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நித்திலம் கொழிக்கும் கோணமாமலை என்பது பதிகமொன்றின் பாடலடியாகும். திருக்கோணமலைக்கு பெருமை சேர்க்கும் நித்திலம் என்னும் தலைப்பினை இச் சஞ்சிகைக்கு சூட்டியிருப்பது சாலப் பொருத்தமானதொன்றாக அமைந்துள்ளது. கடந்த நான்கு வருடங்களாக இச் சஞ்சிகை வெளிவருகின்றது. இவ்வாறானதொரு சஞ்சிகை எந்த வலயத்திலும் தொடர்ச்சியாக வெளிவருவதாக அறிய முடியவில்லை. இவ்வலயத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள், ஏனைய வலயங்களுக்கு முன்மாதிரியானவை மட்டுமல்ல வழிகாட்டிகளாகவும் அமைந்துள்ளன. "புதிய செல்நெறி" என்னும் செய்தித்தாளும் காலாண்டுக்கொருமுறை வலயமட்டச் செயற்பாடுகளை வெளிப்படுத்தி வெளிவருவதை நானறிவேன்.

சஞ்சிகையொன்றினை வெளியிடுவது என்பது இலகுவானதொரு செயற்பாடல்ல. பாரியதொரு பணியென்றே அதனைக் கூறவேண்டும். பல மலர்கள் ஒன்று சேர்ந்து மாலையாவது போல பலரதும் ஒத்துழைப்பின் மூலமே இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெற முடியும். இச் சஞ்சிகையானது பலரதும் எழுத்தாக்கத் திறன்களை வெளிக் கொணரக் களம் அமைத்துக் கொடுக்கும் ஒரு செயற்பாடாகும். பல்வேறு வகையான ஆக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ள "நித்திலம்" என்னும் சஞ்சிகையானது தனது சிறகினை அகல விரித்து தேசிய மட்டத்திலும் செல்வாக்குற்று விளங்குவது பெருமைக்குரியதாகும். வலயமட்டத்தின் பல்வேறு தகவல்கள் இச்சஞ்சிகையின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இவையோ வரலாற்றுப்பதிவுகளாகத் திகழும்.

இச் சஞ்சிகை வெளியீட்டுக்கான தங்கள் ஒத்துழைப்பினையும், பங்களிப்பினையும் நல்கியவர்களைப் பாராட்டுவதோடு இப்பணியினை முன்னெடுத்துச் செல்லும் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் அவர்களுக்கும், இச் சஞ்சிகையின் ஆசிரியர் திரு.ஆர்.நிமலரஞ்சன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும். இவ்வாறான செயற்பாடுகள் இனிவரும் காலங்களிலும் தொடர எனது வாழ்த்துக்கள்.


**ஜனாப்.எம்.ரி.ஏ.நிஸாம்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம், திருக்கோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்படும் 'நித்திலம்' என்னும் கல்விச் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எமது நாட்டிலே உள்ள கல்வி வலயங்களில் எந்தவொரு கல்வி வலயத்தினாலும் மேற்கொள்ளப்படாத ஒரு தனித்துவமான செயற்பாடாகவே இச் சஞ்சிகை வெளிப்பாட்டைக் கருதமுடியும். திருக்கோணமலைக்கே சிறப்பினைத் தரக் கூடிய வகையில் 'நித்திலம்' என்னும் பெயர் பொருத்தப்பாடானதாக அமைந்துள்ளது.

இக்கல்வி வலயத்தினால் பல்வேறு வகையான நடவடிக்கைகள் வருடந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களாலும், அதிபர்களாலும், மாணவர்களாலும் பல சாதனைகள் படைக்கப்படுகின்றன. இவை நீர் மேல் எழுத்தாக அமைந்து விடக்கூடாது. இவை யாவும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இச்சஞ்சிகையின் மூலம் ஏராளமான விடயங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பல்வேறு வகையான ஆற்றல்களுக்கும் களம் அமைக்கும் இச்சஞ்சிகை வலய மட்டம், மாகாண மட்டம் என்ற எல்லையைக் கடந்து, தேசிய மட்டம் வரை தனது இருப்பை வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறானதொரு சஞ்சிகை வெளியிடுவது என்பது இலகுவானதொன்றல்ல.

இச்சஞ்சிகையின் வெளியீட்டுக்கு தனது முழுமையான வழிகாட்டலையும், ஆலோசனைகளையும் வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் அவர்களுக்கும், இப்பத்திரிகையின் ஆசிரியர் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆர்.நிமலரஞ்சன் அவர்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவர்களோடு இச்சஞ்சிகையின் வெளியீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். இனிவரும் காலங்களிலும் இவ்வலயம் பல்வேறு ஆக்கத்திறன் செயற்பாடுகளை முன்னெடுத்து ஏனையவர்களுக்கு வழிகாட்டியாக, முன்மாதிரியாக திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி.சி.சிவநிர்த்தானந்தா,**
உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்)
மாகாணக் கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம், திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



திருக்கோணமலை கல்வி வலய பாடசாலைகளில் மாணவர்களதும், ஆசிரியர்களதும் கல்வி சார் விருத்தியிலும் ஆளுமை விருத்தியிலும், வாண்மை விருத்தியிலும் பல்வேறு மேம்பாடுகளை இலக்காகக்கொண்டு வலயத்தின் வரலாற்றுப் பொக்கிஷமான "நித்திலம்" அதன் வருகை தன்னிகரற்ற தனிப்பெருமை சேர்க்கின்ற வலயம் படைத்த அனைத்து சாதனைகளுக்கும் சான்று. அதனால் அது வலயத்தின் ஏற்றமிகு வளர்ச்சிப் பதிவேடு.

மாறிவரும் உலகின் மாற்றங்களையும், மாற்றத்தின் சவால்களையும் வெற்றி கொண்டு கல்விச்சமூகம் மேன்மையுறும் விதத்தையும் தாங்கி நிற்கின்றது. "நித்திலம்" தனியே ஒரு துறைசார் சஞ்சிகை என்பதற்கப்பால் பல்துறைசார், பல்லினம்சார், பல்கலாசாரம் சார் ஓர் கலவை, பல்வேறு மட்டத்தினரதும் ஆக்கங்கள், பல்வேறு துறைகளிலும் வலயம் தடம் பதித்த அம்சங்கள் என அகன்று செல்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் வலய அலுவலகர்கள் மட்டுமல்ல அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலோசகர்கள், புத்தி ஜீவிகள் எனப் பரந்து பட்டோரின் சிந்தனைக் கட்டமைப்புகளைக் கொண்டிருப்பது இதற்கு பெரும் பலம் சேர்க்கின்றது. வருடந்தோறும் இதன் வருகைக்காக உழைக்கும் அத்தனை உள்ளங்களும் நன்றியோடு நினைவு கூர வேண்டியவர்களே

அது மட்டுமல்ல குறைகடலோத நித்திலம் கொழிக்கும்
கோணமாமலையமர்ந்தாரின்
பாதம்பணிந்து வாழ்த்தி நிற்கின்றேன்.

நடேசலிங்கம் விஜேந்திரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியரின் இதயத்திலிருந்து...



திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் CSDI பிரிவினரால் வருடந்தோறும் வெளியிடப்படும் "நித்திலம்" என்னும் கல்விச் சஞ்சிகையை சென்றவருட இறுதிக்குள் வெளியிடுவதில் சிலவொருவாதாரக் காரணிகள் எமைத் தாமதிக்க செய்தாலும் கூட இவ்வருட ஆரம்பத்தில் இச்சஞ்சிகையை வெளியிட முடிந்தமையை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது வலயம் பல் இன பல் மதசமூகங்களிலிருந்து வருகின்ற மாணவர்களையும் ஆசிரியர்களையும் சமத்துவமாகவும் சகோதரத்துவமாகவும் கொண்டியங்கும் சிறப்பான கல்வி வலயமாகும். இந் நடுவுநிலைமைப் பண்புகளை வளர்த்தெடுக்கும் பணியில் CSDI பிரிவின் சகல வேலைத்திட்டங்களும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். நித்திலம் சஞ்சிகையினூடாக மாணவர்கள் ஆசிரியர்களினுள் பொதிந்துள்ள ஆற்றல்களையும் உணர்வுகளையும் வெளிக்கொணரக் களமமைத்துக் கொடுக்கப்பட்டது மாத்திரமல்லாமல் பலகல்வியியலாளர்கள் மூலம் அவர்களது அறிவுப்பசியைப் போக்கவும் தணிக்கவும் கூட நித்திலம் சஞ்சிகை முயன்றுள்ளது என்பதில் திருப்தியடைகின்றேன்.

இச் சஞ்சிகை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி எம்மை நெறிப்படுத்திய எமது வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.N.விஜேந்திரன் அவர்களை நன்றியுடன் நினைவு கூருவதோடு என்னுடன் தோளோடுதோள் நின்றுழைத்த உதவிப்பதிப்பாசிரியர், வலயக்கல்விப் பணிமனையின் உத்தியோகத்தர்கள் இச்சஞ்சிகைக்கான ஆக்கங்களை தந்துதவியோர்கள் மற்றும் சிறப்புற அச்சுப்பதிப்பு செய்ய உதவிய திரு.டே.பகீரதன் ஆசிரியர் (தி/ இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி) மற்றும், SS Digital's, இல.28 வித்தியாலயம் வீதி, திருக்கோணமலை. நிறுவனத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**இ.நிமலரஞ்சன்,**
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்விஅலுவலகம்,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" නප්පු ගන්ධෝ පාටිවාත මේති
නචන්දනං තගර මල්ලිකාවා
සත්තංච ගන්ධෝ පටිවාත මේති
සබ්බා දිසා සප්පුරිසෝපවාති "

"සාමාන්‍ය මල් සුවඳ ද සඳුන් තවරලා සුවඳ ද සුළඟට නොයයි. නමුත් සත් පුරුෂයින්ගේ සිල් සුවඳ ද සුළඟට යයි. සත් පුරුෂයාගේ සිල් සුවඳ සෑම දිසාවෙහිම පැතිරෙයි.
"ළමා සිත් ප්‍රභාෂ්වරයි. බාහිරින් පැමිණෙන අරමුණු නිසා ප්‍රභාශ්වර සිත දූෂිත භාවයට පත් වේ. ළමා සිත් මල් වලට උපමා කොට ඇත්තේ ඒ නිසාය. මල් වූ කලී විවධයි, විෂමයි, විචිත්‍රයි. ත්‍රිකුණාමලය ප්‍රදේශය විවධ ජාතින් මෙන්ම විවිධ ආගම් නියෝජනය කරන පිරිසක් සිටින බැවින් අප ප්‍රදේශයේ අධ්‍යාපනය ලබන සියලු දරු දැරියන් තුළ මේ ස්වභාවය දැකිය හැකිය.

සාමය උදා වී ඇති මෙවන් සමයක "නිත්තිලම්" වැනි මෙවන් සඟරා වැඩි වශයෙන් දොරට වැඩිය යුතු කාලය පැමිණ ඇත. මෙම පුස්තකය තුළින් දැනුම මෙන්ම රට දැය සුරකින ආගම දහම හඳුනන, දෙමාපියන්ට සහ වැඩිහිටියන්ට, ගුරුවරුන්ට ගරු කරන, යුතුකම් සුරකින, හැකියා බහුල මල් වලටත් වඩා සුවඳවත් සිල් සුවඳින් යුතු දුදරු පිරිසක් දැයට දායද කිරීමට ත්‍රිකුණාමලය කලාප අධ්‍යාපන කාර්යාලය මගින් දරනු ලබන උත්සහය සාර්ථක වේවා. ත්‍රිවිධ රත්නයේ ආශිර්වාදය ලැබේවායි ප්‍රාර්ථනා කරමි.

තිරියාය ගිරිහඬු සෑය රජමහ විහාරාධිපති
නැගෙනහිර පළාත් ප්‍රධාන සංඝනායක සිරි ආනන්ද වංශවනංස සද්ධර්මකීර්ති ශ්‍රී
ත්‍රිකුණාමලය කලාප අධ්‍යාපන කාර්යාලයේ බුද්ධ ධර්මය ගුරු උපදේශක
ශ්‍රස්ත්‍රපති අතිපූජ්‍ය දෙව්නුවර චන්දිම නායක මහා ස්ථවිර

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி...



கலைத்தாயின் துணைகொண்டு அகிலாண்டேஸ்வரி அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருள்கொண்டு திருக்கோணமலை கல்விவலயத்தின் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு (CSDI) வருடாவருடம் வெளியிட்டுவருகின்ற நித்திலம் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நிறைவடைகின்றேன். மாணவர்களின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை சகலரும் அறியக்கூடியதாக தகவல் வெளியீடு மூலம் ஆவணப்படுத்தும் அதி உன்னத செயற்பாட்டினை செய்வதன் மூலம் திருக்கோணமலைக் கல்வி வலயமானது கிழக்குமாகாணத்தின் ஏனைய கல்வி வலயங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது என்பதை அறிந்து அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சிறந்த பணியினை செய்கின்ற திருக்கோணமலைக் கல்விவலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் ஏனைய பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நித்திலம் சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர் அனைவரினதும் பணிசிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவருள் கடாட்சம் கிட்டவேண்டுமென இறைவியை இறைஞ்சி ஆசிவழங்கி அமைகின்றேன்.

வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ
**சோ.இரவிச்சந்திரக்குருக்கள். (JP)**
ஆலய பிரதமகுருவும், ஆதீனகர்த்தாவும்,
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளிஅம்பாள் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி...



அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன், ஏகவல்ல நாயன் அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன் அல்-ஹம்துலில்லாஹ் இயற்கை எழில்மிகு எம் இலங்கைத்தீவில் எழில் வளம் நிறைந்த திருகோணமலை மாவட்டத்தில் முன்னுதாரணமாய்த் திகழும் திருகோணமலைக் கல்வி வலயத்தின் வருடாந்த வெளியீடான "நித்திலம்" சஞ்சிகைக்கு மனதார ஆசிச் செய்தி வழங்குவதில் ஆனந்தம் அடைகின்றேன்.

இறைவனிடமிருந்து இறக்கப்பட்ட இறைத்தூது (வஹி) "இக்ரஃ" என்று ஆரம்பிக்கும் அல்குர்ஆன் வசனம் ஓதுவீராக! படிப்பீராக! வாசிப்பீராக! என மனிதனின் கற்கும் ஆர்வத்தைத் தூண்டும் பாங்கு கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகிறது. இறை நாமத்தோடு கல்வி ஆரம்பிக்கப்பட வேண்டும் என இவ்வசனம் விளங்குகிறது. கருப்பையில் ஒட்டியிருக்கும் இரத்தக்கட்டியிலிருந்து மனிதன் படைக்கப்பட்டான் எனும் இறைவாக்கின் மூலம் விஞ்ஞான ரீதியான ஆய்வுக்கு இஸ்லாம் வித்திட்டிருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அதே நேரம் மெய்ஞான ஒளியை உள ஞானத்தில் ஊன்றச் செய்து, அஞ்ஞானத்தை அகற்றி ஆன்மீகத்துடன் கூடிய கல்வியின் மூலம் அகிலத்தை ஆளும் அறிஞர்களாக மாற்றும் சக்தி கல்வியைத் தவிர வேறு எதற்கும் கிடையாது. இத்தகைய கல்வியை மாணவர் சமுதாயம் பெற்று ஈருலகிலும் மாண்புடன் வாழ துணை செய்கிறது இஸ்லாம்.

அவ்வாறே ஏனைய சமயங்களும் கல்வியைக் கண்ணாக மதித்து கற்பதைத் தூண்டுவதன் மூலம் அனைவரும் கல்வியைப் பெறுவது அவசியம் என்பதை உணர்த்துகின்றன. இதற்காக ஆசிரியர்கள் முதல் அதிகாரிகள், கல்வியியலாளர்கள் அரசியல் தலைவர்கள் ஆகிய அனைவரும் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

குறிப்பாக பாடசாலைகள் மாணவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கி அவர்களை நெறிப்படுத்தும் செயற்பாடு மிக முக்கியமானதாகும். சமூகத்தின் தேவைகளை, பிரச்சினைகளைப் புரிந்து, அந்த சமூகத்திற்கு நன்மையை ஏற்படுத்துபவர்கள் மாணவர்கள் தான். எனவே, அவர்கள் மீது கரிசனை செலுத்தி அவர்களை நெறிப்படுத்தி வழிகாட்டுவது அனைவரது கடமையாகும்.

ஆழ்ந்த புரிந்துணர்வும், தெளிவான சிந்தனைகளும் காணப்படும் போது தான் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. இவ்விரண்டு பண்புகளும் தான் செயற்பாட்டில் ஈடுபடுவர்களை சீரான பாதையை நோக்கி வழிகாட்டி சுளிவு நெளிவுகளை நேர்படுத்தி அவர்களது குறைபாடுகளை நிவர்த்தி செய்கின்றன.

இன, மத, சாதி பேதங்களுக்கப்பால் திறமைகளுக்கும், ஆற்றல்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து வருடந்தோறும் தனது பணியைத் தொடரும் "நித்திலம்" சஞ்சிகை நீடித்து, நிலைத்து, சமாதான, சகவாழ்வுக்கு சான்றுபகர வாழ்த்துகிறேன்.

இறைவா! மனமான கல்வியினூடாக
இதமான வாழ்வைத் தருவாயாக

மௌலவி. ஆ. லு. ஹதியதுல்லாஹ் (SLPS)
பிரதி அதிபர்,
தி/அல்-ஹம்றா மகா வித்தியாலயம்,
இறக்கக்கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி...



திருமலையின் வலயக்கல்வி வெளியீடாக ஆண்டுதோறும் வெளிவந்து கொண்டிருக்கும் "நித்திலம்" பல அற்புத விடயங்களை உள்ளடக்கிய சஞ்சிகை என்று என்று கூறுவதில் மிகுந்த மகிழ்வு அடைவதோடு அதன் வளங்கள் இன்னும் பெருகி எழில் பெற எனது நல்லாசீரையும் கூறுகின்றேன்.

கல்விமான்கள் பலரின், கல்விசார்ந்த படைப்புக்களைக் காண்கின்றோம். அப்படைப்புக்களுடாக மனித மேம்பாடுகளும் உயர்வடையுமென்பது நிச்சயம். நான் பேசும் மொழி எனது வழிபாட்டு நிலை. நான் வாழும் இனம், இப்படி எனக்குள் ஒரு தனித்துவம் உண்டு. அவைகள் மதிக்கப்பட வேண்டும். அதே போன்று அடுத்திருப்பவரிலும் அதே நிலைகளைக் காண்பதற்கு நான் கற்றறிந்த கல்வி எமக்குப் பெரும் உதவியாயிருத்தல் வேண்டும்.

வாழும் நிலங்கள் வேறுபடலாம், வழிபடும் தெய்வங்கள், வழிபாட்டு முறைகளும் வேறாகலாம். ஆனால் மனங்களிடையே வேற்றுமையோ, உறவுகளிடையே இடைவெளிகளோ ஏற்பட்டு மனங்களைத் தீண்டிவிடாமல் அன்பினை அடித்தளமாய்க் கொண்டு கல்விக்கனிகளை அனைவரும் உண்டு களிப்படைய வழிகளைச் செய்து வரும் நித்திலம் சஞ்சிகை மனங்களில் நீங்காத இடம் பெறுவது உண்மையே.

எதிர்கால சந்ததியை வளமான நிலைகளுக்கு இட்டுச் செல்ல உழைத்து வரும் ஆசிரியர்களின், பாராட்டக்கூடிய, அறிவியல் தொகுப்பாய் வடிவம் பெறுவது குறித்துப் பெரு மகிழ்வடைகிறேன். திருக்கோணமலை கல்வி வலயத்தின் CSDI பிரிவினரால் வெளியிடப்பட்டும் 5வது இதழான நித்திலம் உற்பத்தித் திறனை மையமாகக் கொண்டு வெளிவருவது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த முயற்சி எனக் கூற வேண்டும்.


இதன் பின்னணியிலிருந்து உழைத்த, திருமலை வலயக் கல்விப் பணிப்பாளர், இதழ் ஆசிரியர், ஏனைய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டி இறை ஆசிர் நிறைவாகக்கிட்ட வேண்டுகின்றேன்.

**அதிவண.கலாநிதி.**
**யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Zonal Education Office, Trincomalee.



## Our Zonal Director of Education.

## Mr.N.Vijendren.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்தின் துயரத் தவிப்பு

உள்ளமதில் குமுறும் உண்மையதை
எடுத்துரைக்கும் மொழி அறியாத்
துணையற்ற குற்றமிலாச் சிறுமியவள்!
'அளாப்புதல்' மொழிச் சுழிகள் தூக்கியெறிந்து விட
பளிச்சென்று கூராக நறும்பி நின்ற வாளின் சுவருக்குள்
சிறகு முளையாக் குஞ்சென வீழ்ந்தாளே!
வறண்ட வனாந்தரத்துக் கொதிமணற் பூமியில்
முள்ளின் படுக்கையில்
மணற்சூறைக் காற்றில்
துயிலின்றி மனப்புழு
அனலில் துள்ளி நெளிய
ஏழாண்டு கிடந்தாளே
உலகறியாச் சிறுமியவள் ...
தன்னைச் சிறை மீட்கவெனச்
செய்ததோர் மெலிந்த முயற்சியிலே
விடுதலைத் துளிர் அரும்பும்
கனவுகள் அவள் காண ...
பல் நறும்பி பளிச்சிட்டு வந்தவாட் சுவர்கள்
கனத்ததோர் வாளாகி
முழந்தாளில் தலை கவிழ நிற்கவிட்டு
அவள் கழுத்தை வெட்டி வீழ்த்த ...
ஆ .. அந்தோ!
அன்னாள் ஆவி காக்கச் செய்திட்ட
மெலிந்த முயற்சிகளை விஞ்சி
அனுதாப அலைகள் ஓங்கி
அவள் குடிசை தேடிப்படையெடுக்க
வண்ணங்கள் பல செய்து
சமாதானப் புறாவை பறக்கவிட்டார்!
கல்லறைக்குக் கலைச் சிற்பம்
கவின் வர்ணம் விதம் விதமாய்த் தீட்டி
றோஜா மழை சொரிகின்ற பான்மையென
எச்சிறப்பும் இனிச் செய்தும்
என்ன பயன்?
அபலைச் சிறுபெண்ணாள் ஆருயிர்தான் மீளுமோ
தோய்ந்திட்ட அவள் மரணத் திகிலெல்லாம்....!
அறுபட்டுச் சுடுமணலில்
சிந்திய இரத்தத் துளியெல்லாம் ... !
மனிதத்தின் மனத்திரையை விட்டுத்தான் போகுமோ!

திரு.க.சதாசிவம்
அதிபர்
தி/கன்னியா
அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி



தமிழ்மொழியைப் போல் ஓர்
இனிய மொழி உலகினில் இல்லை
தங்கத்தின் தரத்தை போல்
சங்கம் பல தந்த நிரந்தர மொழி
திறம்பட உழைப்பவர்களுக்கு
திங்களை போன்றது எம்மொழி
தான தர்மங்களை செய்வதற்கும்
தன்னை உயர்த்தும் மொழி
தமிழ் மொழியில் மிக உயர்ந்து
தரம் மிக்க சொற்களாம் ‘அம்மா’ ‘அப்பா’
என்னும் இனிய சொற்கள் அன்புடன்
தலை நிமிர்ந்து நிற்கின்றது
எம் மொழியாம் தமிழ்மொழி
பல் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது
எமக்கு பெருமை சேர்க்கிறது
வலையமைப்பில் கூட தமிழ் மொழி
தவழ்ந்து உலா வருகின்றது
எமை பெற்ற மொழி வளர்த்த மொழி
வாழ வைக்கும் தமிழ்மொழியாம்
காப்பியங்கள் பல தந்து
நிலைத்திருக்கும் செம்மொழி
பொய்யா மொழிப் புலவரின்
திருக்குறளை விரிவாக
எமக்கு அளித்த தித்திக்கும் மொழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணி எங்கும் புகழ் பரப்ப
தங்கு தடையின்றி பேசிடுவோம்
திகட்டாத தமிழ்மொழியினை
தமிழ் மொழியை பேசடா
தலை நிமிர்ந்து நில்லடா
என்றுரைத்தான் எம் மூத்த தமிழன்
எம் தாய் மொழி தமிழ்
என்ற வீராப்புடன்
தலை நிமிர்ந்து சொல்லுவோம்
நாம் தமிழர் என்று
சுத்த தமிழன் அன்று உரைத்தான்
தமிழுக்கு நிகரேதடா அது
எங்கள் மூச்சு என்று – உன்
நகமும் சதையும் போல
உயிரும் உடலும் போல
நாமும் தமிழ் மொழியும்
இணைந்திருப்பது மிகச்சிறப்படா
இதில் யாருக்கும் இல்லையடா மறுப்பு
கண்ணைப் போன்று தமிழ் எமது உறுப்பு
இதோ உனக்கு ஒரு குறிப்பு
அமிழ்தினும் இனியது தமிழ்மொழி
தமிழைப் பேசி தமிழை நேசி
வாழ்க தமிழ்மொழி
வளர்க எம் மொழி

திருமதி.சு.யுவராஜா (ஆசிரியை)
தி/ஸ்ரீ மாதுமை அம்பாள்
வித்தியாலயம்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிஞன்

1. உண்மைக்கு மதிப்பளிக்கும் உயர்ந்த நல்ல
உள்ளத்தைப் பெற்றவனே கவிஞன்! பாரில்
பெண்மைக்கும் சமவுரிமை வேண்டு மென்றே
பெருமையுடன் பேசுபவன் கவிஞன்! நாளும்
பண்ணார்ந்த பாட்டாலே மனித நேயம்
பாவிக்க விதைதூவும் கவிஞன்! வாழ்ந்து
கண்மூடும் வரையிலுமே வர்க்க பேதம்
கடந்தேதான் வாழுமிவன் கவிஞன் ஆவான்!

2. அடக்குமுறை அதிகாரம் கண்டே, அஞ்சி
அடிவருடி வாழாதான் கவிஞன்! வேள்வி
தொடக்குகின்ற கோளரியே கவிஞன்! பாரில்
தொன்றுதொட்டு வரும் மூடக்கொள்கை யாவும்
முடக்குகின்ற பகுத்தறிவைச் சொல்ல வல்ல
முன்னணியில் திகழ்பவனே கவிஞன்! நெஞ்சில்
விடங்கொண்டு நாவாலே தேனைப் பெய்யும்
வித்தை தனை அறியாதான் கவிஞன் ஆவான்!

3. அசைகின்ற மலர்கொடிகள் அழகைக் கண்டு
அகமகிழும் ஆத்மாவே கவிஞன்! காற்றின்
இசையோடு இசைகின்ற இதயத் தோனாய்
இயற்கையோடு மிதப்பவனே கவிஞன்! எந்த
வசைகண்டும் வாடாத வதனம் கொண்ட
வண்ணமுள்ள வார்ப்பாவான் கவிஞன்! எட்டுத்
திசையினிலும் தன்பாடல் சிலிக்கக் கேட்டுத்
திளைத்திருக்கும் ஒரு பிறவி கவிஞன் ஆவான்!

4. நேர்மைக்கு உயிர்விடவும் அஞ்சான்: நல்ல
நெஞ்சுரத்தைக் கொண்டவனே கவிஞன்! கண்கள்
பார்வைக்குப் பட்டதெலாம் பச்சை யாகப்
பாடுகின்ற பாட்டாளி கவிஞன்! சும்மா
போர்வைக்குள் மறைந்திருந்து பலரும் போற்றப்
போலியென வாழாதான் கவிஞன்! ஏழை
வேர்வைக்கு விலைகாண விழையும் கொள்கை
வேதத்தை விளக்குபவன் கவிஞன் ஆவான்!

அ.கௌரிதாஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்மை உன் தனித்துவம்!

மகளே

யாருனக்கு பாடம் சொல்லிவைத்தார்

பெண்ணியமென்றால்

இது தானென்று!

உனது அன்னையின்

கரிசலாங்கண்ணித் தைலத்தின் ஊட்டத்தின்

ஒரு மயில் தோகை போல

நீண்டு வளர்ந்திருந்த

உனது அழகிய கூந்தலை

ஒட்ட நறுக்கி உருக்குலைத்து விட

இற்றை நாள்வரை

அந்த அழகிய கூந்தலில்

சூடி அழகுபார்த்த

மல்லிகை கனகாம்பரப் பூக்களை

ஒரேயடியாக பகைத்துக் கொள்ள

வகிடெடுத்த கூந்தலுக்குள் தெரிந்த

வட்ட நிலா முகத்தில் ஒரு

குட்டி நிலவாக ஒளிவீசிய

குங்குமத் திலகத்தை

சுட்டுவிரலால் சுண்டி அழித்து விட

இனிய உறவுகளுக்கு உணவு பரிமாறுவதும்

அன்புச் செல்வங்களுக்கு அமுதூட்டி

அரவணைப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மட்டுமானதா என

இறுமாப்புப் பேச

கனிவு சொட்டிய

வார்த்தை தேன் கிண்ணத்தில்

கடுகு வெடித்து சிதறவைக்க

மலர்ந்த உனது சாந்தமான முகத்தில்

சன்னதங்கள் சதிராட

மரியாதைப் பண்புகளைப் பந்தாடி

அகங்காரக் குழந்தையை

தத்தெடுத்துத் தாலாட்ட

தவறான கற்பித்தல்கள்

தவறான கற்பிதங்கள்

ரோஜாச் செடியில் முள்ளிருக்கலாம்

ரோஜாப் பூவிலும் முள்ளா...?

மிதிக்கவரும் கால்களை


குத்திக் கிழித்து நிமிர்ந்தெழு

அதற்காக

உனக்கேயான இனிமைகளை


நீயே மிதித்து ....!

கவிஞர்.ஷெல்லிதாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழித்திறன் விருத்தியில் வாசிப்பின் பங்கு

எழுத்தில் உள்ளவற்றை கண்களாற் பார்த்து வாயால் உச்சரித்துச் சொல்லி பொருள் உணர்த்துவது வாசிப்பு எனப்படும். வாசித்தலில் சொற்களைக்

* காணுதல்
* உச்சரித்தல்
* பொருள் உணர்தல்

என்ற மூன்று கூறுகள் இருப்பதைக் காணலாம். வாசிப்பதன் மூலம் எழுத்துக்களைக் கூட்டி பொருளை அறிகின்ற ஆற்றல் வளர்கின்றது. குழந்தைப் பருவத்தில் இருந்தே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது போல் அடிநாட்தொட்டே வாசிப்புப் பழக்கத்தை கைக்கொள்வதால் இறுதி மூச்சு வரை எமது வாழ்வோட்டத்தில் நிலைபெற்றுவிடும்.

வாசிக்கத் தெரிந்தவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொள்ளாதிருப்பதானது ஒருவரிடம் அளவற்ற செல்வம் இருந்தும் அவன் பசியால் வாடுவதற்கு ஒப்பானதாகும். வாசிப்பது சொல்வளத்தைப் பெருக்கவும், கற்பனை சக்தியை தூண்டவும், கவனிப்பை அதிகரிக்கவும், உளப் பூர்வமாய் உணர்ந்து கொள்ளவும் உதவுவதோடு, மொழி பற்றிய தெளிவையும் உண்டாக்குகின்றது.

தொட்டனைத்தூறும் மணற்கேணி – மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு
- திருவள்ளுவர்

ஒரு கிணற்றை எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாகத் தோண்டுகையில் தண்ணீர் சுரப்பது போல் நாம் நல்ல நூல்களை கற்கும் அளவுக்கேற்ப எமது அறிவும் பெருகும். எவ்வளவு தூரம் வாசிக்கின்றோமோ அது எம்மை அறிவால் உயர்த்தும்.

கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கிற் பிணி பல

சில வாழ்நாட் பல் பிணிச் சிற்றறிவுடைய மாந்தர் கரை துறையற்ற கல்வியை முற்றக் கற்றல் முடியாதென்பது இவ்வரிகளின் பொருள். எனினும் பரந்துபட்ட கல்வி சிற்றளவேனும் கற்று சிந்தையில் இருத்தி அறிவுச் செல்வத்தை சிரத்தையுடன் தேடும் போது மனித வாழ்வு செழிப்படைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனை மனிதனாக வாழ வழிசமைத்துக் கொடுப்பது நல்லநூல்களே. அந்நூல்களும் பொருளுணர்ந்து கருத்தூன்றி வாசிக்கும் போதே பயன் கொள்ளப்படுகின்றது.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'

என்பது முதுமொழி. மன அலைச்சலும், மனச்சஞ்சலங்களுமற்ற இளமைப்பருவத்தில் கற்கும் கல்வியானது சிந்தாது, சிதையாது, சிதறாது ஆழமாக மனதில் பதியும். எனவே தான் கல்விக்கு அடித்தளமாய் அமையும் வாசிப்புப் பழக்கம் இளம் பராயம் தொட்டு அடித்தளமாக இடப்படல் வேண்டும்.

தலைசிறந்த எழுத்தாளரான டேவின் பென்கூரியன் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுகையில் 'நாங்கள் நூல்களை பாதுகாத்தால் நூல்கள் எங்களைப் பாதுகாக்கும்' (Wehavepreserved the book and book has preserved us) என்கின்றார். வாசிப்பின் முழுமைத் தன்மை இவ் வாசகங்களில் புலப்படுகிறது. இதுவே எமது மரபு வழி வந்த வாய்மொழிக்கூற்றும் உணர்த்துகிறது. அஃதாவது

'நாலடி, இரண்டடி கற்றவனிடத்தில்
வாயடி சொல்லடி செல்லுபடியாகாது'

அதாவது நாலடிகளைக் கொண்ட 'நாலடியார்' என்ற நூலும் ஈரடிகளைக் கொண்ட திருக்குறளும் மனித விழுமிய பண்புகளையும், வாழ்வின் முழுமைத் தன்மை யாது என்பதையும் வெளிப்படுத்தும் அரும்நூல்களாகும். இச்சிறப்பு வாய்ந்த நூல்களை அக்காலத்தில் வாழ்ந்த சமூகத்தினர் தினமும் வாசித்து பயனறிந்து மனனம் செய்திருந்தமையால் தான் எந்த நிலையிலும் துணிந்து நின்று கருத்துக் கூற வல்ல அறிவைப் பெற்றிருந்தனர் என்றால் அது மிகையாகாது. இன்று எம்மத்தியிலே இவ்வாறான நூல்களை வாசித்து மனனம் செய்வோர் விரல் விட்டெண்ணக் கூடியவர்களே உளர். நம் முன்னோரிடமிருந்த வாசிப்புத்திறன் தற்போதய சந்ததியினரிடம் இல்லை. அன்று காணப்பட்ட பண்டிதர், வித்துவான் பரம்பரையினர் வாசிப்பு முறை இன்றுள்ள ஆசிரிய சமூகத்துள் காண்பதரிது.

மாணவர் மொழியாற்றலை விருத்தியுறச் செய்வதற்கு வாசிப்பு இன்றியமையாததாகும். நூல்களை பிழையற , கருத்தூன்றி, விளங்கி வாசிப்பதன் மூலம் மொழித் தேரச்சியடைய முடியும். சில மாணவர்கள் பிழையற வாசிப்பர். ஆனால் கருத்தை விளங்கிக் கொள்ளமாட்டார்கள். இவர்கள் சுவையறியா நாக்கினைப் போன்றவர்கள். சில மாணவர்கள் வாசித்து விளங்கிக் கொள்வார்கள். ஆனால் விளங்கிக் கொண்டதை வெளிப்படுத்த முடியாது திக்கித் திணறுவர். இவர்கள் கனவு கண்ட ஊமையர் போன்றவர்கள். எனவே வாசித்து விளங்கி வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றலாகும். எனவே மொழியாற்றல் விருத்தி பெற வேண்டுமெனில் சிறந்த வாசித்தல் பயிற்சி அவசியமாகும்.

வாசிப்புத்திறன் விருத்தி செய்யும் பொருட்டு தற்போது சர்வதேச வாசிப்பு தினம், உலக புத்தக தினம், நூலக தினம் என்ற விடயங்கள் உருவானதோடு வாசிப்பறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சித்திட்டம் போன்ற செயற்றிட்டங்களும் வாசிப்பை ஊக்குவிப்பதற்காக செயற்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய தினங்கள் கொண்டாடப்படாவிடில் வாசிப்புத் திறனின் முக்கியத்துவத்தை சமூகம் உணர்ந்து கொள்வதற்கும் அவற்றின் பயனைப் பெற்றுக் கொள்வதற்கும் முடியாது போய்விடும்.

'வாசிப்பு ஒருவனை முழு மனிதனாக்குகிறது' என்ற ஆங்கில தத்துவாசிரியர் பிரான்ஸிஸ் பேக்கன் என்பவரின் கருத்துக்கமைய தனி மனித ஆளுமையின் வெளிப்பாடே சமூகத்தின் ஆளுமையுமாகும். வாசிப்பதன் மூலம் தம்மை வளர்த்துக் கொள்வதோடு நல்ல சிந்தனையை வெளிக்கொணரவும் வாய்ப்பு ஏற்படுகிறது. நல்ல சிந்தனையாளர்கள் எல்லாம் நல்ல வாசிப்புத் திறனுடையவர்களாகவே உள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாக சுவாமி விபுலானந்தர் கூறியதாவது


'சிறந்த வாசிப்புக்கு பாட நூல்களுடன் நின்று விடாது பிற நூல்களையும் கற்கவேண்டும். பல மொழி நூல்களையும் முயன்று கற்றல் நலமாகும். தீநெறிப்படுத்தும் நூல்களையும், காம உணர்ச்சியூட்டும் நாவல், சஞ்சிகைகளையும் விலக்கி மனித வாழ்வை கடைத்தேற்றும் நன்நூல்களை படிக்க வேண்டும் எனவும் ஒரு நூலை முற்றாக முடிக்கும் வரை மற்றொரு நூலினுட் பிரவேசிக்கக் கூடாதெனவும்..' கற்கப் புகும் போது பருப்பொருளாக நூல்களில் தெளிவு பெறா வண்ணம் படிப்பதில் பயனில்லை. தெளிவாக விளங்கிக் கொண்டுணர்தலே கூடிய நன்மை பயக்கும் என்று மிகத் துல்லியமாக வாசிப்பதை பற்றி எடுத்தியம்பியுள்ளார்.

மாணவர்களே எதிர்காலச்சிற்பிகள் அவர்கள் அறிவுச் செல்வர்களாய், உள்ளத்தால் உயர்ந்தவர்களாய் உருவாக வேண்டுமானால் வாசிப்புத்திறனை விருத்தி செய்வது அவர்களது மொழித்திறன் விருத்திக்கு மேலும் மெருகூட்டும் என்பதில் ஐயமில்லை. தற்கால தொழிநுட்ப விருத்தியினால் நாம் நினைத்த நூல்களை உடனடியாக இணையத்தளவாயிலாகப் பெற்று வாசித்துப் பயனடைய இலகுவாகவுள்ளது. வாசிப்பின் மூலமே முழுமைத் தோற்றத்தையும் பொலிவையும் மனிதன் அடைகின்றான் என்கின்றார். தத்துவவியலாளர் மாக்கஸ் ஜுலியஸ் சீசர் குறிப்பிடுகையில் 'புத்தகமில்லாத அறை உயிரற்ற உடம்புக்கு ஒப்பானது' என்கிறார். எனவே நல்ல மொழித்திறன் விருத்திக்கு வாசிப்பு அவசியம் என்பதில் ஐயமில்லை.

திருமதி.பத்மசிறி
ஜெயகாந்தன்
I.S.A, Pri.Trd, B.A
Dip in Ed, PGDEM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புரூணரின் அறிவுசார் வளர்ச்சிக் கொள்கையும் பிள்ளையின் எண்ணக்கருவாக்கமும்

பிள்ளையின் நுண்ணறிவு வளர்ச்சி அது வளர்கின்ற கலாசாரம் மொழி என்பவற்றைக் கருத்திற்கொள்ளாது ஏற்பட முடியாது. பிள்ளையில் ஏற்படும் இந்த வகையான வளர்ச்சி அல்லது மாற்றம் பிள்ளை தன்னை புதிய தொகுதிகளுடன் இணைப்பதிலேயே ஏற்படுகின்றன அன்றி உயிரின் வாழ்க்கை முறை மாற்றத்தினால் அல்ல என்ற கொள்கையை புரூணர் ஏற்றுள்ளார். இவர் மூன்று வகையான அமுலாக்கல் தொகுதிகளை அறிமுகப்படுத்தியுள்ளார்.

* மனிதனின் இயக்க ஆற்றல்களைப் பெருக்கல்
* மனிதனின் புலக்காட்சி ஆற்றல்களைப் பெருக்கல்
* மனிதனின் காரணங்காணும் ஆற்றல்களைப் பெருக்கல்

இவைகள் கலாசாரம் மூலமாகவே கடத்தப்படுகின்றன. எந்த வகையான அமுலாக்கலும் பயனுள்ளனவாவதற்கு ஓர் உள்ளார்ந்த ஒத்த பாகம் அல்லது பொருத்தமான திறன் அவசியமாகும். அப்பொழுதே இயக்கச் செயல்களை, புலக்காட்சியினை, சிந்தனையை அமுலாக்கும் தொகுதியின் தேவைக்கு இணங்கக் கூடியதாக அமைத்துக் கொள்ளலாம். "நாம் எவ்வாறு இயங்குகின்றோம், பார்வையிடுகின்றோம், சிந்திக்கின்றோம் என்பது நுட்பங்களில் தங்கியிருக்கின்தேயொழிய நரம்புத்தொகுதியின் அறிவித்தலிலல்ல" என புரூணர் கருதுகின்றார் நாம் திறமையாக ஒழுங்காக்கப்பட்ட பௌதிக அல்லது இயக்கத் திறன்களினால் உருவெளிப்பாட்டினால் அல்லது மொழியினால் சூழலுக்குத் துலங்ககற்றுக் கொள்கின்றோம் இது போன்றே ஓர் அல்லது பல நுட்பங்களை பயன்படுத்தி சூழலின் சீரான முறையினை நாம் பிரதிநிதித்துவம் செய்கின்றோம்.

பிரதிநிதித்துவம் என்பது இன்னொன்றிற்காக உள்ளதைப்பற்றி கூறுவதாகும் உதாரணமாக ஒரு குறிப்பிட்ட உடலியல் திறன் ஓர் தேவையின்பால் துலங்கல் மூலம் பெறப்பட்டால் அத்திறன் ஏறக்குறைய தசையுடன் சேருகின்றது. அடுத்ததாக இந்த அனுபவம் மீண்டும் மனதில் உருவெளிப்பாடாக அல்லது சித்திரமாக அமைகின்றது. ஒரு பிள்ளை பாரமான பொருளொன்றை சுமக்கும் போது பாரத்தின் உணர்வு உடலில் பதிகின்றது பின் பிள்ளை பிறர் பாரங்களைச் சுமந்து செல்வது போல நடந்துகாட்டும். அந்த நிலையே அனுபவத்தை உருவெளிப்பாடாகக் காட்டும் நிலையாகும் பாரம் என்ற சொல்லை பிள்ளை விளங்கி அச்சொல் அந்த அனுபவத்தைக் குறிக்கின்றதென்பதைத் தெரிந்து கொள்வது இறுதி நிலையாகும் இம்மூன்று குறிப்புகளின் தன்மைகளையும் புரூணர் முறையே

* செயல் நிலை (enactive)
* சாயல் நிலை (Iconoic)
* குறியீட்டு நிலை(symbolic)

எனக் குறிப்பிடுகின்றார் பியாஜே இவற்றைபுலனியக்கச் செயற்பாடு உள்ளமைவான பின்பற்றல் குறியீட்டு நிலை எனக் குறிப்பிடுகின்றார். அறிவு வளர்ச்சி செயல் நிலையிலிருந்து காட்சி நிலைக்குச் சென்று பின் குறியீட்டு நிலையினை அடைகின்றதென்பதையே புரூணர் கொள்கையாக வெளியிட்டுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயல் நிலை குறித்தல்** (enactive representation)

குழந்தைப் பருவத்தின் அறிவுப்பண்பின் சிறப்பியல்பு இதுவாகும். குழந்தை உள இயக்கத்தின் மூலம் சூழலின் இயல்புகளைப் புரிந்து அல்லது உணர்ந்து கொள்கின்றது. பொருட்களுடன் ஏற்படும் உடலியல் இடைவினைத்தாக்கத்தினால் குழந்தை தன்னைச் சுற்றியுள்ள உலகிற்கு இணங்கக்கூடியனவாகின்றது. பிள்ளையின் செயற்பாடுகள் காட்சி உலகுடன் தொடர்புபடும் போது சாயல் நிலைக் குறிப்பு ஆரம்பமாகின்றது. பிள்ளையின் செயற்பாடுகள் வெளியுலக உண்மைகளை அகவயப்படுத்துகின்றன இம்முறையான இணக்கம் பிறப்பிலிருந்து இரண்டு வயது வரைக்கும் நீடிக்கும் புலனியக்கப்பருவத்தில் பிள்ளை சூழலைத் தழுவும் முறையினை பியாஜே விளக்கும் விதத்தை இது ஒத்திருக்கின்றதென்பதை நாம் உணரலாம்.

செயல் நிலை நீடிக்கக்கூடியதொன்றாக இருக்குமென்பது புரூணரின் கொள்கையாகும் ஓடுதல் முடிச்சுப் போடுதல், வாகனங்கள் இயக்குதல் தசைகளில் பதிகின்றன என்று அவர் கூறுகின்றார் சூழலின் ஒழுங்கில் அனுபவங்களைதிரும்பத் திரும்பக் கொடுக்கின்றன. தேவை ஏற்படும் போது உபயோகிக்கக்கூடியதாக இவை பதிவு செய்யப்படுகின்றன. எனவே குழந்தைப் பருவத்தில் வெளிப்படுத்திக் கொள்வதற்கு உள்ள ஒரு நிலையாக செயல் நிலை காணப்படுகின்றது அத்தோடு இது பிள்ளையின் கற்றலில் ஒரு பண்பாகின்றது பிள்ளையினுடைய உடலியற்றிறன்களுடன் தொடர்புபட்டு வாழ்க்கை முழுவதும் தொடர்கின்றன.

பிள்ளையின் செயல்கள் ஆரம்பத்தில் தொடர் நடத்தைக் கோலங்களாகின்றன பிள்ளை குறுக்கிடும் வெளிப்புறத்தூண்டி ஒவ்வோர் புதிய நடத்தைப் படியை ஒழுங்காக்குகின்றது ஏதோ ஒரு நிலையில் இந்தத் தொடர் நடத்தை ஒழுங்கைப் பெறுகின்றது. அதன் பின் செயற்பாட்டு முக்கியத்துவத்தினின்றும் விடுதலை பெறுகின்றது. புறத்தூண்டிகளினால் ஒழுங்காக்கப்பட்ட துலங்கல் கற்றலிலிருந்து பிள்ளை “இடக்” கற்றலுக்கு மாறுவதனால் இச்சுதந்திரத்தைப் பிள்ளை அடைந்து கொள்கின்றது. இது நிகழும் போது செயற்பாடுகள் இன்னும் ஒன்றை ஒன்று தொடர்வனவாகக் காணப்படுவதில்லை ஆனால் இவை குறிக்கப்பட்ட வெளி உலகம் சார்ந்த சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட இடங்களுடன் தொடர்ந்து காணப்படுகின்றன. செயல்களில் தங்கியிருத்தலில் இருந்து விடுதலை பெறுவதற்குப் பிள்ளை முதலில் வெளியுலக அடிப்படையிலானஉலகப்பார்வைக்கும் தனது தொடர் உலகின் செயற்பாட்டிற்கும் இடையில் ஒரு பொருத்தப்பாட்டை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**சாயல் நிலை குறித்தல்** (Iconoic representation)

பிள்ளை செயல்நிலை குறித்தலிலிருந்து விடுவிக்கப்பட்டதும் சூழலின் உளச் சித்திரத்தினை அமைக்கக்கூடிய திறனைப் பெறுகின்றது. இயற்கைச் செயற்பாடுகளின் தாக்குதலிலிருந்து விடுவிக்கப்பட்ட சாயலின் துணையுடன் அல்லது இடம் சார்பான திரளமைப்பினைப் பெறுகின்றது. ஒரு வயதின் இறுதி வரையில் இச்சாயல்களையும் வெளித்தொடர்புகளுடைய திரளமைப்புக்களையும் பிள்ளை பயன்படுத்தித் தன் அனுபவங்களை ஒழுங்காக்கமுயலுகின்ற அறிகுறிகள் தோன்றும். இப்பருவத்தில் பிள்ளை பெற்றிருக்கும் சாயலின் பண்பினை ஊகித்துக்கொள்வது கடினமென புரூணர் கூறுகின்றார். இப்பருவத்தில் பிள்ளையின் புலக்காட்சியின் குணாதிசயங்கள் அதன் சாயல்களின் இயல்புகளுக்கான சாடையைக் கொடுக்கலாம் இன்னும் பிற ஆய்வுகளின் அடிப்படையில் புலக்காட்சியின் பிரதான குணாதிசயங்களை புரூணர் பட்டியற்படுத்தியுள்ளார் அவையாவன

* புலக்காட்சி நிலையானது மாற்றியமைக்கக் கூடியதல்ல
* இதன் ஒழுங்கமைப்பு விரிந்தது
* செயலின் செல்வாக்கிற்கு நெருங்கிய தொடர்பு காணப்படுவதைப் போன்ற சக்தி வாய்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலன் அடிப்படையில் தன்முனைப்பு மையமானது கவனத்தில் நிலையற்றது**

புருணரின் மேற்குறிப்பிட்ட பட்டியலானது பியாஜேயின் தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவ புலக்காட்சியின் இயல்புகளை ஒத்ததாக இருக்கின்றது இக்குறைபாட்டுப் பட்டியலுடன் பிள்ளையின் புலக்காட்சி ஒழுங்கமைப்பில் ஓர் குறிப்பிட்ட அளவான சாடைகளே பயன்படும் ஏனெனில் பிள்ளைக்கு இவற்றை மட்டுமே கண்டுகொள்ள முடியும் இந்த ஆரம்பநிலையில் சாயல்கள்

* இணக்கமற்றவை
* நெகிழ்வற்றவை
* விரிவானவை
* உலகம் சார்ந்தவை
* பிள்ளையைக்கவரும் சிறு விளம்பரங்களின் அடிப்படையிலானவை
* தன்னமைவானவை

எனவே சாயல் நிலையின் குறிப்பு முறைகள் நுட்பமானவையல்ல பிள்ளை புறத்தோற்றத்தினால் பெரிதும் கட்டுப்படுகின்றது மேல்வாரியாக மட்டுமே பொருட்களைக் கையாள முடிகின்றது சாயலைப்பற்றி மட்டுமே பிள்ளையால் சிந்திக்க முடிகின்றது முன்பு போன்று செயலால் கட்டுப்படுகின்றதன்று. நிலையான இயல்புகளின் அடிப்படையிலான ஆழமான அமைப்புகள் சாயலுக்குச் செல்வாக்குச்செலுத்துவதில்லை எனவே சாயல் நிலையில் பிள்ளை தனது உள்ளத்திலுள்ள ஒன்றைதான் வெளியுலகில் காணும் ஒன்றுடன் இணைத்துக் கொள்ளவே முயலுகின்றது. இப்பருவத்தில் உள்ளத்திலுள்ளதும் சிறியளவினதேயாகும் இவ்வாறான நேர்முக இணக்கங்களிலிருந்து விடுபடும் பொழுதே பிள்ளை தொடர்புகளையும் நிலையான தன்மைகளையும் கையாளக்கூடிய ஆற்றலைப் பெறுகின்றது என புருணர் கூறுகின்றார் செயல்நிலையும் சாயல் நிலையும் ஒருங்கே செயற்படும் போது பொருட்களின் ஞாபனம் தசைகளில் களஞ்சியப்படுத்தப்படுதல் மட்டுமன்றி வெளியுலக ஒருங்கினை ஞாபகப்படுத்துகையில் நிறக்கோலங்கள் அசைவுகள் போன்றவையும் இடம் பெறுகின்றன

**குறியீட்டு நிலை குறித்தல் (symbolic representation)**

பிள்ளையிடம் பரம்பரை பரம்பரையாக கடத்தப்படும் குறியீட்டு ஆற்றல்கள் உள்ளன என புருணர் எடுத்துக் கூறுகின்றார் இந்த ஆற்றல்கள் யாவும் பல்வேறுபட்ட விஷேட தொகுதிகளாக அதாவது மொழி கருவிகளை உபயோகித்தல் போன்ற வகையான நடத்தைகள் வேறும் திறன் சார்ந்த நடத்தைகளாகப் படிப்படியாக உருவாகின்றன என இவர் கருதுகின்றார் இறுதியில் அனுபவத்தை ஒழுக்காக்கும் முறைக்கு இட்டுச் செல்லும் இந்த குறியீட்டு ஆற்றல் மொழிவளர்ச்சிக்கும் உறுதுணையாக அமையுமென இவர் நம்புகின்றார் இரண்டு வயதிலிருந்து பிள்ளையின் உணர்ச்சிப் பேச்சுகள் ஒருசொல்லாக மட்டும் தோன்றுவதில்லையெனவும் அதில் இலக்கணத்தின் சாயலும் காணப்படுவதாக அறியப்படுகின்றது சகல மொழிகளிலும் ஒரு சொல் பேச்சு நிலைமாறும் போது இலக்கணத்தின் அடிப்படை அமைப்பு தோன்றும் இலக்கணத்திலுள்ள மாறும் விதி அதன் இயல்புகளில் ஒன்றாகும். இலக்கணம் என்பது சகல விடயங்களையும் மொழி மூலம் கூறக்கூடிய வழிகளின் தொகுதியாகும். மொழிப்பிரயோகத்திற்கு சில அறிவுசார் செயல் முறைகள் தேவைப்படுகின்றதென்பதைக் கருத்தில் கொள்வதற்கு இடமுண்டென புருணர் கூறுகின்றார்

பொதுக்கருத்துகள் முதலில் பயன்படுத்தப்பட்டு மொழிப்பிரிவில் செப்பனிடப்பட்டு அது படிப்படியாக பொதுச்சிந்தனையில் சேர்க்கப்படுகின்றன என புருணர் கருதுகின்றார் இவ்விடயத்தில் பியாஜேயும் புருணரும் வேறுபடுகின்றனர். மொழி ஆற்றலற்ற போதிலும் செவிப்புலனற்ற பிள்ளைகள் தம் குழந்தைப்பருவத்தில் பின்னடைவான அறிவுசார் செயற்பாடுகளைக் கொண்டவர் போல தெரிவதில்லை என்பது மேற்கூறிய கருத்திற்கு சிறந்த உதாரணமாகும் ஏறக்குறைய இரண்டு வயதளவில் பிள்ளை பேசுவதற்கு வாய்ப்புப் பெறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வளர்ச்சிக்கு முக்கியத்துவமாகும் பிள்ளை உச்சரிக்கும் போது தாய் அதற்கு துலங்கி பிள்ளையின் உச்சரிப்பை திருத்தும் போது பிள்ளை தனது முந்திய கருத்தையும் ஒலியையும் திருத்தி மறுபடியும் திருப்பிக் கூறுகின்றது இதனால் பிள்ளை தன் எண்ணங்களைத் தெரிந்து கொள்ளவும் நேரிடுகின்றது

புலக்காட்சி அனுபவத்தைஒட்டி வரும் அத்தியாவசியமான செயல் மொழி என்பதினால் இதனை உற்சாகப்படுத்த வேண்டும் கலாசாரத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு கருவி மொழி என்றும் இது உள்ளத்தின் உபயோகத்தை உண்மையில் விரிவாக்குகின்றதெனவும் புரூணர் கருதுகின்றார் இது பிள்ளைக்குக் கொடுப்பதோடு அனுபவங்களைக் குறியீடாக அமைத்துக் கையாளவும் உதவுகின்றது தமது ஒழுங்கான சூழலில் காணப்பட்டவற்றை பிள்ளைகள் மிகவும் சிறந்த முறையில் குறிக்கக்கூடிய நுண்முறைகளைப் பெற்றுக்கொள்ளும் போது அவர்கள் அறிவு வளர்ச்சி அடைகின்றனர் அவர்கள் மொழியையும் வேறு குறியீடுகளையும் பொதுவாகப் பயன்படுத்தி அனுபவங்களின் விளைவுகளைப் பதித்து ஞாபகத்தில் களஞ்சியப்படுத்திக் கொள்வார் இதிலிருந்து பிள்ளைகள் வெவ்வேறு வழிமுறைகள் மூலம் விளக்கம் கொடுப்பர் என்பது பற்றிய அவர்களது கருத்தில் பியாஜேக்கும் புரூணருக்குமிடையே அவ்வளவு தூரம்வித்தியாசம் காணப்படவில்லை

**எண்ணக்கரு தொழிற்பாடும் வரைவிலக்கணமும்**

ஒரு செயற்பாட்டினை அல்லது சந்தர்ப்பத்தை ஒருவர் நன்றாகப்புரிந்து கொண்டு அதற்கு விளக்கமளித்து நடந்து கொள்ளும் முறை அவரது நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்றது நாம் பொருட்களுக்கு விளக்கம் கொடுத்து அவற்றை பற்றிச் சிந்தித்து பின்பே துலங்குவோம். விளக்கம் கொடுத்தலும் அவற்றைப்பற்றி சிந்தித்தலும் மாறிகளாகும். இவை தூண்டலுக்கும் (stimulation—s)துலங்கலுக்கும் (response)இடையில் வந்து அவற்றின் ஊடகமாகின்றன. இது நடத்தையினை விளக்குவதற்கான எ-ழ-ச என்ற மாதிரியில் ழ ஆகும் ழ இனை முதலில் கரும்பெட்டி (உள்ளம்) எனக் கருதினார் இது தூண்டலையும் துலங்கலையும் இணைப்பதாகக் கருதப்பட்டது இன்று ழ ஒரு தொகுதி பொதுக்கருத்துக்கள் அல்லது ஊடகம் என்று கருதப்படுகின்றது அவை பொதுக் கருத்துக்கள் பொருட்கள் நிகழ்ச்சிகள் அல்லது முறைகளைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கின்றன இவற்றைக் கொண்டு பிள்ளை காட்சிக்குப் பொருள் கண்டு அதற்கு ஏற்றவாறு துலங்கும்

எண்ணக்கரு என்றால் என்ன? மக்கள் வாழும் ஒருகட்டிடத்தை காணும் போது அதனை வீடு என்கின்றோம் இந்த பார்வையினால் ஒருவர் பெறும் அனுபவம் எண்ணக்கருவாகாது சில தூண்டிகளைத் தனிப் பிரிவுகளாக வகைப்படுத்திக் கொள்வதன் விளைவே "வீடு"என்ற எண்ணக்கருவாகும் உருவம் பருமன் உபயோகித்த பொருட்கள் அல்லது நிறம் என்பவற்றைப் பொருட்படுத்தாது மக்கள் வசிப்பதற்குப் பயன்படுத்தும் சகல கட்டிடங்களையும் ஒரு பிரிவில் சேர்த்து வீடு என்கின்றோம் வீடு என்ற சொல் குறியீடு இது மொழிக் குறியீடு ஒரு குறிப்பிட்ட வீடு எனது ஞாபகத்தில் குறிக்கப்பட்டு குறியீடாக்கிய பின்பு வீடு என்ற சொல் தொடர்பாடலுக்குப் பயன்படாது என்பதை நான் தெரிந்துகொள்கின்றேன்

தவழுகின்ற பிள்ளை தண்ணீரைப் பார்த்து தா என்று அழைத்துக் கொண்டால் அப் பிள்ளைக்கு அதில் பொருள் உண்டென கருத முடியும். ஆனால் அக்கருத்தினை உடனடியாகக் கூறமுடியாது. அச்சொல்லை தொடர்பாடலுக்குப் பயன்படுத்த அது ஒரு வகுப்பைக் குறிக்க வேண்டும் அது எல்லோராலும் ஏற்கப்பட்டு அச்சொல்லை உபயோகிப்பவர்கள் சகலரும் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். நான் வீடு என்னும் சொல்லுக்குக் கொடுக்கும் விளக்கம் சகலரும் அதற்குக் கொடுக்கும் விளக்கத்துடன் இணைய வேண்டும் என்முன் காணப்படும் கட்டிடத்தை நான் வீடு என்கின்றேன் வீடு என்று வகுப்பதில் அநேக வேறுபாடுகள் காணப்பட்ட பொழுதிலும் ஆயிரக்கணக்கான வேறு கட்டடங்களை வீடு என்று கூறுகின்றோம் இவற்றிற்குப் பொதுப்பண்புகள் உண்டெனக் கருதப்படுகின்றது எனவே நாம் உபயோகிக்கும் சொற்கள் பொதுக்கருத்துகள் அல்லது வசதியான "சிந்தனைக் குறிகைகளுள்"ஆயிரக்கணக்கான அனுபவங்கள் உள்ளடக்கியிருக்கும் ஓர் எண்ணக்கரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஒரு குறியீட்டில் அடங்கும் ஒரு சொல் ஒரு அடையாளம் அல்லது வரைபடமாகும் இதனைச்சிந்தனையில் கையாண்டு பிறருடன் தொடர்புறும் பொழுது உபயோகிக்கலாம்

எண்ணற்ற வேறுபட்ட பொருட்கள் நிகழ்ச்சிகள் மக்கள் மற்றும் சந்தர்ப்பங்களினால் ஆனது சூழலாம். சூழலின் பொருளை கண்டு கொள்ளும் தேவைக்காக மனிதன் இந்த வகுதிகளைக் கண்டுபிடிக்கின்றான். அத்துடன் காணும் காட்சிகளை ஆழமாக விளக்கி அறிவை விரிவாக்குகின்றான். உதாரணமாக ஏழு மில்லியன் நிறங்கள் காணக்கூடியனவாக உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு நிறத்திற்கும் தனிப்பெயர் கொடுத்து ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு வாய்ந்ததென துலங்கவேண்டுமாயின் இந்த நிற வேறுபாடுகளை சமாளித்துக் கொள்வதற்கு எவ்வளவு தொகையான சொற்களைப் பயன்படுத்த நேரிடும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கான விடையே வகுப்புக்களாக வகைப்படுத்தலாம். அத்துடன் இவற்றின் தனித்தன்மையல்லாது வகுப்பு அடிப்படையில் இவற்றிற்குத் துலங்கவும் முடியும் இவ்வாறு பௌதிக அடிப்படையில் ஒரே மாதிரியாக இல்லாது ஆனால் பொதுப் பண்புகளையுடையதான பொருட்களையும் நிகழ்ச்சிகளையும் சமமானவையெனக் கருதலாம். அத்தோடு நாம் பொதுவாக இந்த வகைகளுக்குத் துலங்குவோம். நாம் தனிப்பட்ட முறையில் கவனத்திற் கொள்ளவேண்டிய சூழலின் பாகங்களைத் தேவைப்படும் போது பிரித்தாராய்ந்து கொள்ள எமது ஆற்றல் ஒதுக்கி வைக்கப்படும்.
எண்ணக்கருவானது காட்சி உருவாக அல்லது கருத்தியல் உருவாக அமையலாம்.

- காட்சிசார் எண்ணக்கரு ஒரு தனிப்பட்ட நிலைமையுடன் அல்லது பொருளுடன் சம்பந்தமுடையது. உதாரணம் - புத்தகம் , பேனா
- கருத்தியல் எண்ணக்கரு ஒரு தனிப்பட்ட நிலைமையுடனோ அல்லது பொருளுடனோ தொடர்பற்றது. இது ஒரு பண்புரீதியானது.
  உதாரணம் - நற்குணம், கீழ்ப்படிவு

சில எண்ணக்கருக்கள் எளிமையானவையாகவும் வேறு சில சிக்கலானவையாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக 'விளிம்பு' என்ற பொதுக்கருத்தை எடுத்துக் கொள்வோமாயின் ஒரு வட்டப் பொருளின் 'ஓரம்' விளிம்பு என வரையறுத்துக் கொள்வோம்.

இந்த வரைவிலக்கணத்தில் இன்னும் இரு வரைவிலக்கணங்கள் அடங்கியுள்ளன. பிள்ளை முதலில் வட்டம் என்றால் என்ன? ஓரம் என்றால் என்ன? என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். விளிம்பை விளங்குவதற்கு இது அவசியமாகும். சிக்கலான எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்கு எளிய எண்ணக்கரு பற்றி விளக்கம் அவசியம். அதே போல தெளிவாக வரையறுக்கப்பட்ட எண்ணக்கருவும், சரியாக வரையறுக்கப்படாத எண்ணக்கருவும் உண்டு. தெளிவாக வரையறுக்கப்பட்ட எண்ணக்கருவில் விதிகள் அல்லது தொடர்புகள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கும். ஆனால் சரியாக வரையறுக்கப்படாத எண்ணக்கருவில் விதிகளும் தொடர்புகளும் வெளிப்படையானதாகத் தெரியக்கூடியனவல்ல. பெரும்பாலான மொழி தொடர்பான பகுதிகள் இப்பிரிவைச் சார்ந்தன. உதாரணமாக தளபாடம் என்ற சொல்லை எடுப்போமாயின், இச்சொல்லின் உண்மையான கருத்து பழக்கத்தின் மூலம் வரும். ஜனநாயகம் என்ற எண்ணக்கருவை கற்பிப்பது கஸ்டமாகும். குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் கூட இவ்வெண்ணக்கருவின் விளக்கம் மாறக்கூடும். சமூகம், பொருளாதாரம் மற்றும் மனிதத் தொடர்புகளில் ஜனநாயக நடத்தைகளை வரையறுப்பது கடினம். பிள்ளை வளர்ச்சியடைய எண்ணக்கரு விளக்கத்தை பொறுத்து அவை திருத்தமடையும். இத்தகைய எண்ணக்கருக்கள் மிகவும் பொதுவானவையாக இருப்பதுடன் குறிப்பானவையல்ல.

எளிமையானவற்றிலிருந்து சிக்கல் வாய்ந்தது வரையில், தெளிவற்றதிலிருந்து மிகத் தெளிவானது வரையில் படிமுறையாக எண்ணக்கரு அமைப்பு இருக்கலாம். இவற்றின் உயர்நிலைப் பொதுக்கருத்துக்கள் கூடிய விளக்க சக்தியையுடையன. அத்துடன் இவற்றுக்குக் கீழ் உள்ளவற்றுடன் தொடர்புடையதாகவும் காணப்படும். இச்சிக்கலான எண்ணக்கருவை எளிய எண்ணக்கருவின் அமைப்புக்களாகப் பிரித்துக் கொள்ளலாம். கருத்தியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுப்பாய்வுகளில் நிகழ்வது இதுவேயாகும். உதாரணமாக விளிம்பு என்ற சொல்லை வரையறுக்கும் போது ‘ஓரம்’,‘வட்டம்’ என்ற எளிய பொதுக் கருத்துக்கள் உள்ளடங்கியிருப்பதை நாம் கவனித்தோம்.

ஒரு உரைநடைப்பகுதியில் உள்ள எண்ணக்கருவைப் பொறுத்து பாடம் அல்லது ஒரு செய்தி கருத்தியல் அடர்த்தியில் வேறுபடலாம். பின்வரும் உதாரணத்தை கவனிக்கவும்

**உதாரணங்கள்**

1. பிள்ளை வீட்டிற்குச் சென்றது
2. பிரித்தறிதல், வேறுபடுத்தலுக்கும் பொதுமைப்படுத்தலுக்கும் முன் வருவதாகும்

இந்த இரு வசனங்களின் வேறுபாடுகள் எண்ணக்கருவின் பண்பைப் பொறுத்ததாக காணப்படும். இரண்டாவது உதாரணம் கூடிய கருத்தியல் அடர்த்தியுடையது. ஒருவன் எண்ணக்கருவை விளங்கிக் கொள்வதில் அனுபவிக்கும் கஸ்டங்கள் அது ஒவ்வொன்றையும் எவ்வளவு தெளிவாக விளங்கிக் கொள்கின்றான் என்பதில் தங்கியுள்ளது. நாம் கற்கும் அல்லது கற்பிக்கும் பாடங்கள் கருத்தியல் அடர்த்தியில் ஒன்றுக்கொன்று வேறுபடும். கருத்தியல் அடர்த்தி பெருமளவிலுள்ள பாடம் உளவியலாகும். எப்பாடத்திலேனுமுள்ள அறிவுத்தொகுதியை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்திய எண்ணக்கருவை விளங்கினாலே அப்பாடத்தில் தேர்ச்சி பெற முடியும். எனவே எண்ணக்கருவாக்கம் ஆசிரியருக்கும் இன்றியமையாததாகின்றது. எனவே எண்ணக்கரு பற்றி மிகவும் சுருக்க சாராம்சமாக பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

குறித்த தூண்டிகள் சம்பவங்கள் அல்லது சிறப்பியல்புகள் ஓர் வகுதியாக வகைப்படுத்துவதே எண்ணக்கருவாகும். ஓர் எண்ணக்கரு குறியீட்டிற்குள் அமைகின்றது. குறியீடுகளின் பொதுவான அமைப்பு சொற்கள் ஆகும். மற்றும் அடையாளங்களும் வரைபடங்களும் உண்டு. எண்ணக்கருக்களில் உள்ளடக்கிய குறியீடுகள் தொடர்பாடலுக்கு பயன்படுகின்றன. ஒருவன் தூண்டிகளுக்குத் துலங்கிக் கொள்வது அவனுடைய தூண்டிக்கும் துலங்கலுக்குமிடையிலான ஊடகமான எண்ணக்கருவில் தங்கியுள்ளது.

எமது சிந்தனைக்குரிய பொருளை எண்ணக்கருவான வைத்து நாம் சிந்திக்கின்றோம். எண்ணக்கரு எளிமையாக அல்லது சிக்கலானதாக இருக்கலாம். காட்சி சார்ந்ததாக அல்லது கருத்தியல் சார்ந்ததாக, தெளிவாக வரையறுக்கப்பட்டு அல்லது வரையறுக்கப்படாததாக இருக்கலாம். சிக்கலான எண்ணக்கருக்களைப் பிரித்து படிமுறையமைப்பில் எடுத்துக் காட்டலாம். இதில் அதன் அமைப்பிற்குரிய எளிய கருத்துக்கள் யாவும் அடங்கும். கொடுக்கப்பட்ட பாடத்திலுள்ள கருத்தியல் அடர்த்தி, அதில் தேர்ச்சி பெறுவதற்கான ஆற்றலை வேறுபடுத்தும், அறிவுசார் விருத்தியைப் பெறும் போது பிள்ளையில் சொற்கருத்தும் விருத்தியடையும் அல்லது மாறும். இவை அனுபவத்தினாலும் மாறும்.

எண்ணக்கருவாக்கம் ஒரு செயல்முறையாகும். இதில் பிள்ளை சூழலுடன் இடைத்தாக்கம் பெற்று தான் எதிர்நோக்கும் திரளான தூண்டிகளை வகைப்படுத்துகின்றது. இவ்வாறு வகைப்படுத்துவதன் மூலம் பிள்ளை சூழலை ஒழுங்காக்கி அதற்கு பொருள் கூறும். அதன் பின்பு இந்த விளக்கம் அடிப்படையில் பிள்ளை செயற்படும். எண்ண உருவாக்கம் பிரித்தறிதல், வேறுபடுத்தல், பொதுமைப்படுத்தல் என்பன அடங்கிய ஓர் சிக்கலான செய்முறையாகும். பிள்ளை தெளிவாக எடுத்துக்காட்டுகளை, எடுத்துக்காட்டு அல்லாதனவற்றின் எண்ணக்கருக்களை அடையாளம் கண்டுகொள்ளும் போது அல்லது வேறு வகையில் கூறின் ஒரு வகைக்குரியதையும் அல்லாததையும் அடையாளம் காணும் போது பிள்ளை எண்ணக்கருவை உருவாக்கிக் கொண்டுள்ளது என்று கூறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை

ஒரு பிள்ளை இயல்புகளை அல்லது பண்புகளை வரையறுக்கும் ஆற்றலைப் பெற்று எண்ணக்கரு உதாரணங்களை, உதாரணம் அல்லாததிலிருந்து வேறுபடுத்தும் பொழுது பிள்ளை எண்ணக்கருவைப் பெற்றுள்ளது என கூறமுடியும். எண்ணக்கரு அடைவு அதிகரித்துவரும் அறிவு விருத்தி நிலை மாற்றங்களுடன் மாறும். எனினும் எண்ணக்கருவாக்க உருவாக்கச் செயன்முறை ஒரே மாதிரியாகவே காணப்படும். பிள்ளை புதிய நிலைமைகளைத் தானே சம்பாதித்துக் கொள்கின்றது. இப்புதிய நிலைமைகளில் திறமையுள்ளவனாக்குவதற்கு பிள்ளை அவ்வாறே செயற்படவேண்டும். ஓர் குறிப்பிட்ட வயதில் பிள்ளை ஒரு குறிப்பிட்ட எண்ணக்கருத்தினை அடையலாம் அல்லது அடையாதிருக்கலாம். பிள்ளைகளின் எண்ணக்கரு அடைவினைச் சோதனை செய்யும் அநேக பரிசோதனைகளில் ஆய்வாளர்கள் தெரிவு செய்துள்ள குறிப்பிட்ட வகையை பிள்ளை அடைந்திருக்க வேண்டுமென எண்ணுகின்றனர். அல்லது தாம் தெரிவு செய்த எண்ணக்கருவாக்க செய்முறையில் பிள்ளை பிரித்தறிதல், வேறுபடுத்தல், பொதுமைப்படுத்தல் ஆகிய தகைமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே எண்ணக்கரு பெறும் தகைமை வயதின் ஏற்றத்துடன் மாற்றம் அடைகின்றது.

**Bibliography**


Bee Helen, R.F (1996) The Developing Child, Harper and Row Publishers, New York (5th edition)

Bowlby, W.Grief (1999) Mouring in infancy and Early Childhood, Psychoanalytic study of the child, New York : Harper and Row

Elkind, D.F (2001) Children and Adolescents : Interpretative essays on Jean Plaget, New York : Oxford University Press



C.Arulmoly,

B.Sc (Agri), PGDE, PGDEM (Merit), M.Sc (Edu.Mgt) CTHE, M.Phil, SLEAS

Senior Lecturer in Education, Department of Education and Childeare

Faculty of Arts and Culture , Eastern University, Sri Lanka




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Zonal Administrators



**1st Line**
Mr.A.Selvanayakam, Miss.S.Amutha, Mr.T.Sarvanantham, Mr.N.Vijendren, Mr.K.Ariyanayakam, Mr.M.K.Anees

**2nd Line**
Mrs.D.H.Malini, Mr.N.Yakub Jan, Mrs.F.Iqpal, Mrs.P.Gerard, Mrs.S.Varathaseelan, Mrs.M.Sothinathan, Miss.Kim Youngin

**3rd Line**
Mr.S.Ganesalingam, Mr.S.Tharmalingam, Mr.K.Sriskantha, Mr.S.Thavanathan, Mr.S.Mathiyalakan, Mr.S.Suthakaran, Mr.R.Nimalaranjan, Mr.K.Selvanayakam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Zonal ISAA



1st Line

Mr.R.Sivanesan, Mr.S.Shanmugadas, Mr.R.Suresh, Mr.D.Chandima Thro, Mr.N.Vijendren, Mr.K.Chandrakulasingam, Mr.M.Uthayakumar, Mr.C.Deogupillai, Mr.M.M.Nazeer

2nd Line

Mr.K.Sothirajah, Mr.J.Abdul Lathef, Mrs.H.D.Piriyadarshini, Mr.A.M.Ameen, Miss.K.Lingaluxmy, Mrs.S.Karunakaran

3rd Line

Mrs.R.Wazeer, Mrs.P.Jeyakanthan, Mrs.T.Rajathurai, Mrs.R.J.M.Rajapaksha, Miss.K.Girija, Mrs.M.Thiruththani, Miss.V.Vinotha, Mrs.J.Mathiyalagan, Mrs.M.S.Thilakaseeli, Mrs.K.Srinivasan, Mrs.I.Rahundraraja, Mrs.V.Jeyaganesh, Miss.T.Saratha, Mrs.S.W.A.Udeni, Mrs.R.Amirthalingam, Mrs.J.C.Chelliah, Mrs.K.Uthayakumar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Ladies Staff



**1st Line**
Mrs.E.A.P.Usha Dammika,Mrs.R.A.Anton Julius, Mr.K.Ariyanayakam, Mr.N.Vijendren, Mr.M.K.Anees, Mr.R.Sivaruban, Mrs.A.Thivagarasarma

**2nd Line**
Mrs.J.Premashanthini,Mrs.S.Jeyagowri, Mrs.K.Shanthini, Mrs.S.Sarojini, Mrs.A.Kumuthavani, Mrs.H.Suresh

**3rd Line**
Mrs.K.Navashanthy, Mrs.R.Kiriharan, Mrs.V.Vasanthini, Mrs.M.V.Karthika, Mrs.C.Prapadevi, Mrs.F.F.Muzammil, Mrs.S.Navananthini, Mrs.P.Kaliyamma, Mrs.D.Nithiswary, Mrs.S.Prashanthini, Mrs.M.M.Salomy, Mrs.S.Pratheepa, Mrs.N.Kamalashini, Mrs.S.V.Sasikala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Gent Staff



**1st Line**

Mr.P.Kumanan, Mr.K.Ariyanayakam, Mr.N.Vijendren, Mr.M.K.Anees, Mr.A.Baskaran

**2nd Line**

Mr.T.Prabatharan, Mr.T.Mohamed Insaf, Mr.K.Thachchidanandam, Mr.T.Paranthaman, Mr.A.Thanushan, Mr.S.Veerasuthaharan

**3rd Line**

Mr.K.Raja, Mr.V.Dominic, Mr.P.Asanka Ravinath,Mr.A.Selvakumar, Mr.J.M.Jamsith, Mr.N.Yogarajah, Mr.M.Raveendran,Mr.M.J.M.Insaf
Mr.K.Pararajasinham, Mr.K.Raveendran, Mr.P.M.Sukry, Mr.K.Kannan, Mr.A.Anthony

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை விருத்தி பந்திய விஞ்ஞான ரீதியிலான ஆய்வுகள்

சோபா பாலசுந்தரம்

விரிவுரையாளர் - கல்வி பிள்ளை நலத்துறை

கிழக்குப் பல்கலைக்கழகம்

**சிக்மன் பிராய்டின் உளப்பகுப்புக் கொள்கை (1856 – 1939)**

உடல் ரீதியிலும் பார்க்க உளரீதியாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்து மனித நடத்தை பற்றிய ஆய்வில் பிரசித்தி பெற்ற மருத்துவரே பிராய்ட் ஆவார். நனவிலி நிலையில் (அறிதுயில் நிலை) நோயாளிகளை வைத்து அவர்களுடைய ஆரம்பப் பிள்ளைப் பருவ அனுபவங்களை மீட்டல் செய்து அவற்றைத் தனியாள் வரலாறுகளாகத் தொகுத்தார். இவை நோயாளிகளின் உடல், உள பிணிகளுக்குரிய காரணிகளை இனம் காணவும், சிறப்பான முறையில் சிகிச்சையளிக்கவும் உதவியது. தனது கண்டுபிடிப்புக்களை வைத்து மனித நடத்தையையும் பிள்ளை வளர்ச்சியையும் விளக்குவதற்கு விரிவான கொள்கையொன்றை விருத்தி செய்து அதை உளப்பகுப்புக் கொள்கையென அறிமுகம் செய்தார்.

தனியாள் ஒருவருடைய எழுச்சி சார்பான, நடத்தை சார்பான நெறிபிறழ்வுகளை இனம் காண்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் என இக்கொள்கை பிராயிட்டினால் வடிவமைக்கப்பட்டது. மனித நடத்தை பற்றிய ஆய்வில் விஞ்ஞான முறைகளைப் பின்பற்றும் உளவியலாளர்கள் தரவுகளுக்கு அப்பால் செல்வதற்காக பிராயிட்டை விமர்சித்து அவருடைய கொள்கை விஞ்ஞான பூர்வமற்றதென கூறியதன் காரணமாக சில வருடங்களின் பின்னர் இக்கொள்கை திருத்தியமைக்கப்பட்டதுடன் இப்பொழுதும் உளநோய் மருத்துவர்களால் அவர்களுடைய நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க பிரயோகிக்கப்படுகின்றது.

பிள்ளை பற்றிய ஆய்வில் பிள்ளைப்பருவ அனுபவங்கள் அதன் பின்னைய விருத்தியிலும் விருத்திசார் நோக்கிலும் கொண்டிருந்த தாக்கத்தின் முக்கியத்துவத்தைப் பிராயிட்டினுடைய கொள்கை எடுத்துக்காட்டியது. இது விருத்திசார் உளவியலில் ஒரு திருப்பு முனையாக அமையும். அதேவேளையில் உளப்பகுப்பாய்வு உளவியலுக்கும் பரிசோதனை உளவியலுக்குமிடையே பிணைப்பை ஏற்படுத்துவது சாத்தியமாகவில்லை. நடத்தைப் பிரச்சினையுடன் கூடிய தனியாட்களுக்கு சிகிச்சையளிப்பதிலேயே மருத்துவ உளவியல் கவனம் செலுத்துகின்றது. எனினும் இவற்றுள் சில மனம், ஊக்கல், ஆளுமை ஆகியவற்றை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்ய முடியுமென நம்பிக்கை கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை பற்றிய பிராய்டினுடைய ஆய்வு ஜேர்மனியில் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அமெரிக்காவிலும் ஒரு குழு பிள்ளை விருத்தி பற்றிய ஆய்வில் ஈடுபட்டது. 1930இல் அதிதீவிர நடத்தை வாதியான வாட்சன் என்பவர் அல்பேட் என்ற சிறுவனை விலங்குகளுடன் 'நிபந்தனைப்படுத்தும்' தனது ஆராய்ச்சியை மேற்கொண்டார். அதாவது இது அல்பேட்டை அவனது அன்புப் பிராணியான முயலுக்குப் பயப்படச் செய்வதாகும். பிள்ளைகளை நிபந்தனைப்படுத்தவும், நிபந்தனைப்படுத்தலிலிருந்து விடுவிக்கவும் முடியுமென வாட்சன் பெற்றோருக்கான அறிவுரையில் எடுத்துக் கூறியுள்ளார். தாம் விரும்பிய நடத்தைகளைப் பிள்ளைகளிடத்தில் உருவாக்குவதற்கு ஒரு நிலையில் அவர்கள் பெற்றோரின் கவனத்திற்கு உட்பட வேண்டுமென வாட்சன் கூறினார். இக்கருத்தின் பிரதிபலிப்பாக ஸ்ரான்லி ஹோல் என்ற ஆரம்பகால உளவியலாளருடைய ஆய்வுகள் விரிவு பெற்றன. இதே காலப்பகுதியில் ஆர்னல்ட்கெசல் என்பவர் நெடுங்கோட்டு அவதானமுறை ஆராய்ச்சியை ஆரம்பித்து செயல்படலானார்.

**பிள்ளை விருத்தி பற்றி ஆர்ணல்ட் கெசலின் கொள்கை**

அமெரிக்க மெய்யிலாளரும் உளவியலாளருமாகிய ஜோன் டூயி இனால் பரிந்துரைக்கப்பட்ட சுய வழிகாட்டலை ஆர்னல்டின் விருத்திசார் அணுகுமுறை ஏற்றுக் கொள்ளவில்லை. ஜே.ஜே.ரூஷோ என்ற பிரான்சு நாட்டு மெய்யியலாளர் 18ஆம் நூற்றாண்டிலே எல்லா வளர்ச்சியும், ஒழுங்குபடுத்தப்பட்ட தொடர்ச்சியான நிலைகளைக் கொண்டன என்றும், அதன் நிச்சயத்தன்மை, முன்னேற்றப்பாட்டு ஒழுங்கு, வடிவம் என்பவற்றுடன் இணைந்து வெளிப்படுகின்றதெனவும் கூறினார். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்ரான்லி ஷோல் இக்கொள்கையை மேலும் விளக்கினார். கெசல் அவரைப் பின்பற்றினார்.

நடைமுறை விருத்திசார் உளவியலிலே முதிர்ச்சிப் பொறிமுறையின் முக்கியத்துவத்திற்கு கெசல் வலியுறுத்தல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்செயல் முறைகளின் தொழிற்பாடுகளை காலத்திற்கு முந்திய முதிர்ச்சியிலும் குழவிப் பருவத்திலும், விருத்திசார் ஆராய்ச்சி மூலமும் 15 வயது வரையுள்ள பிள்ளைகளில் நெடுங்கோட்டு ஆய்வின் மூலமும் விளக்கிக் காட்டினார். கெசல் 0-5 வயது, 5-10 வயது, 10-15 வயதெல்லையில் உள்ள பிள்ளைகளின் வளர்ச்சியையும் விருத்தியையும் பற்றிப் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் செய்த நெடுங்கோட்டு ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் பிள்ளை விருத்தி பற்றிய நியமங்களை நிறுவினார்.

**பிள்ளை விருத்தி பற்றிய கொள்கைகள்**

பிள்ளை பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் அதன் விருத்தி பற்றிய கொள்கைகள் எழக் காரணமாக அமைந்தன. பொதுவாக ஒரு கொள்கையானது

- ஒரு விடயத்தை விபரிப்பதாக மட்டும் அமைவதில்லை
- குறிப்பிட்ட நிலைமை ஏன் காணப்படுகின்றது, அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை விளக்குகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அங்குமிங்கும் கிடக்கும் அவதானங்கள் யாவற்றையும் இணைத்து ஒரு ஒழுங்கினை ஏற்படுத்துகின்றது.
- எதிர்கால ஆய்வுகளுக்குத் தேவையான கருதுகோள்களை வழங்குகின்றது.
- ஏற்கனவே உருவாக்கப்பட்ட கொள்கைகளை பரிசீலிப்பதற்கு உதவுகின்றது.

இதன் அடிப்படையில் சகல குழந்தை உளவியலாளர்களும் பல்வேறு விருத்தி பற்றிய கொள்கைகளை முன்வைத்தனர். பல்வேறு கொள்கைகளை முன் வைத்தவர்கள் எந்த விடயங்களிலும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கவில்லை என கூறமுடியாது. பிள்ளைகளினுடைய வயது அதிகரிக்கும் போது ஏற்படும் மாற்றங்களை இந்த உளவியலாளர்கள் யாவரும் கருத்திற் கொண்டு நடத்தையில் ஏற்படும் ஆகக்கூடிய மாற்றங்களை எடுத்துக்காட்டினர். அத்துடன் எத்தனை சதவீதமான பிள்ளைகளில் இது நிகழ்கின்றது. இம்மாற்றங்கள் எந்த சராசரி வயதுகளில் இடம்பெறுகின்றன என கண்டறிய முற்படும் வேளையில் பல்வேறு கற்றல் பணிகளுக்குத் தேவையான திறன்களையும், பல்வேறு வயதுகளில் பிள்ளைகள் கொண்டிருக்கும் திறன்களையும் பகுப்பாய்வு செய்தனர்.

உளவியலாளர்கள் இந்த மாற்றங்களுக்கு விளக்கமளிக்க முற்படும் போது அவர்கள் வளர்ச்சியை ஏற்படுத்தும் இயற்கை வளர்ப்பு போன்ற காரணிகளை வெவ்வேறு அளவில் வலியுறுத்திக் கூறினார். வளர்ச்சிச் செயற்பாட்டை நோக்குவதிலும் அவர்கள் வேறுபட்டனர். உதாரணமாக வளர்ச்சி என்பது தொகை ரீதியான அதிகரிப்பா அல்லது அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய பண்புரீதியான அதிகரிப்பா என்பதில் வேறுபாடு காணப்பட்டது. சிலருடைய கருத்தின் படி இது படிமுறைத் தன்மையுடையது என்றும், வேறு சிலரின் கருத்துப்படி வட்டத் தன்மையானது என்றும் கூறப்படுகின்றது. அறிவுசார் மனவெழுச்சிகள் மற்றும் ஒழுக்கம் சார்ந்த நடத்தைகள் போன்ற உளச் செயற்பாடுகளில் இயல்புகளை வளர்ச்சி பற்றிய கொள்கைகளை முன்வைத்தே உளவியலாளர்கள் ஆராய முற்பட்டனர்.

பிள்ளைகளின் வளர்ச்சிக் கொள்கை பற்றிய மேற்குறிப்பிட்ட சுருக்கமான ஆராய்வு உளவியல் கற்கும் மாணவர்களுக்குப் போதாமல் இருப்பதினால் ஒவ்வொரு கொள்கையிலும் வலியுறுத்தப்படும் விடயம் பற்றிய மேலதிக அறிவு அவசியமாகும். இதன்படி விருத்தி பற்றிய சில கொள்கைகள் பற்றி இங்கு ஆராயப்படுகின்றன.

**உயிரியற் கொள்கைகள்**

உயிரியற் கொள்கைகள் பிள்ளை வளர்ப்பில் இயற்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஆனால் பிள்ளை வளர்ப்பு, வளர்ச்சியில் முற்றாகவே முக்கியத்துவம் அற்றதென இக்கொள்கை கூறவில்லை. சூழலிலிருந்து பெறும் அனுபவங்களின் முக்கியத்துவம் பற்றி விருத்திசார் உளவியலாளர் மத்தியில் ஒத்த கருத்துக்களே நிலவுகின்றன. உயிரியல் கொள்கையாளர்களில் முன்னணியில் இருந்தவரான ஆர்னல்ட் கெசல் (1825) முதிர்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளார். முதிர்ச்சி பற்றிய எண்ணக்கரு உருவாக இவரே காரணமாக இருந்தார். இவர் பல்வேறு முதிர்ச்சிப்படிகளின் முக்கியத்துவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டினார். இது ஒரு உயிரியல் நிகழ்வென கூறினார். சாதாரண நிலைமைகளில் எல்லாப் பிள்ளைகளும் பெறுகின்ற வளர்ச்சிக் கோலங்களுக்கு இது இட்டுச் செல்லும். இவரின் கருத்துப்படி பிள்ளை விருத்தியானது ஒரே நேரத்தில் தொடர்ச்சியாகவும், வட்ட ரீதியாகவும் இடம்பெறும்.

கெசல் பிள்ளைப்பருவத்தை மூன்று பிரதான வட்டங்களாகப் பிரித்துக் காட்டினார்.

- 0 – 5 வயது
- 5 – 10 வயது
- 10 – 16 வயது

விருத்தியானது வட்டத்தன்மையுடையதென இவர் கூறியதன் காரணம் முதலாவது நிலையின் அபிவிருத்திகள் பின்வரும் இரண்டு நிலைகளில் மீண்டும் தோன்றும். இது முதலாவது நிலையின் வளர்ச்சிப் பண்புகளை மேலும் முன்னேற்றுவதாகவும் விரிவாக்குவதாகவும் இருக்கும். முதலாவது விருத்திக் கட்டத்தின் போது ஏற்படுவன அதைத் தொடர்ந்து வரும் இரு பண்புகள் மேலும் மேம்பாடும் விரிவும் அடைகின்றது. மனித அனுபவத்தில் காணப்படும் ஸ்த்திரத்தன்மைக்கும் நெகிழும் தன்மைக்கும் இடையில் ஏற்படும் நெருக்கிடையின் விளைவாகவும் விருத்தி ஏற்படுகின்றது என்பது கெசலின் பொதுவான கருதுகோளாகும். உயிரியல் நிகழ்வு ஸ்த்திரத்தை ஏற்படுத்தும் அதே வேளையில் மனித இயல்பு நெகிழ்வுத் தன்மையுடையதாகக் காணப்படுகின்றது. வளர்ச்சிக் கோலத்தை விளக்குவதற்கு கெசல் முதிர்ச்சிக் கோட்பாட்டை பயன்படுத்தினார்.

உயிரியல் கொள்கைகளைப் பின்பற்றிய பல உளவியலாளர்கள் பேச்சு, வளர்ச்சிக் கோலங்கள் என்பவற்றில் பிள்ளைகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளை விளக்க அவர்கள் கருவுற்ற சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற காரணிகளைப் பயன்படுத்தினர். பரம்பரை பரம்பரையாகப் பெற்றுக் கொள்ளும் உளறில இயல்பின் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தினார். ஆதர் ஜென்சென் (1979) போன்ற உளவியலாளர்கள் பிள்ளை வளர்ச்சி பற்றிய ஆய்வில் நுண்மதியில் காணப்படும் தனியாள் வேறுபாடுகளில் பரம்பரையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

**சூழல் சார் கற்றல் கொள்கைகள்**

இயற்கையை அல்லது சூழலை அல்லது வளர்ப்பை முக்கிய காரணியாக வலியுறுத்தும் பல கொள்கைகள் பிள்ளை விருத்தியில் உள்ளன. இதன்படி பிள்ளைகள் நெகிழும் தன்மையுடையவர்கள், அந்த வகையிலும் அவர்களை மாற்றிக் கொள்ளலாம். பிரித்தானிய தத்துவஞானியான ஜோன் லொக் என்பவரின் கருத்துப்படி பிள்ளை தனது வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது அது ஒரு வெற்றுத் தாளாகவே இருக்கின்றது. சூழலில் உள்ள அனுபவங்கள் எதிர்கால ஆளுமை வளர்ச்சியில் பிள்ளையில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. புதிய உள, உடலியல் பண்புகள் சூழலின் செல்வாக்கினாலேயே பெறப்படுகின்றதெனவும், இவை பரம்பரை பரம்பரையாக அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கப்படலாம் எனவும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஜீன்-டி லாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பிரான்சு நாட்டு விலங்கியலாளர் ஒரு கொள்கையாக வெளியிட்டார். இச்சூழல் பற்றிய நிலைப்பாட்டை 19ஆம் நூற்றாண்டின் மானுடவியல் தத்துவமும் ஆதரித்தது. இக்கருத்தின்படி, வாய்ப்பான சூழ்நிலை இருக்குமாயின் வளர்ச்சிக்கான பிள்ளையின் ஆற்றல் எல்லையற்றது. மனிதனே மனித இயல்பை விரும்பியவாறு மாற்றம் பெறச் செய்யலாம் என்பது இதன் பொருளாகும். இதற்கு அமெரிக்க நடத்தைவாதி ஜே.பி.வாட்சன் ஒரு உதாரணமாவார். உளவியலில் எடுத்துக் கூறப்பட்ட 'வெற்றித்தாள்' கருத்தை இவர் வலியுறுத்தினார்.

பிள்ளை விருத்தியில் முதிர்ச்சியானது வழியுரிமையாக வருகின்றதென்ற கருத்தை வாட்சன் முற்றாக நிராகரித்தார். இன்று இக்கருத்தை ஏற்கின்றவர்களே ஆளுமை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு பிறப்புரிமைக் காரணிகளையும், சில உயிரியல் காரணிகளையும் தொடர்புடையதென்பதை ஏற்றுக்கொள்கின்றனர். எனினும் பிள்ளை ஒரு சிக்கலான தூண்டற்பேற்றைக் கற்கும் போது பிள்ளையின் சூழல் சார்ந்த அமைப்பிலிருந்தே கற்றலின் விளைவான துலங்கல் வெளிவருகின்றது. இதே போன்று பிள்ளையின் உள்ளார்ந்த ஆற்றல்களும் அவனுடைய சூழலுக்குமிடையில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான இடைத் தாக்கத்தின் விளைவாகப் பல்வேறு தொழிற்பாடுகளும் வளர்ச்சி பெறுகின்றன. அவர்களைப் பொறுத்தவரையில் பிள்ளையிடம் பிறப்பிலிருந்து காணப்படும் இயல்பான மனநிலை ஒரு முன்னமைவூட்டுங் காரணியுமாகும். காலம் செல்லச் செல்ல இத்தனியாளின் இயல்பு சூழலின் செல்வாக்கிற்கு உட்பட்டுத் தொடர்ந்து வரும் வளர்ச்சியைப் பாதிக்கின்றது.

பிள்ளை விருத்தி பற்றிய ஆய்வில் பியாஜேயும் அவருடன் சேர்ந்த உளவியலாளர் குழுவினரும் முக்கியமானவர்கள். இவர்கள் பிள்ளை விருத்தியைப் பற்றி விளக்கும் போது கற்றலில் அல்லது மாற்றியமைக்கப்படக்கூடிய செயற்பாட்டை கூடுதலாக வலியுறுத்தினார். இவர்கள் உயிரியல் காரணிகளை நிராகரிக்காமல் பிள்ளை புற உலகுடன் இடைத்தாக்கத்தில் ஈடுபடுவதை இக்காரணிகள் சாத்தியமாக்குகின்றன என கூறினார். இந்த வகையில் பிள்ளை வளர்சிசயில் உயிரியல் காரணிகள் முக்கிய அம்சமாக விளங்குகின்றன. இவ்வாறு இடைத்தாக்கம் பற்றிய இக்கொள்கை மாற்றியமைக்கப்படும் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. பியாஜே இக்கொள்கையை ஓரளவிற்கு பயன்படுத்தியே அறிவுசார் விருத்தியையும் ஒழுக்க விருத்தியையும் விளக்கி அறிவுசார் விருத்திக் கொள்கையை வெளியிட்டார். உயிரி சில அமைப்பு ரீதியான தன்மைகளைக் கொண்டது என்றும், வெளியுலகம் அவ்வாறான அமைப்புக்களைக் கொண்டது என்பது பியாஜேயின் எடுகோளாகும். தொடர்ந்து இவற்றுக்கிடையே இடம்பெறும் இடைத்தாக்கம் மாற்றங்களுக்கு இட்டுச் செல்கின்றன. அத்துடன் தனியாள் நடத்தையைத் தீர்மானிக்கும் சில அடிப்படையான உள அல்லது ஒழுக்க ரீதியான அமைப்புக்களுக்கும் இவ்விடைத்தாக்கம் இட்டுச் செல்கின்றது.

பியாஜேயின் கருத்துப்படி அறிவுசார் நடத்தையானது

- பிள்ளையின் முதிர்ச்சி அனுபவம் (பௌதிக உலகுடனான இடைத்தாக்கம்)
- பிள்ளைகளின் அனுபவத்தில் இயல்பினைப் பாதிக்கின்ற வளர்ப்புமுறை
- வளரும் போது பெற்றுக் கொள்ளுகின்ற கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல்வேறு அம்சங்களின் விளைவாக அமைகின்றது. இவ்வம்சங்களில் தனியாள் அடைகின்ற சமநிலையின் விளைவாக அறிவுசார் நடத்தை அமையுமென பியாஜே கருதினார். இதன் படி பிள்ளையினுடைய பௌதீக, சமூக, உளவியல் மற்றும் சிந்தனை அம்சங்கள் யாவும் பிள்ளையின் சூழலை உருவாக்குகின்றது. இவை யாவும் ஒன்றிணைந்து தனியான முதிர்ச்சி நிலைக்கேற்பத் தன்னை அனுசரணை செய்து கொள்ளும் ஏற்பாட்டைச் செய்கின்றன. பியாஜே முதிர்ச்சி நிலை என்ற விடயத்திற்கு முக்கியத்துவம் அளித்ததன் காரணமாகவே அவர் வளர்ச்சி என்பது- ஒரு தொடர்ச்சியான செயல்முறை என்றும் அதில் பல்வேறு கட்டங்களை இனம் காண முடியுமெனவும் எடுத்து விளக்கினார்.

பிள்ளை வளர்ச்சி என்பது உள்ளார்ந்ததாகவும், மாற்றப்பட முடியாததுமான ஒரு பரிணாமச் செயற்பாடென பியாஜே எடுத்துக்கூறினார். இதில் ஆறு பொது அம்சங்களைத் தெளிவாக்கலாமெனவும் கூறினார். அவையாவன,

- சகல விருத்திச் செயற்பாடுகளும் தொடர்ச்சியானவை
- வேறுபடுத்தல் மற்றும் பொதுமைசார் செயற்பாட்டினூடாகவே வளர்ச்சி இடம் பெறுகின்றது
- ஒவ்வொரு வளர்ச்சிக்கட்டமும் அதற்கு முன்னைய கட்டத்திலிருந்து எழுகின்றது
- அதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு தொடர்கின்றது
- ஒவ்வொரு கட்டத்திலும் முன்னைய கட்டத்துச் செயற்பாடுகள் மீளவும் இடம்பெறுகின்றன
- இவை இன்னொரு வகையாக ஒழுங்கு செய்யப்படுமிடத்து முன்னைய நடத்தைக் கோலங்கள் தாழ்ந்தவை என்பதினால் கைவிடப்படுகின்றன.

இவ்வாறு கைவிடப்பட்ட அமைப்புக் கோலங்கள் அனுபவத்திற்கும் செயற்பாடுகளுக்கும் ஒரு படிமுறையமைப்பினைத் தருகின்றன. இறுதியாகத் தனியாட்கள் இந்தப் படிமுறையின் வெவ்வேறு நிலைகளைச் சென்றடைகின்றன. அவை இடம், காலம் என்னும் வகைகள் போன்ற குறிப்பான எண்ணக்கருக்களாகவோ, பொதுவான அறிவுசார் அமைப்புக்களாகவோ இருக்கலாம். எவ்வாறாயினும் இவ்வமைப்புகள் பௌதிக அல்லது சமூக உலகிற்கு அப்பால் நிலவுவதினால் அவை அறிவு பூர்வமானவை என நம்பப்படுகின்றது. பிள்ளை அனுபவிக்கும் பல்வேறு மீளவலியுறுத்தல்களும் முறைப்படி அமையும் பல குறிப்பான நடத்தைகளைத் தீர்மானிக்கும் காரணிகளாக விளங்குகின்றன.

சூழல்வாதிகள் அல்லது நடத்தைவாதிகள் எனப்பெயர் பெற்ற வாட்சன், ஸ்கின்னர் ஆகியோர் வெவ்வேறு தூண்டிகளுக்கிடையேயும் பிள்ளையின் தூண்டற்பேறுடனும் ஏற்படும் தொடர்பின் விளைவாகவே பிள்ளையின் நடத்தைகள் வெளிப்படுகின்றன என்னும் கருத்தை வெளியிட்டனர். மீளவலியுறுத்தலின் விளைவாக ஏற்படும் மகிழ்ச்சியான அல்லது வேதனையான அனுபவங்களின் காரணமாக இத்தொடர்புகள் ஏற்படுகின்றன. தூண்டி, துலங்கல் அமைப்புக்களில் ஏற்படும் முறையான மாற்றமே வளர்ச்சி என இவ்விருவரும் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். அவர்கள் உள்ளார்ந்த வளர்ச்சி மற்றும் முன் ஒழுங்கமைப்புப் பற்றிய கருத்தை நிராகரித்தனர்.

இவ்வாறான நிலைப்பாடுகள் காரணமாக இன்று முன் குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம் என்பவற்றில் தூண்டியின் முக்கியத்துவம் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது. பிள்ளைக்கு கற்பதற்குரிய ஆற்றல் இருக்குமாயின் பிள்ளையின் இவ்வுள்ளார்ந்த கற்கும் ஆற்றலைப்பயன்படுத்தி பல விடயங்களைக் கற்பித்துவிடலாம் என இவர் கூறினர். மேலும் இவர்களின் கருத்துப்படி கற்றல், கற்பித்தலில் முக்கிய செயற்பாடு தொழில் நிபந்தனைப்படுத்தலாகும். அல்பேர்ட் பண்டூரா என்ற அறிஞர் கற்றல் செயற்பாட்டில் செயல் மாதிரிகளை அவதானிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார். இவ்வாறான மாதிரிகளிலும் மீளவலியுறுத்தல்களிலும் காணப்படுகின்ற வேறுபாடுகள் காரணமாகப் பிள்ளைகளிடையேயும் வேறுபாடுகள் காணப்படும். எனவே பிள்ளையின் வளர்ச்சிச் செயற்பாட்டிற்கு வெளிச்சூழலே முக்கிய காரணியாக இருக்கின்றது.

**உயிரி - சூழல் இடைத்தாக்கக் கொள்கை**

உயிரியற் காரணிகளும் (அகவிருத்திக் காரணிகள்), சூழற்காரணிகளும் இடைத்தாக்கம் புரிகின்றன என்ற அடிப்படையில் உருவான கொள்கையே இதுவாகும். தனியாள் விருத்தியில் சகல விருத்திகளிலும் உயிரியும் சூழல் இடைத்தாக்கம் புரிகின்றன என்னும் கொள்கையுருவாக்கத்தில் பியாஜே முக்கியமான உளவியலாளராவர். கருக்கட்டலின் பின்பு வளருகின்ற முளையத்தில் கலங்களின் பெருக்கம், கலங்களின் பிரிவு, கலப்பிளவு போன்ற அடிப்படையான செயற்பாடுகளிலும் கூட சூழலும் பங்கேற்கின்றதென்பதே உளவியலாளர்களின் கருத்துக்களாகும். சூழலின் தாக்கங்களான அமுக்கம், தகைப்பு,ஈர்ப்பு மையம் என்பன விருத்தியை விரைவாக்குவதாக இவர்கள் கருதுகின்றனர். உயிரியின் வெவ்வேறு பகுதிகளில் வித்தியாசமாக இருக்கும் இவ்வகையான சூழலின் செல்வாக்குகள் பிறப்புரிமையை தீர்மானிக்க உதவும் கூறுகளுடன் இணைந்து கலக்கூட்டத்தில் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன. இவையே இழையங்கள் மற்றும் உடலின் பகுதிகள் உருவாகுவதற்கு காரணமாக அமைகின்றன. உயிரியல் விகாரம் (Mutation)ஏற்படுவதற்கு சூழல் காரணி முக்கியமானதாகும்.

**உளப்பகுப்பாய்வுக் கொள்கை**

இக்கொள்கையானது உயிரியற் கொள்கை, சூழற்கொள்கை ஆகியவற்றிலிருந்து பெரியளவில் வேறுபடுகின்றது. அறிவு விருத்திசார் கொள்கையாளர் போல சிக்மன்ட் பிராய்யிட்டும் அதன் பின்னர் எரிக், எரிக்சன் உம் பிள்ளையின் நடத்தை உருவாக்கத்தில் புறக்காரணிகளைப் போல அகக்காரணிகளும் முக்கியமானவை என கருதுகின்றனர். உயிரியற் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் பிராய்யிட்டுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஆயினும் படிப்படியாக வளர்ச்சியுறும் நடத்தைக் கோலங்களில் இயல்பான முதிர்ச்சியிலும் பார்க்க உயிரியல் இயல்பூக்கங்களையே பிராய்ட் வலியுறுத்துகின்றார்.

இயல்பூக்கங்கள் யாவும் எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானவை. எனவே மனிதர்கள் அனைவருக்கும் இயல்பூக்கங்கள் இருப்பதாக கருதப்படுகின்றன. ஒவ்வொரு தனியாளுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த சில இயல்பூக்க அவாவை நிறைவு செய்யும் விருப்பங்களே அவற்றை வழி நடத்துகின்றன. இவ்வாறான அடிப்படை இயல்பூக்கங்களை பிராய்ட் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக பாலியலூக்கம், தற்காப்பூக்கம், போரூக்கம் என்பனவாகும். இதைவிட மக்கேல் என்னும் உளவியலாளர் மனித நடத்தையில் 14 வகையான இயல்பூக்கங்களைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். எனவே வளரும் பிள்ளையானது தான் விரும்புவதை எத்தகைய முறைகள் மூலம் நிறைவு செய்ய முயலுகின்றது என்பது வயதுக்கேற்ப மாறுபடும். உளப்பகுப்பாய்வுக் கொள்கையிலும் வளர்ச்சிக்கட்டங்கள் காணப்படுவதினால் இங்கும் இயல்பூக்கங்களை நிறைவு செய்யும் நடத்தை காணப்படுகின்றது.

உளப்பகுப்பாய்வுக்கொள்கை மூலம் பிராய்ட் தனது நோயாளிகளின் நோய்களை இனம் கண்டார். மனித நடத்தையை விளங்கிக் கொள்வதற்கு ஆளுமை, உள்ளம் என்பவற்றின் செயற்பாடுகளைப் புரிந்து கொள்ளவேண்டுமென்று கூறினார். ஒரு வகையில் உளப்பாதிப்பிற்கு உட்பட்ட பிள்ளைகளையும் வளர்ந்தோரையும் உளப்பகுப்பாய்வுக் கொள்கைவாதிகள் யாவரும் பகுப்பாய்வு செய்யத் தொடங்கினர். இந்நோயாளிகள் எவ்வாறு தவறாக நடக்க முற்பட்டனர் என்பதைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் சாதாரண நடத்தையை விளங்கிக் கொள்ள முடியுமென அவர்கள் நம்பினர். பிராய்ட்டின் கொள்கையின் சில அடிப்படை எண்ணக்கருக்களாவன.

- பிள்ளையின் சகலவிதமான நடத்தைக்கும் தேவையான சக்தியை அடிப்படையான இயல்பூக்க உந்துதல்களே வழங்குகின்றன
- ஒரு தனியாள், வாழ்வுக்காலம் முழுவதிலும் இந்த உந்துதல்களை நிறைவு செய்யும் விருப்பதிலேயே இயங்குகின்றான்.
- பிள்ளைப்பருவத்தில் இந்த உந்துதல்கள் நிறைவு செய்யும் வகையில் மூன்று ஆளுமைக்கூறுகள் விருத்தி பெறுகின்றன. பிராய்ட் இவற்றை இட், அகம், அதியகம் என அழைத்தார் இவை இதே ஒழுங்கில் விருத்தியடையும்
- இந்த ஆளுமையின் வெவ்வேறு கூறுகளுக்கிடையே முரண்பாடுகள் தோன்றுமிடத்துப் பதகளிப்பு தோன்றும்
- இப்பதகளிப்பு காரணங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியாத போது அவன் சில பாதுகாப்பு வழிமுறைகளைக் கையாளுகின்றான். இவை பதகளிப்பைக் குறைப்பதற்கான சில தன்னியக்கமான நனவிலி நிலை உத்திகளாகும்.
- விருத்தியைப் பொறுத்தவரையில் தனியாள் ஐந்து முக்கிய உள-பாலியல் கட்டங்களைக் கடந்து செல்ல நேரிடுகின்றது
  - வாய்வழி நிலை 0 – 1 வயது
  - குதநிலை 1 – 3 வயது
  - பாலுறுப்பு நிலை 3 – 5 வயது
  - மறைபருவம் 5 – 12 வயது
  - பிறப்புப் பருவம் 12 – 18 வயது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலப் பிள்ளை – பெற்றோர் தொடர்புகளே பிள்ளை விருத்தியில் மிகவும் முக்கியமானவையாகும். இத்தொடர்புகள் காரணமாக சில நடத்தைகள் நிலையூன்றி விடுகின்றன. இதனால் வளர்ச்சிக் கட்டத்திற்கு பொருத்தமான முறையில் மாற்றம் ஏற்படமாட்டாது. பிள்ளையின் நனவிலி நிலை நடத்தையையும், பிள்ளையின் ஆளுமையையும் இவை பாதிக்கின்றன. ஆளுமைக் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடிய அசாதாரண நடத்தைக்கோலங்களைப் பொறுத்தவரையில் நனவிலி நிலை பற்றிய எண்ணக்கரு அவரது கொள்கையில் முக்கிய இடத்தை வகித்தது.

**முடிவுரை**

பிள்ளை விருத்தி பற்றிய இந்த நான்கு கொள்கைகளும் ஒன்றிலிருந்து ஒன்று எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைப் பற்றி சுருக்கமாக மேலே கூறப்பட்டுள்ளது. விருத்தியில் ஒவ்வொரு கொள்கையும் அதன் ஒரு வேறுபட்ட அம்சத்தையே கருத்திற் கொள்கின்றது என்பதும் தெளிவாகின்றது. எந்தவொரு கொள்கையும் எல்லா அம்சங்களையும் விளக்கிவிடமுடியாது. பிள்ளை விருத்தி பற்றிய பல்வகைப்பட்ட அணுகுமுறைகளில் உள்ள வேறுபாடுகளும் குறிப்பானவைகள் என கூறிவிடமுடியாது. விருத்திச் செயற்பாட்டில் அவை அடங்கியுள்ளன என்பதில் ஒருமித்த கருத்து நிலவுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்வி அலுவலக நிர்வாகக் கிளை எதிர்நோக்கிய சவால்களும், முன்னேற்றமும் 2013

2013ம் ஆண்டு நிர்வாகக் கிளையைப் பொறுத்தவரையில் ஒரு சவால் நிறைந்த ஆண்டாகவே கருதப்பட வேண்டிய சூழல் நிலவியது. மிக நீண்ட கால அனுபவம் வாய்ந்த அலுவலர்கள் பலர் இக்கிளையில் இருந்து ஓய்வு பெற்றதும், இடமாற்றம் பெற்றும் 2012இல் சென்றுவிட்டனர். வேறு திணைக்களங்களில் இருந்து இடமாற்றம் பெற்றுவந்த பல புதிய முகங்கள் எமது கிளையில் கடமையேற்றுள்ளனர். இவர்களில் பலர் சுயவிபரக்கோவை வேலைகளைச் செய்வதில் பெரியளவு அனுபவத்தைப் பெற்றவர்களாக இருக்கவில்லை. நிர்வாகக் கிளைக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளரும் பல்வேறு விடயங்களையும் கற்றே தெளிய வேண்டிய நிலையில் இருந்த ஒரு காலப்பகுதி இதுவாகும். எனவே எமது கிளையைப் பொறுத்தவரை 2013 என்பது ஒரு சவாலான ஆண்டாகவே கடந்து சென்றுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கல்வித்துறையும், சுகாதாரத் துறையும் அதிகளவு பணியாளர்களைக் கொண்ட பெரிய சேவை வழங்கும் துறைகளாக இனங்காணப்பட்டுள்ளது. எமது வலயத்தின் கீழ் 3 கல்விக் கோட்டங்களும், 78 தமிழ், முஸ்லீம், சிங்களப் பாடசாலைகளும் இந் நிறுவனங்களில் பணிபுரியும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள்,சமூக ஆவலர்கள் மற்றும் அரச / அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர்கள் போன்ற பல்வேறு வகையில் அமைந்த மனிதர்களுடன் எமது வலயம் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. மனிதர்களை முழுமையாகத் திருப்திப்படுத்தி சிறந்த சேவையை வழங்குவது என்பது மிகக் கடினமான காரியம். இதனை அனைவரும் ஏற்றுக் கொள்வர். பொதுவாகக் கல்விச் சமூகத்துடன் தொடர்புபடும் பெரும்பாலானோர்கள் அறிவுசார் ரீதியில் சிந்தித்துச் செயல்படக்கூடியவர்கள். எதனையும் உடனடியாகச் செய்ய வேண்டும், உடனடியாகத் தீர்க்க வேண்டும், அனேகமான விடயங்களில் தமக்குச் சார்பாகவே முடிவுகள் அமைய வேண்டும் என்ற எதிர்பார்க்கையுடன் அலுவலகத்தை நோக்கி வருகின்றனர். வாடிக்கையாளர்களின் தேவைகளையும், எதிர்பார்க்கைகளையும் உடனடியாக நிறைவேற்றக் கூடியளவு வளங்களும், வாய்ப்புக்களும், வசதிகளும் போதியளவில் எமது பிரிவில் இல்லை. எமது கிளைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணியினரை விடக் குறைந்தளவு ஆளணியினரே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் ஒவ்வொரு முகாமைத்துவ உதவியாளர்களும் அதிகளவு சுமையை சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் மன உளைச்சலுடன் கடமையாற்ற வேண்டிய சூழல் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சுய விபரக்கோவைக்குரிய உத்தியோகத்தர்கள் | எண்ணிக்கை |
|---|---|
| கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் | 04 |
| வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் | 72 |
| ஆசிரியர்கள் (SLPS– அலுவலர்கள்) | 96 |
| ஆசிரியர்கள் (ஆசிரியர் உதவியாளர் - 05 உட்பட) | 1682 |
| சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் | 27 |
| கல்வி சாரா ஊழியர்கள் | 132 |
| வள நிலையங்களில் கடமை புரிபவர்கள் | 02 |
| மொத்தம் | 2015 |

மேலே குறிப்பிடப்பட்ட சகல பிரிவினருக்குமான சேவை வழங்குனராக எமது பிரிவு முக்கிய கடமைகளை ஆற்றி வருகின்றது. பொதுவாக இவர்களது சுயவிபரக் கோவை மற்றும் சம்பள உயர்ச்சி, சம்பள மாற்றம், பதவி உயர்வு மற்றும் இதர பல சேவைகளையும் தினமும் வாடிக்கையாளர்களின் மனங்கோணாமல் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு அதாவது ஆளணிவளம், பௌதிக வளம், நேரவளம் ஆகியவற்றிற்கு மத்தியில் வினைத்திறனுடன் பணியாற்ற வேண்டிய கடப்பாடு எம்மீது சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக சில அதிபர்களும் பல ஆசிரியர்களும் பின்வரும் ஆவணங்களை உரிய முறையில் எமது பிரிவில் கையளிக்கவில்லை

| | | |
|---|---|---|
| ஒரு அதிபர் | அதிபர் தரங்கணிப்பீடு | 2005 – 2013 வரை |
| | லீவு விபரம் | 2005 – 2013 வரை |
| | சம்பள உயர்ச்சிப் படிவம் | 2005 2013 வரை |
| | இன்று வரை பதவியில் உறுதிப்படுத்தப்படாமை | |
| | விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய இலக்கம் பெறாமை | |

ஒருவர் தனது சொந்த விடயங்களிலேயே இவர்களை கவனயீனமாக இருக்கின்றாரா? அல்லது அவர் கடந்த காலங்களில் கடமைகளைச் சரிவரசந் செய்யத் தவறியுள்ளனரா? என்பது போன்ற வினாக்களுக்கு விடை தேட வேண்டியுள்ளது. இதே போல ஒரு ஆசிரியர் வேறு வலயத்தில் கடமையாற்றிவிட்டு இங்கு வந்து 2002 முதல் 2012 வரை சம்பள உயர்ச்சிப் படிவம் சமர்ப்பிக்கவில்லை. 2005 முதல் 2012 வரை ஆசிரியர் தரங்கணிப்பீடு சமர்ப்பிக்கவில்லை. 2002 முதல் 2012 வரை லீவு விபரம் B – 100 படிவத்தில் சமர்ப்பிக்கவில்லை. இன்னொரு ஆசிரியர் முதல் நியமனம் முதல் ஏறக்குறைய 25 வருடங்கள் வேறு வலயத்தில் கடமையாற்றி விட்டு 2012 இல் எமது வலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்திருந்தார். இவர் க.பொ.த உயர்தர கல்வித் தகைமையுடன் ஆசிரியராகச் சேர்ந்து பின்னர் பட்டம் பெற்று பட்டதாரி ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றார். இவருக்குரிய படிநிலை சரியாக வழங்கப்படவில்லை என்று எமது கிளையில் தனது பிரச்சினையை முன்வைத்தார். எமது அலுவலர்கள் பிரச்சினையை ஆராய்ந்து புள்ளிகளைக் கணக்கிட்டு இவருக்குரிய பதவி உயர்வினைச் சீர்செய்திருந்தோம். அதனை ஆசிரியர் ஏற்கவில்லை. மாகாணக் கல்விப் பணிப்பாளரால் 22.12.2013 அன்று சம்பள முரண்பாடு தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்கு சகல வலயங்களைச் சேர்ந்த நிர்வாகப் பிரிவு அலுவலர்களையும், தொழிற்சங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகளையும் அழைத்திருந்தார். அக்கூட்டத்தில் மேற்படி ஆசிரியர் ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதியூடாக தனது படிநிலை, பதவி உயர்வு தொடர்பான பிரச்சினையை முன்வைத்தார். ½ நாள் வரையில் இப்பிரச்சினை பல்வேறு கோணங்களிலும் ஆராயப்பட்டு இறுதியில் நாம் புள்ளியிட்டு கணிப்பிட்டது சரி என்ற முடிவுக்கு வந்தனர். இந்த உதாரணங்கள் மூலம் இவர்களைப் போன்ற சில அதிபர்களும், பல ஆசிரியர்களும் தங்களது சுயவிபரக்கோவையை நிறைவு செய்து முழுமைப்படுத்தாமல் உள்ளமை யார் யாரோ முன்னைய காலங்களில் செய்ய வேண்டிய வேலைகளையும் இப்போது கடமையில் உள்ளவர்கள் சுயவிபரக்கோவைகளைப் பரிசீலித்து தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு குறைபாடுகள் பற்றி அறிவித்து வருகின்றோம். இதனைவிட புல்மோட்டை போன்ற தூர இடங்களுக்கு 2013இல் ஆசிரியர்களுக்கான நடமாடும் சேவை மூலம் அவர்களுடைய சுயவிபரக் கோவையிலுள்ள குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து வருகின்றோம்.

இவற்றை விட மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில், தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில், அவற்றுக்கான ஆரம்பக்கட்ட கொடுப்பனவுப் பணிக்குரிய வேலைகளையும் எமது கிளை மேற்கொண்டு வருகிறது.

மேலும் நாளாந்தம் புதிய புதிய வேலைகளும், புதிய புதிய பிரச்சினைகளும் எம்மை தினமும் எதிர்நோக்குகின்றன. அதனையும் ஏற்று அர்ப்பணிப்புடன் எமது குழுவினர் பணியாற்றி வருகின்றனர்.

ஒவ்வொருவருக்கும் என ஒதுக்கப்பட்ட பணிகளை விடவும் மேலதிகமான பணிகளையே பலர் செய்து வருகின்றனர். ஒவ்வொருவரது இயலுமைக்கும் ஏற்ப (ஊயியஉவைல) வேலைப்பகிர்வு அமைவது வேலையை இலகுபடுத்த உதவும். அதற்காக சகல பணிகளையும் நிர்வாகப்பிரிவு தான் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பதுவும் தவறாகும். வேலைகளை ஓரளவுக்குச் சமச்சீராகப் பகிர்ந்தளித்து செய்வதன் மூலம் பணிகளை இலகுவாகவும், சரியாகவும், சிறப்பாகவும் செய்யமுடியும். அதே போல வளங்களைப் பகிரும் போதும் ஒவ்வொரு கிளைக்கும் அனுமதிக்கப்பட்ட அளவு ஆளணி, கணனி வசதி மற்றும் ஏனைய வளங்களை 2014 இல் ஆவது பெற்றுக் கொடுத்து சேவை வழங்கலை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. அதே போல வேலை செய்யும் இடத்தின் சூழல், ரம்மியமானதாக அமைய வேண்டும். ஆளிடைத் தொடர்புகளும் சுமூகமானதாக அமைய வேண்டும். மனமகிழ்வுடன் வேலை செய்யும் நாளாந்த நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டிய தேவையும் எமக்குள்ளது.

எமது பிரிவு பல்வேறு சவால்களை 2013இல் எதிர்நோக்கிய போதும் வெளியீடுகள் / முன்னேற்றங்கள் கீழ்வரும் அட்டவணையின் மூலம் காட்டப்படுகின்றது.

அட்டவணை

| 2012 | 2013 |
|---|---|

'எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்பார்கள். எமது வலயத்தின் சாதனைகள், முன்னேற்றங்கள், வெளியீடுகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புகள், புகழுரைகள் அனைத்தும் எமது வலயத்தையே சாரும். அதே போல மேலதிகாரிகளால் விடுக்கப்படும் கண்டிப்புக்கள், எச்சரிக்கைகள் அனைத்தும் வலயக் கல்விப் பணிப்பாளரையே சாருகிறது. இதுவும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். இன்பத்திலும், துன்பத்திலும் அனைவரும் பங்கேற்க வேண்டும். அதே போல ஒரு நிறுவனத்தின் உயர்வு, தாழ்வு ஆகியவற்றுக்கு வலயத்தில் கடமை புரியும் அனைவரும் வகை கூற வேண்டிய தார்மீகப் பொறுப்பையும் ஏற்க முன்வர வேண்டும். கூட்டாக வகை கூறும் பொறுப்பை அனைவரும் ஏற்று நடக்க வேண்டும்.

விமர்சனங்களை வெளியிடுவதுவும், கேள்விகளைக் கேட்பதுவும் இலகுவான விடயம். ஆனால் விமர்சனங்களுக்கு ஆக்கபூர்வமாகப் பதிலளிப்பதுவும், கேள்விகளுக்குச் சரியாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியமுறையில் பதிலளிப்பதும் மிகக் கடினமான பணியாகும். இதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும். எமக்கென ஒரு பாரமபரியம் உள்ளது. அதில் முதன்மையானது மற்றவர்கள் மீது பழியை இலகுவாகச் சுமர்த்துவது. 'காலால் கல்லுக்கு அடிக்கின்றோம்' மற்றவர் காலில் என்ன காயம் என்று வினவுகின்ற போது நாமளிக்கும் பதில் 'கல் காலில் அடித்து விட்டது' என்று கல்லின் மீது பழியை இலகுவாகச் சுமத்தி விடுகின்றோம். இதுவே இன்றைய யதார்த்தமாக உள்ளது வெள்ளிடை மலையாகும்.

நிர்வாகப் பிரிவு தனது பணியைச் சீராகச் செய்யவில்லை என்று பலர் குறை கூறுவதை நான் அவதானித்தேன். அவ்வாறு கூறுகின்றவர்கள் எமது கிளையை சில தினங்கள் அவதானிக்க வேண்டும், அல்லது இக்கிளையில் வந்து பணியாற்றிப் பார்க்க வேண்டும். அப்போது தான் வலியும், வேதனையும் விளங்கும். அவசரமாக அனுப்ப வேண்டிய ஒரு கடிதத்தை அல்லது விசாரணை அறிக்கையைக் கணனி மயப்படுத்தி உரிய கால எல்லைக்குள் செய்து முடித்து அனுப்புவது கூட மிகக் கடினமான பணியாகவே இங்குள்ள நிலைமை காணப்படுகிறது. இவை உரிய காலத்தினுள் அனுப்பப்படாவிட்டால் ஞாபகமூட்டல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். இதனைக் கூட பொருத்தமான வழியைத் தேடுவதிலும் சிரமங்களை நாம் எதிர்நோக்குகின்றோம்.

எமது பிரிவில் இருக்கின்ற கணனிகள், பிறின்ரர்கள் கூட சீராக இயங்காத / பொருத்தமற்ற நிலையில் காணப்படுவதால் ஒரு கணனியையே பல முகாமைத்துவ உதவியாளர்களும் பயன்படுத்துவதை என்னால் காண முடிகின்றது. ஒருவர் கதிரையை விட்டு எழுந்ததும் அடுத்தவர் அக்கணனியைப் பயன்படுத்த வேண்டிய சூழல் காணப்படுகிறது. இது வேலையை இலகுவாகக் கொண்டு செல்வதற்குத் தடையாக அமைகிறது.

இவ்வாறான சூழலில் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, இலக்கை நோக்கிய பயணம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே எமது பணியை ஆற்ற வேண்டியுள்ளது. இதனையும் கல்விச் சமூகம் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதே எமது அவாவாகும். 2014இல் ஆவது எமது குறைகள் சீர் செய்யப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்க்கையாகும்.

அலுவலக நிர்வாகம் என்பது தாபனக்கோவை, நிதிப்பிரமாணம், சுற்றறிக்கைகள், கடிதங்கள், செய்தித் தொடர்பாடல் சேவை போன்ற பல்வேறு விடயங்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புபட்டது. இன்று தொடர்பாடல் மூலம் பல வேலைகளை விரைவுபடுத்திச் செய்ய வேண்டிய சூழ்நிலையும் காணப்படுகின்றது.

திருகோணமலையில் கிழக்கு மாகாணத்தினுடைய ஆளுனர் அலுவலகம், கிழக்கு மாகாண சபை, பல செயலகங்கள், திணைக்களங்களைக் என்பன அமையப் பெற்றுள்ளன. இங்கு நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எமது வலயத்தின் பங்களிப்பினையும் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறான எதிர்பார்ப்புக்களையும் உரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய தேவை எமது வலயத்திற்கு உள்ளது. இந்நிலைகளில் எமது வலயம், அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரது பங்களிப்புக்களும் அடிக்கடி வேண்டப்படுகின்றது. அவற்றுக்கான அனுசரணைகளையும் எமது வலயம் நீண்ட காலமாகச் செய்து வருவது யாவரும் அறிந்ததே. இச்சேவைகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு ஏனைய வலயங்களுக்கு எம்முடன் ஒப்பிடும் போது குறைவாகவே உள்ளது.

இவற்றை விட பல் இனச் சமூகம் வாழும் பிரதேசம் திருகோணமலை. அதே வேளை இங்குள்ளவர்கள் பல்வேறு மதங்களையும் சார்ந்தவர்கள் அவர்கள் ஒவ்வொருவரது மொழி, கலை, கலாசாரம், மதம் ஆகியவற்றை மதிக்கவும், செயல்படவும் எமது வலயத்தின் ஊடாக பல பங்களிப்புகள் செய்யப்பட்டு வருவதை பலரும் அறிவர். இவ்வாறான சூழலிலேயே எமது அலுவலகமும் எல்லோரையும் சமமாக மதித்து நடக்கின்றது. பாகுபாடற்ற சேவை எமது பிரிவால் வழங்கப்பட்டு வருகிறது.

எமது வலயம் மூன்று பிரதேச செயலாளர்கள் பிரிவினை உள்ளடக்கிய பாரிய நிலப்பிரதேசத்தைக் கொண்ட வலயமாகும். இங்கு 78 பாடசாலைகள் இயங்கி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1AB பாடசாலைகள் | - | 11 |
| 1C பாடசாலைகள் | - | 22 |
| type II பாடசாலைகள்- | - | 23 |
| Type III பாடசாலைகள் | - | 22 |
| | | 78 |

## பிரதேச செயலாளர்கள் பிரிவு

1. திருகோணமலை பட்டினமும் சூழலும்
2. குச்சவெளி
3. தம்பலகமம்

இம்மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழும் இயங்குகின்ற பல பாடசாலைகளுக்கு இதுவரையில் காணிகள் உரிய முறைப்படி கையளிக்கப்படவில்லை என்பது இவ்வலயத்தைப் பொறுத்தவரை நீண்டகாலப் பிரச்சினைகளாகும். 2013 இல் வலயக்கல்விப் பணிப்பாளர் பிரதேச செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கையை எமது பிரிவினூடாக எடுத்திருந்தார்.

| | | |
|---|---|---|
| திருகோணமலை பிரதேச செயலகம் | - | 11 பாடசாலைகள் |
| குச்சவெளிப் பிரதேச செயலகம் | - | 14 பாடசாலைகள் |
| தம்பலகமம் பிரதேச செயலகம் | - | 04 பாடசாலைகள் |
| | | 29 பாடசாலைகள் |

29 பாடசாலைகளுக்கு எமது வலயத்தின் சிபார்சுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக, கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் மூலம் உரிய பிரதேச செயலாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டு பாடசாலைகளுக்கு காணிகளை உரிய முறையில் கிடைக்கச் செய்ய வழிசமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எமது பணிகள் தொடர்ந்து கொண்டே செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. 2014இல் 2013 இல் எதிர்நோக்கிய சவால்களுக்கு இலகுவான தீர்வுகள் கிடைக்குமாயின் எமது சேவையை தரமாகவும், விரைவாகவும், ஆக்கபூர்வமாகவும் வழங்கமுடியும். இதன் மூலம் திருகோணமலை வலயத்தின் செயற்றிறன் / விளைதிறன் மேலும் அதிகரிக்கப்படும் என்பதில் எவ்வித வேறுபட்ட கருத்தும் இருக்கமுடியாது. எனவே எதிர்வரும் 2014இல் ஒன்றுபட்டு, ஒற்றுமையாகச் செயற்பட்டு சவால்களை வெல்லோமாக.

**திரு.க.அரியநாயகம்**

**உதவிக்கல்விப் பணிப்பாளர்,**

**நிர்வாகப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வருடாந்த சேவை விபர அறிக்கை நிர்வாகக் கிளை
## (ஜனவரி 2013 தொடக்கம் டிசம்பர் 2013 வரை)
## வலயக் கல்வி அலுவலகம்
## திருகோணமலை

### 1) ஆளணி தொடர்பான சேவை விபரங்கள்.

| இல | விடயங்கள் | அதிபர்கள் | ஆசிரியர்கள் | அலுவலக உத்தியோகத்தர்கள் | சிற்றூழியர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | பதவி உயர்வு | 33 | 276 | 04 | 05 |
| 2. | சம்பள உயர்வு | 45 | 1608 | 32 | 119 |
| 3. | விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் | 20 | 126 | 01 | 04 |
| 4. | பதவியில் உறுதிப்படுத்தல் | 13 | 107 | 04 | 05 |
| 5. | பயிலுனர் சேவை நியமணத்தை முற்திகதியிடல் | - | 75 | - | - |
| 6. | சம்பளம் மாற்றியமைத்தல் | 25 | 336 | 30 | 29 |
| 7. | வெளிநாட்டு லீவு அனுமதி | 3 | 29 | 04 | 03 |
| 8. | சேவைச்சான்றிதழ் வழங்கல் | 34 | 200 | 04 | 06 |
| 9. | சுயவிபரக்கோவை அனுப்புதல் | 02 | 91 | 14 | 01 |
| 10. | சுயவிபரக்கோவை பெறல் | - | 64 | 11 | 01 |
| 11. | பரீட்சைப் பெறுபேற்றை உறுதிப்படுத்தல் | 34 | 378 | 06 | 03 |
| 12. | மாகாண சபைக்கு உள்ளீர்ப்பு | 04 | 160 | 06 | 29 |
| 13. | சுயவிபரக்கோவையை | 21 | 167 | 40 | 88 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பூரணப்படுத்தல் | | | | |
| 14. | கடன் விண்ணப்பம் (சம்பளத்தை உறுதிப்படுத்தல்) | 23 | 385 | 04 | 03 |
| 15. | வரலாற்றுத்தாள் பூரணப்படுத்தல் | 04 | 25 | 07 | 04 |
| 16. | அக்றஹாரா கொடுப்பனவு | 12 | 190 | 24 | 18 |
| 17. | அலுவலக ஆதன வரி கொடுப்பனவு | 01 | | | |
| 18. | பாடசாலை விடுதிகள் தொடர்பான வேலைகள் | 03 | 09 | | |
| 19. | வேலை முன்னேற்ற அறிக்கைகளும் பதிவேடும் | | | 55 | |
| 20. | புதிய சுயவிபரக் கோவையை (Personal File) உருவாக்குதல் | - | 105 | 03 | 09 |
| 21. | கடமை விடுமுறைகளும், பரீட்சை விடுமுறைகளும் | 315 | 450 | 242 | 20 |
| 22. | இடமாற்றல்கள் (மகாணம், வேறு வலயம், உள்ளக) | 04 | 146 | 06 | 04 |
| 23. | தற்காலிக இடமாற்றமும் இணைப்பு மற்றும் பகுதி நேரக் கடமைகள் | | 37 | 01 | 01 |
| 24. | உத்தியோகத்தர் ஆளணி விபரங்களும் தகவல் சேகரிப்பும் வழங்கலும் | | | 59 | 86 |
| 25. | பிரசவ லீவு | | 50 முழுச் சம்பளமும் அரைச் சம்பளமும் | 15 சம்பளமற்றலீவு | |
| 26. | புகையிரத ஆணைச்சீட்டு வழங்கல் | 148 சாதாரணம் | 156 கடமை | 20 | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) வெற்றிடங்களை நிரப்புதல்

| கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - விண்ணப்பம் கோரல் | குச்சவெளி | தம்பலகமம் | திருகோணமலை | |
|---|---|---|---|---|
| ஆதிபர் நியமனம் - விண்ணப்பம் கோரல்- பாடசாலை எண்ணிக்கை | 1 AB | 1 C | Type II | Type III |
| | 1 | 2 | 4 | 3 |

## 3) புலமைப்பரிசில் கொடுப்பனவு தொடர்பான சேவை விபரங்கள்.

| விடயங்கள் | தரம் 5 | ஜனாதிபதி புலமைப்பரிசில்கள் |
|---|---|---|
| புலமைப்பரிசில் கொடுப்பனவு | 36 பாடசாலை | 20 பாடசாலை |

## 4) கொடுப்பனவுகளும் சேவைகளும்.

| விடயங்கள் | மின்சாரம் | தொலைபேசி | குடிநீர் |
|---|---|---|---|
| கொடுப்பனவுகள் | 75 | 44 | 3 |

## 5) 2014 இல் முடிக்கப்பட்ட முன்னாயத்த வேலைகள்:

| விடயங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| நேரசூசி அனுமதித்தல் | 64 |
| அமுலாக்கல் திட்டம் | 37 |
| SDS | 10 |
| F.F | 26 |
| S.D.C | 36 |
| பாடசாலைக் கலண்டர் | 37 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) **முறைப்பாடுகளும் விசாரணைகளும்:**

விசாரணைகள் : 36

7) **பாடசாலைகளுக்கு காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்:**

திருகோணமலை - 11

குச்சவெளி - 14

தம்பலகமம் - 4

மொத்தம் -29

8) **ஏனைய விடயங்கள்:**


பாடசாலைக் காணிகள் சுவீகரிப்பும் பதிவுகளும் - 08

சிற்றூழியர்களுக்கான சீருடைகளை வழங்கல் - 86 சிற்றூழியர்கள்

தாபன விடயம் தொடர்பான குச்சவெளி கோட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் நடமாடும் சேவை 10.10.2013 இல் நடாத்தி முடிக்கப்பட்டது - பயனாளிகள் 200 அதிபர்கள் ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සිල් සුවඳ

මා ඉගෙන ගත් සරසවි අධ්‍යාපනය අවසන් කොට රැකියාවකට යාමේ සිහිනය ගොඩනැගෙන්නේ දෙමාපියන්ගෙන් දැඩි ඉල්ලීම මතය. වරෙක පියා ගුරුවරයකු වීමට පැවසුවේ පවුලේ නම්බුව රැකීමට එය වැදගත් යැයි කියා. මව ද එක පයින් මෙම රැකියාවට කැමති බව ප්‍රකාශ කලේ හද පිරි සතුටින්.මාගේ ද ගුරුවෘත්තිය කෙරෙහි ඇත්තේ අපමන ගරුත්වයකි. එනිසා ගුරුවරයෙකු වීමේ තිරණය සනාථ කොට ගත්තෙමි.ගුරුවරුන් තේරිමේ පරික්ෂණයෙන් සමත් වු මා උතුරු නැගෙනහිර පළාතේ පාසලකට පත්විම් ලැබුවෙමි.

විදුහල්පති - ජනිත මහත්තයා මේ පසලට තේරිලා ආපුඑක හොදයි.අපිත් තව ගුරුවරයෙකු එනකන් බලාගෙන හිටියේ.කොහොමද ඔබ තුමාට මේ පාසල හොදට හිතට ඇල්ලුවද?

ජනිත - ඔව් සර් ගොඩක් හොදයි.යැයි මා පැවසුවේ විදුහල්පති පළමු වචනයෙන් මා කුමන කෙනෙක් ද කියා මැන ගනි යන බියෙනි. මා හට නුපුරුදු පරිසරයෙකි එහෙත් මෙය මාහට අභියෝගයකි.කෙලෙස හෝ ජය ගනිමි යැයි මා හිත දැඩි කර ගත්තෙමි.

විදුහල්පති - ආ මෙන්න අජන්තට අළුත් යාළුවෙක් ඉන්නවා අඳුර ගන්න.

අජන්ත - තවත් අළුත් එක්කෙනෙක් ද සර්. මිනිහා ඉඳිද? අපි වගේ කොහොම උනත් මිනිහට එපා වෙන විදිහට හිටියම හොදයි.එකපාර කරට ගන්න හොද නෑ

විදුහල්පති - ඔව් ඒක ඇත්ත. එහෙනම් අජන්ත ඉන්න තැනම ලෑස්ති කරලා දෙන්නකෝ මිනිහට කියන්න වැඩිය දහලන්නැතිව ඔය පොඩි දෙයක් කරලා උගන්නගෙන ඉන්න කියලා.

ජනිත - පාසල අවසන වු පසු අජන්ත සමඟ නැවතුම් පොලට ගියේ හිත හදා ගෙන කෙලෙස හෝ රැකියාව හොඳින් කරනවා යැයි සිතා.

අජන්ත - මෙතන තමයි තැන යාළුවා.අපි දෙන්නා උයාගෙන කාලා ඔහේ බොරුවක් උගන්නගෙනඉමු.මේ ළමයි උපන් ගෙයි මෝඩයෝ උන්ට ඉගණීමේ වටිනාකමක් නෑ.

අජන්ත - පසුවදා පාසලට ගිය මා හට දැක ගැනීමට හැකි වූයේ බාටා කිහිපයක් පයලා ගත් දුඹුරු වු ඇඳුමෙන් අවුල්ව ගිය කොණ්ඩයකින් යුත් දරු පැටවු පිරිසකි.උදෑසන රැස්විම අවසානයේ මා හට විදුහල්පතිතුමා තුන ශ්‍රේණියේ ළමුන් ලබාදුන්නේ අජන්තගේද අවඥ සහගත සිනාවක් මැදය.

අජන්ත - ඔන්න සර් පංතිය .එපාම කරපු එවුන්.මම ඔය පංතිය යිකළාතේ.වැඩක් නෑ අතෑරලා දැම්මා.දැන් අර පේන වත්තේ වැඩ කරවන්නේ ඔය ළමයින්ට කියලා.

ජනිත - එතකොට ලොකුසර් බනින්නැද්ද?

අජන්ත - සර් තමයි හැමදාම මිනිහගේ වත්තේ වැඩවලට ගන්නෙ

ජනිත - මා පංතියට ගිය පසු ළමයි මා දෙස බලා සිටියේ අළුත් එක්කෙනා කවුද? යන ප්‍රශ්නය මතු කරමින්.මා ඔවුනට පැවසුවේ කවියකින් මගේ ගුරුදිවිය.

මල්ලියි මමයි අකුරට යන වෙලාවේ
කළුකරගෙන ආවා වැහි වලාවේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මුවා වෙන්න ගසකුත් නැති වෙලාවේ
පමා වෙලා වැහැපන් වැහි වලාවේ

ළමුන් මා දෙස බලා සිටියේ මෙතෙක් පාසලෙන් මෙවැනි කවි ගීත නොඇසී තිබූ විලසිනි.ප්‍රශ්නාර්ථයක් මතුවූ මල් කැකුළු කෙමෙන් පිබිදෙනවා මා හට අවබෝධ විය.පුතේ මම ඔයාලගෙ අළුත් සර් අද ඉඳලා මම තමයි ඔයාලට උගන්නන්නෙ.

සුගති - ඇයි ඔයා අපිට පුතා කියන්නේ අපිට එහෙම සර්ලා කියලා නැහැනේ.

ජනිත - හරි හරි මම ඔයාලට දිගටම කතා කරන්නේ එහෙම තමයි , ඔයාලා කැමතියි නේද? මම ඔයාලගේ නම් අහන්න ආසයි.බලමුද ඔයාලගේ නම් කොච්චර ලස්සන ද කියලා.

රුවන් අනිත් හක්ක පටස් ( ළමුන් පවසයි මම සුගති ,ලොකු සර් කියන්නේ මාළු කෙල්ල කියලා. මම සර්ලා කියන්නෙ වැද්දගෙ කොල්ල කියලා.මම සසිකා.මට මෙහෙ කියන්නේ කියලා) ළමුන් එකවර සිනා සෙයි.

ජනිත - හා හා කවුරුත් කෑගහන්න එපා හොඳ දරුවන් ශබ්ද කරන්නැහැ.
( ළමුන් පවසයි මම විශානි.මට මෙහෙ කියන්නෙ වපර කෙල්ල කියලා)

ජනිත - හරි හරි මම එහෙම කියන්න එපා කියන්නම්. කෝ ඔයාලට හරි ලස්සන නම් ටිකක්නේ තියෙන්නෙ.අපි ඔයාලගේ පොත් ටිකක් බලමුද? දරුවනේ,

සසිකා - සර්. අපි එක පොතයි ගේන්නේ අපිට පොඩ්ඩයි ලියන්න දෙන්නෙ,අපි පොතේ පතේ දැනුම දෙන්න හොඳ අය නෙමෙයි ලු, ලොකු සර් කියන්නෙ.

ජනිත සර් - හරි හරි අපි බලමු කෝ,එහෙත් බැලූ සියළුම පොත් දැන් භාවිතයට ගත නොහැකි ඒවාය.ළමුන්ට නිසි අධ්‍යාපනයක් දීමට පවා මොවුන් සිතා නැත.එහෙත් මා හට කළ හැකි දෙය මම කරමි. කළුලෑල්ල භාවිතා කොට සිංහල අක්ෂර සියල්ල අවබොධ කරවීමට ඉටා ගත්තෙමි. මාහටද සිතා ගැනීමට නොහැකි දෙයකි ළමුන් එකඉරියව්වකින් සිටීමට පවා අපොහොසත් ය.

ජනිත සර් - පුතේ මේ අහන්නකෝ සර් ඔයාලා වගේ පුංචි කාලේ ගොඩාක් දඟ කරන්න ගියේ නැහැ.ඒ මොකද දන්නවද? අපේ අම්මා කියලා දුන්නා පුංචි ළමයි මල් වගේ කියලා මල් දඟලනවද? නැහැ නේද?ලස්සනයි නේද? ඒක නිසා ඔයාලත් ලස්සනට එන්න ඕනි.කකුල් එහෙම හෝදලා පිරිසිදුව, හරි අපි බලමුකෝ ලස්සනම මල වෙන්නෙ කවුද කියලා

අජන්ත සර් - පාසල නිම වී අවසන් යාළුවා, යමන් නිදා ගන්න. දැක්කනේමුන් ඉගෙන ගන්න සුදුසු එවුන් නෙමෙයි.

ජනිත සර් - එහෙම කියන්නෙපා දැක්කද සසිකාගේ උනන්දුව කතා කරන්නත් හරි දක්ෂයි. අපි අත දුන්නොත් උඩටම යයි ළමයා.

අජන්ත සර් - බලමුකො බලමුකො අත කී දවසක් දෙයිද කියලා

ජනිත සර් - සඳුදා උදෑසන පාසලට ගිය මා දුටුවේ ළමුන් පෙර දින සිටි අයුරු නොවේ.ඔවුනට හැකි අයුරින් පිළිවෙළට පාසල් ඇඳුම සහ ඔවුන් සැරසී සිටි අයුරුයි.අද අමුතු එළියක් වැටිලා අපේ පාසලට මම මේ බැලුවේ මෙකද කියලා, බලන කොට මගේ පුතාලා අද ලස්සනට ඇවිල්ලනේ. (මෙලෙස දිනෙන් දින ළමුන් පංතියට ආවේ ඔවුනටම ආවේනිකවූපිළිවෙළකටය. ළමුන්ගේ දෙමව්පියෝද දැන් ඔවුන්ට උදව් කරති .මාද ඉගැන්වීම කාර්යය ක්‍රමයෙන්ඉදිරියට ගෙන යමි. ගෙවී ගිය මාස කීපයට යමක් පැවසූ සැනින් මගේ පැටවුන්ට ලිවීමට හැකිය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

විදුහල්පති - අජන්ත අරූ මොකද කරන්නේ වත්තක පොල් ගෙඩියක් හරි කඩන්න හිටපු එවුන් ටික මහත්වරු කරන්න හදනවා.

අජන්ත - මම කිව්ව සර්ට එන කොටම වාරනයක් දාන්න කියලා , බලමුකෝ

ජනිත සර් - මා එතනට යන විට ඔවුන් නිශ්ශබ්ද විය. සර් අපි මේ ළමයින්ගේ දෙමාපියන් එක් කරගෙන අධ්‍යාපනයේ වටිනාකම කියලා දීලා ළමයින්ට උදව් කරන්න කියමුද?

විදුහල්පති - අවඥා සහගත සිනහවක් පා ඕක හරියන වැඩක් නෙමේ.සර් ඕකුන් හදන්න බැහැ.ඕක අතෑරලා දාන්න.

අජන්ත - අන්න නියම වචනෙ සර්.

ජනිත සර් - මා ඔවුන් දෙදෙනාගේ විරුද්ධත්වය ඉවසා දෙමව්පියන්ගේ නිවෙස් බලා ගියේ ඉන් අනතුරුවය.ඔවුන් ඇත්තෙන්ම දුප්පත් ය. අම්මේ තාත්තේ යැයි කියා ඇමතීම ඔවුනට ගරුත්වයකි.මා ඔවුනට ළමුන්ගේ හැකියා , අධ්‍යාපනයේ වටිනාකම පාදා දුන්නේ ඔවුනටද ඉගෙන ගැනීමටද ආසා හිතෙන ආකාරයටය.මෙතෙක් ගුරුවරයෙකු ඔවුනට සමීප වී නොමැති නිසා ඔවුන් දැන් දැන් මා හට ආදරය කරයි.මා බැලීමට හවසට පැමිණෙයි.

විදුහල්පති - අජන්ත මේක හරියන්නෑ අපිමේක නවත්තන්න ඕනෙ නැත්නම් අපි දෙන්නටම මෙහෙන් යන්න වෙනවා

අජන්ත - ඒක ඇත්ත සර් , ගහමුද මිනිහට පෙත්සමක්.

විදුහල්පති - ඔන්න එහෙනම් සර්ට බාරයි වැඩේ උඩටම ගහන්න.ළමයිව හවසට ගෙන්නගෙන අනවශ්‍ය දේවල් කරනවා කියලා.

ජනිත සර් - මගේ පැටවු ගණන් ටික ඔක්කෝම හැදුවද? හොඳයිනේ. කෝ බලමු? දැන් ළමයි උනන්දුවෙන් වැඩ කරති.දිනපතා පාසල් එති.ළමුන්ගේ ඉරියව් බලා පාසලේ අනෙක් ළමුයි ද පිළිවෙළට පාසල් එති.නිතර ඔවුන් ඉගෙන ගත් දෙය කියා හොඳයි . ලස්සනයි කියා ඇසීමට පැමිණෙති.

පුතේ ඔයාලට මම මේ සැරේ හවස පංති කරනවා මොකද දන්නවද? ඔයාළා සිංහල භාෂා තරඟවලට යවන්න ඕනි.

විශානි - කොහෙද සර් ඒවා තියෙන්නෙ?

සසික - මොකක්ද ඒක සර්?

ජනිත සර් - පුතේ ඔයාලගේ සිංහල ලියන කියන හැකියාවල් බලන තරඟයක්.අපි සූදානම් වෙමුකෝ අම්මලාට කියලා එන්නකො හවස.
(ළමුන් පැමිණි පසු මා සමූහ ගායනා තරඟයට සූදානම් කළේ ඔවුන්ගේ කවි කීමේ හැකියාව නිසාමය.ඔවුනට වචන කියා දුන් පසු ඔව්හු මිහිරි ලෙස කවි කීහ.දින කීහිපයක් තුළ ඔවුන්ගේ කුසලතා දැක ගත හැකි විය.

ජනිත සර් - සර් මම මේ ආවේ ළමයි ටික සමූහ ගායනා තරඟෙට ගෙනියන්න අවසර ගන්න සර්.

විදුහල්පති - මොන ගායනා ද සර්. සල්ලි තියෙනවද ඔයා වග කියනවද? මොවුන්ට මටනම් බෑ ඔය කරදර බාර ගන්න.

ජනිත සර් - මම වියදම් කරන්නම් සර්.මම පරිස්සම් කරගෙන යන්නම්.

විදුහල්පති - බලමුකෝ බලමුකෝ ඔන්න මම නැහැ.

ජනිත සර් - ළමුන් කිසි දිනක නගරයට ඇවිත් නැත.ඔවුහු අරුම පුදුම දේ දකිති.ඔවුන් තරඟයට ඉදිරිපත් වූ හැටි දුටු සියල්ලගේ මුහුණුවල තිබුනේ සිනාවකි.කවුද




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මේ ළමයි යන්නය.මා අපිටම ආවේණික ලී හා පොල් කටු වලින් සාදා ඇති සංගීත භාණ්ඩ සමඟ ගීතය වැයීමට පැවසුවේ ළමුන්ගේ මෙන්ම මාගේ ද හද ගැහෙන චකිතයකිනි .සිදුවූයේ අනපේක්ෂිත දෙයකි.දරුවන්ගේ මිහිරි හඬ වේදිකාව පුරා යයි. ඔවුහු නරඹන්නන් මවිතයට පත් කරති. තරඟ ප්‍රතිඵල එනතුරු වතුර පමණක් කුසට දමා ගෙන සිටි මොහොතේ මාගේ පාසල ප්‍රථම ස්ථානය යැයි පැවසුව මොහොතේ දරුවන් මා සිප ගත්තේ අඬ අඬා ය.මා හට දැනුනේ මා ලොවක් දිනුවාසේය.

සවස් වී පාසලට පැමිණි මා අත සතුට පුරවාගෙන පැමිණියද දුටුවේ වෙනකකි.මාගේ අතට ලැබුණේ මා වෙනත් පාසලකට මාරු කර යවා ඇති බවය.දරා ගත නොහැකි දුකකින් සිටිය ද මා දරුවන් නිවෙස් බලා යවා පසුදා උදෑසනම ඔවුනට ඉගැන්වීම් කටයුතු ආරම්භ කළ මා ළමුන් පළමු ස්ථානය ගත් බව විදුහල්පතිතුමාට පැවසීය.


විදුහල්පති - බොහොම හොඳයි සර්.ඒත් අපිටත් දුකයි.මාරු වීම ගැන මොනවා කරන්නද? සර්ගෙ ගමටනේ යන්නේ. විදුහල්පති හා අජන්ත අතර කුසුකුසුව දිගටම තිය අතර ඔවුන් සතුටෙන් ඉපිලී ඇති බව පෙනී ගියේය.

ජනිත සර් - මා මාරුවීම වෙනත් පාසලකට ගොස් කටයුතු කළ අතර එක් සොඳුරු දවසක රූපවාහිනිය නරඹමින් සිටි මා දුටුවේ මාගේ පැටවු සමස්ත ලංකා සමූහ ගායනා තරඟයෙන් ජය ගෙන ගීතය ගායන කරන ආකාරයයි.සොයා බැලූ මා ගමේ වැදගතෙකු යැයි හඳුන්වන අයෙකුට ලිපියක් යොමු කළ විට දැන ගැනීමට ලැබුණේ විදුහල්පතිගේ හා අජන්ත සර්ගේ රහසිගත වැඩකටයුතු හමුවේ ඔවුන් ගංජා ගෙනත් හේනක් කරගෙන ගොස් ඇති බවයි.එයට වරදකරුවන් වූ ඔවුන්ගේ සේවය නවතා දමා ඇති බවත් අළුත් විදුහල්පතිතුමෙක් හා අළුත් ගුරුවරු ලැබී ඇත්තේ ළමුන්ගේ පිනකට බව යැයි මට හැඟීන.ඔවුන් මගේ අත්තිවාරම සරු කොට ඇති බව පෙනී යයි.යහපත් ගුරුවරයෙකු ලෙස මාගේ හදවතට දැනෙන සතුට අනෙක් අයෙකුට නොදැනෙනු ඇත.අප ඉපදී ඇත්තේ ගුරුවරයෙකු වීමට නම් දැයේ මල් පිබිද වීම අපගේ පරම යුතුකමයි.දැන් මා කළ සේවය මතකයට නැගෙන විට මා මියද කම් නැත නිරාමිය සතුට මා හද දෝර ගලා යයි.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விப் பின்னடைவுகள் ஓர் கண்ணோட்டம்

இலவசக் கல்வி தொடக்கம் கல்வி அறிவும், எழுத்தறிவு வீதமும் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதனை யாராலும் மறுத்துவிட முடியாது. இருந்தாலும் சம அளவில் நாடளாவிய ரீதியில் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளதா என்பது வினாவிற்கு உரிய விடயமல்லாமல் ஆங்காங்கே பின்னடைவுகள் இல்லாத மாவட்டங்கள் இல்லை என்றே கூறலாம்.

இத்தகைய பின்னடைவுகள் பொதுப் பிரச்சனையாக இருந்த போதும் ஒவ்வொரு, மாவட்ட மாகாண கல்வி அதிகாரிகளும் தனித்தனி பாடசாலையாக தம் அகத்தே உள்ளவற்றை அலசிப் பரிசீலித்து வருவதும் உண்மையே இப்படியே படிப்படியாக இறங்கி வந்தால் மாணவர் அடைவுகளின் அதன் இறுதிப் படியாக மேலும் ஒரு படி கீழே இறங்க முடியாமல் தடுத்து நிற்கின்றன.

இத்தகைய மாணவர் அடைவுகளை உயர்த்தாமல் எப்படி உயரும் எங்கள் கல்வியின் அடைவு மட்டம். இதற்கு அரசு or கல்வி அமைச்சு அடுக்கடுக்கான கருத்தரங்குகளும் அறிக்கை, வெளியீடுகளும், ஆவண வெளியீடுகளும் அனுப்பி இருக்கலாம். ஆனால் அவை அமுலில் சம்மந்தப்பட்டவர் கையில் சிக்கியதா? அதனை வாசித்தாரா? படித்தாரா? மாணவர் மீதும் ஒன்றுக்குப் பல தடவைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதா? பரீட்சித்து இயலாத கட்டத்தில் புதிய கருத்து முன்வைக்கப்பட்டதா? என்பவை எவ்வளவு தூரம் இக்கோட்பாடுகள் செயல்வடிவம் பெறுகின்றது என்பதை உண்மையான நடைமுறைத் தரவுகள் தான் பதில் தர வேண்டும்.

இத்தகைய அடைவு மட்டங்களை உயர்த்துவதில் ஆசிரியர் கூறும் காரணங்கள் என்ன?

* பாடத்திட்டமே முடிக்க காலம் போதாது
* மாணவர்கள் அக்கறை இல்லை. அவர்களுக்கு படிக்கிற எண்ணமே இல்லை. கொடுக்கப்படும் வீட்டு வேலைகளைச் செய்து வருவதில்லை
* எவ்வளவு செய்தாலும் பிள்ளைகளோ, பாடசாலை நிர்வாகமோ, பெற்றாரோ நன்றி உணர்வில்லை
* மாணவர் படிக்கும் சூழ்நிலை இல்லை
* வரவு ஒழுங்கின்மை
* ஏதோ செய்யக் கூடியதைத் தான் செய்யலாம்

என்றெல்லாம் சொல்லி ஏதோ தங்கள் சம்பள உயர்வுகளுக்கு பங்கமில்லாமல் உயர்வுகளைப் பெற்றுச் செல்கின்றனர்.

மறுபுறம் மாணவரிடம் அடைவுகள் குறைவாக இருக்கக் காரணம் என்னவென்றால்

* ஆசிரியர் கற்பிப்பது விளங்கவில்லை
* கற்றல் கற்பித்தல் தொடர்ந்து இடம்பெறாமை
* கற்றது ஒன்று வினாக்களில் ஏற்படும் மயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வினாக்களுக்கு ஏற்ப விடைகளை எழுத முடியாமை
* பாடப்புத்தகத்திற்கு வெளியே வினாக்கள் கேட்கப்படல்
* விடய பரப்புக்கள் அதிகம், மனனஞ் செய்ய வேண்டி உள்ளமை
* பரீட்சைகளுக்கு இடையில் காணப்படும் காலஇடைவெளி போதாமை
* ஆசிரியர் தனிக் கவனம் செலுத்தாமை
* சில பாடங்கள் மீதான வெறுப்பு
* ஆசிரியர்கள் மீதான வெறுப்பு
* பெற்றோரின் ஓய்வில்லாத மேலதிக வகுப்புக்கள்
* வகுப்பறைகளில் காணப்படும் பொறாமை உணர்வு

என்று அடுக்கிச் செல்லக்கூடிய அளவுக்கு 1000 காரணங்களை மாணவர்கள் அடுக்கி வைத்துள்ளார்கள்.

இதே போன்று பெற்றோரிடம் மாணவர் அடைவுகள் பின்னடைவுக்கு காரணம் கேட்டால்

* ஆசிரியர் கவனிக்கவில்லை
* கொஞ்சம் கிரகிக்கும் தன்மை குறைவு தான். ஆசிரியர் அக்கறை போதாது
* மேலதிக மாலை நேர வகுப்புக்கு விடுகிறேன்
* சேரும் நண்பர்கள் கூட்டம் சரியில்லை
* எனக்கு கவனிக்க நேரமில்லை
* சொற்கேட்டு நடப்பதில்லை
* வீட்டுப் பாடங்கள் போதாது
* படிப்பதில்லை, ஒப்படை செய்கிறது தான் வேலை
* வகுப்புக்கள் முடிந்து வந்ததும் பிள்ளை நித்திரையாகிவிடுகிறது
* என்னிடம் கேட்டுப்படிப்பதில்லை
* வீட்டில் படிக்க வசதியில்லை (இடப்பிரச்சனை)
*

என்று பெற்றோர் ஒரு புறம் ஓராயிரம் காரணங்கள் அள்ளிக் கொட்டியும் பயன் எதுவும் கிடையாது.

அடைவு மட்டம் உயர்தல் என்பது ஆசிரியர் மாணவருடன் மட்டும் தொடர்புபட்டதாகும். அடைவுகள் பின்னடைவான மாணவர்களுக்குச் செய்ய வேண்டிய விடயங்கள் தான் என்ன?

தரம் 1ல் ஆசிரியர்கள் மாணவர்களைச் சரியாக இனங்கண்டு விட்டால் அங்கு தொடங்க வேண்டும். இந்த மேலதிக வேலைத்திட்டம், பல்வகைமைக் கற்பித்தல் முறைகள் பிள்ளை விரும்பிக் கற்கும் விளையாட்டு முறைக் கற்பித்தல், இவை யாவும் திட்டமிட்டு ஆரம்ப காலத்தில் கவனித்து எழுத வாசிக்கப் பழக்கிவிட வேண்டும். இதே நேரம் வசனம் ஒன்றைக் கேட்டுக் கிரகித்து அதனை எழுதப் படிக்கவும், வாசிக்கவும் பழக்கி விட வேண்டும். இதை எந்த ஆசிரியர் தவற விடுகிறாரோ அவரே அந்த மாணவர் கல்வி வாழ்நாள் முழுவதும் பின்னடையக் காரணமாகும், பொறுப்பாளியாவார்.

முதன்மை நிலை I இல் உள்ள 40 தேர்ச்சிகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து உண்மைத்தரவுகளின் அடிப்படையில் ஆற்றல்களை இனங்கண்டு அடுத்த வகுப்பில் ஒப்படைக்கும் போது அவருடைய ஆவணம் முறையாகக் கையளிக்கப்பட வேண்டும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி கல்வித் திணைக்களம் பல தடவை வலியுறுத்தியும் எத்தனை பாடசாலைகளில் இவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பது கேள்விக்குரியது.

இவ்வாறு கைமாறும் மாணவர்கள் இடைநிலைகளில் நுழையும் போது மேலும் பின்னடைய வாய்ப்புக்கள் அதிகம் ஆகின்றன. தற்போதையக் கல்வித் திட்டத்தின் படி வகுப்பு இறக்கங்களோ அல்லது வகுப்பு ஏற்றங்களைத் தடுக்கமுடியாது என்பதால் அடைவுமட்டங்கள் கருத்தில் கொள்ளப்படாது விடுகின்றனர். இது மேலும் பின்னடைவுகளை அதிகரித்துச் செல்வதை யதார்த்தமாக நாம் கண்டு கொள்ளமுடியும்.

இன்றைய வகுப்பறைகள் ஒரு சில பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகளில் மாணவர் தொகை வகுப்பறைகளில் 25 மாணவர்களுக்கு குறைவானதே. வகுப்பறையில் மூன்று பிள்ளைகள் உள்ள ஆசிரியர் இவர்களுக்கு படிப்பிக்கவே இயலாது. படிப்பிக்க படிப்பிக்க ஏறுதே இல்லை என்று விசனப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியுமா? பொறுப்புக்கள் சரியாக நிறைவேற்ற ஆசிரியர்களை நல்ல வகையில் பயிற்றப்பட வேண்டியதும் மிக முக்கியமானதாகும்.

ஆசிரியர் தொழிலைப் பொறுத்தவரையில் கூலிக்கு மாரடிக்கும் தொழில் அல்ல இது. ஆசானது அர்ப்பணிப்பு மிக்க சேவையிலேயே இந்த சமூகத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது. இவைகள் தவறவிடப்படும் போது பின்னடைவுகள் தவிர்க்க முடியாத ஒன்றாக அமைவதோடு மாணவர் இடைவிலகல்களுக்கும் இவையே காரணமாகின்றன. பரீட்சைப் பெறுபேறுகளை உயர்வடைவதே நோக்காகக் கொண்டு விசேட செயல்திட்டங்கள், குறுகிய கால முயற்சிகள் எடுத்தாலும் அவற்றில் சில சமயம் 25% வெற்றியே கிடைக்கின்றன. இதுவும் இடைக்காலங்களில் தேர்ச்சி மட்டங்களில் விலகியவர்களை இழுத்து மீண்டும்அதே நிலைக்கு வர உதவுகின்றனவே தவிர உண்மையில் ஆசிரியர் தவறவிட்ட அடைவுகளை இவை ஒரு போதும் ஒரு மாற்றமும் செய்துவிட முடியாது. கல்வித்திணைக்களம் செய்யக்கூடிய ஒரே ஒரு விடயம் புள்ளிகளைக் குறைத்து சித்தி என்ற நிலையை எட்டச் செய்வதாகவே அமைகின்றன.

இத்தகைய பல ஏற்பாடுகள் இருந்தாலும் மாணவர் அடைவுகள் ஒவ்வொரு தரங்களிலும் வயது எல்லைகளிலும் பிறப்பு முதல் உயர்கல்வி வரை கட்டம் கட்டமாக அறிவை விருத்தி செய்யும் எந்த ஏற்பாடும் எமது சமூக நிறுவனங்களிடம் இல்லை.

ஆரோக்கியம் சம்பந்தமாக உடல் வளர்ச்சி சம்பந்தமாக எடுக்கப்படும் அக்கறை உளவளர்ச்சி தொடர்பாக எடுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு வயதும் தாண்டும் போதும் பிள்ளைகள் காட்டக்கூடிய துலங்கல்கள் எவை? அவை முறையாக செய்யப்படுகின்றனவா என்பதை வைத்தியர்களும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வயதுக்கு ஏற்ற செயற்பாடுகள் செய்விக்கப்பட வேண்டும்.

இவற்றுக்கு மேலாக முன்பள்ளிகள் இன்று சிறப்பாகச் செயற்படுவது மகிழ்வுக்கு உரிய விடயமே. அவர்களுக்கும் குழந்தைகளது உளவளர்ச்சி தொடர்பாகவும், கேட்டல், கிரகித்தல், தூண்டக்கூடிய செயற்பாடுகளும் அதிகம் செய்விக்கப்பட வேண்டும்.

இவற்றை எல்லாம் தொகுத்து நோக்கும் போது மாணவர்கள் பல்வேறு காரணங்களால் பின்னடைவாக இருந்தபோதும் ஆசிரியர் (ஆரம்பக்கல்வி) முன்பள்ளி ஆசிரியர்களது அர்ப்பணிப்பு மிக்க விழிப்புணர்வு மிக்க சேவையால் மட்டுமே பின்னடைவுகள், முன்னடைவுகள் ஆக்கப்படலாம். இதற்கு நல்ல சேவை மனப்பாங்கு உள்ள தரமான ஆசிரியர்களை உருவாக்கிக் கொடுப்பது சமூகத்தின் தலையாய கடமையாகும்.

திரு.அ.ஹரிகரன்
பிரதி அதிபர்
தி/குளக்கோட்டன்
த.வி
தம்பலகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவம்



திருமதி.உருத்திரா அமிர்தலிங்கம்

(B.A.Dip in Edu)

ஆசிரிய ஆலோசகர்

வலயக்கல்வி அலுவலகம்

திருகோணமலை

ஆசிரியர்களை, நல்லவல்ல ஓரிடத்துக்கு மனித சமுதாயத்தை அழைத்துச் சென்று கரைசேர்க்கும் தோணிகள் என்றும், உயர்வான உச்சமான பேறுமிக்க பெறுமதியான வாழ்விற்கு உயர்த்தி வைக்கும் ஏணிகள் என்றும் உலகம் போற்றித் துதிக்கின்றது. இன்று உலகினை அஞ்ஞான இருளிலிருந்து அறிவு ஒளி மிக்க பிரகாசமான ஓருலகிற்கு இட்டுச் செல்பவர்கள் இந்த உத்தம உழைப்பாளராகிய ஆசிரியர்களே.

சோம்பிக்கிடக்கும் குழந்தைகளுக்குச் சுறுசுறுப்பை ஊட்டியும் அவர்கள் தம் உள்ளங்களில் மறைந்து கிடக்கும் ஆற்றல்களுக்குத் தூபமிட்டும், உணர்வுகளுக்கு மெருகூட்டியும் அன்போடணைத்தும் ஆதரவு காட்டியும் அரும்பணி ஆற்றி வருபவர்கள் நம் ஆசிரியர்களே. உலக வாழ்க்கையின் புனிதத்துவத்தையும் மாண்பையும் கௌரவத்தையும் படைத்துக் காக்கும் பொறுப்பும் இந்த ஆசிரிய வர்க்கத்திடமேயுள்ளது.

உலகில் வாழும் மக்கள் தங்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒரு தொழிலைத் தேடி பெற்று அதனூடாக வருமானத்தை ஈட்டி வாழ்கின்றனர். அவர்கள் ஆற்றும் தொழில்கள் யாவும் ஒரு சிறு குழுவினரின் தேவையை மட்டுமே பூர்த்தி செய்கின்றன. ஆனால் ஆசிரியத்தொழில் மட்டும் ஒரு தெய்வத்தொண்டாக 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்பதற்கேற்ப மதிக்கப்படுகிறது. முன்மாதிரியாக இருந்து ஒரு நாட்டை கட்டியெழுப்புகின்ற நல்ல ஒழுக்க விழுமியப் பண்புகள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கக் கூடிய சக்தி ஆசிரியத் தொழில் மட்டுமே தங்கியுள்ளது.

ஒரு வைத்தியன் தவறுவிட்டால் ஒரு நோயாளி மட்டுமே இறப்பான். ஆனால் ஒரு ஆசிரியர் தவறுவிட்டால் ஒரு சமுதாயமே பாழாகிவிடும். ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் ஒளி பெற்று பிரகாசிப்பது போல ஒரு ஆசிரியர் கொடுக்கும் குறையாத அறிவுச் செல்வத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான அறிவாளிகள் உதயமாகின்றனர். தீயினால், கள்வரினால், பகைவரினால் , சுனாமியினால் அழிக்க முடியாத இக்கல்விச் செல்வத்தின் கலங்கரை விளக்கமாக திகழ்பவர்கள் ஆசிரியர்களே! எந்த ஒரு தொழில் புரிபவனுக்கும் கொடுக்கப்படாத மதிப்பும் மரியாதையும் ஆசிரியருக்கு வழங்கப்படுவதை நாம் கண்கூடாக காண்கின்றோம். எங்கு சென்றாலும் Teacher, Sir என்ற ஒரு மரியாதை ஆசிரியருக்கு மட்டுமே உண்டு.

'கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லாதவர்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறளுக்கு இணங்க அறிவுக் கண்ணைக் கொடுப்பவர்கள் ஆசிரியர்களே! மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் இயலறிவையும், திறன்களையும் ஆற்றல்களையும் விவேகப் புத்தியினையும் மனப்பாங்கினையும் கல்வியூடாக வெளிக்கொணர்ந்து அவர்களை உயர்த்தி விடுபவர்கள் ஆசிரியர்களே.

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'
என்று வெற்றி வேற்கையும்
'ஓதுவது ஒழியேல்'
என்று ஆத்திசூடியும்
'கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி'

என்று கொன்றை வேந்தனும் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றன. பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 'கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான்' என்ற அமுத வாக்கிற்கிணங்க நம் அரசும் அனைவருக்கும் கட்டாயக் கல்வியை பிரகடனப்படுத்தியுள்ளது. கல்வி மனித அடிப்படை உரிமைகளுள் ஒன்று. "வாழ்க்கையில் உயருதல்" என்னும் வாழ்க்கைக் குறிக்கோள் கல்வி மூலமே எய்தப்படுகின்றது. பண்புகளையும் திறன்களையும் உயர்த்தி வளர்ப்பதன் மூலம் மாணவர் சமூகம் பூரணமான ஆளுமை வளர்ச்சியினைப் பெறுகின்றனர். இவற்றை வழங்கக் கூடிய சக்தி இந்த ஆசிரிய சமூகத்திற்கே உரித்தானதாகும்.

ஆசிரியர் தனியே கற்பிப்பவன் மட்டுமல்ல கற்பவனும் கூட புதுமைகளைக் கண்டறிந்து, தேடிப் பெற்று அவற்றைத் தாமும் கற்று, மாணவர் மத்தியிலும் அவர்களின் திறனுக்கேற்ப அவற்றை ஊட்டுவதும் அவர்களே. அலுவலக உத்தியோகத்தர்களாலோ அல்லது ஒரு அதிபராலோ மாணவனின் நிலையினை நன்கு அறிந்துகொள்ளமுடியாது. கற்பிக்கும் ஆசிரியரால் மட்டுமே அது முடியும். மாணவர் நிலைக்கேற்ப கல்வியையும் புகட்டி அவளை உயர்த்தி விடும் ஒரு ஆசிரியர் நல்லாசிரியர் என்ற பெயரையும் தனதாக்கிக் கொள்கிறார். ஆசிரியர் ஒருவர் எவ்வளவு தான் துறை போகக் கற்றிருந்தாலும் கற்ற கல்வியைப் பறைசாற்றும் பட்டங்கள் பெற்றிருந்தாலும் மனிதனுக்கென அமைய வேண்டிய சில பொதுப்பண்புகளும் ஆசிரியருக்கென அமைய வேண்டிய சில விசேட பண்புகளும் அவர்களிடத்தே அமைந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் அவர் நல்லாசிரியராகத் திகழமுடியும். ஏனைய பணியாளர்கள் இயந்திரங்களுடனும் கோவைகளுடனுமான சடப்பொருளுடன் பணியாற்றுகின்றனர். ஆனால் ஆசிரியர்களோ வளரும் உயிரான குழந்தைகளுடன் பணிபுரிகின்றனர். அங்கே கரங்களும் சடங்கும் ஈடுபடுகின்றன. இங்கே மனங்களும் மனங்களும் ஈடுபடுகின்றன.

ஒரு நல்லாசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகள் எவை என்பதையும் ஒரு நல்லாசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் பவநந்தி முனிவர் தனது நன்னூலில் விளக்குகின்றார்.

.. நிலமலை நிறைகோள் மலர்நிகர் மாட்சியும் .. என்று நிலம், மலை, நிறைகோல் (தராசு) மலர் இவை நான்கையும் நல்லாசிரியருக்கு உவமிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்

பருவ முயற்சிளவிற் பயத்தலும்

மருவ நன்னிலம் மாண்பாகுமே...'

இங்கு தெரிவரும் பெருமை, திண்மை, பொறை உரிய பருவத்தில் முயற்சி, ஆகிய விசேட பண்புகள் நிலத்திற்கே உரியன. அத்தகைய நிலத்துடன் நல்லாசிரியர் ஒப்பிடப்படுகிறார்.

தெரிவரும் பெருமை என்று பிறரால் இலகுவில் அறியப்படாத தோற்றத்தின் பெருமை நிலத்தில் நிற்கும் ஒருவனுக்கு தன் கண்ணுக்கு எட்டிய தூரம் தான் நிலத்தின் விசாலம் எனக் காண்கின்றான். ஆனால் அவன் நடந்து செல்லச் செல்ல அதன் விசாலம் கூடுவதை உணர்வான். இது போல நல்லாசிரியர் ஒருவருடைய அறிவும் அவரோடு பழகப்பழக படிப்படியாகத் தெரியவரும். நிலத்தின் அடுத்த பண்பு திண்மை. எத்துணை பாரத்தை சுமத்திவிடினும் சலிக்காது தாங்கிக் கொள்ளும் அது போல் எத்தனை வேலைப்பளுவந்தாலும் சலிக்காது களைக்காது பணிபுரிய வேண்டியவரே நல்லாசிரியர்கள். தன்னை அகழ்வாரையும் தாங்குவதால் பொறையிற் சிதந்தது பூமி என்கிறோம். தன்னை இகழ்கின்ற மாணவரையும் பொறுத்து மன்னித்து நல்லபுத்தி புகட்டி கற்பிக்க வேண்டியது நல்லாசிரியர் கடமையாகும். விவசாயி ஒருவனுக்கு விளைநிலமானது உரிய பருவத்தில் உழுது நீரிட்டு உரமிட்டு காட்டும் முயற்சிக்கேற்ப நல்ல விளைச்சலைக் கொடுக்கின்றது. அதே போல் மாணவரின் ஊக்கம், முயற்சிக்கேற்ப அவர்களை உற்சாகப்படுத்தி கற்பிக்க வேண்டியவர்களும் நல்லாசிரியர்களே.

அடுத்து மலைக்கு வருவோமானால்

'அனக்கலாக அளவும் பொருளும்

துளைக்கலாகா நிலையும் தோற்றமும்

வறப்பினும் வளம் தரும் வன்மையும் மலைக்கே'

அளவிட்டுச் சொல்ல முடியாத விசாலமும் பொருட்களும் தன்னகத்தே கொண்டது மலை. அது போல் அளவில்லாத கல்விச் செல்வத்தை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டியவர்கள் ஆசிரியர்களே.

எந்த சக்தியாலும் அசைக்க முடியாத நிலைப்பாடுடையது மலை. அது போல கல்வியறிவினால் தான் பெற்ற ஸ்தானத்திலிருந்து எந்த சந்தர்ப்பத்திலும் எந்த சக்தியாலும் அசைக்க முடியாத மனவுறுதி கொண்டவர்கள் நல்லாசிரியர்கள். தொலைவிலும் உள்ளவர்களால் காணக்கூடிய தூல வடிவம் உடையது மலை. அது போல் நெடுந்தூரத்தில் உள்ளவர்களும் தன் புகழினை அறியப்பட்டவராய் இருக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள். வரட்சிக் காலத்தில் தன்னை சார்ந்துள்ள மரஞ்செடி போன்ற உயிரினங்களுக்கு நீர் வளத்தைக் கொடுத்து நிற்பது மலை. அது போல் தனக்கு வறுமை ஏற்படும் காலத்திலும் தன்னை சார்ந்த மாணவர்களுக்கு மனம் கோணாது கல்வியை புகட்ட வேண்டிய பொறுப்புடையவர்கள் ஆசிரியர்கள்.

'ஐயந் தீரப் பொருளையுணர்த்தலும்

மெய்ந் நடுநிலையும் மிகு நிறைகோற்கே..'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைகோலானது சந்தேகத்துக்கு இடமில்லாது நிறையினை சரியாகக் காட்டி நிற்பது, சமநிலையைக் காட்டி நிற்பது என இரு இயல்புகளைக் கொண்டது. அது போல் ஆசிரியரும் மாணவரின் சந்தேகங்களை சரிவர தீர்த்து வைப்பதும் இனம், மதம், ஏழை, பணக்காரன் என்ற பேதம் பாராது சமநிலையில் நின்று கற்பிப்பதும் அவரது கடமையாகும்.

அடுத்து மலரை நோக்குவோமாயின்

'மங்கலமாகி இன்றியமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் மலர்வுடையது பூவே'

மலரானது ஒரு மங்கலப் பொருள் காண்போருக்கு மனமகிழ்ச்சியையும் பயபக்தியையும் கொடுக்கும். அதே போல் காண்பவர் மனம் மகிழ்வும் பயபக்தி செலுத்தவும் தக்க நிலையில் நிற்பவர் ஆசிரியரே. மலரானது மங்கல வைபவங்களில் இன்றியமையாததாகின்றது. மலர்மாலை இல்லாத மங்கல வைபவங்களே இல்லை எனலாம். அதே போல் சமூகத்தில் ஏற்படும் மதிப்பினால் நல்லாசிரியரும் சமூகத்தில் நிகழும் வைபவங்களில் பங்கு கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும். காண்பவர் அனைவரும் மகிழ்ந்து மனப்பூர்வமாக மலரை ஒரு மேலான பொருளாகக் கொள்வது போல் ஆசிரியரும் மேலானவராக திகழ வேண்டும். பூவினிடத்து காணப்படும் மென்மைத் தன்மை பிஞ்சு மனங்களுடன் பழகும் ஆசிரியருக்கும் காணப்படவேண்டும். மலர்தலுக்குரிய காலத்திலே மலரானது முகம் விரிவது போல கற்பித்தலின் போது ஆசிரியரும் முகமலர்ச்சியுடன் கற்பிக்க வேண்டும்.

இன்றைய கற்றல், கற்பித்தல் நடைமுறையில் காணப்படும் கணிப்பீட்டுத் திட்டத்தினூடாக மாணவரின் ஏனைய திறன்களையும் வளர்க்கும் முகமாக மனவெழுச்சி, ஆற்றல், செயற்றிறன், ஒருமைப்பாடு, தேடியறியும் ஆர்வம், தலைமைத்துவப் பண்பு போன்றவற்றை வெளிக் கொணரச் செய்து மாணவரின் இயலுமை, இயலாமை தொடர்பாக அவர்களை கண்காணித்து கற்றல் செயற்பாட்டு உடலாலும் உள்ளத்தாலும் உதவியளித்து எதிர்பார்க்கும் தேர்ச்சி மட்டத்தை அடையவைப்பவர்களே ஆசிரியர்கள். இதனூடாக மாணவரின் கற்றல் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுவதோடு கற்பித்தல் செயற்பாடும் மேம்படுத்தப்படுகிறது.

ஒரு ஆசிரியர் அறிவிற் சிறந்தவராகயிருந்தாலும் மாணவர் உள்ளங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லையாயின் அவர் ஆசிரிய உலகத்திற்கே உபயோகமற்றவராகி விடுவார். ஆசிரியர் தன் பணியிற் சித்தியடைய வேண்டுமாயின் முறையாக தனது அறிவை மாணவர்களின் சூழல், இயல்பூக்கம் என்பனவற்றை மனதில் கொண்டு கற்பித்தலை செய்ய வேண்டும். ஆசிரியர் கொடுக்கும் கல்வியானது அவர்களது பாடசாலை வாழ்க்கைக்கு மட்டுமன்றி அவர்களது முழு வாழ்க்கையிலுமே அவர்களை முழுமை பெற்ற மனிதர்களாக திகழ வைக்க வேண்டும். ஆசிரியர் வகுப்பறைக்குச் செல்வதற்கு முன்னமே தான் கற்பிக்கப் போகும் பாடத்தை முன்னாயத்தம் செய்து பாட அலகினூடாக மாணவர் அடைய வேண்டிய கற்றல் பேறுகளை இனங்கண்டு அவற்றை மாணவர் அடையக்கூடியதான கற்பித்தல் உத்திகளையும், உபகரணங்களையும் கையாண்டு கட்புல, செவிப்புல துணைச்சாதனங்களைச் சேகரித்து கல்வி கற்பதில் மாணவர்களுக்கு விருப்பத்தினை ஏற்படுத்தி மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் சூழ்நிலையை வகுப்பறையில் ஏற்படுத்த வேண்டும். இரும்பு காந்தத்தைக் கவர்வது போல கற்பிக்கும் ஆசிரியரின் தோற்றம், ஆளுமை, திறன்கள், நவீன உத்திகள் போன்றவை மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்து அவர்களது பெறுபேற்றை உயர்ச்சியடைய வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாண்மை விருத்தியானது ஒரு ஆசிரியருக்கு எவ்வளவு முக்கியமானதோ அதே போல் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு மதிப்பீடும் மிக முக்கியமானதே. மதிப்பீடானது இரு சாராருக்குமே. ஆசிரியரானவர் தனது மாணவர்களை வகுப்பறையிலே மதிப்பீடு செய்து அதனூடாக பின்னூட்டல்களையும் உடனுக்குடனே செய்விக்கின்றார். இதனூடாக மாணவர்களின் கற்றல் ஆர்வம் உயர்ச்சியடைகின்றது. அதே போல் ஆசிரியரும் தன் மதிப்பீட்டாளரை ஏற்றுக்கொள்ளும் நேர்மனப்பாங்கு கொண்டவராக இருக்க வேண்டும். இவ்வாறான மனப்பாங்கினை அவர் வளர்த்துக் கொள்வதனூடாக பல நன்மைகளை அடைய முடியும்.


* எப்பொழுதும் முன்னாயாயத்தத்துடன் கற்பிக்க வழி ஏற்படும்
* பாடரீதியாக ஏற்படுகின்ற சந்தேகங்கள், முரண்பாடுகள் தீர்க்க வாய்ப்பு ஏற்படும்
* மதிப்பீட்டாளரின் ஆலோசனைப்படி தொடர்ந்து பாடத்தை கற்பிக்க இலகுவாக இருக்கும்
* ஆசிரியரின் செயற்பாடுகள் மேன்மையடையும்
* குறை நிறைகள் கூடி இனங்காணப்படுவதால் புதிய நுட்பங்ளை கையாளத் தூண்டப்படுவார்
* வேலைத்திட்டத்தின் பின்னடைவு தவிர்க்கப்படும்
* பாடசாலை நிர்வாக மேற்பார்வைக்கு இலகுவாக அமையும்
* ஆசிரியர் கற்பித்தலுக்காக கற்றலுக்குத் தூண்டப்படுவர்
* தனது இயலாமையை அறிந்து பரிகாரம் தேட முற்படுவார்
* துணைச்சாதனங்களை சிறந்த முறையில் கையாள தெரிந்து கொள்வார்
* ஆசிரியர் - மதிப்பீட்டாளர் நல்லுறவு ஏற்படும்
* அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்கான வாய்ப்பு ஏற்படும்

இவ்வாறான அம்சங்கள் தன்னகத்தே கொண்டு ஒரு ஆசிரியர் செயற்படுவாராயின் அவர் பணியின் பயனாக வருங்கால உலகமே முன்னேறும். ஒரு நாட்டுக்குத் தேவையான அறிஞர்களையும் விவேகிகளையும் உருவாக்கி அதனூடாக வாழ்க்கைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு மலர்ச்சியில் மனிதப் பண்புகள் ஆக்கம் பெறும். இத்தகைய சேவையை அவனிக்கு அளிக்கின்ற ஆசிரிய பெருமக்களை பாராட்டி மேம்படுத்தி அக்டோபர் 6ந் திகதி 'அனைத்துலக ஆசிரியர் தினம்' கொண்டாடப்படுவது வரவேற்கத்தக்கதே.

'ஆசிரியர் பணி அறப்பணி
அதற்கு உன்னை அர்ப்பணி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரிமை பெற்று வாழ வைப்பீர் எமை

திருமதி.சிவகௌரிமோகன்
(ஆசிரியை)
தி/அல்-மின்ஹாஜ் மு.ம.வி
மட்கோவ்,
திருகோணமலை

'தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது'

எனத் தெய்வத் திருவள்ளுவனார் வாய்மொழி பகன்றதைப் போன்று தம் மக்களின் அறிவுடைமை தமக்கு இன்பம் பயப்பதை விட உலகத்து உயிரினங்கள் அனைத்துக்கும் மிகையான இன்பம் பயக்க வேண்டும். அதுவே சீரிய மனித சமுதாயத்தை உருவாக்கும் அச்சீரான சமுதாய அமைப்பின் ஆரம்ப அத்திவாரங்களாக அதனில் எழும் தூண்களாக அமைப்பவர் யார்? அவர்கள் தான் எம் சிறுவர் சிறுமியர். இருந்த போதும் இவர்களுக்குரிய அனைத்து விதமான உரிமைகளும் அவர்களிடமே வழங்கப்படுகின்றனவா? '18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு மனித உயிரும் 'சிறுவர்' என சிறுவர் பாதுகாப்பு மீதான சமவாய உறுப்புரையின் வரைவிலக்கணத்தின்படி அவர்கள் சிறுவர்களாகவே வாழ்கின்றனரா? சுதந்திரமாக உலாவுகின்றனரா? 'இல்லை' என்று தான் மிக வேதனையுடன் விடையளிக்க வேண்டியுள்ளது. இந் நிலை மாறவேண்டும் அனைத்து விதமான உரிமைகளையும் அவர்கள் அனுபவித்திடல் வேண்டும்.

இதனை மையமாக வைத்தே 1924ஆம் ஆண்டின் ஜெனிவா பிரகடனம் அமுலானது. இதுவே 1959ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபதாம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் சிறுவர் உரிமைப் பிரகடனம் ஒலிப்பதற்கு காரணமானது. இதன் மூலம் உலகளாவிய ரீதியில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், உரிமை மீறல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர் தொழிலும் வேலைப்பளுவும், சிறுவர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தல், கடத்தல், மோசடி, உடல், உள ரீதியான பாதிப்புக்கள் எனப் பல வடிவங்களில் சிறுவர்களைப் பாதிக்கும்,பாதிக்க வரும் கொடூரங்களில் இருந்து அவர்களை மீட்டெடுத்துப் பாதுகாப்பதனையே முதன்மைப்படுத்தியது. சிறுவர்களுக்குரிய தேவைகளை அவர்களுக்கே முதன்மையாக்கிடல் வேண்டுமென அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. சிறுவர்களுக்கு வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளையும் சமாளிக்கக்கூடிய பயிற்சியும், இளமையிலேயே வழங்கப்படல் வேண்டும். அன்பையும், ஒற்றுமையையும் பகிர்ந்தளித்தல் வேண்டும். அவர்களுடைய திறமைகளைத் தட்டிக் கொடுத்திடல் வேண்டும். கருத்துப் பரிமாற்றத்துக்கு இடமளித்திடல் வேண்டும் என்பனவற்றோடு கல்வி கற்கும் உரிமை உட்பட அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு குரல் கொடுத்தல் வேண்டுமென பல்வேறு உறுதியுரைகள் எடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சிறுவர் உரிமைப் பிரகடனம் மெதுவாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தத் தொடங்கிய வேளை சிறுவர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கிவரும் வன்முறைகள் அனைவரையும் திடுக்கிடச் செய்கின்றன.

நாளுக்கு நாள் நாட்டுக்கு நாடு சிறுவர்களின் நிலைமைகளை ஆராயும் போது பல்வேறு வடிவங்களில் துயரமான தகவல்களையே கேட்கின்றோம். குறிப்பாக இன்று உலகில் பிறக்கும் 1/3 பங்கு பிறப்புக்கள் பதிவு செய்யப்படுவதில்லை. இங்கு இச் சிசுக்களின் உரிமை பிறப்பிலிருந்தே மறுக்கப்படுவதை உணரமுடிகிறது. அதுவுமன்று சுகாதார, கல்வி வசதிகள் பூரணமான முறையில் கிடைப்பதுமில்லை. 1992 இல் ஆபிரிக்காவில் 'ஷனீஸ்' எனும் வைரஸ் தாக்கத்துடனேயே இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் குழந்தைகள் பிறந்துள்ளனர். 5 வயதுக்குட்பட்ட 7 மில்லியன் சிறுவர்கள் 'எயிற்ஸ்' நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மட்டும் போஷாக்கின்மையினால் 50 சதவீத சிறுவர்கள் இன்னலுறுகின்றனர். 100 மில்லியனுக்கு அதிகமான சிறுவர்களுக்கு அடிப்படை ஆரம்பக்கல்வி மறுக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் 95மூ சிறுவர்கள் பாடசாலை செல்வதில்லை என ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அது மட்டுமன்றி இந்நாடுகளில் (அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்) மட்டும் 5 தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட 250 மில்லியன் சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவில் மட்டும் 55 மில்லியன் சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர் என இணையத்தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு ஆண்டு தோறும் 10 இலட்சம் சிறுவர்கள் உலக நாடுகளில் பாலியல் வர்த்தகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சிறுவர் நிறுவனம் கூறுகின்றது. தாய்லாந்து நாட்டில் 80,000 சிறுவர்களும், இலங்கையில் 30,000 சிறுவர்களும் இவ்வர்க்கத்தில் ஈடுபடுகின்றனர் என்பது மற்றுமொரு திடுக்கிடும் தகவலாகும்.

அத்தோடு வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்களில் பலர் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகுகின்றனர். உல்லாசப் பயணிகள் என்ற போர்வையில் வரும் வெளிநாட்டவர்கள் கூட இத்தவறுகளில் ஈடுபட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்று உலக நாடுகளில் சிறுவர் அதிகாரசபைகள், சட்டங்கள், திருத்தங்கள்,இருந்துங்கூட சிறுவர்களின் உரிமைகள் பல்வேறு இடங்களிலும் பறிக்கப்படுவதனை உணரமுடிகிறது. இந்நிலை மாற வேண்டும் சிறுவர்களை சிறுவர்களாக வாழ வழி சமைக்க வேண்டும்.

பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், மதத்தலைவர்கள் என அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒன்றுபடல் வேண்டும். பணிவு, நற்பண்பு, நடத்தை என்பனவற்றை ஏற்படுத்தி ஆக்கபூர்வமான மனப்பாங்கை வளர்க்க வேண்டும். ஆளுமையினையும், தன்னம்பிக்கையினையும் ஊட்டிடல் வேண்டும். அவர்களை அவர்களுக்காக வாழ வழிகாட்டிடல் வேண்டும். இதனையே அனைத்து சிறுவர்களும் எதிர்பார்க்கின்றனர். வறுமையும், பிணியும் துரத்தப்பட்டாலும் கூட இன்று பரவிவரும் துஷ்பிரயோகங்கள் என்று எப்போது இல்லாதொழிவது எனும் வினா அனைவரது மனங்களிலும் தீப்புண்ணாக இருக்கிறது.

இது இப்படி இருக்க இன்று சிறுவர்களிடையே மிக இதமான ஆக்கங்கள், பாடங்கள், கதைகள் என திசை திருப்பல்களும் விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆடவும், பாடவும், கீறவும் - எமக்கு
வாய்ப்புக்கள் தரவேண்டும்
வேலை உலகுக்குள் பொருள் வளம் தேட
அனுபவம் தரவேண்டும்
கருத்துடன் நாங்கள் கற்றிட வேண்டும் - எமைக்
காத்திட வரவேண்டும்'

போன்ற சிறுவர் பாடங்கள் அவர்களது ஏக்கங்களை எடுத்துக் காட்டுகின்றன. அது மட்டுமன்றி பாடசாலைகளில் கூட சிறுவர்கள் மதிக்கப்படவேண்டும். றூசோவும் புரோபலும் அன்று கூறியவை வெறும் ஏடாகக் கூடாது. ஒவ்வொருவர் நடத்தைகளிலும் அது பிரதிபலிக்க வேண்டும். இதனை சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீ வாமதேவன் அவர்கள்'அன்புள்ள ஆசானுக்கு ஒரு கடிதம்' எனும் பாடல் மூலம் மாணவரது எதிர்பார்ப்பினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.


எனவே, வீட்டிலும் வெளியிலும் எம் சிறுவர்கள் சுதந்திரமாகவும் அனைத்துவித உரிமைகளையும் அனுபவிக்கக் கூடியவர்களாயும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்திட ஒவ்வொருவரும் கவனம் செலுத்திடல் வேண்டும். சிறுவர்களை பாதிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவேண்டும். சிறுவர்கள் மிகப் பாதுகாப்பு உணர்வுடன் எதிர்கால விருதுகளாக உறுதியுடன் வாழவேண்டும்.

'வாழ்க சிறுவர்களே – நீங்கள்
என்றும் வளம் பெற்றிடுவீர்'

திருமதி.சிவகௌரி மோகன்
(ஆசிரியை)
தி/அல்-மின்ஹாஜ் மு.ம.வி
மட்கோவ்,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞரை அழைக்கிறது இஸ்லாம்

ஹஸரத் லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்கள் தமது புதல்வருக்கு நல்லுபதேசம் செய்த போது 'என்னருமை மைந்தனே! நீ தொழுகையைக் கடைப்பிடித்து ஒழுகு: நன்மையான காரியங்களை கொண்டே பாவ காரியங்களில் இருந்து (மனிதர்களை) விலக்கி வை: உனக்கு ஏற்படும் கஷ்டங்களை நீ பொறுமையுடன் சகித்துக் கொள். செயல்களில் நிச்சயமாக இது மிக்க வீரமுள்ளதாகும்.

அல்-குர்ஆன் (31:17) என்று கூறினார்கள். இந்த போதனை ஒரு இளைஞனின் கடமை என்ன என்பதை உணர்த்துகின்றது. இஸ்லாம் தான் அமைக்க விரும்பும் உன்னத சமுதாயத்தை உருவாக்கி விடும் பணியில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானது என்பதை இதன் மூலம் எடுத்துரைக்கின்றது.

உண்மையில் இந்த இளைஞர் பிராயம் தான் மனித குலத்தின் எதிர்காலம் என்று சொல்லலாம். மக்களிடத்தில் ஊக்கமிக்க பகுதிகளாக விளங்குபவர்கள் இந்த இளந்தலைமுறையினரே, இஸ்லாமிய புரட்சியிலும், அரசியலிலும், சமுதாயத்தின் நடைமுறை நிர்மாணப் பணிகளிலும் இளைஞர்கள் முன்னின்று பங்கு கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கருதுகின்றது. எனவே தான் இஸ்லாத்தின் ஆரம்ப கால நிகழ்ச்சிகள் அனைத்தும் இளைஞர்களை முன்னணியாகவோ அல்லது பின்னணியாகவோ கொண்டே நிகழ்ந்துள்ளன. இஸ்லாத்தை உறுதிமிக்க உள்ளத்துடன் செயல்படுத்துவதற்கு இறுதி வரை உழைத்த ஸஹாபாக்கள் அனைவரும் போல இளைஞர்களாகவே இருந்தார்கள். இஸ்லாமிய வரலாற்றின் எழுச்சிக் கட்டங்களில் 18 வயது முஹம்மத் பின் ஹாசிமையும் 19 வயது தாரிக் பின் ஸியாத் போன்றவர்களையுமே காண்கின்றோம்.

துடிப்புள்ள இளைஞர் பருவத்தில் அவர்கள் எத்தகைய தீரச் செயலை ஆற்றினார்கள் என்பதற்குச் சரித்திரம் இன்னும் சான்று பகிர்கின்றது. எனவே இன்றைய இளைஞர்கள் மீதும் அந்த பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. அவர்களது சொந்த சுயநல வெற்றி என்ற ரீதியில் நோக்கினாலும் அல்லது மனித குலத்தின் முழுவாரியான சுபிட்சம் என்ற ரீதியில் நோக்கினாலும் அந்தப் பொறுப்பை நிறைவேற்றியே ஆக வேண்டும்.

இந்தப் பொறுப்பை நிலை நிறுத்துவதற்கு தம்மால் என்னென்ன முயற்சிகள் எல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவு முயற்சிகளும் செய்தல் வேண்டும். தமது எல்லாவித தேவைகளையும் விட இந்த தேவைக்கே எல்லா சந்தர்ப்பங்களிலும் முதலிடம் கொடுத்தல் வேண்டும். வெறும் வேடதாரிகளாவன்றி சமுதாயத்தின் மெய்யான உறுப்பினர்கள் ஆவதற்கு தம்மைத் தாமே சிறப்பாகப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும். அல்க்குர் ஆனும், அல் ஹதீஸும் காட்டும் வழியல்லாது வேறு எந்த வகையிலும் இந்த பணிக்கு நாம் எம்மை தயார்படுத்திக் கொள்ள முடியாது. இந்த பணி வெறும் பேச்சுக்களால் மட்டும் முடியக்கூடியதன்று. இஸ்லாத்தைப் பற்றிய தெளிவான அறிவும், அதில் முழு நம்பிக்கையும், அதை சார்ந்த நன்னடத்தையும் வாழ்வில் ஒவ்வொரு கணத்தையும் இஸ்லாத்துக்காகச் செலவிடக்கூடிய இலட்சியமும் நமக்கு மிக அவசியமாகும். நாம் கல்வி கற்கும் நிறுவனங்கள், வியாபாரம் செய்யும் ஸ்தலங்கள்,நமது குடும்பம், தொழில் கூடங்கள் போன்ற அனைத்து இடங்களில் இஸ்லாம் ஊடுருவி நிற்றல் வேண்டும்.

இன்றைய இந்த நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள், சவால்களுக்கு இஸ்லாம் எத்தகைய பரிகாரத்தை வழங்குகிறது. எவ்வாறான உயர்ந்த சுபிட்சமான வாழ்வை உலகிற்குப் பெற்றுத் தருகின்றது என்பதைப் பற்றி அதிகமான திட்டங்களையும் அறிவுரைகளையும் நிறையவே இஸ்லாமிய அறிஞர்கள் தந்து விட்டு சென்றுள்ளனர். எனவே தற்போது எமக்கு அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுவது எந்தத் திட்டங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்படுத்துவது என்பது தான், அவற்றை நிறைவேற்ற வேண்டியவர்கள் இளைஞர்களே! அவ நம்பிக்கையும், சோர்வும் இந்தப் பணியை மேற்கொள்பவர்கள் மத்தியில் ஏற்படவே கூடாது. இஸ்லாம் என்பது உயிரோட்டமுள்ள இயக்கம் வரலாற்று நெடுங்கணக்கில் எங்கேயும் அது தேங்கியோ, தயங்கியோ நின்றது கிடையாது.

அநியாயக்கார நம்ருத்தின் முன்னிலையிலும், கொடுங்கோலன் பிர்அவ்னின் முன்னிலையும் அது துணிவுடன் சத்தியத்தை சொன்னது. இன்றைய நூற்றாண்டில் கூட அந்த துணிவு அஷ்ஷஹீத் சையத் குத்ப் (ரஹ்) அவர்கள் வாயிலாக நாஸரின் முன்னிலையில் வெளிப்பட்டது. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதுடன் மட்டும் நின்று கொள்ளமுடியாது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அனைத்து விடயங்களையும் 'இது சரி, இது பிழை, இது நல்லது, இது கெட்டது' என்று முடிவு செய்து அதன் படி ஒழுகவும் வேண்டும். சிரமப்பட்டேனும் தான் மேற்கொண்ட பணிக்காக வேளை செய்யவும் மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்தலுக்கும் தனது தவறுகளை ஒப்புக்கொள்ளவும் அசத்தியத்துக்கு அஞ்சாது சத்தியத்தை துணிவுடன் எடுத்து வைக்கவும் பிரச்சனைகளை நேர்மையுடனும் திறமையுடனும் நிதானத்துடனும் அணுகவும் இஸ்லாம் இந்தப் பணிக்குத் தேர்ந்தெடுத்தவர்களை பயிற்றுவிக்கின்றது.

தனது சொந்த ஆசைகள், அபிலாசைகள், சொத்து சுகம், மனைவி மக்கள், உயிர் அனைத்தையும் இஸ்லாத்தின் முன் இரண்டாம் பட்சப் பிரச்சனையாகவே கருதுதல் வேண்டும் என்று போதிக்கின்றது. தான் மேற்கொண்ட பணியில் இவை தடையாக இருக்கும் என்றால் அவற்றை உதறித் தள்ளிவிட்டு இந்தப் பணியில் ஈடுபடுமாறு ஆணை இடுகின்றது இஸ்லாம். 'இது சிரமமே! என்னால் முடியாதே!' என்று யாரும் ஒதுங்கிக் கொள்ளவோ 'பிறகு செய்வோம்! தற்போது நான் இன்ன வேலையில் அல்லவா ஈடுபட்டுள்ளேன், இதில் நான் ஈடுபட்டால் அவற்றை யார் செய்வது?' என்று தட்டிக் கழித்து விடவோ முடியாது.

ஏனெனில் நாம் மீது விதிக்கப்பட்ட மகத்தான கடமை இது மரணம் எந்த நேரத்தில் குரல்வளையைப் பிடிக்கப் போகின்றது என்பதை யாரும் அறிய முடியாது. 'எனினும் யாதோர் ஆத்மாவுக்கும் அதற்குரிய தவணை வரும் பட்சத்தில் (அதனை) அல்லாஹ் பிற்படுத்தவே மாட்டேன். அன்றி நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறித்தே இருக்கிறான்' (63:11) என்ற அல்க்குர் ஆனின் கூற்றின் நிதர்சனத்தைக் கண்கூடாகவே காண்கின்றோம். மறுமையில் இளைஞர்களிடம் கேட்கப்படக்கூடிய முதற் கேள்வியே 'உனது வாலிபத்தை எவ்வாறு கழித்தாய், எப்படி செலவழித்தாய்' என்று தான் கேட்கப்படும். அத்துடன் எல்லோரையும் விட முஸ்லிம்களிடம் இன்னும் மேலதிகமாகவும் கேட்கப்படலாம்.

அல்லாஹுத் தஆலா உன் மீது சுமத்தப்பட்ட பொறுப்பை உணர்ந்தும் நீ ஏன் அதைச் செயற்படுத்த முயற்சிக்கவில்லை என்று எம்மிடம் விசாரிக்கப்படலாம். ஆகவே மற்றவர்களை விட எம்மீதுள்ள பொறுப்பு ஒரு பங்கு கூடியதே! அந்தப் பொறுப்பை செயற்படுத்துவதற்கு நாம் தயார்தானா? எங்கே நம்மை நாமே கேட்டுக் கொள்வோம்.

ஆகவே இதுவரை காலமும் வாளாவிருந்தது போதும்! இனியும் தாமதிக்காது இன்றிலிருந்தே இப்பொழுது முதற்கொண்டே தம்மாலான முழு முயற்சியையும் செய்வதற்குத் திட சங்கற்பம் பூணல் வேண்டும்.

ஜீ.ரீ.இக்பால்
அதிபர்
தி/அல்-மின்ஹாஜ் முஸ்லிம் ம.வி,
மட்கோ
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைந்தும் மறையாத மனிதர்கள் யார்?

திரு.வ.செல்வநாயகம் (அதிபர்)
தி/ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியாலயம்,
திருகோணமலை

மனித வரலாற்றில் மனிதன் பிறக்கின்றான், வாழ்கின்றான், இறக்கின்றான் என்று இல்லாமல் உலகம் எமக்கு என்ன செய்தது என்பதை விட நாம் உலகிற்கு என்ன செய்தோம் என்பதை நோக்கி ஆராயும் போது உலகிலேயே வாழ்கின்ற பல்வேறு வகைப்பட்ட மனிதர்கள் தன்னுடைய வாழ்நாளில் தன்னை தனக்காக அர்ப்பணித்துக் கொண்டு சமூகத்துக்காக தன்னை அர்ப்பணிக்க வேண்டும் தன் சுயநலத்துக்காக வாழ்கின்ற அதே மனிதன் பிற நலனுக்காகவும் வாழகற்றுக் கொள்ள வேண்டும். இல்லாத பட்சத்தில் நோக்கம் இன்றி கூடி நிற்கும் மந்தை கூட்டத்திற்கு ஒப்பானது ஆகும்.

சிறு பராயத்தில் கல்வி கற்கும் காலத்தில் பிள்ளைகள் பல்வேறு விடயங்களில் தம்முடைய ஆக்கத்திறன்களை வெளிக்காட்ட வேண்டும். அவ்வாறான பட்சத்தில் தான் எதிர்காலத்தில் மறைந்தும் மறையாத மனிதர்களாக திகழ்ந்து கொண்டு இருப்பார்கள். எச்சந்தர்ப்பத்திலும் நல்ல தலைசிறந்த மனிதர்களை விஞ்ஞானி, கல்விமான்கள், கலைஞர், கவிஞர், அரசியல்வாதி, விளையாட்டு வீரர், கடமை உணர்வுடையோர், சொல்லின் செல்வன், உழைப்பாளி, பேச்சாளன், அறிஞன், நல்ல பெற்றார், நல்ல பண்பாளன், கொடையாளி, மதம் மொழி நாட்டு பற்றாளன், எழுத்தாளன், சோதிடர், சமய தலைவர்கள் இவ்வாறாக வாழ்கின்ற மனிதர்கள் தன்னை யார் என்று காட்டிக் கொள்வதோடு பிறரையும் தன் வழிக்கு இட்டுச் செல்ல வேண்டும். ஆகவே பேராளர்களுடைய வாழ்க்கை முறை எதிர்கால சந்ததியினருக்கு வழிவகுத்துக் காட்டும்.

சமூகத்தை இயக்கிக் கொண்டு இருக்கும் அரசியல்வாதிகள் அரச நிர்வாகிகள், தன்னிச்சை நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோர் தமது வாழ்நாளில் மக்களுக்கு தேவையான வசதி வாய்ப்புகள் உதவிகள் ஒத்துழைப்புக்கள், சேவைகள் என்பவற்றை தன் நிகர் அற்ற செயற்பாட்டில் தன்னை அர்ப்பணித்தால் மக்கள் மத்தியில் வாழும் போது போற்றுவார்கள், வாழ்த்துவார்கள் அவ்வாறு இல்லாத பட்சத்தில் வாழும் காலத்தில் சமூகம் மறந்துவிடும் ஆகவே 'செய்யும் தொழிலே தெய்வம்' என்னும் அறகருத்துக்கு ஏற்ப வாழ்கின்ற நற்பண்புடைய மனிதர்கள் மாதா, பிதா, குரு ஆகியோரை தெய்வமாக மதித்து பணிந்து நடப்போர் சமூகத்தில் நற்பண்பாளனாக காணப்படுவார்கள்.

ஒவ்வொரு மனிதனும் மனச்சாட்சியின் படி நடக்க முற்பட்டால் நாட்டில் பொலிஸ் நிலையங்களோ நீதிமன்றங்களோ அவசியமாக தேவைப்படமாட்டாது. இவற்றை கருத்திற் கொண்டு வாழ்கின்ற ஆறு அறிவு படைத்த ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் நற்பண்புள்ளவர்களாக திகழ்வார்கள்.

எதிர்கால சந்ததியினரான மாணவர்கள் தங்களுடைய கற்றல் வாழ்க்கையில் மேற்கூறப்பட்ட நல்ல மனிதர்களுடைய செயற்பாடுகளையும் வளர்ச்சியையும் அவர்களால் சமூகத்துக்கு ஏற்படுகின்ற நற்பயன்களையும் கற்று அறிய வேண்டும். எனவே தான் வாழ்ந்தவர்கள் வாழ்கின்றவர்களுக்கு பாடமாக அமையும். இன்று ஒவ்வொரு நாடுகளிலும் பல இன மதத்தை சேர்ந்தவர்கள் வாழ்கின்ற வாழ்க்கை நடைமுறைகளை நாமும் பின்பற்ற வேண்டும், ஆகவே தான் மறைந்தும் மறையாத மனிதர்கள் என்றும் எப்போதும் மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக திகழ்வார்களாக இருந்தால் அவர்கள் 'மனிதரில் மாணிக்கம்' என்பது சந்தேகம் இல்லை.

மனிதா!நீயும் வாழ்ந்து
மற்றவனையும் வாழவைத்து
மனிதருள் மாணிக்கமாக திகழ்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் முக்கியத்துவம்

செல்வி.T.சாரதா
B.A Dip in Edu
ஆசிரிய ஆலோசகர்

'கல்வியே வாழ்க்கை, வாழ்க்கையே கல்வி' என்ற அடிப்படையில் மனித மேம்பாட்டிற்குக் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றது. மனிதனை வாழ்வாங்கு வாழ வைக்கின்றது. சூழலை நன்கறிந்து அதற்கேற்ற விதத்தில் அவன் தன்னை ஆக்கிக் கொள்ள கல்வி உதவுகின்றது. தொடர்ச்சியான உலக வாழ்க்கையில் நீண்ட ஓர் மரபை, பண்பாட்டு விழுமியங்களைக் கல்வியே ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு கையளித்து வருகின்றது. இந்த அடிப்படையில் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது.

சமுதாயத்தின் பண்பாட்டு மரபினைக் கல்வி இளம் தலைமுறையினர்க்கு உணர்த்துகின்றது. புதுக்கருத்துக்கள், புத்தாக்கங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தூண்டுதலளிக்கின்றது. தொழில் புரிந்து வாழ்க்கை நடத்தல் பயிற்சியளிக்கின்றது. சமுதாயத்தில் பிறருடன் இணைந்து வாழத்துணை செய்கின்றது. பயனுள்ள முறையில் ஓய்வு நேரத்தைக் கழிக்க உதவுகின்றது. ஆன்மீக உணர்வு முழுமை பெறுவதற்கும் கல்வி துணை செய்கின்றது. மனித இனம் பல்லாண்டு காலம் முயன்று உருவாக்கிய பண்பாட்டை மங்காமல் பாதுகாத்து அதனை மேலும் சிறப்பாக்கக் கல்வி உதவுகின்றது. கல்வியானது இவ்வாறு முக்கியத்துவம் பெறுவது மட்டுமன்றி பல்வேறுபட்ட அறிவுகளைக் கையளித்து நடத்தை முறைகளை மாற்றியமைத்ததுடன், சூழ்நிலையுடன் பொருத்தப்பாட்டினைப் பெறவும் உதவுகின்றது. கல்வி ஓர் இலக்கை அடைய வைப்பதனால் முக்கியத்துவம் பெறுகின்றது. குறிக்கோளை உணர வைக்கின்றது. உணர்ந்த குறிக்கோளை அடையும் வழியை கல்வி மூலம் மனிதன் காண்கின்றான். அவற்றைப் பகுப்பாய்வு செய்து நல்லவற்றையும்,தீயவற்றையும் கண்டு கொள்கின்றான். நல்லவற்றைத் தான் கடைப்பிடிப்பது மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் காட்டி நிற்கின்றான்.

கல்வி மனிதனின் அடிப்படையாகும். ஒருவன் நல்ல அறிவைப் பெற்றுவிட்டால் அவனது குடும்பம் அதன் செல்வாக்கிற்குட்படுகின்றது. அதுவும் அறிவைப் பெற்று குடும்பத்தைப் பிரதிபலிப்பதாக மனிதப் பண்பாடு, ஒழுக்கம் அமைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து

அதனை அவன் கண்விடல்'

என்ற வள்ளுவக் குறட்பா கல்வியினால் பெற்ற அறிவு கொண்டு ஆய்வு செய்யாதுவிட்டால் அதனை அவன் கண்டு விடமுடியாது. அதற்குக் கல்வியே உதவுகின்றது. கல்வி அந்தவகையில் முக்கியத்துவம் பெறுகின்றது எனக் காட்டுகின்றார்.

'கல்வி அறிவை வளர்ப்பது, ஆற்றல்களை வளர்ப்பது, உணர்ச்சிகளைப் பயன்படுத்துவது, மக்கள் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது, மனிதனின் சமூக நடத்தையை மாற்றி அமைப்பது, மக்களில் உள்ளடங்கியிருக்கும் ஆன்மீகப் பண்புகளைப் படிப்படியாகவும், முழுமையாகவும், வெளிப்படுத்துவதாகும்' சமூகத்தில் சாதி வேற்றுமைகளையும், உடையவர், இல்லாதவர் என்னும் சீர்கேட்டையும் பெரும்பான்மையானோர் வாழ்க்கை வசதியற்றோராயும் சிறுபான்மையோர் வசதியுள்ளவராயும் இருக்கும் சிறுமையினையும், கிராமங்கள் நலிவுற்றுப் போவதையும் கல்வியால் எழுந்த சர்வோதய சமுதாயம் அகற்ற வேண்டும் எனக் காந்தியடிகள் குறிப்பிடுவதன் மூலம் கல்வியின் முக்கியத்துவம் புலனாகும்'

பல்வேறு கோணங்களில் கல்வியின் முக்கியத்துவம் பற்றிப் பேராசிரியர்கள் கூறியுள்ளனர். கல்வி என்பது சமுதாயம் அழியாமல் பேணிக் கொள்வதற்கு வேண்டிய கருவியாகும். சமுதாய அனுபவங்கள் கல்வியினால் கல்வி மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டு எல்லோரும் பங்குபெறும் அனுபவங்களாக இருக்க வேண்டும். எனவே கல்வி வாழ்க்கையையும், சமூக முன்னேற்றத்தையும் ஏற்படுத்தக்கூடியது. சமூக முன்னேற்றமே சமூக நிறுவனங்களின் முக்கிய இலக்கு. அச்சமூக முன்னேற்றத்தைக் கல்வி என்ற சாதனமே அளித்து வருகின்ற தன்மையில் கல்வி முக்கியமடைகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ඉගෙන්වීම් ක්‍රියාවලියේ නිසි ලෙස යෙදීම ගුරුවෘත්තියේ වගකීමයි.

ලොව වැදුම් පිදුම් වලට භාජනය වන එකම වෘත්තිය වන්නේ ගුරු වෘත්තියයි. ගුරුවරයා යනු සමාජයක් නිර්මාණය කරන නියමුවා වේ.යහපත් සමාජයක් ගොඩ නැංවීමට මෙන්ම සමාජය විනාශ කිරීමටද හැකියාවක් ඇත්තේ ගුරුවරයෙකුටයි.එබැවින් මෙය උතුම් පූජනීය වගකීම් සහගත රැකියාවක් ලෙස අප අවිවාදයෙන්ම පිළිගත යුතුවේ." ගහක් වුනොත් ගලන්නට අවශ්‍ය වේ, ගහක් නොගැලුවොත් පල් වෙනවා.මිනිසෙකු නොහැදුනොත් වල් වෙනවා."

එසේම මෙම යහපත් වූ සමාජයක් ගොඩ නැගීමට නම් යහපත් මිනිසෙකු නිර්මාණය කිරීමේ හැකියාවක් ඇත්තේ යහපත් අධ්‍යාපනයක් තුළිනි.එම මහඟු කාර්යය භාරය සිදු කිරීමට ඉතා දැඩි වගකීමක් ඇත්තේ ගුරුවරයාටය. ගුරුවරයා එම කාර්යය සිදු කළ යුත්තේ මනා අධ්‍යාපනයක් දරුවන්ට ලබා දීම තුළින්.මේ සඳහා තම වෘත්තියේ කාර්යය භාරය වගකීම මැනවින් වටහා ගෙන ක්‍රියාත්මක වීම ගුරුවරයාගේ යුතුකමක් වේ.

මෙලෙස තම වගකීම වෘත්තිය වශයෙන් ඉටු කිරීම තුළ දී ගුරුවරයා තමාගේ තම ප්‍රධාන කාර්යය භාරය ලෙස සලසා තම ඉගැන්වීම් ක්‍රියාවලිය නිසි පරිදි සිදු කිරීමට යොමු විය යුතුය. මේ සඳහා හොඳ සූදානමක් ගුරුවරයෙකු ලෙස තිබීම අනිවාර්යය වේ.ඒ අනුව තමාගේ වෘත්තිය අනුව තමාට සිදු කිරීමට නියමිත කාර්යය භාරය මැනවින් හඳුනාගෙන ඒ අනුව ක්‍රියාත්මක වීමට කටයුතු කළ යුතු වේ.මුලින්ම තමා පිළිබඳ හොඳ අවබෝධයක් ගුරුවරයෙකු ලෙස තමාට තිබිය යුතුය.එනම් ඉගැන්වීම් කාර්යය සම්පූර්ණ කිරීමට පෙර තමා කවුද? කරන්නේ කුමක්ද? යන්න පිළිබඳ හොඳ අවබෝධයක් තමා ලබා ගත යුතු වේ.මේ තුළින් තමන්ට හොඳ ආත්ම අභිමානයක් ලබා ගැනීමට හැකි වන්නා මෙන්ම වෘත්තිය පිළිබඳ හොඳ තෘප්තිමත් භාවයක්ද ලබා ගත හැකිය.එසේම ඉගැන්වීම් කාර්යය සාර්ථක කර ගැනීම සඳහා තමා මුලින්ම හොඳ දැනුමෙන් සන්නද්ධ විය යුතුය.

මෙහි දි තමා උගන්වන විෂය සම්බන්ධයෙන් හොඳ දැනුමක් ලබාගත යුතුවාක් මෙන්ම අනෙකුත් සමාජ තොරතුරු පිළිබඳ හොඳ අවබෝධයකින් කටයුතු කිරීමක් සිදුකළ යුතුය.මීට අමතරව හොඳ ක්‍රියාශීලිව කටයුතු කරමින් ඉගැන්වීම් කාර්යය සපුරාලීමට කටයුතු කළ යුතුය. ගුරුවරයෙකු ලෙස ඉගැන්වීම් කාර්යය නිසි ලෙස සම්පූර්ණ කිරීමට යා මේදී මූලික වශයෙන්ම ඉගෙනුම් ක්‍රියාවලියට අවශ්‍ය හොඳ සූදානම තුළ මුලින්ම අදාළ වාරයට අදාළව සකස් කර ගත් වාර සැලැස්මක් තමා විසින් සකස් කර ගැනීමට කටයුතු කළ යුතුවේ.

මෙය තමා ඉගැන්වීමට සූදානම් සියලුම විෂයයන්ට අදාළව සකස් කර ගත යුතු වේ.ඉන් අනතුරුව එය ක්‍රමාණුකූලව පවත්වාගෙන යමින් ඒ ඒ මාසයට අදාළව සති සටහනක් පවත්වාගෙන යමින් ඉගෙනුම් ක්‍රියාවලියේ නිරත වීමට කටයුතු කළ යුතුවේ.මෙහි දි විශේෂයෙන්ම තමාට අදාළ නිපුණතා ක්‍රමාණුකූලව සිදු කිරීමට හැකියාවක් ලැබෙන අතර මේ තුළින් ඉගෙනුම්-ඉගෙන්වීම් ක්‍රියාවලිය පිළිබඳ යම් යම් තීරණයන්ට එළඹීම සඳහා ද මෙය යොදා ගත හැකිය. එසේම ඉගැන්වීම් ක්‍රියාවලිය නිසිලෙස සිදු කිරීමේ දි ඊට අදාළ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හොඳසූදානමක් ගුරුවරයෙකු ලෙස ලබා තිබිය යුතුවේ . පෙර දිනයේ දි පාඩමට අදාළ පාඩම් සැළැස්මක් සකස් කර ගනිමින් අදාළ කාළය උපරිම ලෙස යොදා ගනිමින් ශිෂ්‍යයින්ට ඉගැන්වීම්ක්‍රියාවලියේ යෙදී දැනුම ලබා දිය යුතු වේ. මෙහි දි කාළය මනාව කළමනාකරණය කරමින් පාඩමක් මනාව සැලසුමකින් යුක්තව අවසන් කිරීමට අපේක්ෂා කෙරේ.

ඉගැන්වීම් ක්‍රියාවලිය තුළ පාඩම් සටහන් යොදා ගන්නා අතරම පාඩම් සටහනට අදාළව පාඩම කරගෙන යාම සඳහා විශේෂයෙන්ම ඉගෙනුම් ආධාරක ථට අදාළව සකස් කරගෙන යමින් ඒ සඳහා මනාව ශිෂ්‍යයින් අදාළ පාඩමට සම්බන්ධ කර ගනිමින් මනා ඉගෙනුම් ක්‍රියාවලියකට සම්බන්ධ කර ගැනීම සඳහා යොමු විය හැකිය.ඒ අනුව මෙලෙස ඉගැන්වීම් ක්‍රියාවලිය තුළ මනාව සැලසුමකින් යුක්තව තම ඉගැන්වීම් ක්‍රියාවලිය නිසි ලෙස කරගෙන යන අතර තුර මේ සඳහා අවශ්‍ය සුදුසු පරිසරයක් පංති කාමරය තුළ නිර්මාණය කිරීමට ද ගුරුවරයා සමත් විය යුතුය.එය ඉගැන්වීම් කාර්යය මනාව කරගෙන යාමටද මනා රුකුලක් වේ.

ඒ අනුව මුලින්ම තම ඉගැන්වීම් ක්‍රියාවලිය සාර්ථකව ඉටු කර ගැනීම සඳහා මනා පංති කළමනාකරණයක් ගුරුවරයා විසින් සිදු කරගත යුතුවේ. මෙසේ පංතිය කළමණාකරණය කර ගැනීම තුළින් අපේක්ෂා කරන්නේ සිසුන්ට හිතකර ඉගෙනුම් පරිසරයක් නිර්මාණය කිරීමයි.ඒ සඳහා පංතිකාමරයේ සිටින සිසුන් සංඛ්‍යාව ඉඩකඩ ආදිය පිළිබඳව මනා අවබෝධයක් ලබා ගත යුතුවේ. ඉගෙනුම් ඉගැන්වීම්ක්‍රියාවලිය තුළදි නිසි ලෙස යෙදීමේදි ඉගෙනුම් ආධාරක භාවිතය ද වැදගත් වේ.තමාට භාවිතා කළ හැකි ඉගෙනුම් ආධාරක නිසි ලෙස මනාව කළමණාකරණය කරමින් ඉගැන්වීම් ක්‍රියාවලිය සඳහා යොදා ගත යුතු වේ. මෙය තමාගේ ක්‍රියාවලිය සාර්ථක කර ගැනීමට මනාව ඉවහල් වනු ඇත. පංති කළමණාකරණය මෙන්ම ඉගැන්වීම් ක්‍රියාවලිය සාර්ථකව සිදු කිරීමේදි මනා අන්තර් සබඳතා පවත්වාගෙන යාම ද වැදගත් වේ.

සිසුන් දෙමාපියන් මෙන්ම විද්‍යාලයේ අනෙකුත් ශ්‍රේණි වල උගන්වන ගුරුවරු ආදින්ගේ සබඳතාව ද වැදගත් වේ.මේ තුළින් මනා ඉගෙනුම් ක්‍රියාවලියක් ගොඩ නංවා ගැනීමට එය ඉවහල් වනු ඇත.ඉගැන්වීම් ක්‍රියාවලිය නිසි ලෙස සිදු කිරීමේ දි ගුරුවරයෙකු ලෙස ශිෂ්‍යයින් ද නිසියාකාරව හඳුනා ගනිමින් තම කාර්යය ඉටු කිරීමට යොමු විය යුතුවේ.මෙහි දි ශිෂ්‍යයින්ගේ දැනුම , හැකියාව , සාක්ෂරතාවය , විශේෂ දක්ෂතා මෙන්ම වයස් මට්ටම පිළිබඳව හොඳ අවබෝධයක් තිබීම වැදගත් වේ.මේ තුළින් නිසි ලෙස තම වෘත්තියේ වගකීම නිසි ලෙස ඉටු කිරීමේ හැකියාවක් ගුරුවරයාට ලබා ගත හැකි වනු ඇත. පංතියක අදාළ පාඩමක් ඉගැන්වීමේදි කාළය හොඳින් යොදා ගනිමින් නියමිත කාලයට අනුව එය අවසන් කිරීමට යොමු වී තමාගේ කාර්යය සඵල කිරීමට දායක වේ.මෙය මනාව පුහුණුව හා ක්‍රමාණුකූල බව හේතුවෙන් ඇති වන තත්වයකි.ඉගැන්වීම් ක්‍රියාවලියේ නිසි පරිදි යෙදීමේදි ගුරුවරයෙකු ලෙස පාඩම E5 සංකල්පය පදනම් කර ගනිමින් විස්තර කරමින් ඉදිරියට ගෙන යාම මෙන් ම ශිෂ්‍යයින්ගේ දැනුම, කුසලතා වර්ධනය කිරීම මෙන්ම පුරුදු ඇති කිරීම පෙර දැරි කර ගනිමින් පාඩම සැලසුම් කළ යුතුවේ.මෙහි දි නිසියාකාරයේ මඟ පෙන්වීමක් සිසුන්ට ලබා දිම මෙන්ම දැනුම ගොඩ නංවා ගැනීමේ දි සිසුන්ට මඟ පෙන්වා දිමට ද කටයුතු කළ යුතු වේ.සිසුන්ගේ බුද්ධිමට්ටම් විවිධාකාර වන අත එම බුද්ධිමට්ටම් තේරුම් ගෙන විශේෂ ඉගැන්වීම් ක්‍රම භාවිතා කළ යුතු අවස්ථා වලදී එම ඉගැන්වීම් ශිල්ප ක්‍රම භාවිතා කිරීමට යොමු විය යුතුය.

උදාහරණයක් ලෙස ගතහොත් සමහර පාඩම් විස්තර කිරීමේදි සිසුන්ට භූමිකා රංගන යොදා ගැනීම, ක්ෂේත්‍ර චාරිකා යොදා ගැනීම සිදු කළ හැකිය. ඒ තුළින් සිසුන්ගේ මතක ශක්තිය මෙන්ම විෂය සම්බන්ධ ඇල්ම කැමැත්ත තව දුරටත් වර්ධනය කිරීමට



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හැකියාවක් ලැබේ. මෙය සාර්ථක ඉගැන්වීම් ක්‍රියාවලියකට වඩා හොඳින් භුවහල් කර ගැනීමේ හැකියාවක් වනු ඇත. ගුරුවරයා නිතරම විචාරශීලී විය යුතුය.නව දැනුම ගොඩ නගා ගැනීමට කටයුතු කරන්නෙක් විය යුතුය.මේ නිසාම ඉගෙනුම් ක්‍රියාවලිය පවා හොඳින් සැළසුම් කිරීමේදී නව තාක්ෂණික දැනුම පිළිබඳ හොඳ ආකල්පයක් මෙන්ම නවීන තාක්ෂණිකක්‍රම ඉගැන්වීම්ක්‍රියාවලිය සඳහා භාවිතා කරන්නටද නිතරම යොමු විය යුතුය.එසේම ගවේෂණශීලීව කටයුතු කිරීම සඳහා පෙළඹිය යුතුය.තමා නොදන්නා දේ පිළිබඳව සොයා බැලිය යුතුය.ඒ දැනුම නිතර ධනාත්මක ආකල්පයන් වර්ධනය කර ගනිමින් කටයුතු කළ යුතුය. මේ සඳහා හොඳ ශක්තියක් , ජවයක් තමා තුළින් මතු කර ගනිමින් කටයුතු කර ගත යුතුවේ.

ඉගැන්වීම් ක්‍රියාවලියක නිසි ලෙස සැලසුම් කිරීමේදී තමා කටයුතු කිරීමේදී තමා පාසල් කාලය තුළ කාලය කළමනාකරණය කිරීමේදී එය ක්‍රමානුකූල බවකින් යුක්තව සිදු කිරීමට යොමු විය යුතුයි.මෙහිදී පාසලට පැමිණෙන වෙලාව කාලච්ඡේදයකින් කාලච්ඡේදයකට පංති කාමරයකින් පංති කාමරයකට මාරු වීම සඳහා ගත කරන කාලය මෙන්ම විවේක කාලය තුළ තමා කාලය ගත කරන ආකාරය මෙහිදී වැදගත් වේ.මෙය මුළුමනින්ම ඉගැන්වීම් ක්‍රියාවලියේ සාර්ථකත්වය කෙරෙහි බලපායි.එසේම ගුරුවරයා යනු සියළුම දෙනාට සියළුම සිසුන්ට එක හා සමානව තම කරුණාව දයාව මෛත්‍රිය දක්වමින් ඉගැන්වීම් ක්‍රියාවලියේ නිරත වන්නෙකි.මෙහිදී සියළුම සිසුන් තමාගේ දරුවන්ය යන මතයේ සිට මෙම ඉගැන්වීම් ක්‍රියාවලියට සම්බන්ධ වී කටයුතු කිරීම හා ඒ අනුව සිදු කිරීමට යොමු වීම ඉතාමත් වැදගත් වේ.


දැනුමෙන් මද දරුවන්ට මෙන්ම දැනුමෙන් වැඩි දරුවන්ටද එක සේ සලකා ඉගෙනුම් ඉගැන්වීම් ක්‍රියාවලියේදී කටයුතු කළ යුතුය.මෙහිදී කණ්ඩායම් ක්‍රියාකාරකම් වල සිසුන් යොමු කිරීමේදී ඔවුන්ගේ දුර්වලතා හඳුනාගෙන ඒවා සකස් කර ගැනීමට ක්‍රමානුකූලව තමා සම්බන්ධ සිසුන්ට උපකාර කිරීමට කටයුතු කිරීම සිදු කල යුතුය.ඒ තුළින් යහපත් ඉගෙනුම් පරිසරයක් ඇති කිරීමට හැකියාවක් ලැබෙන්නා සේම දැනුම හුවමාරුව තුළින් සිසුන් තුළ සුවිශේෂ හැකියා වර්ධනය වීමට ද එය හේතුවක් වේ.

එසේ ඉගැන්වීම් ක්‍රියාවලියේ අවසාන වශයෙන් තමා උගන්වන ලද දේ පිළිබඳව මනාව තක්සේරුවන් හා ඇගයීමක් සිදු කිරීම ද මෙහි පරමාර්ථයක් වේ.එම පරමාර්ථය අවසානයේ තමා ලද ප්‍රතිඵලය කෙතරම් ද යන්න පිළිබඳව අවබෝධයක් ලබා ගැනීමට හැකියාවක් වනු ඇත.මෙහිදී සිසුන් තුළ ඇති වන වෙනස්කම් අවබෝධ කර ගැනීමට හැකියාවක් ඇත. සමාජයට හිතකර දැනුම ආකල්ප කුසලතා වලින් හෙබි සිසුන් පිරිසක් ඇතිකිරීම හා සමාජයට යහපත් පිරිසක් ඇති කිරීම මෙම ඉගැන්වීම් ක්‍රියාවලියේ අවසාන ඉලක්කය වනු ඇත.මෙය සපුරා ගැනීමටනම් ගුරුවරයෙකු ලෙස තමාගේ වගකීම් නිසි ලෙස ඉටු කිරීමට කටයුතු කිරීම සිදුකල යුතුය.මෙහි දී නිසි පරිදි කාල කළමණාකරණය කිරීම, පාඩම් සැලසුම් සකස් කිරීම , වාර සටහන් සැලසුම් සකස් කර ගැනීම මෙන්ම මනා සම්බන්ධීකරණයක් පරිපාලනය සමඟ මෙන්ම සමාජය සමඟ පවත්වාගෙන යමින් ඉගැන්වීම් ක්‍රියාවලියේ නිසි ලෙස යෙදීම වැදගත් වේ.

ඒ අනුව ඉගැන්වීම් ක්‍රියාවලියේ නිසි ලෙස යෙදීම ගුරුවෘත්තියේ වගකීමක් ලෙස මනාව හඳුනාගත හැකි අත එම වගකීම නොපිරිහෙළා ඉටු කිරීමට අප සියළු දෙනා අධිෂ්ඨාන කරගත යුතුවේ.මේ තුළින් යහපත් සමාජයක් නොමනනා යහපත් හෙට දිනක් උදා කිරීමට ගුරුවරුන් ලෙස අපට කටයුතු කල හැකිවේ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பாளர் ஆக்கிடுங்கள்

பத்துமாதம் சுமை தாங்கி பக்குவமாய் ஈன்றெடுத்து
பாராட்டிச் சீராட்டி என்னைப் பலவாகக் கனவுகண்டு
முத்த மழை பொழிந்து முன்பள்ளி செல்ல வைத்து
முந்தி நான் வருகையிலே என்னைப் பிந்தி நின்று அழகு பார்த்து

பின்பள்ளி நான் தொடர பெரு முயற்சி தான் எடுத்து
பள்ளிக் கதவுவரை பக்குவமாய் அழைத்துவந்து
ஆசிரியர் கரங்கொடுத்து அழகழகாய் வார்த்தை சொல்லி
ஆளாக்கிப் பெயர் கேட்க அளவில்லா ஆவலுடன்

தன்வயிறு காயவிட்டு என்வயிறு நிரப்பியவள்
தன்தூக்கம் தொலைத்து என்தூக்கம் நீக்கிவிட்டு
மண்ணில் நல் மைந்தன் என நான் வாழ வேண்டும் என்று
மணிக்கணக்காய் பல கனவு மனதில் புதைத்து வைத்துக் காத்திருக்க

எம் ஆசுகள் களைந்து எழுத்தாணி கோலோச்சி
ஏணியெனத் தாங்க வந்த ஆசிரியர் குழாமினிலே – பலர்
பக்குவமாய் பாடமுடன் பல விழுமியமும் புகட்டுவிக்க – சிலர்
பௌவியமாய் உடையணிந்து பகட்டுடனே வந்து நின்று ....

கால்நடைகள் பெயர்களெல்லாம் எம் காதுகளில் ஒலிக்கவிட்டு
கருணை சிறிதுமின்றி கருங்கல் மனதுடனே – எம்
பிஞ்சு மனதையெல்லாம் பிசைந்து துவைத்துவிட்டு
பெரும் சேவை செய்தவர் போல் பிதற்றித் திரிகையிலே ...

எம் அம்மா கண்ட கனா என்ன நிலை ஆகிடுமோ?
எம்மை அறிந்து கொஞ்சம் எமக்காகக் கல்வி தந்தால் - எம்
தாய்மனது குளிர்விக்கத் தயாராக நாம் உள்ளோம்
தரணிக்கொரு மனிதன் தரமாய்க் கிடைத்திடுவான்

கட்டாக் காலிகள் போல் கலைத்தெம்மை விரட்டிவிட்டால் - எம்மிடத்தில்
கருணை உள்ளந்தான் கதவு திறந்திடுமோ?
உளமறிந்து கல்விதர உம்மால் முடியல்லையேல் - தயவுசெய்து
ஒதுங்கிநின்று நற்குருவிற்கு உதவிடுங்கள் எமைவளர்க்க

கனதியான வார்த்தைகளால் காயப்பட்ட மனம் - நாம்
கல்லூரி வருவதற்கும் கசப்பாய் கசக்கிறது
கற்றுயரப் பல வழிகள் இன்று கணனி முதல் இணையம் வரை – ஆனால்
காலத்தின் தேவை நல்ல விழுமியங்கள் பெறுவதுவே


சுட்ட பழம் கேட்ட பாட்டி சுவைத்த பழம் போல் - நாம்
சுட்டித்தனத்துடனே செய்கின்ற குறும்புகளை
எட்டிக் காயாக ஏன் சுவைக்க மறுக்கின்றீர்!
ஈரமில்லா நெஞ்சம் எங்கே இன்சுவையை எமக்களிக்கும்

இனியேனும் ஒரு நொடிப்பொழுது எம் தாயின் கனவுகளை
இங்கிதமாய்ப் பாருங்கள் எமக்குதவி செய்யுங்கள்
பார்புகழ நாம் வாழ எமக்கு உம் கரங்கள் உதவட்டும் - தயவு செய்து
பண்பில்லா மனிதனாக்கி பாருக்கு வழங்காதீர்

திருமதி.இ.காளிராசா (ஆசிரியை)
தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வகுப்பறை முகாமைத்துவம்

நாட்டில் ஒவ்வொரு பிள்ளையும் தான் சார்ந்த குடும்பச் சூழலுக்கு வெளியே கல்வியைப் பெறுவதற்காக நாடும் அடிப்படை நிறுவனம் பாடசாலையாகும். இப்பாடசாலை ஒரு சமூகத் தொகுதியாக, பண்பாட்டு நிறுவனமாக செயற்படுகின்றது. இப்பாடசாலைகளில் வயது அடிப்படையில் மாணவர்கள் பிரிக்கப்பட்டு வகுப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. 19ம் நூற்றாண்டில் கைத்தொழிற் புரட்சிக்கு முன்னர் பாடசாலைகளில் வகுப்புக்கள் இல்லாமலேயே கற்பித்தல் இடம்பெற்றது. ஆனால் தொழிற்சாலைகளில் கையாளப்பட்ட பெரும்படியாக்க உற்பத்தி முறைகள் கல்வி முறையிலும் செல்வாக்குச் செலுத்தியதன் விளைவாக கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் பாடசாலைகளில் வகுப்பறைகள் தோற்றம் பெற்றன. வயதடிப்படையில் வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டு ஆசிரியர் கற்பித்தலை மேற்கொள்ளும் போது சகல மாணவர்களும் யாவற்றையும் விருப்புடனும், ஆர்வத்துடனும் ஒரே அளவில் கற்றுக்கொள்ளமாட்டார்கள். மாணவர்களிடையே பரம்பரைக் காரணிகள் காரணமாகவும் சூழற்காரணிகள் காரணமாகவும் தனியாள் வேறுபாடுகள் காணப்படும். அதாவது உடற்குறைபாடு, உளக்குறைபாடு பிறழ்வான பொருத்தப்பாடுகள் நெறிபிறழ்வு, கல்வியில் பிற்போக்கு, மீத்திறன் என பல்வேறு காரணிகள் தனியாள் வேறுபாடுகளுக்குரியவைகளாகும். இவ்வாறு ஒவ்வொரு மாணவன் பற்றியும் அறிந்து அவர்களுக்கேற்ற வகையில் கற்பிக்கப்படுவதோடு கற்றலுக்காக ஒழுங்கமைக்கப்பட்டதும் பயனுள்ளதுமான ஒரு வகுப்பறையை நடாத்தும் போது அதனை வகுப்பறை முகாமைத்துவம் எனலாம். இவ்வகுப்பறையிலே ஒவ்வொரு மாணவனுடைய திறமையையும் விருத்தி செய்து கொள்வதற்குத் தேவையான சந்தர்ப்பம் அளிக்கப்படும் தன்னுடைய நடத்தைகளைத் தாமே சீரமைத்துக் கொள்ளக்கூடிய வழிமுறைகளை கருத்துள்ளதாயும் விருப்போடும் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். இத்தகைய வகுப்பறைகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் குறிப்பிட்ட மட்டங்களின் தகுதி பற்றி அறிந்திருப்பார்கள். அதனால் அந்நடத்தைகளை நடைமுறைப்படுத்துவது பற்றி ஒற்றுமையாக வேலை செய்வார்கள்.

சிறந்த முகாமைத்துவத்துக்குட்பட்ட வகுப்பறையின் உயர்ந்த விளைவு நன்நடத்தை பற்றி தானே பொறுப்பேற்கும் ஜனநாயக ரீதியானதும் புத்திசார் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைக்கு மாணவர்களை இட்டுச் செல்லக்கூடியதாகும். வகுப்பறை முகாமைத்துவத்தின் பிரதான பணி ஆசிரியர் அதிகாரத்தை நிலை நாட்டுவதல்ல அத்தகைய அதிகாரத்தை நிலைநாட்டுவது தேவையற்றது என்ற நிலைக்கு மாணவர்களை இட்டுச் செல்வதாகும். பண்பாட்டு முகாமைத்துவத்தின் ஊடாக செயல் பற்றியும் நிலைபேறு பற்றியும் ஒரு கட்டமைப்பும் வரையறையும் உருவாக்கப்படுகின்றது. அத்தகைய கட்டமைப்புக்களையும் வரையறைகளையும் அறிந்து கொள்வதனாலும் ஏற்றுக் கொள்வதனாலும் மிகைப்படுத்தப்படுவதனாலும் அவற்றைத் தனது தனிப்பட்ட வாழ்க்கையின் போது பின்பற்ற முடியும். பொருத்தமான துறைகளின் கட்டமைப்பும் வரையறைகளும் ஏற்படும் போது ஏனைய துறைகளில் அபிவிருத்திக்கான சந்தர்ப்பம் அதிகரிக்கும் உதாரணமாக வகுப்பறையை முறையாக வைத்திருத்தல் தனது அன்றாட வாழ்க்கையை சீராக அமைத்துக் கொள்ளத் தூண்டுகோலாகிறது. வாய்மொழி நடத்தையின் வரையறைகளை அறிந்திருத்தல் சமூகத்திலே பண்பாக பேச்சு வார்த்தை நடத்தும் பழக்கத்தை நிலைபெறச் செய்யும். வகுப்பறை ஒன்றினுள் சீரான முகாமைத்துவம் இடம்பெறும் போது அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதையும் பற்றி மாணவர்களுக்கு சிறந்த ஓர் மன உருவத்தை ஆசிரியரால் பெற்றுக்கொடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே வகுப்பறை முகாமைத்துவம் எனும் போது ஒவ்வோர் ஆசிரியரும் கற்றல் நடாத்துவதற்காக தனது உட்புகுதலை ஒழுங்குபடுத்துவதும் அதற்கு ஏற்றவாறு வகுப்பறைச் சூழலை ஒழுங்கமைக்கும் முறையுமாகும்.

வகுப்பறையில் சிறந்த முகாமைத்துவம் இடம்பெறும் போது ஆசிரியர்கள் தமது நடவடிக்கைகளைப் பற்றி தெளிவான முறையில் சிந்திக்கும் சந்தர்ப்பம் பெறுவர். தனது கற்பித்தல் வேலை ஒழுங்கமைப்பு எந்தளவு வெற்றிகரமானது என்பதை மிகவும் செம்மையாக அறிந்து கொள்வர். ஆகவே அவற்றைப் பொருத்தமான விதத்தில் மாற்றி அமைத்துக் கொள்ளவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். நல்லதொரு வகுப்பறை முகாமைத்துவம் சீரான கல்விக்கு வழிவகுக்கும். அது மாணவர்களை தொடர்ச்சியான மோதல்களிலிருந்து தவிர்க்கும். வகுப்பினுற் சிறந்த ஒழுங்கமைப்பு நிலவுமாயின் அதனால் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் அந்நியோனியமான தொடர்பு உண்டாவது திண்ணம். 'நல்லொழுக்கமும் ஒழுக்காறும்' வகுப்பறையில் நிலவுமாயின் இந்நிலை உருவாக்க முடியும். ஒழுங்கு என்பது எம் அன்றாட வாழ்க்கையில் நாம் உறுதியாக பின்பற்றும் ஒன்றாகும். வகுப்பறையினுள் மிக மிக உறுதியாக ஒழுங்குகள் பின்பற்றப்படவேண்டும். ஒழுங்கை ஏற்படுத்தாது நடைபெறும் கற்பித்தல் ஒரு யுத்தம் போன்று அமையும். அத்தகைய ஓர் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் களைப்புறுவர். மாணவர் முறைகேடாக நடந்துகொள்வர். எவ்வாறாயினும் விமர்சனத்திற்கு ஆளாகுபவர் ஆசிரியரே. ஆகவே வகுப்பறையினுள் ஒழுங்கைப் பேணுதல் மிக முக்கியமானதாகும். ஆசிரியர் ஒருவர் தனது வகுப்பறையில் தான் தீர்மானித்துக் கொண்டபடி ஒழுங்கை ஏற்படுத்துகையில் அவ் ஆசிரியர் மாணவர்களுடன் முதன் முதலாக ஏற்படுத்தும் இடைத்தொடர்புகள் பற்றி கூடிய கவனம் எடுத்தல் வேண்டும்.

வகுப்பறை முகாமைத்துவம் எனும் போது இங்கு இடம்பெறும் முகாமைத்துவ செயற்பாடுகளை நோக்குவோம். கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர் முன் கூட்டியே திட்டமிட்டு செயற்பாட்டுத் திட்டத்தை எழுதுகின்றார். ஒவ்வொரு நாளும் தான் என்ன பாடத்தை எவ்வாறு எவ்வளவு நேரத்திற்கு என்ன கற்பித்தல் தர உள்ளீட்டு உபகரணங்களைக் கொண்டு என்ன முறையில் கற்பிக்கப் போகின்றார் என்பதை திட்டமிட்டுக் கொள்கின்றார். இதனால் கற்பிக்கும் செயற்பாடு ஆசிரியருக்கு இலகுவாகவும் விரும்பத்தக்க முறையிலும் அமைந்திருப்பதோடு மாணவர்களும் தாமே இலகுவாக விளங்கிக் கொள்வதுடன் ஆர்வத்துடனும் விருப்புடனும் கற்றலை மேற்கொள்வார்கள். முகாமைத்துவ செயற்பாடாக ஒழுங்கமைத்தலை எடுத்துக் கொண்டால் கற்பிக்கப் போகும் பாடத்தை எவ்வாறு மாணவர்களுக்கு இலகுவாக உட்செலுத்தலாமோ அதற்கேற்ற வகையில் பாடங்களை ஒழுங்கமைப்பதுடன் அக்கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் வகுப்பில் உள்ள தளபாடங்களையும் மாணவர்களையும் ஒழுங்கமைத்துக் கொள்வதனால் கற்றல் கற்பித்தல் இலகுவாக்கப்படுகின்றது. முகாமைத்துவத் தொழிற்பாட்டில் இயைபுபடுத்தலை எடுத்து நோக்குவோமானால் வகுப்பறை முகாமைத்துவத்தில் வகுப்பறையின் உட்புறம், வெளிப்புறம் ஆகியவற்றின் சுத்தங்களை மேற்கொள்வதற்கு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டிருக்கும். அதே போன்று தளபாடங்களைப் பராமரித்துக் கொள்வதற்கென ஒரு குழுவும் ஆவணங்களைநடைமுறைப்படுத்துவதற்கு ஒரு குழுவும் பிரிக்கப்பட்டிருந்தாலும் அடிக்கடி ஒன்று சேர்ந்து கலந்துரையாடல் மேற்கொள்ளும் போது முழுமையான தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கும். வகுப்பறைச் செயற்பாட்டினை திறம்பட மேற்கொள்வதற்கு அடிக்கடி ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. இதனால் வகுப்பாசிரியர்களும் பாட ஆசிரியர்களும் தமக்கு பொறுப்பளிக்கப்பட்டிருக்கும் செயற்பாடுகளை திறம்பட ஆற்றுவர். இச் செயற்படுத்தும் முகாமை தொழிற்பாட்டினை பாடசாலை அதிபர் மேற்கொள்கின்றார். ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களும் சம்பிரதாயங்களுக்கும் ஏற்ப வகுப்பு வேலைகள் நடைபெறுகின்றனவா எனவும் அவற்றுக்கு இயைபானதாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும் அதிபர் முகாமைத்தொழிற்பாடான நிர்வகித்தல் கருமத்தை மேற்கொள்கின்றார். வகுப்பறையில் உள்ள மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு ஆசிரியரோடும் அதிபரோடும் ஏனைய மாணவர்களோடும் தேவைப்படும் விதத்தில் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கும். இத் தொடர்பாடல் செயற்பாடு வாய்மொழி மூலமாகவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து மூலமாகவோ சைகை மூலமாகவோ இடம்பெறலாம். இவ்வாறான முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது நாம் எதிர்பார்க்கும் நோக்கங்களை பயன் தரும் விதத்திலும் இலகுவாகவும் அடைந்து கொள்ளலாம். அத்துடன் நேரம், உழைப்பு, பணம் முதலியன விரயமாகாது வினைத்திறனுடன் பயன்படுத்தலாம். மாணவர்கள் மனித நேயம் ஒற்றுமையும் மிகுந்தவர்களாகக் காணப்படுவர். அமைதியான சுபாவம் உள்ளவராகவும் எல்லா நேரமும் ஒருவர் மற்றொருவரால் வழிநடாத்தப்படாமல் தன்னைத் தானே வழிநடத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வர். அத்துடன் ஆசிரியர் மாணவர் சமூகத்தினுள் நெருங்கிய ஒத்துழைப்பு விருத்தி அடைந்து காணப்படுவர்.

**வகுப்பறை முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் போது கவனத்தில் எடுக்க வேண்டிய காரணிகள்**

சிறந்த வகுப்பறை முகாமைத்துவம் இடம்பெறுவதற்கு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய காரணிகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்
- தாழிகையை அனுபவிக்கும் கற்போர்
- மீத்திறன் மாணவர்
- வகுப்பறையொன்றின் பௌதிகச் சூழல் உளவியல் சூழல் நிலமைகள்
- ஆசிரியரின் செயற்பாடு
- ஆபத்து விளிம்பிலுள்ளவர்கள் கற்கும் வலுவில் பின்னடைவுடையோராக உள்ளனர்.
- 

இவர்கள்கற்றல் வலுவில் ஆற்றல் முறைக்கு உட்படாத சகபாடிகளுடன் வகுப்பறையில் இருக்கின்றனர். இவ்வாறான ஆபத்து விளிம்பிலுள்ள மாணவர்களின் வகைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1. உளவளர்ச்சியிற் பின்னடைவு கொண்டோர்
2. கற்கும் ஆற்றலில் பின்னடைவு கொண்டோர் அல்லது கற்றல் குறைபாடு உடையோர்
3. நடத்தை நிலைகளில் குலைவு கொண்டோர்
4. புலன்கள் மற்றும் தொடர்பாடற் குலைவு கொண்டோர்
5. வறுமையின் அமைவினால் கற்க முடியாது இருப்போர்
6. பெண்ணிலை வேறுபாட்டினால் ஒதுக்கி விடப்படுவோர்

உள வளர்ச்சியிற் பின்னடைவு கொண்டோர் எனும் போது உளத்தொழிற்பாட்டுத் திறன் சராசரியில் கீழ் நிலையில் இருத்தலும் தழுவும் நடத்தையில் தாழ்நிலையில் இருத்தலுமாகும். நியாயமான கற்பித்தல் இன்றி ஒருவர் தமது உடலைப் பாதுகாப்பதும், ஆபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதும் தம்மைத் தாமே பராமரித்துக் கொள்வதும் சமூக மயமாக்கல் திறன்களைக் கொண்டிருத்தல் தழுவும் நடத்தையாகக் கருதப்படும். கற்கும் ஆற்றலில் பின்னடைவு எனும் போது கற்பித்தலை விளங்காதிருக்கும் நிலை மொழியைப் புரிந்து கொள்ள முடியாதிருக்கும் நிலை கேட்டல், வாசித்தல், எழுதுதல், குறைபாடுகள் இருத்தல் எண்ணாற்றல் குறைவு, எழுத்தாற்றல் குறைவு ஆகியவை அடங்குகின்றன. நடத்தைக் குறைவு கொண்ட மாணவர்களும் ஆபத்து விளிம்பிலுள்ள மாணவர்களாகக் கருதப்படுகின்றனர். இன்றைய எங்கள் நாட்டுச் சூழலில் நடத்தைக் குலைவின் செறிவுகள் பல தளங்களில் அனுபவிக்கப்படுகின்றன. கவனப்பராமரிப்பு அற்றநிலை, வகுப்பறையின் செயற்பாடுகளைக் குழப்பும் நடத்தை, இலகுவாக கவனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைப்புக்கு உள்ளாகும் நிலை, அதீத அருட்டல் நிலை அமைதியற்ற அவலம் முதலியன நடத்தைக் குலைவுக்குச் சில எடுத்துக்காட்டுக்களாகும். ஆபத்து விளிம்பிலுள்ள பிறிதொரு சாரார் தொடர்பாடற் குறைபாடு கொண்டவர்கள் ஆவர். கட்புல, செவிப்புலக் குறைபாடுகள், பேச்சுக்குறைபாடு கொண்டோர் இப்பிரிவில் அடங்குவர். மொழிவழித் தொடர்பாடலே இன்றைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் அதிக முக்கியத்துவம் பெறுவதால் தொடர்பாடல் ஆற்றல் குறைந்தவர்கள் மீது சிறப்பார்ந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அடிப்படையான ஒலிகளை ஒருவர் தமது குரல்களால் எழுப்பமுடியாது இருத்தல் பேச்சுக் குறைபாடு எனப்படும். மொழிக்குறைபாடு எனும் போது இது இரு வகையாக உள்ளது.

1. பிறர் பேசுவதை உள்வாங்கும் ஆற்றல் குறைவடைந்து இருத்தல்
2. தமது கருத்துக்களைப் பேச்சு மொழி வாயிலாக வெளிப்படுத்த முடியாதிருத்தல்

வறுமையின் சூழமைவு கற்றலைப் பாதித்து ஆபத்தின் விளிம்புக்குள் வறியவர்களைத் தள்ளிவிடுதல் உண்டு. வறுமை காரணமாக ஏற்படும் உணவு ஊட்டற் குறைவு மூளை வளர்ச்சியைப் பாதிக்கின்றது. புலன் உறுப்புக்களின் செயற்பாடுகளை பாதிக்கின்றது. வறுமைக்கும் பள்ளிக்கூட வெளி நீங்குகைக்கும் கற்றலில் ஈடுபாடு கொள்ள முடியாமைக்கும் நேரடியான தொடர்புகள் காணப்படுகின்றன. வறுமை கவனச்சிதைவை இலகுவாக ஏற்படுத்தி விடுகின்றன. பெண் என்ற பால் நிலையினால் ஆபத்து விளிம்புக்கு தள்ளப்படும் கற்போரும் இருக்கின்றார்கள். மூன்றாம் உலக நாடுகளில் வறுமை நிலையும் பெண் நிலையும் இணையும் பொழுது கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறாக சிறப்பார்ந்த கவனம் செலுத்தப்பட வேண்டியவர்களும், ஆபத்து விளிம்பில் உள்ள கற்போரும் வகுப்பறையில் இருத்தல் பற்றிய உணர்வு, அறைகூவல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும். ஆபத்து விளிம்பில் உள்ள கற்போருக்குரிய கற்பித்தலை ஒழுங்குபடுத்தி கற்பித்தல் மேற்கொள்ளப்படும் வேளையில் தான் சிறந்த வகுப்பறை முகாமைத்துவம் இடம்பெறும். ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர் மாத்திரம் அன்றி சாதாரண ஒவ்வொரு மனிதரும் தாழிகையின் தாக்கத்தை அனுபவித்தல் உண்டு. துன்பமான உணர்வுகள், சோகம் கலந்த நினைவுகள் தமக்கு ஆதரவு தர யாருமிலர் என்ற அங்கலாய்ப்பு, நம்பிக்கை இழப்பு, உற்சாகமின்மை, தமக்குத் தாமே உளத் துன்பக்குழியை உருவாக்குதல் வாழ்க்கை நிலவரங்களோடு கற்றலோடும் இயல்பாக இணைந்து கொள்ள முடியாமை உதவி செய்வோர் ஆதரவை நிராகரித்து நிற்றல் முதலியவை தாழிகை உணர்வுக்கு உட்பட்டோரிடத்துக் காணப்படும் சில பொதுப் பண்புகளாகும். செயற்பாடுகளில் விருப்பிழந்து இருத்தல் துன்பமான மனநிலையை சாதாரணமாக அனுபவித்தல் தமது செயற்பாடுகளைப் பின் தள்ளிப் போடுதல் முதலியனவும் தாழிகையின் இயல்புகளாகும். அமைதியாக இருந்து கற்க முடியாத நிலை வகுப்பறையின் சராசரி வேகத்திலும் குறைந்த வேகத்திலே செயற்படுதல் இலகுவாக பொறுமை இழந்து விடுதல், மிக எளிதாக கவனக் கலைப்புக்கு உள்ளாதல், கவனத்தை கற்றலின் மீது குவியப்படுத்த முடியாதிருத்தல், நினைவாற்றல் குன்றியிருத்தல், ஆசிரியர் குறிப்பு வழங்கும் போது மீண்டும் மீண்டும் குறிப்பைச் சொல்லுமாறு கேட்டல், வாழ்ந்து யாது பயன்? என்று வாழ்க்கை மீது வெறுப்புக் கொள்ளுதல் போன்றவைகளும்தாழிகைத் தாக்கத்திற்கு உட்பட்டவர்களுக்குரிய இயல்புகளாக உள்ளது. வகுப்பறையில் ஆற அமர இருந்து செயற்பட முடியாத மாணவர்களை இனங்காணுதலும் பதகல நிலைகளை பகுத்தாராய்ந்து உதவுதலும், எதிர்மறையான உணர்வுகளில் இருந்து விடுவித்தலும் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. ஆகவே இவ்வாறான மாணவர்களை இனங்கண்டு அதற்கேற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்ளும் போது வகுப்பறை முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்ளலாம்.

மீத்திறனுடைய பிள்ளைகள் கூடிய விவேகமும் சிறந்த அடைவு மட்டத்தையும் உடையவர்களாகக் காணப்படுவர். இவ்வாறான விவேக ஈவு உடைய பிள்ளைகளை ஆசிரியர் கவனியாதுவிடின் தம்மிடம் உள்ள மிகையான திறமையை ஆசிரியருக்கெதிரான, பாடசாலைக்கு எதிரான நடத்தைகளில் ஈடுபடுத்தும் புத்தியுடைய பிள்ளைகளால் சமூகத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் நாசத்தை விட சமூகத்திற்கு அதிகமான பாதகமான விளைவு ஏற்படும். இவ்வாறானவர்கள் வகுப்பறையில் குழப்பநிலையை ஏற்படுத்துவார்கள். ஆசிரியருடன் வாதம் புரியும், ஆசிரியரது ஆற்றலை மீறிச் செயற்படுகின்ற அதிக நம்பிக்கையுடைய அதிகரித்த சமூகத்துக்கரிய இயல்புகளைக் காட்டும் மாணவர்களை ஆசிரியர் தொந்தரவு தரும் மாணவர்களாகக் கருதாது அவர்களது உளத் தேவைகளைப் பூர்த்தி செய்யின் விஞ்ஞானிகளையும் பொறியியலாளர்களையும், வைத்தியர்களையும் சிறந்த கலைஞர்களையும் ஆசிரியர்களால் உருவாக்க முடியும். வகுப்பறையில் சீரான பௌதிகச் சூழலை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதும் வெற்றிகரமான வகுப்பறை முகாமைத்துவத்துக்கு இன்றியமையாததாகும். வகுப்பறையின் பௌதீக சூழல் எனும் போது வகுப்பறையின் பௌதீக பொருட்களை முறையாக வைத்துக் கொள்வதால் ஏற்படுத்திக் கொள்ளும் சூழல் ஆகும். ஒழுங்காகப் பேணப்படுவதும் கலைத்தன்மையுடன் கூடியதும் உள்ளத்தைக் கவரக்கூடியதும் செய்முறை காட்சிப் பொருட்களைக் கொண்டதுமான வகுப்பறையே சீரான கல்வியை வழங்கும் வகுப்பறையாக அமையும்.

ஒழுங்கு முறையாகப் பேணப்படும் வகுப்பறையினுள் மாணவர்களும் ஒழுங்காக நடந்து கொள்வர். வகுப்பறையின் பௌதீகச் சூழலில் வகுப்பறைக்கதவு, தளபாடம், ஆசிரியர் மேசை, மாணவர் மேசை, கதிரை, கரும்பலகை, சமயம் தொடர்பான சிலைகள், படங்கள் வகுப்பறை ஆவணங்கள் தளபாடங்கள் வகுப்பறையில் தொங்கவிடப்படும் அறிவித்தல், தேசப்படம் பத்திரங்கள் விளம்பரம், சித்திரம் முன்னேற்ற அறிக்கை, திட்டம், பூத்தாழிகள் ஆகிய பொருட்கள் இடம்பெறுகின்றன. இப்பௌதிகப் பொருட்களை பொருத்தமான இடத்தில் சுத்தமாக ஒழுங்குபடுத்தி வைப்பதன் மூலம் சமூக உளவியல் சூழ்நிலையை ஏற்படுத்தலாம். வகுப்பறையில் சமூக, உளவியல் சூழ்நிலை எனும் போது மாணவர் ஆசிரியர்களுக்கிடையேயான தொடர்பினால் ஏற்படும் சமூகப் பிணைப்புக்களையும் அப்பிணைப்புகளினாலும் பௌதீக ஒழுங்குகளினாலும் ஏற்படும் உளவியல் நிலைமைகளையும் ஒன்றாகக் கொண்டு செயற்படுவதைக் குறிப்பிடலாம். வகுப்பறையில் சமூக உளவியல் சூழ்நிலையை மேற்கொள்ள பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. மாணவர் ஆசிரியர் உறவைக் கட்டியெழுப்புதல்
2. மாணவரை அறிந்து கொள்ளுதல்
3. சட்டம், சம்பிரதாயம், அன்றாடப் பழக்கவழக்கங்கள்

பற்றி மாணவர்களுக்கு கற்பித்தல், ஆசிரியர் உரிய நேரத்தில் உரிய வேலையில் ஈடுபடுவது மிக முக்கியத்துவமாகும். உரிய நேரத்தில் செயற்படாது இருக்கும் போது ஏனைய பாட ஆசிரியரின் பாடவேளை பாதிக்கப்படும். உரிய நேரத்திற்கு முன் பாடத்தை முடித்தால் மிகுதி நேரத்தை மாணவர் வீணாகக் கழிப்பர். அதே போன்று ஆசிரியர் நன்றாக பாட ஆயத்தத்தோடு வகுப்பறைக்குச் செல்லுதல் வேண்டும் பயன்படுத்தப் போகும் துணைச்சாதனங்களை வகுப்பறையில் பொருத்துவதையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு செல்லுதல் வேண்டும். ஆசிரியர் வகுப்பினுள் நுழைந்தவுடனேயே பாடத்தை நுட்பமான முறையில் ஆரம்பித்தல் வேண்டும். முழு வகுப்பினதும் பங்குபற்றதலையும் ஒத்துழைப்பையும் வற்புறுத்த வேண்டும் வகுப்பிலுள்ள மாணவர்களின் பெயர்களை அறிந்து அழைத்தல் வேண்டும். வகுப்பறையில் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாடுகள் பற்றியும் மாணவர் பற்றியும் ஆசிரியர் அறிந்து இருத்தல் வேண்டும். வகுப்பறையில் நெருக்கடியான நிகழ்வுகள் இடம்பெறும் போது உறுதிப்பாடான தெளிவான வழிமுறைகளை ஆயத்தப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். ஆசிரியர் எச் செயலை செய்யினும் நிதானத்தையும், நீதியையும், நியாயத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும். வகுப்பறையில் உள்ள சக மாணவர்களை ஒப்பிட்டு பேசுதல் கூடாது. பயிற்சிகளையும், வேலை ஒப்படைகளையும் உரிய நேரத்தில் பார்வையிட்டுக் கொடுத்தல் வேண்டும். மாணவர்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி இருந்தால் அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு மாணவரிடமும் வினாக்களைக் கேட்பதன் மூலம் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். செய்முறை வேலைகளுக்கு போதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடவசதி அளித்தல் வேண்டும். இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வகுப்பறையின் அன்றாட வேலைகளை மாணவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். இதனால் ஆசிரியர் தன் மீது நம்பிக்கை வைத்துள்ளார் என்பதையும் மாணவர் விளங்கிக்கொள்வர். இவ்வாறு சிறப்பாகக் கற்பிக்கும் போதே வகுப்பறை முகாமைத்துவம் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது.

புதிய கல்விச் சீர்திருத்த விதப்புரைகளின் படி கற்றல் கற்பித்தலானது மாணவர்களைக் கவரும் வகையில் செய்முறையூடாக செயற்படுத்தி செயலூக்கம் உள்ள வகுப்பறையாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர் விருப்புடனும், மகிழ்ச்சியுடனும் பயனுள்ள கற்றல் கோட்பாடுகளில் இயங்குதல் என்பதற்கு வகுப்பறை வசதிகளும், வளங்களும் ஆசிரியரின் உவப்பான கற்பித்தல் அணுகுமுறைகளும் அவசியமான காரணிகளாகும். செயலூக்கமுள்ள வகுப்பறை ஒன்றின் ஆசிரியர் எல்லா அறிவுறுத்தல்களையும் வழங்குவார். கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளை தாமே ஒழுங்கு செய்வர். பிள்ளைகள் அனுபவங்கள், ஆற்றல்கள் உள்ளவர்களாகக் கணிக்கப்படுவதனால் பிள்ளைகள் கூறுவதை ஆசிரியரும், ஆசிரியர் கூறுவதைப் பிள்ளைகளும் செவிமடுப்பர் ஆசிரியர் கற்றலூக்க வசதி அளிப்பவராகவும் கற்பித்தலை மாணவர்களுக்கு விளங்கத்தக்க முறையிலும் மேற்கொள்வர். ஆசிரியர் கற்பித்தலை மேற்கொள்ள வினாக்களைக் கேட்கின்றார். இதனால் மாணவர் தம்மிடமும் திடீரென வினாக்கள் கேட்கப்படலாம் என சுறுசுறுப்பாக இயங்குவார்கள். கற்றல் இடர்பாடுகளின் போது உதவி வழங்குவதுடன் தேவைப்படும் போது தனிப்பட்ட முறையிலும் ஆசிரியர் மாணவர்களுக்கு துணைபுரிவர். மாணவருக்கு விளங்கக் கூடிய வகையில் கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துவதோடு அவ் உபகரணங்களை மாணவர்களைக் கொண்டே தயாரிக்கவும் செய்வர். அவர்களின் விருப்புடனே கேட்கப்படுவதனால் அவர்கள் ஆர்வத்தோடு தயாரித்துக் கொண்டு வருவர். வகுப்புத் தலைவர்களைத் தெரிவு செய்யும் போது ஏனைய மாணவர்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் தெரிவு செய்து கொள்வதால் வகுப்புத்தலைவர் பொறுப்புக்களைக் கொடுக்கும் வேளையில் ஏனையோர் மனமுவந்து செய்வர். வகுப்பு வேலைகளையும் முன்னேற்றத்தையும் பற்றி பல்வேறு பதிவு அட்டவணை, அறிவித்தல் வரை படங்கள் ஆகியவற்றை கவர்ச்சிகரமான முறையில் தொங்கவிடுவதனால் வகுப்பறை செயலூக்கமுடையதாகக் காணப்படும். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு சிறந்த ஒரு வகுப்பறை முகாமைத்துவத்தை ஏற்படுத்தி மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தி சமூகத்திற்கு தரமான வெளியீட்டினை வழங்கிய கௌரவத்தினை அதிபர்களும் ஆசிரியர்களும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதே சமூகத்தினரது எதிர்பார்ப்பாகும்.

திருமதி.ஜீ.மதியழகன்,

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்)

B.BA. Dip.in.Edu, M E D , SLPS II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Science and Islam

The Quran is the literal word of God. It was revealed through the Angel Gabriel, directly to the prophet Muhamed (P.B.U) He received the exact wording and passes it on to this folloreem. It is God and only god speaking in the Quran. It makes the guidance from God more complete and accessible to all.

So many scientific facts mentioned in the Holy Quran which was revealed fourteen centuries ago according to the famous Muslim Scientist, Ibnsina that science is true science which relate knowledge of the world to the knowledge of Dunde principle so Islamic Science possesses a religious and spiritual charcter.

The universe is made up of various parts. There are galaxies and solar system, that are above earth and mountains, oceans and land on earth. In the Holy Quran, God has said about the Orgin of the Universe.

'Then He turned to the heaven when it was smoke… (Quran 41:11)

'Have not those who disbelised known that the heavens and the earth were one connected estity, then we separated them And we have made from water every living thing … (Quran 21:30)

Because the earth and the heaven above (the sun, the moon, stars…) have been formed from the same smoke, and the earth and heavens were are connected entity. So the earth and the heaveas has the same orgin. According the science of modern cosmology, the whole universe was nothing but a cloud of smoke. Scientists now can observe recently, new stars are forming out of the remnants of that smoke and they only found out within the last few years with advanced technological methods.

There are aspects of creation that heenaw aie still discovering and coming across today. In the Holy Quran God speaks about the stagen of man's embryonk development.

'We created man from an extract of clay, Then we made him as a drop in a place of settlement, firmly fixed. Then we made the drop into an alagah (lech) then we made the alagah into Mudghah (chewed – like substance) (Qura'n 23:12-14)

Literally, the Arabic word 'alagah' has 3 meaning (1) leech (2) suspencled thing and (3) blood cate Scientist find the alaga stage in human embrgo which obtains nourishments from the blood of the mother, similar to leech which feeds on the blood of others and we can find that the external appearance of embrgoalro like a clot of blood (Gagake the next stage



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mentioned in the verse is the 'Mudgha' stage (cheved – like substance) also present in 26th day embrgo. Another development phase in Quran is 'He makes you, in the wombs of yours mothers, in stages, one after another , in three veils of darkness (Quran 39:6)

Professor Keith Moore is a worldwide reputable scientist in the field of anatomy and embrgology. According his book 'The developing Human' Ps&9 'three veils of darkness' probably refers to (1) the maternal anterior abdominal wall (2) the uterine wall and (3) the amniochorionic membrance of the womb.

So How could Muhamed (PBUH) have possibly known all this 1400 year ago, when scientists have only recently 'discovered this using advanced equipment and powerful microscops which 'did not exist at that time he could not have known such details because he was an illiterateman with absolutely no scientific training.

Let us nee the another fact about function of forehead. It was only mentioned in the Glorious Qur'an 1400 years ago

'Nay! If he ceases not we will catch him by the forehead a lying sinning forchead Quran 96:15-16

'There is nit a moving 'living' creature but he has group of its forehead. Verify my Lord in on the straight path the truth (Qur'an 11:56)

According the scientific research (Scientific moractes in the Glonous Qur'an and Suunah in 1985) the prefronted Lanea of the cerebrum (forhead) is responsible for planning, motivating and initiating good and sinful behaviour and is responsible for the telling of lies and her speaking of truth, also the functional center for aggression some scientists carried out often many trials and photographic imaging for various pasts of the brain. It was found that, the same area of the brain (forhead part) active when a person tells the truth and lies. We can deduct from this, that the area of the forhead is responsible for truthfuluess and lying so the functions of this area discovered by scientists (According to Prot.Keith L.Moon) in the last sixty years.

The next and important fact if prayer. Talking about the beauty and power of prayers; they provides us with spiritual growth, psychological comfort, support, relief, tranquilily and contentment for our souls, minds and hearts. Out of five prayers three prayers are offering in night time why? When we approach this nighttime prayer (Isha, Tahjud, including Maghrib and Subh) in Scientific view, we can understand, how is it very important for day to day life.

'Rise for prayer in the night, except a little half of it or less Or add to it and recite the Quran is slow, measures, rthythmic tones (A1 – Muzzamil 173:2)

Verily, the rising by night (For Tahajjud prayer) is very hard and most potent and good for governing oneself, and most suitable for the word of Allah (73:6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Verily, Yon lord knows that you do stand (to pray at night) a little less than two thirds of the night, or half the night, or a third of the night and also a party of there with you. So recive your of the Quran as much as may be easy for you. He knows that there will be some among you sick .... (73:25)

According the vibrational medicine, there are seven energy prints (nerve pleaxes) or chakra in our body. There energy points are working through out wholeday so we have to sleep. One hour sleep balances each chakra, with a minimum of three hours in total for really healthy people. For the really healthy, three hours is all that is needed by the higher chakras, which in tam balances the four lower ones. (Gurudas P to) So what do we do with the rest of the night.

The part of our body that functions in this capacity is the pineal gland, it is the seat of consciousness, the seventh energy paint in the subte system. The pituitary and the pineal gland work in Unity When the sun sets (Maghrib prayer time) the pinealgland shifts gear and produces its primary hormone melatonin in larger quantity until it plaks from 2/3.00 a.m in the morning (magiclal P.7) Melatonin regulatos our sleep – wake cycle and inhibits sex hormones before pubers, activate the immune system and inbibtumor promoters like estropen penton P.1)

Pineal gland produces Epithalamin, serotonin and varotonin, Epithalamin is related to our learning capacity and sloues aging, seretoun has a strong influence on sleep, varotonin is related to rapid deep sleep (Gates P1) But productim of melatonin is reduced by excessive expositive to artificial lights, take right TV viewing , electromagnetic fields and chemical pollutants like pesticides. Studies indicate that even the more moden exposure to extended light stresses our bodies, accelerates aging and debilitates the immine and nervous systems. Caffeine in coffee, black tea also reduce melatonin jeopardizing its Natural antoxidants. One can also increase aries metatin levels naturally from foods like oats, sweet corn, rice, ginger and barley.

So the night time prayer gives not only the healthy life but also spirual growth within ourself.

The Quran reminds man of Allah's unlimited power that, the amazing things of human's composititin the lines in the fingers as an example of this supremacy. In the world, no two people can be found with identical finger prints. This distinctive quality of finger prints, indicated in Quran (75: 3-4) remained anonymous until their discovery be british scientists in 1884.

'Yes, We are able to put together in perfect

Order the tips of his fingers (Quran 75-4)

Let us go into the shape of the mountains. Mountains play an important role in stabilizing the crust of the Earth. They hindes the shaking of the Earth. Professor Emeritus trank press says in his book (Earth), the mountains have undalying roots. There roots are deeply embedded in the ground and have a shape like a peg (hidden under the surface of the ground.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This theory was introduced only in the latter half of the nineteenth century. But the Quran has described about mountains in 1400 ago.

'Have we not made the earth as abd

And the mountains as pegs (Quran 78:6-7)

'And he has set firm mountains in the earth

So that it would not shake with you (Quran 16:15)

Could anyone during the time of the prophet Muhammed (PBUH) have known of the trueshape of mountains which extends deep into the earth and has a root?

Another fact, that Modern science has discovered that in the places where two different seas meet, there is a barrier between them. This barrier divides the two seas so that sea has its own temperature , salinity and density (Principles of Oceanography , Dawis P 92.92) Example When Mediterranean seawater enter the Atlantic over the Gihraltar sill, it moves 1000 meter with its ownwarm, saline and also with largal waves, strong currents but they do not mix or transgress this barrier.

The Holy Quran mentioned 14th Century that there is a barrier between two seas meeting together and that they donot transgress.

'He has set free the two seas meeting together there is a barrier between them. They donot transgress, (Quran 55: 19-20)

When we concider the angermangement in our life Anger is a harmful non healthy behaviour which leads people in most cases to chastic decisions and behaviour.

'Do not become angry' (Al Buhhavi 6 11E)

'If one of you becomes angry while standing, he shoult sit down, if the anger leaves him, well and good other wise he should lie down. (Abu Dawood in the sannan 4782)

It was scientifically proven that anger increase the systdic rate of the heart beat and consequently the blood supply in the vessels. This cause heart strain from oversecrtion. The adrenal gland which lies above the kidney, secretes an adrenal in hormone which increase blood glucose upon anger.

One of the way to treat angry patients, is psycho muscular relaxation where the doctor asks his patient to remember difficult situations and to sit down if he is standing or even to did down to become quiet. The level of adrenalia slightly increase, when a person stands for five minutes. This fact mentioned in the book, 'Harison Medicine How didi prophet Muhammed (P.B.U.H) know the dangerous effects of there hormones increasing when the person is standing in order to tell his followers 1400 years ago.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Let us take costless action of smiling. It is a sign of good manners. Islam encourages smiling and promises there who practice it tempting rewards in the next life as prophet Muhammad (P.B.U.H) said

'smiling in your brothers' face is a charity'

(Sunan Al Tirmdithi 1956)

Surely there are good reasons for comparing smiling with charity Dr.Willaim Fray (Prof.U.S.A) conciders smiling a holistic human experience in which all body organs react including the heart, brain, nerroussystem and digestive system. The brain secrets endorphins, a material that causes psychological relaxation and relieves pain. There are few muscles are participate in smiling in the human face and most of the muscles are affected by emotion and tension. So when you are in peaceful nature without tension, you should share the peaceful situation with other people so smiling also a great charity work in the life.

Currently, we are facing different types of problem return in day today life. Because of this, we have somuch stress, due to this stress, we get Psycosomatic diseases Psychologically there results from fear of the unknown persons, Loss of things, too much planning about future, conflict between the mind and the reality, Less of people in our life and failure to accept the reality. It is the lack of innerpeace due to our internal conflicts which leads to the external disturbances in our behaviours and affect our health.

Surely we minimizes our stress by putting the trust in God. Holy Quran deal with such situation 'What ever we are given is a gift from God. We are not their owners, Everything belongs to God and return to him' So if we derit own there things why we mourn their loss when we reciting Quran in slow, measured, rhythmic tones with fullfaith and sincerely, we will free from the stress when approcl in scientific way, the echo of sound has a medical effect Listening or recitatim of Quran has a same wholesome effect on the body, the heave and the mind. 'Alef 'elchoes to the heart and letter 'ya' echoes in the pineal gland in braing. It improve our heart rate, the blood pressure and muscle tention.

In conclusion, Everything has been recorded in the Quran fourteen hundred years agro meast be the truth, that can be prayed by scientific means. Since the prophet Muhameed (PBUH) cencled neithn read nor write. The Quran does provide spiritual type of knowledge as well as knowledge of sue principles of science and Quran will remain supreme emitting the beams of its knowledge till Dooms day.

'O my people! Truly, then life of the world is nothing but a (quick passing) enjoyment and verify, the Hereafter that is the home that will remain forever (Quran 40:39)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மாணவர்கள்மீதும், அவர்களின் கல்விமீதும் சமூக வலைத்தளங்களின் தாக்கம்

# The Impact of social Networking sites on Education and Students

**மா.பாலசிங்கம்**
பிரதி அதிபர்
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி,
திருகோணமலை

## அறிமுகம்

அன்றுதொட்டு மனிதன் தன் வாழ்நாளை இனிமையாகவே கழிக்க விரும்பகின்றான். அவன் அன்றாட வாழ்வில் பல மனிதர்களோடு தனது உணர்வுகளை வெளிப்படுத்திக்கொண்டே வருகின்றான். நவீன மனிதனும் இதனையே கடைப்பிடிக்க விரும்புகின்றான். இயந்திரங்களோடு பழக்கப்பட்டு வருகின்ற இன்றைய மனிதன் தனது அன்றாட வாழ்வில் பல வலையமைப்புகளில் தனது நேரத்தினைக் கழித்து வருகின்றான். அவை கல்வி, கலாசாரம், பொழுதுபோக்குகள் என்பன தொடர்பானவையெனஅடுக்கிக்கொண்டே போகலாம். ஏனெனில் மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவனால் சமூகத் தொடர்புகள் அற்று வாழமுடியாது. இவற்றினை உணர்வுரீதியிலான வலியாக உணர்ந்த மனிதன் அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் இருக்கும் மனிதர்களோடு மட்டுமன்றி ஆபிரிக்க பழங்குடி மக்களுடனும் தனது உணர்வுகளை இரு திசையில் உணரச்செய்வதற்கான சிறப்பான ஒருவலையமைப்பினை உருவாக்கவேண்டிய தேவையினை உணர்ந்தான். அவைகளே இன்று பல்வேறு பரிமாணங்களில் தோற்றம் பெற்றிருக்கும் சமூகவலைத்தளங்கள் (Social Networks) ஆகும்.

கடல் கடந்து, மொழிகடந்து மக்களுடன் வலையமைப்புகளை உருவாக்குவதற்கான உந்துதல் இணையத்தின்மூலம் அவர்களுக்கு இன்று கிடைத்துள்ளது. இவ் இணையமானது இன்று சாதாரண பொருட்கொள்வனவிலிருந்து கல்வி,தொலைத்தொடர்பு என்று பல்வேறு பரிமாணங்களில் விரிவடைந்து மக்கள் வாழ்க்கையில் கலந்து காணப்படுகிறது. அந்தளவுக்கு இணைய இணைப்பு சம்பந்தமான கருவிகளின் கிடைப்பனவும், அவற்றினை இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய நிலைமையும் இன்று ஒரு சாதாரண விடயமாக மாறிவிட்டது. கல்வி மற்றும் ஏனைய பயனுள்ள விடயங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வாய்ப்புகள் வளங்கள் இணையத்தில் காணப்பட்டபோதும் துரதிஷ்டவசமாக இன்றைய இளம் சந்ததியினர் சமூக வலைத்தளங்கள் என்றபோர்வையில் அதற்குள் இறங்கி தமது நேரத்தினை வீணாக்கி தேவையற்ற பல்வேறு சமூகக்குற்றங்களில்ஈடுபட்டு வருகின்றனர். இதனடிப்படையில் இன்று சமூக வலைத்தளங்கள் இளையவர்களோடு மட்டும் நின்று விடாமல் முதியோர்களையும் இணைத்திருப்பது புதியதோர் யுகத்தினை வெளிக்காட்டுகின்றது எனலாம். இந்த வகையில் இக் கட்டுரையானது சமூக வலைத்தளங்கள் இன்றைய இளம் சந்ததியினர்மீதும் கல்விமீதும் கொண்டுள்ள தாக்கங்களையும் அதன் அடிப்படைகளையும், அதனை எவ்வாறு? பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொள்ளலாமென்பதனையும் ஆராய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்கம்

சமூக வலைத்தளங்கள் (Social Networks) கடந்த சில வருடங்களாக பிரபல்யமாப் பேசப்படும் ஒரு விடயமாக இருந்துவருகின்றது. உண்மையில் இத்தளங்கள்மீது ஒரு ஆழமான கண்ணோட்டத்தினைச் செலுத்தினோமானால் இதிலுள்ள நல்ல உள்ளடக்கங்களையும் அறிந்துகொள்ளலாம். இத் தளங்கள் அரசியல் துறை, பொருளாதாரத் துறை, கல்வித்துறை என்ற வகையில் பல்வேறு நன்மைகளைக்கொண்டு விளங்குகின்றன. ஆனால் இன்றைய இளந்தலைமுறையினர் மத்தியில் நன்கு பிரபல்யம் பெற்று விளங்கும் சமூக வலைத்தளங்களான facebook.com, Linkedin.com, twitter.com, orkut.com போன்றன இவர்களின் கல்வியையும், அவர்களின் பழக்க வழக்கங்களையும் மோசமாகப்பாதிக்கும் ஒரு அம்சமாக மாறியுள்ளது என்பதே யதார்த்தம். மேலும் இன்று இவர்கள் அதிநவீனமுறையில் வேகமான நுட்பத்துடன் வளர்ந்து வரும் Smartphone, Tablet PC, iPad மற்றும் மடிக்கணினிகள் என்பன மூலம் இணைய வலையமைப்பினைப் பயன்படுத்தி தங்களைச் சீரழித்துச் செல்கின்றனர்.

## சமூகவலையமைப்பு தளங்களின் அடிப்படைகள்

சமூக வலையமைப்புத் தளங்கள் சில முக்கிய அடிப்படைகள்மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அந்த அடிப்படை விடயங்கள்தான் இவற்றின் துரித வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்தன. அவற்றின் ஐந்து விடயங்ளை இங்குநோக்குவோம்.

### 1. தனிப்பட்ட விபரம்( Personal Data)

ஒவ்வொருவரும் தமது படம், விருப்பங்கள், தகவல்கள் அடங்கிய விபரத்தினை இணையத்தில் பொதுவான ஒரு இடத்தில் வைத்திருக்க இத்தளங்கள் உதவின. அதாவது ஒருவருடைய விபரக் குறிப்புகள் (Profile)இவ்விடத்தில் காணப்படும்.

### 2. நட்பு அழைப்பு(Friends Request)

ஒருவருடைய விபரங்களைப் பார்வையிட்டபின்பு அவருக்கு வாருங்கள். நட்பினை ஆரம்பிப்போம் என்று அழைத்தலைப் போன்றது. தெருவில் நிற்கும் ஒருவரை அழைத்து வாருங்கள் பழகலாம். என்று அழைப்பது ஒரு சாதாரண செயல் அல்ல. ஆனால் இணையத்தில் இவ்வாறான செயல் ஒரு சாதாரண நிகழ்வு.

### 3. நண்பர் வலையமைப்பு(Friends Network)

ஒருவருக்கு நீங்கள் விடுத்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டால் அவரது நண்பர் வட்டத்தினுள் நீங்களும் உங்கள் நண்பர் வட்டத்தினுள் அவரும் இணைவதற்கான சாத்தியம் கிடைக்கும். இந்த வலையமைப்புகளுக்குள் இணைவதன் மூலம் கதைக்க, பொழுதுபோக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **கோப்புகளைப் பகிர்வது(File Sharing)**

இப்படிக் கூடிய நண்பர்கள் தமக்கிடையே தமது படங்கள் கருத்துக்களை, பாடல்களை, வீடியோக்களை பகிர்ந்து கொள்ளக்கூடிய வசதிகளை இந்தத்தளங்கள் ஏற்படுத்திக் கொடுத்தன. உலகத்தில் எந்த மூலையில் உள்ளவர்களுடனும் ஒரு நொடிப்பொழுதில் இவ்வாறு கோப்புகளைப் பகிர்ந்து கொள்ளத்தக்கதாக இருக்கிறது.

5. **நடப்புகளைப்பகிர்வது(Status Update)**

இது நட்பின் நெருக்கத்தினைத் தெரிவிக்கும் விடயமாக இருக்கின்றது. இங்கு உடனுக்குடன் அறிந்த மற்றும் தெரிந்த செய்திகள் வலையமைப்புக்குள் பகிரப்படும்.

இன்று பல சர்வதேச கம்பனிகளின் சக்திக்குள் இச் சமூக வலைத்தளங்கள் அடங்கியுள்ளன. ஏனெனில் இவை தமது உற்பத்திகளை இச் சமூக வலைத்தளங்களுக்குள் பிரவேசிக்கும் மக்கள்மீது விளம்பரம் செய்கின்றன. Web.2.0 தொழிநுட்பத்தின் அறிமுகத்துடன் 1991களின் பிற்பகுதியில் இச்சமூக வலைத்தளங்கள் முதன் முதலில் உருவாகின. sixdegrees.comஎன்பது தான் முதன் முதலில் உருவான சமூக வலைத்தளமாகும். அமெரிக்காவின் ஹவாட் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் 2004 பெப்ரவரியில் முதலாவது சமூகவலைத்தளத்தினை உருவாக்கினான். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தொழிநுட்ப வளர்ச்சிகளைத் தொடர்ந்து Facebook, orkut போன்ற வலைத் தளங்கள் தோற்றம் பெற்றன. இச் சமூக வலைத் தளங்களின் தோற்றத்துடன் சமூக வலைத்தளங்களின் கருதுகோளே மொத்தமாக மாற்றமடைந்தது.

## சமூக வலைத்தளங்களும் கல்வியும்

ஒருவரின் உளநிலையைப்பொறுத்தே அவரின் தகவல்களைக் கிரகிக்கும் ஆற்றலும், படிமுறைப்படுத்தும் ஆற்றலும் இருக்கும் என்பது கல்வி உளவியல் மூலம் நிரூபிக்கப்பட்ட ஒரு விடயமாகும். இது போன்ற தத்துவக் கருத்துகள் கிரேக்க தத்துவஞானியான அரிஸ்ரோட்டிலின் அறிவு என்ற நூலிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உண்மையில் இச் சமூக வலைத்தளங்களையும் அறிவுக்கான தேவை, விஞ்ஞான ரீதியான கற்றல் போன்றவற்றுக்கேற்ற முறையில் நாம் பயன்படுத்தமுனைவோமாயின் உண்மையில் கல்வித்துறையில் நிச்சயம் ஒரு புரட்சியினை ஏற்படுத்தமுடியும். கட்டிளம்பருவ மாணவர்களின் வாழ்வில் கல்வியைத் தவிர வேறெந்த விடயமும் முக்கியமான பங்குவகிக்கமுடியாது. ஆனால், இன்றைய கட்டிளம்பருவத்தினர் துரதிஷ்டவசமாக இச் சமூகவலைத்தளங்கள்மீது அதீத அக்கறைகொண்டிருப்பதானது அவர்களின் கல்வியிலும் கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்திவருவதனையும் ஏற்றக்கொள்ளத்தான் வேண்டும்.

இன்றைய யுகத்தில் கல்விக்கான வாய்ப்புகள் என்றுமில்லாதவகையில் காணப்படுகின்றன. இவற்றில் இன்றைய மாணவர்கள் தங்களது நேரத்தினைக் கூடுதலாக செலவுசெய்து வருகின்றனர். இதனால் பல மனஉளைச்சல்கள், உளரீதியான பாதிப்புகள் என்பனவற்றை இன்றைய இளம் சந்ததியினர்க்கு இத் தளங்கள் ஏற்படுத்துகின்றன. ஆகவே, சமூக வலைத்தளங்கள் மீதான இன்றைய ஈடுபாடு அவர்களது பாடசாலைக் கல்வியைச் சீர்குலைக்கக்கூடிய பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் இணையத்தினைப் பயன்படுத்தும்போது அவர்கள் தமது துறைசார்ந்த விடயங்களில்தான் ஈடுபடுவர் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. பொழுதுபோக்கு சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தார்களாயின் கல்விச் செயற்பாடுகள் மீதான கவனம் வெகுவாகக் குறைந்து சமூக வலைத்தளங்களிலேயே தமது நேரத்தினைச் செலவு செய்ய ஆரம்பித்து விடுவர்.

துரித தொடர்பாடல் தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக தனிநபர் கணினிகள், மடிக்கணினிகள்,iPads. Smartphone என்பன இன்று இலகுவாக எங்கும் எப்போதும் இணையத்தினை அணுகுவதற்கான வசதிகளை வழங்குகின்றன. தொழிநுட்ப வளர்ச்சி என்பது வாழ்க்கைத்தரவிருத்திக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் உண்மையில் அவசியமான ஒரு முன் நிபந்தனைதான். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் இலகுவாக அணுகக்கூடிய இத்தொழிநுட்பமுறையில்தான் இன்று சமூகக் குற்றங்களும் அதிகரித்துள்ளன. ஆதலால்தான் சமூக ஆர்வலர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் மத்தியில் சமூக வலைத்தளங்கள்பற்றிய எதிர்மறையான விமர்சனங்களும் இன்று அதிகரித்து வருகின்றன.

சமூக வலைத்தளங்கள் போதைப்பொருட்களுக்கு நிகரானவை. இளைஞர்களின் வாழ்க்கையைச் சீரழிக்கின்றன. கல்விச் செயற்பாடுகளைச் சீரழிக்கின்றன, நேர விரயம், இளைய சமூகத்தினரை தவறான வழியில் இட்டுச் செல்கின்றன என்பன இவர்களின் குற்றச் சாட்டுகளில் சில. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இக் குற்றச் சாட்டுகள் உண்மைபோன்று தோன்றலாம். ஏனெனில் சமூக வலைத்தளங்களில் அவ்வப்போது நடைபெறும் துஷ்பிரயோகங்கள் இக் கருத்துகளுக்கு வலுச்சேர்க்கின்றன. ஆனால் மேலெழுந்த வாரியான இக் கருத்துகளுக்குப் பின்னால் உள்ள உண்மையான விடயங்களை எடுத்துக் கூற பலரும் முன்வரவில்லையென்றே குறிப்பிடல் வேண்டும்.

இளைய சமூகத்தினரின் பொழுதுபோக்கு சார்ந்த விடயங்களில் புதியவரவுகள் இடம்பெறும்போது கூடவே,அதுசார்ந்த எதிர்மறை விமர்சனங்கள் வருவது ஒன்றும் புதுமையான விடயங்கள் அல்ல. எந்தவொரு தாக்கத்திற்கும் சமமான எதிர்மறையான தாக்கம் உண்டென்பது நியூட்டனின் விதி. அதேபோன்று உலகத்தில் என்ன விடயத்தினை எடுத்துக்கொண்டாலும் அதில் இருக்கும் நன்மையான விளைவுகளுக்கு நிகராக தீமையான விளைவுகளும் இருந்தே தீரும். நாம் சுவாசிக்கும் காற்றில் கூட ஒட்சிசனும் உண்டு தீங்குவிளைவிக்கும் வாயுக்களும் உள்ளன. அதற்காக நாம் சுவாசிக்க முடியாமல் இருக்க முடியுமா? எனவே தான் தீமைகள் உள்ளன என்று ஏதாவது ஒன்றினை ஒதுக்கி வைக்கின்றோமா? எனவேதான் நல்லதைப் பிரத்து எடுத்து அதன்மூலம நன்மை பெறவேண்டும். அதேபோன்றுதான் சமூக வலைத்தளங்களின் பயன்பாடும். மின்சாரம் தாக்கினால் உயிர்போய்விடும் என்ற எண்ணி அதனைப் பயன்படுத்தாது இருந்திருப்போமானால் 1800களிலேயே மனித குலத்தின் வளர்ச்சி ஸ்தம்பித்து இருந்திருக்கும். மின்சாரம் எப்படி எம்மைத் தாக்காமல் கையாளுவதில் வெற்றி கொண்டோமோ? அதன் விளைவால் தான் நாம் இன்று இவ்வளவு வளாச்சியையும் கண்டுள்ளோம். 100% சமூக வலைத்தளங்களைச் சரியாகப் பயன்படுத்தினால் அவற்றைப்போல் சிறப்பான ஒரு சமூகத் தொடர்பாடல் சாதனங்கள் வேறெதும் இருக்க முடியாது. ஆனால் பலரின் தவறான உபயோகங்கள் காரணமாக சமூக வலைத்தளங்களில் இருந்து பெறக்கூடிய ஒரு சிறு பங்கைக்கூட அனுபவிக்க முடியாமல் உள்ளது என்பது ஒரு வேதனைக்குரிய விடயமே.

## சமூக வலைத்தளங்கள் மீது கவனம் தேவை

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் ஒருவரா நீங்கள்? அப்படியாயின் முதலில் நீங்கள் தீர்மானிக்க வேண்டிய விடயம் சமூக வலைத்தளங்களை என்ன நோக்கத்திற்காகப் பயன்படுத்தப் போகின்றீர்கள் என்பதே. சாதாரணமாக பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தப் போகின்றீர்களா? அல்லது உங்கள் துறைசார்ந்த தேடலுக்காகப் பயன்படுத்தப் போகின்றீர்களா? போன்ற விடயங்களை கவனத்திற்கொண்டு உங்களின் உண்மையான மற்றும் துறைசார்ந்தவர்களை மட்டும் நண்பர்கள் வட்டத்தில் இணைத்துக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யான முகவரியைக்கொடுத்து போலியாக உருவாக்கப்படும் கணக்குகள் உள்ள ஒருவர் தனது அடையாளங்களை மறைத்து இரகசியமாகச் செயற்பட எத்தனிக்கின்றார் என்றால் அவரது நோக்கம் தவறானது என்பது அர்த்தம்.

மைக்கிறோசொவ்ற் நிறுவனம் நடாத்திய ஆய்வொன்றில் Face Book இனைப் பயன்படுத்துவோர்மீது கூடுதல் ஏமாற்று வேலைகள் இடம்பெறுவதாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்படும் இந்த ஆய்வில் இணையப் பாதுகாப்புத் தொடர்பாக 60 கோடி கணினிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. 2012ம் வருடம் முன்னைய வருடத்தினைக் காட்டிலும் 12 மடங்கு குற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக மைக்றோ சொவ்ற் சுட்டிக்காட்டியுள்ளது.

கல்வி கற்கும் மாணவர்களக்கு அவர்களுடைய வயது,நன்மை தீமைகளை எடைபோட்டு அறிவதற்கு இடம்கொடுக்காது. ஆகவே, மாணவர்கள் விடயத்தில் பெற்றோர் அதிக கவனம் வெலுத்த வேண்டும். சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும்போது நேரக் கட்டுப்பாட்டை பேணுங்கள். அவர்கள் எவ்வாறான செயற்பாடுகளில் சமூக வலைத்தளங்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதனை நன்கு அவதானியுங்கள்.யார்? யாரோடு தொடர்பு வைத்துள்ளார்கள் என்பதனைக் கண்காணியுங்கள்.

அடுத்து சமூக வலைத்தளங்களில் புகைப்படங்களை இணைக்கும்போது கவனமாக இருத்தல் வேண்டும். முக்கியமாகப் பெண்கள் இது விடயத்தில் கூடுதல் கவனம் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்தப் புகைப்படங்களை எடுத்து ஆபாச இணையத்தளங்களில் உலாவ விடும் கும்பல்கள் இன்று இணையத்தில் தமது கைவரிசையினை காட்டுகின்றன.

## முடிவுரை

உணவு, உடை உறைவிடம் இவை மூன்றையும்போல தொடர்பியல் என்பதும் நம் வாழ்வில் தவிர்க்கமுடியாத ஓர் அடிப்படைத் தேவையாக மாறிவிட்டது. “A best way to punish a man is excommunication” என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. ஓர் மனிதனை தண்டிக்கச் சிறந்த வழி அவனுடன் பேசாமல் இருப்பதே இன்பது இதன் அர்த்தம். பேசமறுத்துப் பிறரை ஒதுக்கும் வழக்கம் இன்றும் நமது நமது சமூகத்தில் நிலவுவதைக் காண்கின்றோம். “ஊரைவிட்டு ஒதுக்கி வையுங்கள்”,“ஊருடன் பகைக்கின் வேருடன்கெடும்” என்ற வழக்கங்கள் இன்று கிராமங்களில் வழக்கத்தில் உள்ளமையானது, தகவல் தொடர்பு எவ்வளவு வலிமையானது என்பதனையே எடுத்துக் காட்டுகின்றது. இந்த வகையில் சமூக வலைத்தளங்கள் இன்றைய வாழ்வில் முக்கிய ஒரு தேவையாக தோற்றம்பெற்றுள்ளன. ஏனெனில் சமூக வலைத்தளங்கள் இன்று பொழுதுபோக்கு என்ற நிலையினைத் தாண்டி தகவல் பரிமாற்றம், கருத்துப் பரிமாற்றம் என்பவற்றிற்கு வழிவகுத்து உலகைச் சுருக்கி வைத்திருப்பதுடன் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், சமூகப் பணிக்கும் எனப் பல்வேறு பரிமாணங்களுடன் மாறி இருக்கின்றது. மறுபுறம் இவை இன்றைய சிறுவர்களினதும், மாணவர்களினதும் எதிர்காலத்தையும், கல்வியையும் மிகவும் மோசமாகப் பாதிக்கும் சூழலையும் ஏற்படுத்திவருகின்றன. சில நாடுகளில் சிலவகை சமூக வலைத்தளங்கள் இன்று சட்டரீதியாக தடைசெய்யப்பட்டிருப்பினும் மேலும் பல நாடுகளில் இவற்றினை தடைசெய்வதற்கான அமைப்புகள் அல்லது சட்டங்கள் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தலில்

**Mrs.C.Sounderarajah**
**T/Methodist Girls' College**

விண்ணும் மண்ணும்
பாலம் கண்ட
விஞ்ஞான யுகமதில்
பின்னும் ஒரு
பேதமை உண்டோ?
வேண்டாம்
காட்டு – உன்
கற்பித்தலில் ...

அறிவுத்திறவுகோலாய்
ஆனவனே
ஆசானே!
உன்
அறிவுக் கையளிப்பில் தான்
இந்த
அகிலமே
அணையாத ஜோதியாக
பரிணமிக்கின்றது
காட்டு – உன்
கடமைதனை
கற்பித்தலில்

அன்னை மடிதுறந்த
அன்புக்குழந்தையின்
அன்னையும்
தந்தையும்
அடுத்தது
நீதான்
அன்புக்கல்வியை
காட்டு – உன்
கற்பித்தலில்

ஆசான்
அறிவுரை
அத்தனையும்
தேசத்து வேதமெனும்
தெய்வக் குழந்தைகளின்
நம்பிக்கை நட்சத்திரம்
நீதான் என்றால்
காட்டு – உன்
கரைகடந்த வாண்மையை
கற்பித்தலில் ....

மொழி ஒரு
பரிமாற்று ஊடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாட்டு ஊடகம
பண்பாட்டு ஊடகம்
தவிரவும்
அழித்திடும்
ஆயுதம் அல்ல என்ற
அஹிம்சைக் கல்வியை
காட்டு – உன்
கற்பித்தலில்

அறிவதற்கு கல்
ஆற்றுவதற்கு கல்
வாழக்கல்
சேர்ந்து வாழக்கல்
என்றுமே
புரிந்து கற்க
புதியதொரு அறிவுடன்
புறப்பட்டு – நீ
காட்டு – உன்
கருந்தனத்தை
கற்பித்தலில் .....

ஒரு ஆசிரியன்
ஒரு மாணவன்
ஒரு புத்தகம்
ஒரு பேனாவால்
இந்த
உலகையே
மாற்றி அமைக்கலாம்
என்ற
உன்னத கொள்கை
உலகமெலாம் பரவவே
காட்டு – உன்
கைங்கரியத்தை
கற்பித்தலில் .....

பள்ளி என்னும் அழகுமையம்
பாலர்களின் அறிவுமையம்
என்றும் கூடிக் குதூகலிக்கும்
குழந்தைகளில்
உளக்களிப்பில்
கோடிப் புத்தாக்கங்கள்
தேடித்தானாகும்
என்ற புதுவேதம்
படைத்திடவே
காட்டு உன் கற்பித்தலில்...

தேர்வுப் புள்ளிகளுக்காய்
தேடிப்படிப்பவர்கள்
சோர்வுதான் கொண்டு
சுகமிழந்து வாடிடுவர்
மார்புதனில் ஏற்றி
நீ
மறைக்கல்வி தானூட்ட
பேர் புகழ்தான் கொண்டு
பெருந்தகையாய்
வாழ்ந்திடவே
காட்டு – உன்
கருணைக் கல்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தலில் .....

பெற்றோருக்கும் பெரியோருக்கும்
மற்றோருக்கும் மதிப்பளித்து
கற்றாரைக் காமுற்று
நற்றாள் தொழுதேற்றும்
ஒழுக்கக்கல்வியை
காட்டு – உன்
கற்பித்தலில் ....

நாட்டுக்குகந்த
நன்னலத்திட்டங்கள்
ஏட்டுக்குள்ளேயே
எடுத்து எடுத்துக்காட்டி
வாட்டும் வறுமை
ஓட்டும் சிறந்த
தார்மீகக் கல்வியை
காட்டு – உன்
கற்பித்தலில் .....


ஆதாம் ஏவல் எனும்
ஆணினம் பெண்ணினமன்றி
அப்புறம் என்ன?
சாதியும் - சாஹியம்
சமத்துவம் அனைவரும்
சகோதரத்துவம்
எனும்
சமத்துவக் கல்வியை
காட்டு – உன்
கற்பித்தலில் .....

மரணம் என்றொரு
மறுபக்கம் உண்டு
மறைந்து போகமுன்
சிறந்தன செய்யவே
விரைந்து கற்றிட
காட்டு – உன்
அரப்பணிப்பை
கற்பித்தலில் .....

தர்மம் வெல்லும்
அதர்மம் தோற்கும்
சத்தியம் என்பதே
நித்திய வாழ்வென்று
உத்தமனாய் வாழ
புத்தியை தீட்டிடும்
புனிதக் கல்வியை
காட்டு – உன்
கற்பித்தலில் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகமாற்றத்தின் முகவர் ஆசிரியர்

முகவுரை - ஆசிரியரின் பணியால் ஒரு நல்ல சமுதாயம் உருவாகும் விதம்

உடல் - ஆசிரியரின் அர்ப்பணிப்புக்கள் சேவைகள் ஆசிரியர் போற்றப்படும் விதம் சமுதாயத்திற்கு ஆற்றும் பணிகள் சமூகத்தை மாற்றும் விதம்

முடிவுரை - ஆசிரியர்கையில் தான் சமூகம் உள்ளது ஆசிரியரால் தான் சமூகத்தை மாற்றமுடியும்

## சமூக மாற்றத்தின் முகவர் ஆசிரியர்

ஆசுஇரியன் ஆசிரியனாம் அதாவது குற்றம் இல்லாதவனும் சமுதாயத்திலுள்ள குற்றங்களை களைந்து எறிபவனும் ஆசிரியனாவான் ஆசிரியன் பிறக்கப்படுபவன் அல்ல படைக்கப்படுபவன் அதனால் தான் "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" எனக் கூறப்படுகின்றான் "தாரமும் குருவும் தலை விதிப்படியே" என்பார்கள் ஏனெனில் குருவான ஆசிரியனால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் ஆனால் ஆசிரியனால் ஒரு சமுதாயம் அழிந்ததாக வரலாறு இல்லை சமுதாயத்திற்கு வழிகாட்டும் ஒரு "கலங்கரை விளக்கு" ஆசிரியனாவான் இத்தகைய ஆசிரியர்க்ளால் தான் ஒரு சமுதாயத்தை நல் வழிப்படுத்த முடியும் எனவே சமூகமாற்றத்தின் முகவராக ஆசிரியர் திகழ்கின்றார்

சிறந்த ஆசிரியர்களால் தான் ஒரு சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் அதனால் தான் மனிதருள் மாணிக்கமாக ஆசிரியர் விளங்குகின்றார் ஒருஆசிரியன் சிற்பியானவர் கல்லைச் செதுக்குவது போல சமுதாயத்திலுள்ள குற்றங்களை செதுக்கி ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு துணை புரிகின்றான் மாணவர்களை தோணியைப் போல நின்று கரைசேர வேண்டிய இடத்திற்குக் கொண்டு போய் சேர்ப்பது ஆசிரியன் கடமையாகும் அதனால் தான் மாதா பிதாவை அடுத்து குருவானவர் துதிக்க படுகின்றார்

சமுதாயத்தைப் படிப்படியாக முன்னேற்றி ஏணியைப் போல தாங்கிநிற்பவர் ஆசிரியர் கற்பகத்தரு காரம்பசு என்றெல்லாம் போற்றப்படும் ஆசிரியர்களால் தான் இந்த உலகை மாற்றமுடியும் இன்று பல்வேறுபட்ட தகவல் தொழினுட்ப சாதனங்களால் சமுதாயத்தில் கலாச்சாரம் சீரழிந்து குற்றச்செயல்கள் அதிகரித்துச்செல்கின்ற இக்காலகட்டத்தில் உலகை நல்வழியில் இட்டுச்செல்லக்கூடிய வல்லமை ஆசிரியர் கையிலே உள்ளது பண்டையகாலங்களில் இருந்த குரு-சீட உறவு முறை இதனையே எடுத்துக்காட்டுகின்றது இந்தச் சமுதாயத்தை மாற்றியமைத்தவர்களும் ஆசிரியர்களே "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"என்ற தனிநாயகம் அடிகளாரின் கூற்றிலிருந்து அவர் சமுதாயத்திற்கு ஆற்றிய தமிழ்த்தொண்டை உணர்ந்து கொள்ளலாம்

"வல்ல குருநாதர் வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல பொல்லாப் பிணிகள் நோயகற்றவே"என்ற கூற்றிலிருந்து குருவானவர் தண்டனை வழங்குவது சமுதாயத்திலுள்ள களைகளைப் பிடுங்கி திருத்துவதற்கேயாகும் மெழுகுவர்த்தி போல தம்மை உருக்கி சமுதாயத்திற்கு ஒளி கொடுப்பவர்களாக ஆசிரியர்கள் மதிக்கப்படுகின்றார்கள் சமூக மாற்றத்தின் முன்னோடிகளாக திகழ்ந்தவர்கள் ஆசிரியர்களேயாவார்கள் தேவநேயப்பாவாணர் பாரதிதாசன் விபுலானந்தர் போன்றோரை இங்கு குறிப்பிடலாம் எனவேதான் "ஆசிரியர் கையில் அகிலம் இருக்கிறது"என்று கூறப்படுகிறது

நாளாந்தம் உலகில் பல்வேறுபட்ட மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது அந்த மாற்றங்களுக்கு ஈடு கொடுப்பதற்கு ஆசிரியரால் தான் முடிகிறது ஏனெனில் என்று ஒரு ஆசிரியன் தான் கற்பதை நிறுத்துகின்றானோ அன்று அவன் கற்பிப்பதையும் நிறுத்தவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் சமூக மாற்றங்களைக் கற்றுக்கொண்டிருப்பவன் ஆசிரியன் அந்தந்த சமூகத்திலுள்ள ஆசிரியனுக்கு அச்சமூகத்திலுள்ள ஒவ்வொரு மாணவனைப்பற்றியும் தெரிந்திருக்கும் அந்த சமூகத்தின் எதிர்பார்ப்பு என்ன? எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்ன? சவால்கள்என்ன? சமுதாயத்தின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் எவ்வாறன மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும்? என்பதெல்லாம் ஆசிரியரால் மட்டும் தான் அறிந்து கொள்ள முடியும்

சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவரும் மிகுந்த அக்கறை கொண்டவரும் ஆசிரியரே ஒரு சமூகத்தில் இடம்பெறும் நல்லவை தீயவை இரண்டிலும் பங்கெடுப்பவர் ஆசிரியரே படித்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு தமது அர்ப்பணிப்பு தியாகம் என்பவற்றால் மாணவரின் ஆற்றல்களை வெளிக்கொணர்பவரும் ஆசிரியரே இன்று ஒரு ஆசிரியர் பல்வேறுபட்ட நடிபங்குகளைக் கொண்டிருக்கின்றார் யுத்தம், இயற்கை அனர்த்தம், வறுமை, நோய்கள் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் மாணவர்களைத் தாயாக நண்பனாக தந்தையாக குருவாக எனப் பல்வேறு நடிபங்குகளைக் கொண்டு மாணவர் பிரச்சனைகளை அறிந்து அவர்களுக்கு அன்பு ஆதரவு காட்டுவதுடன் அவர்கள் பிரச்சனைகளை தீர்த்துவைப்பவராகவும் ஆசிரியர் விளங்குகின்றார் சில மாணவர்கள் தாய் தந்தையிடம் சொல்ல முடியாத விடயங்களைக் கூட ஆசிரியரிடம் சொல்கின்றனர் அந்தளவிற்கு ஒரு இறுக்கமான தொடர்பு காணப்படுகின்றது சமுதாயத்தில் ஒதுங்கும் பிள்ளைகளை இனங்கண்டு அவர்களை பல்வேறுபட்ட ஆலோசனை வழிகாட்டல்களை மேற்கொண்டு தற்துணிவு ஒன்றைக் கொடுத்து அவர்கள் பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பவர் ஆசிரியராவார் இம்மாணவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள் என்பதால் சமூக மாற்றத்தின் முகவர் ஆசிரியர் என்பதில் ஐயம் இல்லை

இணை மறை கலைத்திட்டங்கள் மூலம் சமூதாயத்துடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பு கொள்பவர்கள் ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்கத்தை மாணவர் மத்தியில் கட்டியெழுப்பி அதன் மூலம் பண்பான சமுதாயத்தை உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள். முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் பிள்ளைகளை இருவார காலம் பிள்ளையை இனங்காணல் எனும் செயற்பாட்டின் மூலம் அப்பிள்ளை பற்றி முழுமையாக ஆசிரியர்கள் அறிந்து கொள்வார்கள் மகாபாரதம் போன்ற புராணக்கதைகளில் குருவிற்கும் சமுதாயத்திற்கும் இடையிலிருந்த தொடர்பினையும் குருவானவர் சமுதாயத்தால் மிகவும் உன்னதமாகப் போற்றப்படுவதையும் அறிந்து கொள்ளலாம். அவர்கள் குருவை தெய்வமாகவே வழிபட்டு வந்தார்கள் அதற்குக் காரணம் சமுதாய மாற்றத்தின் முன்னோடியாக குருவானவர் விளங்கியமையே ஆகும்

சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்பவர் ஆசிரியர் என்ற வகையில் அரசியலுக்கு வரும் உரிமையும் ஆசிரியருக்கேஉண்டு "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்" என்பது திருவள்ளுவர் வாக்கு. இதற்கிணங்க வாழ்ந்துகாட்டுபவன் ஆசிரியன் மாணவர் சமுதாயத்தை நல்வழிப்படுத்தும்போது அந்தச் சமூகம் உயர்வடையும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை எனவே சமூகமாற்றத்தின் முகவர் ஆசிரியராவார்

ஒரு சமுதாயத்தில் தலைமை வகிப்பவர் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்பவர் ஆதரவற்ற மாணவர்களுக்கு அன்பு காட்டுபவர் ஆசிரியர் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பதற்கிணங்க சிறுவயதிலிருந்தே மாணவர்களை இனங்கண்டு அவர்களை நல்வழிப்படுத்தி நாட்டிற்கு ஒரு சிறந்த பிரஜையை உருவாக்கிக் கொடுப்பதே ஆசிரியர்களின் நோக்கமாக இருக்கின்றது "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது பழமொழி இளம் வயதில் விதைக்கும் விதைதான் நல்ல மரத்தை உருவாக்கும் எனவே சிறுபராயத்திலிருந்தே நல்ல மாணவர் சமுதாயத்தை கட்டியெழுப்பும் போது அச்சமுதாயம் சிறந்த ஒரு சமுதாயமாக மாறும் என்பதே யதார்த்தம் எனவே சமுதாயமாற்றம் ஆசிரியர் கையிலேயே உள்ளது "தன்னைத்தான் திருத்தினால் உலகம் தானே திருந்தும்" என்பதற்கிணங்க ஆசிரியர் ஒரு முன்மாதிரியாக இருக்கும் போது மாணவரும் அவரையே பின்பற்றுவர். ஆசிரியர் கையிலேயே இந்தச் சமூகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது அதை நல்வழியில் இட்டுச்செல்வது ஆசிரியரின் கடமையாகும் எனவே சமூகமாற்றத்தின் முகவர் ஆசிரியர் என்பது இங்கு தெளிவாகின்றது

"வாழ்க ஆசிரியம்"

**Mrs.T.Vishnukumar**
**T/Konalingham M.V**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவன் மட்டும் வகுப்பில் இல்லை

அன்று பாடசாலையே விழாக்கோலம் பூண்டு பாரிய பதாதைகளை நிறுத்தி கொண்டாட்டத்தை மேற்கொள்ளத் தயாரானது. வகுப்பறைகள் எங்கும் பல்வேறு வர்ண மயமான சோடினை அலங்காரங்கள், கலையரங்கம் பல்வேறு மின் விளக்குகளால் பிரகாசிக்க, மாணவர்கள் தோரணங்கள், மாலைகளைத் தயார் செய்ய, ஆசிரியர்கள் குழாம், பரிமாறத் தேவையான பலவித உணவுகளையும் சிற்றுண்டிகளையும் ஒழுங்குபடுத்துகின்றனர். பாடசாலையின் முதல்வரோ காரில் சக்கரம் பூட்டியவராய் பறந்து திரிகின்றார்.

ஆம் அன்று பாடசாலை 1AB தரத்திற்கு தரம் உயர்த்தப்படுகின்ற நாள். பிரதம விருந்தினர், சிறப்பு, கௌரவ மற்றும் விருந்தினர்கள் அனைவரும் வருகை தந்து ஆயத்தமான நிலையில் இணைபிரியா நண்பர்களில் ஒருவன் கவிப்பிரியன் தன் உயிர்த்தோழன் கவியரசனைத் தேடி அலைந்து களைப்படைந்து தனிமரமாய் தன்னந்தனியே தரம் 9 வகுப்பறையில் தஞ்சமடைகின்றான்.

தாங்கமுடியா வேதனை தன் மனதை வாட்ட தயவாக சில வார்த்தை சொல்ல யாருமற்று நடுக்காட்டினில் தன்னந்தனியே விடப்பட்ட பச்சிளம் பசுக்கன்று போல் ஒதுங்கியவள் தன்னை மறந்து தம் சிறு பராயப் பள்ளி வாழ்க்கையினை மனதினிலே மீட்டுப் பார்க்கின்றான்.

கவிப்பிரியன் ஓர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். படிப்பில் மத்திமம் எனினும் அனைவரையும் ஆதரிக்கும் பண்பு கொண்டவன். இவன் தன் நண்பனை எங்கும் எதிலும் பிரிந்ததில்லை. இவர்களின் நட்பு உலகிற்கு ஓர் எடுத்துக் காட்டு. ஆனால் கவியரசன் கடவுளால் வடிவமைக்கப்பட்ட ஓர் பொக்கிஷம். அப்பாடசாலையில் அவன் கல்வி கற்பது பாடசாலை பெற்ற பாக்கியம். கவியரசனின் தந்தை ஓர் ஏழை விவசாயி மிகவும் ஏழ்மை நிலையையுடைய குடும்பம் அவனது குடும்பம் எதிர்காலத்தில் சமூகத்தில் ஓர் எடுத்துக்காட்டான குடும்பமாக திகழப் போகின்றது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

பிரியன், அரசன் இருவரும் பாடசாலையிலும் சரி பாடசாலைக்கு வெளியிலும் சரி எதைச் செய்ய எண்ணுகின்றார்களோ அது நூறுவீதம் வெற்றிகரமாகவே அமையும். அவ்வாறு இருவரின் வெற்றிகரமான செயற்பாடுகளால் உருவானதே இன்றைய பாடசாலையின் இம்மாபெரும் திருவிழா.

தரம் ஒன்று சேர்க்கப்பட்டது தொடக்கம் ஒவ்வொரு பாடசாலை நிகழ்விலும் கவியரசன் பாடசாலைக்கு வெளியில் இடம்பெற்ற நிகழ்வுகளில் வெற்றியையும் பெருமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடித்தந்தான். அது நாடகமோ, விளையாட்டோ, ஆங்கில, தமிழ் மொழித் தினங்களோ கவியரசன் இல்லாமல் அவை இல்லை.

அதிலும் பொதுச் சேவையில் ஈடுபடுவதில் கவிக்கு நிகர் கவிதான். இவ்வாறு ஒரு தடவை கவியரசன் தரம் ஐந்து கல்வி பயிலும் போது அது ஒரு மழை கால மாலை நேரம் மேலதிக வகுப்புக்கள் நிறைவடைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேலை வீதியில் பாரிய மதுர மரம் புயல்காற்று காரணமாக குறுக்காகக் காணப்பட்டது. ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் எவருமே எதுவித முயற்சியும் மேற்கொள்ளாத நிலையில் வீதியில் இரு புறமும் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் வரிசைக் கிரமமாய் நிற்கின்றன. மழை நீரில் புத்தகப் பையுடன் விளையாடி விளையாடி வந்த கவியரசன் வீதியின் குறுக்கே விழுந்து கிடக்கின்ற அந்த பட்டுப் போன பாரிய மரத்தைப் பார்த்து ஒரு நிமிடம் யோசிக்கின்றான். வாகனங்களில் வந்த எவரும் அதனை அகற்ற முயற்சிக்கவில்லை. தமது வாகனங்களில் இருந்தபடி கையடக்கத் தொலைபேசியில் பேசுவதும், தம்முடன் பயணித்தவர்களுடன் அரட்டையடிப்பதிலும், பெரும்பாலானவர்கள் அந்நேரத்தை வீணாக்காது சுகமாக மழைக்குளிருக்கு வாகனத்தில் இருந்தபடி உறங்கிக் கொண்டிருந்தனர்.

இவ்வளவு ஏன் வீதியோரங்களில் வசித்து வந்த குடியிருப்பாளர்கள் கூட எதற்கு எத்தனிக்கவில்லை.

ஒரு நிமிடம் யோசித்த கவியரசன் சற்றும் தாமதியாமல் கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாது தனது புத்தகப்பையினைக் கூட இறக்கி வைக்காது, தன்னால் இயலும் என எண்ணியவனாய் அப்பாரிய மரத்தினை நகர்த்துவதற்கு எத்தனிக்கின்றான். அந்நிகழ்வு பார்ப்பதற்கு ஒரு சிறிய எறும்பு சக்கரைக் கட்டியினை இழுத்துச் செல்ல முயற்சிப்பது போன்று காணப்பட்டது.

இதனைக் கண்ட முதியவர் ஒருவர் விரைந்து வந்து தம்பி உனக்கு ஏன் இந்த இயலாத வேலை அதை விட்டு விட்டு வீட்டிற்குச் செல் பார்ப்போம்' என்று கடிந்து கொண்டார். உடனே கவியரசன் 'தாத்தா எதனையும் முயற்சித்துப் பார்க்காமல் முடிவு செய்யக்கூடாது, இயலுமானால் நீங்களும் என்னுடன் வந்து முயற்சி செய்யுங்கள்' என்றான். சிறுவனின் மனநிலையினைக் கண்டு வியந்த பெரியவர் தன்னுள் வெட்கிக் கொண்டவராய் தானும் அம்முயற்சியில் இறங்கினார். இதைக் கண்ணுற்ற ஏனைய மக்களும் உடனடியாக விரைந்து செயல்பட்டு அம்மரத்தை வெற்றிகரமாக அகற்றினர். கவியரசனும் தன்வழியே வீடு திரும்பி நடந்தவைகளை தனது பெற்றோருக்கு விளக்கினான். பூரிப்படைந்த பெற்றோர் கவியரசனை மிகவும் பாராட்டியதுடன் பெருமிதம் கொண்டனர்.

இவ்வாறு கவியரசனின் பெருமைகள் நாள்தோறும் பெருகிக் கொண்டே சென்றன. மறுநாள் பத்திரிகைகளில் கவியரசன் முதல் பக்கத்தில் ஜனாதிபதி பாராட்டினைப் பெற்றிருந்தான். காரணம் அன்றைய தினம் நோயாளிகள் காவு வண்டியில் எடுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பட்ட மூன்று குழந்தைகள் கவியரசனின வீரதீரச் செயலால் உரிய நேரத்திற்கு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு காப்பாற்றப்பட்டனர்.

நான் முதல் மகன் ஜனாதிபதி கவியரசனை நேரில் அழைத்து கௌரவித்திருந்தார். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பல்வேறு பலர்மெச்சும் பொதுத் தொண்டுகளை மேற்கொண்டு வந்த கவியரசனைப் பின்பற்றி பாடசாலையின் அனைத்து மாணவர்கள் பொதுநலம் கொண்டவர்களாக மாறினர். இவ்வாறான மாணவனைக் கௌரவிக்கும் பட்டமொன்றினை வழங்கி, அவன் கல்வியிலும் பாடசாலையைத் தரம் உயர்த்தும் நிகழ்வே அன்று அங்கு இடம்பெறவிருந்தது.

திடீர் என யாரோ கவிப்பிரியனை தட்டியெழுப்புவது போன்று உணர்ந்து திடுக்கிட்டு எழுந்து பார்த்தான். அவனைச் சுற்றிலும் சக மாணவர்களும், பாடசாலை முதல்வரும், ஆசிரியர்களும் சூழ்ந்து நின்றனர். செய்வதறியாது திகைத்த பிரியன் அழத் தொடங்கினான். உடனே அவனைத் தேற்றிய ஆசிரியர் அவனிடம் 'இன்று காலை முதல் கவியரசனைக் காணவில்லை எங்கே சென்றான்? உனக்குத் தெரியுமா' என்று வினவினார்.

உடனே அழுகை தாரை தாரையாக வழிந்தோடியது. கவிப்பிரியனால் எதுவும் பதில் கூற முடியவில்லை. விம்மி, விம்மி அழுதவனாய் இறுதியில் திக்கும் குரலில் கூறினான். ஆம் ஐயா, எனக்குத் தெரியும் என்று கூறி மீண்டும் ஓவென அழத் தொடங்கினான். அவனது அழுகையை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. உடனே பாடசாலை முதல்வர் அங்கு நின்ற அனைவரையும் விரைவாக அவ்விடத்தை விட்டு அகற்றிவிட்டு கவிப்பிரியனை தனிமையில் அழைத்து மிகவும் ஆதரவாக வினவினார். சற்று அழுகையை தணித்தவன் கூறினான் இவ்வாறு

நேற்று மாலையில் எமது பாடசாலையில் இடம்பெற்ற விழிப்புணர்வுக் கூட்டத்தில் குடும்பத்தில் ஒருவர் எமது பங்களிப்பை சமூகத்திற்கு, சமூக முன்னேற்றத்தின், சமூகத்தின் விடிவிற்கு வழங்கவேண்டும், இது கட்டாயம் எனக் கேட்டிருந்தனர். எமது வீட்டில் சற்று வசதி என்பதால் முடிந்தவரை எனது அப்பா பெறுமதியினை வழங்க ஒப்புக் கொண்டார்.

ஆனால் கவியரசனின் வீட்டில் வசதியில்லை. எனவே கவியரசன் வீட்டிற்கு அறிவிக்காமல் தனது 3 சகோதரிகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தனது பெயரை வழங்கியிருந்தான். அதனால் அவர்கள் அவனை அழைத்துச் சென்றிருப்பார்கள் என்று கூறி மீளவும் அழுகையை ஆரம்பித்தான்.


இவ்வாறு தனது தலைமையுரையை நிகழ்த்திய கல்லூரியின் முதல்வர் இன்று கவியரசனின் செயல்களால் கல்லூரியாக உயர்ந்து நிற்கும் எமது பாடசாலை அன்று கவியரசனைக் கௌரவிக்கமுடியாவிட்டாலும் இன்று அவன் எம்மத்தியில், எமது வகுப்பறையில் இல்லாவிட்டாலும் அவனது பெயரை இவ் விழா மண்டபத்திற்குச் சூட்டி பெருமைப்படுகின்றது என்று தமது தலைமையுரையை நிறைவு செய்ய தொடர்ந்து நிகழ்வு கவியரசனை ஒவ்வொரு உரையிலும் புகழ்ந்த வண்ணம் தொடர்ந்து சென்றது ..........

Mr.S.Vimalathason

Nilaveli T.M.V



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்துமாவின் அழுகை

அந்த வானம் கன்னங் கரேரென்ற நெற்றிப் பொட்டை ஒட்டிக் கொண்டு பூமிமகள் மீது தன் அர்ச்சனைப் பூக்களாக மழையைத் தூவிக் கொண்டிருந்தது. மழை காலமென்டால் சொல்லவோ வேணும் எங்கு பார்த்தாலும் சேறும் சகதியுமாய்... ஐயோ! இந்த மழை எப்போதான் விடப் போவுது என்ர காய்ச்சலும் கால்வலியும் என்னவிட்டு போகும் காலம் இன்னம் வரவில்லையோ! ஆஸ்பத்திரி முன்பு போல இல்லதான் நல்ல சுத்தம்.. நல்ல கவனிப்பு... அன்பு ... ஆதரவு.. காணாததுக்கு TV வேற கண்கள் மலரவைக்கும். எண்டாலும் சுதந்திரமாய்த் திரிய வேணும் போல மனசு கிடந்து தவிக்குது.. ஓ! வயது போனதும் காரணமாய் இருக்கலாம்.. முன்னமெல்லாம் எண்டால் வந்தவுடனேயே ஏதோ சாட்டச் சொல்லிப் போட்டு எழும்பி ஓடிடலாம். இப்போ அது முடியாமல் இருக்குது. வீட்ட போனா இவன் கனகாம்பரமும் பிள்ளையளும் கத்துங்கள்.. சுகமாக முன்னம் ஓடி வந்திட்டார் இங்க என்னத்த செய்யப் போறார்... ? என்னதான்? .. ஊ..ம் என வடிவேல் மாஸ்டர் தன்னுள் ஒரு ஏக்கப் பெருமூச்சை உள்ளிருந்து வெளிவிட்டார்.

'என்ன .. மாஸ்..டர்... கடுமையாக யோசிக்கிறியள்... இப்ப உடம்புக்கு எப்புடி இருக்குது? என என் பக்கத்துக் கட்டில் பரமசிவம் கேட்ட போது தான் அட... நான் கதைக்கத்தான் யோசிச்சுப் போட்டன் என்பது என் சிந்தனையைக் கிள்ளியது.

இப்ப உடம்பு சுகம் தானே! ஓ..ம் இருந்ததுக்கு இப்ப பரவாயில்ல.. அறிவே இல்லாமலல்லோ.. என்னை என்ர மனிசியும்.. பிள்ளையளும் கொணந்தவ.. நான் உசிரோட இருப்பன் எண்டே எண்ணவில்லையாம்.. சொல்லிச் சொல்லி அங்கலாய்க்குதுகள்.. சிரிக்குதுகள்.. அழுகுதுகள்.. என்..ன... வயசு வந்தா... போறது தானே.. சின்னஞ் சிறுசுகளெல்லாம் போகுதுகள்.. நல்லா ஆண்டு அனுபவிச்சாச்சு.. இனி என்ன..

'சே... அப்படிச் சொல்லாதிங்கோ... மாஸ்டர் நீங்கள் எத்தனை நல்ல மனிசன். எத்தனை பிள்ளைகள உருவாக்கி விட்டிருக்கிறயள்... உங்கட ஆசிரியத் தொழிலின் முத்தாகவல்லோ இருந்துட்டீங்கள்.. நீங்கள் இன்னும் கொஞ்சக் காலம் நல்லா இருக்க வேணும்.. என்னப் பாருங்க இந்த ஆஸ்துமாவில் இழுத்து இழுத்து காலத்துக்கு தன்னம்பிக்கையோட வாழுறன் எண்டு.. என பரமசிவம் கூறவும்... ஓ! நான் முத்தாம்.. என்னால என்ர மனசால இத ஏற்கவே முடியலேயே.. 'என்..ன.. அங்கி.. கதையா இருக்குது டொக்டர் ஐயா என்ன சொல்லிப் போட்டுப் போனவர்..? நேர்சின் சத்தம் கேட்டு வாயெடுத்த வடிவேல் மாஸ்டர் அப்படியே ஸ்தம்பித்துப் போனார்.

'இஞ்சை.. மாஸ்டர்... டொக்டர்.. ஏன்டு 'சொல்லிறாவே நேர்ஸ்.. அவர் இளம் பெடியன் தான்.. ஆனா .. ஒரு கால் . இல்ல போல இருக்கு .. பொய்...க் கால் போல... எங்..கயோ .. பார்த்தது போல இருந்தது. நல்ல பிள்ள போல இருக்கு, நீங்க மயக்கத்தில இருந்தீங்களே அண்டைக்கு ஓ.. முந்தநாள் வந்தவர். இண்டைக்கு சிலவேளை வருவார்.. என்று பரமசிவம் குசுகுசுத்தார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இஞ்சரும் தம்பி பரமசிவம்.. கால் இல்லாட்டா என்ன...? அந்தப் பிள்ளையிட்ட தன்னம்பிக்கை இருக்குதல்லே.. நானே எத்தனை பிள்ளையிட்ட சொல்லிக் கொடுத்திருக்கிறன்? 'எத்தனை பாடங்கள் பாடியும் சொல்லியும் கொடுத்துத்தானே இப்படி சிகரமா நிக்கிறியள்... எனக்குத் தெரியாதே..! இவ்வாறு பரமசிவத்தின்.. வஞ்சனையற்ற வெள்ளையுள்ள வாய்த்தைகள் என்னை ஈட்டியாய்த் தைத்தது.. பேசாமல் படும் தம்பி! சத்தம் போட்டால் அந்தப் பிள்ளையன் ஏதும் சொல்லுவினம்.. வடிவேல் மாஸ்டர் பரமசிவத்தின் வாயை சிறிது நேரம் பூட்டிப் போட எண்ணினார்....

ஆனால் அவரது கண்களில் இருந்து அவரை அறியாமலே இரு துளிகள் உதிர்ந்து விழுந்து தெறித்தன. ச்ச.. என்ன தான் என்ர மனசமூடி மறைக்க நினைச்சாலும் என்னால என்னால... இந்த எண்ணத்தைப் போக்க முடியலேயே.. ஐயெ! நான் ஒரு நல்லாசிரியன் என்று பெயரெடுத்தும் என்னால அத ஏற்க முடியலயே.. வடிவேல் மாஸ்டரின் ஆன்மா அழத்தொடங்கியது... அவர் தானே தனக்கு வடிகாலைத் தேடத் தொடங்கினார்.. சுற்றிச் சுழன்று காலம் சக்கரம் பின்னோக்கி நகரத் தொடங்கியது.. அந்த மழை மேகங்கள் போல அவரது கனத்த மனமும் கசியத் தொடங்கியது... அதற்குள் தனக்கென பிடிமானத்தை இல்லை இல்லை... சாதகமான பதிலைத் தேடினார்.

அன்றும்... இவ்வாறான ஒரு மழைக்காலத்தின் பொழுதில் தான் இடமாற்றம் பெற்று முதன் முதலில் புன்னைவனம் எனும் அந்த அழகிய கிராமத்தினுள் நுழைந்தார். அதுவும் அந்தச் சிறிய பாடசாலையின் தலைமை ஆசிரியராக .. மழையும்.. சேறும்.. சகதியும்.. புன்னை வனத்தை.. கூழ்வனமாக்கியிருந்தன. ச்சே.. எங்கட கால வைக்கிறது.. நல்ல வேள இவள் கனகத்தையும் பிள்ளையையும் ரவுனிலேயே விட்டுப் படிக்க வைச்சுப் போட்டு இங்க வந்தது.. இல்லாட்ட அவள்ர வாய் சும்மாவே .. இருக்கும் .. நல்லவள் தான் .. அன்பானவள் தான் .. எண்டாலும் .. பொரியத் தொடங்கினா .. இந்த மழைத் தண்ணீரும் வத்திப் போகும்.. எண்ண ஓட்டங்கள் தன் குடும்பத்த சுற்றியிருக்க .. மழையில் நனைந்தபடி தான் பள்ளிக்கூடத்துக்குள்ள போக வேணும் எனும் சிந்தனை தடை போடும் வேளை...

'சே..ர்... நீ..ங்..கதானா... எங்கட பள்ளிக்கு... வந்..திருக்கிறீங்கள் .. இந்தாங்க சேர்.. குடய பிடிச்சுக் கொண்டு.. வாங்கோ சேர்.. சேர்.. குட சுத்தமாகத் தான்.. இருக்கு .. கைபிடி கழுவியிருக்கு சேறு படியல.. என்று அச்சிறுவன் பேசிக்கொண்டே போனான். உடனே.. ஆசிய யோதியில் புத்தரும் ஏழைச்சிறுவனும் போல இன்று தான் மழையில அல்லலுறும் போது இச்சிறுவன் வந்து எனக்கு உதவுறானே... என எண்ணியவர் சே.. அந்தப் புனித மகானை என்னுடன் ஒப்பிட்டுப் போட்டன்.. என வடிவேல் மாஸ்டர் மீண்டும் விடையைத் திருத்த .. சேர் .. இந்தாங்கோ.. என்று சிறுவன் வடிவேல் மாஸ்டரிடம் அந்தக் குடையைத் திணித்தான்.. இ..ஞ்...ச தம்..ம்பி.. நி...ல் நில்ல..ப்பா.. இஞ்ச.. அவர் கத்தியது காற்றுடன் கலந்தது. அச்சிறுவன் சிறிதும் தாமதியாமல் மழையினுள் ஓடிவிட்டான். ச்சு.. என்ன பிள்ளையடா இவன்.. நல்லா இருக்க வேணும்.. இந்தக்கிராமத்திலயும் இப்பிடி குருவை மதிக்கும் ஏகலைவன்களா? ... வியந்தபடி பாடசாலையை நெருங்க ... வாங்..க சேர்.. இப்பதான் வயலாள வந்தனான்.. நீங்க இந்த பஸ்சுக்கு வருவீங்க எண்டு ஓடிவாறன்.. என .. நனைந்தும் நனையாதவனையும் ரவீந்திரன் (மாஸ்டர்) வந்தார்.

அது.. பரவாயில்லை சேர்.. உங்கட அன்புக்கு நன்றிகள்.. ஆனா... வந்து இறங்கின போது ஒரு சிறுவன் ஓடிவந்து இந்தக் குடையக் கொடுத்துட்டு ஓடிப் போயிட்டான்... பாவம் என மனதினுள் இருந்த வருத்தத்தை வாயிலிருந்து உதிர்த்தார்.. வாங்.. கோ .. சேர்.. இது தான் உங்கட ரூம் எல்லா வசதியும் செய்திருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர்ந்தன.. பாடசாலை மிகவும் நன்றாக இருந்தது.. ஆனால் பாடங்களை நடத்துவதற்கு பிள்ளைகளுக்குப் போதுமான ஆசிரியர் பற்றாக்குறை.. இது இன்டைக்கா இருந்தது? இருந்து வருவது தானே தன்னுள் சமாதானத்தை செய்தவர். அவ் அழகிய கிராமத்தில் பாடசாலை இடைவிலகும் பிள்ளைகளை தன் எண்ணிக்கைக்குள் எடுக்கும் போது அப்பா! வியப்பாய் இருந்தது. பிள்ளைகள் ஒழுங்கில்லை.

அன்று வழமை போல் பாடங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன... வடிவேல் மாஸ்டர்... வகுப்பறைகளைப் பார்வையிட்டு வந்து கொண்டிருந்தார். அன்டைக்கு எனக்கு குடை தந்த சிறுவன் இன்டைக்கும் வரவில்லையே? இவ் எண்ணங்களின் வெளிப்பாடாக சில பிள்ளைகளையும், ரவீந்திரன் மாஸ்டரையும் அழைத்துக் கொண்டு புன்னைவனத்தை சல்லடை போட்டுத் தேடத் தொடங்கினார்.

ஓ! என்ன அதிசயம் பிள்ளைள் சும்மா வீடுகளிலல்லவோ நிக்குதுகள் நொண்டிச் சாட்டுகளும்.. எனப் பேசிக் கொண்டு வந்தவரிடம் 'சேர்.. அங்க பாருங்க .. அருண் .. அருண்' என அருகில் வந்த ஐந்தாந்தர மாணவன் ஐங்கரன் கத்தினான்.

அருண் தன் அம்மாவின் அருகில், தலைகுனிந்து பயந்தபடி நின்றான்... சேர்.... இவன் படுமோசம் பள்ளிக்கூடம் வாறதெண்டா அத்தனை களவு என ரவீந்திரன் மாஸ்டர் குதிக்கத் தொடங்கினார்.

இல்..ல ஐ...யா நா...ன் போகத்தான் சொல்லிறனான்... என்ர பிள்ளைய படிக்கவைச்சுப் பார்க்க எனக்கு சரியான ஆசை. ஆனா அவன்ர அப்பா போனபின் என்ர பிள்ளதான் என்னோட சேர்ந்து கஸ்டப்படுறான்.. அவன படிக்க வைக்க வேணும்.. என தாய்.. தேம்பித் தேம்பி அழுவதை நிமிர்ந்து பார்த்த அச்சிறுவனைக் கண்ட வடிவேல் மாஸ்டர்.. அட .. இஞ்ச... நீயா? எனக்கு அண்டைக்கு .. குடை ... தந்தனி .. என்ர ராசா.. நீ... நல்ல பிள்ள.. நாளைக்கு பள்ளிக்கூடம் வா.... உனக்குரிய எல்லா ... வசதிகளையும் நான் செய்து தாறன்..? வடிவேல் மாஸ்டரின் அடி மனதிலிருந்து வார்த்தைகள் உதிர்ந்தன...

அருண்... அன்றும் வழமைபோல் பாடசாலைக்கு அதிகாலையிலேயே வந்துவிட்டான்... பாவம்... தகப்பன் நல்லாத்தான் பிள்ளையை வைச்சிருந்திருக்கின்றார்... என்ன செய்வது மின்னலடித்து அவரது உயிர் போக வேண்டும் என்று இருக்கிறது. என தன்னுள் ... பரிதாபப்பட்ட வடிவேல் மாஸ்டர் அருணிடம் மிகவும் அன்பாக இருந்தார்.

'சேர் குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் இடம் கொடுக்கக்கூடாது என்டு சொல்லுவாங்க... உவனுக்கு அதிகமாத் தான் செல்லம் கொடுக்கறீங்க.. ச்..ச பரவாயில்ல சேர். அவன் நல்லாப் படிக்கிறான் தானே... தாயும் சுகமில்லாதவ... நாட்கள் நகர்ந்தன.. வழமை போல் வடிவேல் மாஸ்டருடைய ரூமைக் கூட்டுவான்... அலுவலகத்தையும் தான் தான் கூட்டுவான் என ஏனைய பிள்ளைகளுடன் போட்டிக்கு நிற்பான் அருண்...

அன்றும் அப்படித்தான்.. அவசரமாக பாடசாலை கூட்டத்துக்காக பெற்றோரால் சேர்த்துக் கொடுக்கப்பட்ட ரூபா பத்தாயிரத்தை தனது பெட்டியின் மேல் வைத்துவிட்டதை உணர்ந்து தனது ரூமுக்குள் ஓடி வந்தார்... ஐ.... யோ! ... என்...ன .. காசுமடிச்சு வைச்.. இருந்தன... ஒரு மஞ்சள் நிறக் கவரில் தான்.. ஐயோ!... இத இதுலதான்.. வைச்சன் .. தேடிக் கொண்டிருக்கும் போது.. 'சேர்... நேரம் போகுது... மணல் எடுக்கப் போறவங்க பார்த்துக் கொ..ண்..டு...? என ரவீந்திரன் மாஸ்டர் வடிவேல் மாஸ்டரின் உதறலைக் கண்டு வாயடைத்துப் போனார். எ...ன்...ன சேர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ! இதில தான் காச வைச்சுட்டுப் போனனான்.. ஓ! இண்டைக்கு உவன் அருண் வந்து கூட்டானான்..? அங்க அவனக் கேட்பம்... என்ன சேர் வந்தவன் தான்... அவனுக்கு வயிற்றுவலி எண்டு சொல்லிப் போட்டெல்லோ வீட்ட ஓடுறான்..? என ரவீந்திரன் மாஸ்டர் பதிலளித்தார். காசு... காசு .. எங்க தேடியும் காசில்லை.

ஒரு நாள் .. இரண்டு நாள்.. அருணையும் பாடசாலைப் பக்கம் காணவில்லை.... எங்க போனான் இந்த அருண் வடிவேல் மாஸ்டரே வீடு தேடிச் சென்று விட்டார்.. அருண் பாடசாலைக்கு மட்டம் போட்டமையால் வடிவேல் மாஸ்டரின் மனதில் கறுப்பு ஏற்படத்தொடங்கியிருந்தது. இவ..னா.. எத்தனை வசதிகளை வழங்கியிருந்தேன்... சீ.. இந்த அருணா எடுத்தான்.. நம்ப முடியாமலிருக்கு... காணாததற்கு ரவீந்திரன் மாஸ்டரும் தூபம் போட்டார்... சேர் .. நீங்க .. இப்படி இருக்கிறதால தான் இந்தச் சின்னப்பெடி உங்கள ஏமாத்திப் போட்டான்.. அவனுக்கு காசு தேவை எடுத்துப் போட்டான்.. 'சேர் காசு தேவை எண்டா என்னட்ட கேட்டிருக்கலாம் தானே.. ஓ! அவன்ர அம்மாவுக்கு சுகமில்லை வைத்தியம் செய்ய தாய்மாமனிடமிருந்து காசு இன்னும் வரவில்லை என்டு சொன்னவன்தான்.' பாத்தீங்களா... அவன் தான்... அவனே தான்... இந்தா வீடும் வந்திட்டு ...'அருண் . அருண்... வடிவேல் மாஸ்டரின் குரல் ஆவேசமாய் ஒலித்தது..' ஓ இந்தா... அருண் ஓடிவந்தான்... சேர்... நான் ... பள்ளிக்கூடம்.... அருணது வார்த்தைகள் தட்டுத் தடுமாறி அவன் தலைகுனிந்து நின்றான்... அட கள்ளா! எங்கயடா காசு.. வடிவேல் மாஸ்டர்.. கேட்க நினைத்தார். இருந்தும் தன் ஆசிரியத் தொழிலின் சிறப்பை எச்சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்காத அவர்... வா... பள்ளிக்கூடம் போவம் என்று அவனை பாடசாலையினுள் கொண்டுவந்தார்.

அன்று அந்த அலுவலகமே அதிர்ந்தது ஐயோ! சேர்.. நா...ன் எடுக்கல்ல. அவன் கூறி அழுதான் பட்டைய உருச்சுப் போடுவன் பொய் சொன்னா பொலிசுல பிடிச்சுக் குடுத்துப் போடுவன்... சொல்லு.. காசு.. எங்க ... ஐயோ! சேர் நான் ... எடுக்.. கல ... அவரனது வார்த்தைகள் உதிர்ந்த விதத்தைக் கண்ட ஏனைய ஆசிரியர்களும் சேர் இவன் சரிப்படமாட்டான்... இவன் இஞ்ச படிச்சா.. எல்லாப் பிள்ளையளும் கெட்டுப் போயிருங்கள்.. இவன முதல்ல அனுப்புங்கள் ... என ஒரே விதமாக நின்றனர். அவனது கண்களில் ஏராள ஏக்கங்கள். போடா... இனி நீ இங்கு படிக்க வேண்டாம் ஓ... அன்று சிவப்புக் கோடொன்று அவனது ஆரம்பப் படிப்பின் அடியில் இடப்பட்டது.

நாட்கள் நகர்ந்தன.. அருணும் அவனது தாயாரும் அந்த ஊரை விட்டே சென்று விட்டார்களாம். 'அருண்' என்ற பெயரைக் கேட்டால் வடிவேல் மாஸ்டரின் சப்த நாளங்களும் துடிக்கும். கண்களில் தீப்பொறி பறக்கும்.

அன்று பாடசாலை வாரம் வகுப்பறை பாடசாலை எல்லாம் சுத்தம் செய்யப்பட்டது. சேர்.. இந்த சிறுகுரங்குகளின் அட்டகாசம் தாங்க முடியல... அதால நெற்வைச்சு அடிப்பம் சேர்.. என ஆசிரியர் கூறியதன்படி நெற் அடிக்கப்பட்டது. வடிவேல் மாஸ்டரின் அறைக்கும் அடித்தார்கள்.

ஆனால் ஒரு இடம் விடப்பட்டிருந்ததை வடிவேல் மட்டும் கண் டார் .. 'அட இவங்கள் போயிட்டாங்கள். நான் அடிப்பம்... என மேசை மேல் ஏறி நெற்றை எடுத்து அந்த இடுக்கில் வைத்தவர் திடுக்கிட்டுப் போனார்.. இ..இ..து .. எ..ன்..ற பார்..ஸல்... அட.... என...ர கடவுளே.... காசு... ஐயோ! அந்தக் காசு இது எப்படி இங்க .. ஐயோ! நான் என்ன பாவம் செய்து போட்டன்.. அப்ப... இந்...த சிறுகுரங்குகளின் வேலையா..? காசு மடிப்பு கிளிபட்டு இருந்தது. சிலதாள்களில் குரங்குகளின் சேட்டை அப்பட்டமாகத் தெரிந்தது. ஐயோ! தலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்திக் கொண்டு அப்படியே இருந்துவிட்டார் வடிவேல் மாஸ்டர். இதனை யாரிடமும் கூற அவருக்கு தைரியம் இருக்கவில்லை.

அருண்... அருண்... அவரது இதயம் கூவி அழைத்தது. அருண்... நான்... ஏன் அப்படி நடந்தேன். கல்வி உளவியலையும், உளவியலாளரையும் படித்த நான் ஏன் சரியான முடிவினை எடுக்கவில்லை. பிழையாக ஒரு பிள்ளையின் வாழ்வைப் பாழடையச் செய்து விட்டேனே.. அருண்.. எங்..கயடா.... உன்ன... நான் யாரி...டம் சொல்லுவன்... ஐயோ! ஒரு சிறு பிள்ளையின் உள்ளத்தைக் கூரிய கடப்பாறையால் தாக்கி நொறுக்கி விட்டேனே... நான் கொஞ்சம் தேடி இருக்கலாம்... இந்த சிறுவன் குரங்குகளின் சேட்டையால அருணது வாழ்க்கையை இருட்டி விட்டேனே... ஐயோ! அவனை ஒரு கள்வனாக அல்லவா சமுதாயத்துக்கு காட்டிக் கொடுத்து விட்டேன்...? வடிவேல் மாஸ்டரின்... இதயம் கனத்து ஆத்மா அழத் தொடங்கியது... அருணை அவர் எங்கு தேடுவார்...

ஒரு வருடம்.... இரண்டு வருடம் என பதினைந்து வருடங்கள் எப்படியோ ஓடிப் போய்விட்டது.

ஓ! இன்று வடிவேல் மாஸ்டருக்கு எத்தனை பாராட்டுக்கள்... அவர் தன் முப்பத்தைந்து வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.. மலர்மாலை வாழ்த்து புகழாரம்.. பட்டுக்கள்... ஆகா... ஆகா... கணவன் ஓய்வைப் பாராட்டி கௌரவிக்கப்படுவதைக் கண்குளிரப் பார்த்த கனகாம்பரம் மனசெல்லாம் பட்டாம் பூச்சிகள் பறந்தன.... ஆனந்தம் ஆனந்தம் எனப் பாட வேண்டும் போல் அவளுக்கு இருந்தது.

ஆனால் ... அவரைப் பாராட்டும் ஒவ்வொரு சொல்லும் வடிவேல் மாஸ்டரின் இதயத்தை குத்திக் கிளறியது.. கொஞ்சம் கொஞ்சமாக உதிரம் கொட்டத் தொடங்கியது.. நான்.... நான் ஒரு நல்...லாசிரியனா? அவர் ஆத்மா அழுது கொண்டே அவரிடம் கேட்டது. அவரது கண்கள் கனத்தது ஆன்மா ஓலமிட்டது. கண்ணீர் முத்துக்களாக சிந்தத் தொடங்கியது ... அவர் கழுத்தில் அணிந்திருந்த மாலையிலிருந்த இதழ்கள் அவரைப் பார்த்து ஏளனம் செய்து உதிர்ந்தன... சேர் .. அழாதிங்கோ.. உங்களப் போல ஒரு உத்தமர்.. இந்தப் பாடசாலை பெற்றது எம் பாக்கியம் ... அந்தப் பாடசாலை ஆசிரியர் ... வாழ்த்தி மொழிந்தார்.

ஐயோ!... இதுக்கு நான் தகுதியானவனா? அந்தப் பிச்சை நான் இருளில் தள்ளிப் போட்டன். அவரது மனம் ஓலமிட்டபடியே இருந்த.....து..

ஐயா... ஐயா.... டொக்டர்... வந்திட்டார்.... திடுக்கிட்டு எழுந்த வடிவேல் மாஸ்டர் முன் டொக்டர் மலர்ந்த முகத்துடன் நின்றார்...

டொக்...டர்.... டொக்... டர் வடிவேல் மாஸ்டரின்... வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவராமல் மரணித்தன... கண்கள் வினா எழுப்பின.. ஓம்.. ஓம்.. நான்... தான்.. டொக்டர் அருண் ..... உங்கட ... மாணவன் சேர்.. அவரது நா தளதளத்தது. அருணின் கைகளைத் தன்னையறியாது பற்றி வடிவேல் மாஸ்டரின் ஆத்மா ஓவென ஓலமிட்டது. சேர்... சேர்... அழவேண்டாம். இஞ்ச பாருங்க.... நான் நீங்க சொன்னபடி டொக்டர் ஆயிட்டன் சந்தோசமாயிருங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணின் அன்பான வார்த்தைகள் அவரை ஆரத் தழுவியது.. வடிவேல் மாஸ்டரின் கண்கள் டொக்டர் அருணின் கால்களைத் தாவின... ஓம் சேர் அன்று நடந்த அந்த யுத்தத்தில என்ர அம்மாவையும் பறிகொடுத்து ஒரு காலையும் இழந்திட்டன். என்றாலும் எனக்குக் கிடைத்த உதவிகளின் மூலம் நான் இந்த நிலைக்கு வந்திட்டன்.. என்ன உருவாக்கியவராக உங்களையே நான் வணங்குகிறேன்.. டொக்டர் அருணின் கைகள் குவிந்தன.

இல்ல.. இல்ல .. அந்த... சிறுவன் .. குரங்குகள் காசை சுவர் இடுக்கில வைச்சிருந்ததை பின் தான் நான்... க...ண்..டனான்.. சிறுகுழந்தை போல அவரது நா உளறியது. சேர்... சேர்... எல்லாம் நல்லதுக்கே.... என்று நீங்கள் தானே சொல்வீர்கள்.. சந்தோஷமாயிருங்கள் போயிட்டு பிறகு வாறன்

அவனது நடையில் துரிதம் தெரிந்தது.. கடமையுணர்வின் தெளிவிருந்தது...

'பெருங் கூற்றுக் கிரையென பின்மாயும்
வேடிக்கை மனிதரைப் போல் நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ'

எனும் பாரதி பாடல் வடிவேல் மாஸ்டரின் செவிகளை நிறைத்தன... அவரது ஆன்மாவின் ஓலம் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கியது... மனம் இளகியது...

ஆமாம்! நல்லாசிரியர் எனப் பெயர் எடுத்தால் மட்டும் போதாது. பிள்ளைகளின் மனதில் கீறல் ஏற்படாத ஒரு தவ வாழ்வாக ஆசிரியப் பணியை போற்ற வேண்டும். அப்போது தான் ஆசிரியர் அவரது இறுதி நாள் வரை அமைதி பெறமுடியும்.


ஆண்டுகளாக துடித்துக் கொண்டிருந்த வடிவேல் மாஸ்டரின் ஆன்மாவின் அழுகையினை டொக்டர் அருண் அன்பால் துடைக்கத் தொடங்கினார்.

யாவும் கற்பனை

Mrs.Sivagowri Mohan
Al-min-Haj M.V



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் கருவறையில் தொடங்கும் கல்வி கல்லறையில் முடிவடைகின்றது. அந்த வகையில் மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி கட்டாயம் அவசியமானது. அதைச் சற்று நோக்குவோம்.

மாணவர் பருவம் ஓர் அரிய பருவம். 6வயதில் பாடசாலையில் காலடி எடுத்து வைக்கும் பிள்ளை அன்று முதல் ஆசிரியரையே அன்னையாகவும், தந்தையாகவும் முனைகின்றது. துளிர் பருவம் அப்பருவத்தில் அன்னை மடியை விட்டு ஆசிரியர் மடியைப் பிள்ளை தேடுகின்றது. முன்பள்ளியில் அதாவது (4-5 வயதில்) பயின்றதைக் கொண்டு 6 வயதில் பாடசாலையில் ஆரம்பப்பிரிவில் காலடி எடுத்து வைக்கின்றது.

அன்றிலிருந்து ஆசிரியர் மெழுகுதிரியாக உருகி மாணவர்களுக்கு ஒளி கொடுக்கின்றார். பாடசாலையில் ஆசிரியர் சொல்வதை மாணவர்கள் 'தெய்வவாக்காக' நினைக்கின்றார்கள். 'எழுத்தறிவித்தவன் இறைவன்' இங்கு எழுத்தறிவித்த இறைவனாகக் கருதப்படுபவர் ஆசிரியரே! எனவே மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி அவசியமாகின்றது. ஆசிரியர் ஏணிப்படியாக விளங்குகின்றார். மாணவர்களை அன்பூட்டி, அரவணைத்து கல்வியைப் புகட்டுபவர் ஆசிரியரே. தாய் சொல்லும் கருத்துக்களை விட ஆசிரியர் கூறும் கருத்துக்களையே மாணவர்கள் தெய்வவாக்காகக் கருதுகின்றார்கள். 24 மணித்தியாலயத்தில் 6 மணித்தியாலம் பிள்ளைகள் ஆசிரியர்களையே நம்பி இருக்கின்றார்கள். கிட்டத்தட்ட ¼ நாளை மாணவர்கள் ஆசிரியர்களிடமே செலவழிக்கின்றார்கள். இந்த 6 மணி நேரத்துக்குள் ஆசிரியர்கள் மாணவர்களின் எத்தனையோ தேவைகளை நிறைவேற்றுகின்றார்கள். 'மாஸ்லோ'வின் தேவைக்கொள்கை இங்கு பயன்படுகின்றது. காப்புத் தேவை, அன்புத்தேவை, கணிப்புத் தேவை இங்கு மாணவருக்குத் தேவைப்படுகின்றது. இத்தேவைகளை நிறைவேற்றுபவர் ஆசிரியரே.

அம்மா பிள்ளைக்கு உணவைத் தான் கொடுப்பார். தந்தை தேவையான பொருட்களை வேண்டிக் கொடுப்பார். ஆனால் எண்ணும் எழுத்தும் கற்றுக் கொடுப்பவர்கள் ஆசிரியர்களே. எந்தப்பிள்ளைக்கு என்னதேவை இருக்கின்றது என்பதை இனம் கண்டு அத்தேவையை நிறைவேற்றுபவர் ஆசிரியரே. சில பெற்றோர்கள் தங்களை யாரோ உறவினருடன் விட்டு விட்டு வெளிநாடு செல்கின்றனர். அந்தச் சந்தர்ப்பத்தில் பிள்ளைக்கு அம்மாவாக அப்பாவாக இருப்பவர் ஆசிரியரே. ஆசிரியர்கள் நடிபங்கு வகிப்பவர்கள். பிள்ளைக்குத் (மாணவர்களுக்கு) தேவைக்கேற்ப தங்கள் நடிபங்கை மாற்றியமைத்துக் கொள்பவர்கள் ஆசிரியர்கள். எனவே 'மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி' அவசியமானது என்பது புலனாகின்றது. சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் திசைமாறிப் போகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அந்தச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் சிறந்த ஆலோசகராக மாறுகின்றார். ஆலோசகராக மாறி மாணவருக்கு அறிவூட்டி பல ஆலோசனைகளை வழங்கி மாணவர்களை சிறந்த வழிக்கு இட்டுச் செல்கின்றார்.

திசை மாறிச் சென்று தமது கல்வியைத் தொலைத்த மாணவர்கள் ஆசிரியர்களின் ஆலோசனை வழிகாட்டல்களால் மீண்டும் கல்வியைத் தொடர்ந்து நல்ல நிலைக்கு வந்த மாணவர்களும் உள்ளனர். அவ்வாறு வாழ்க்கையில் உன்னத நிலைக்கு வந்த மாணவர்கள் 'என்னுடைய ஆசிரியரின் வழிகாட்டலால் தான் இன்று இந்த நிலைக்கு வந்துள்ளேன்' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிய மாணவர்களை இன்றும் நாம் காண்கின்றோம். எனவே மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி கட்டாயம் தேவையான ஒன்று. சிறந்ததொன்று

மாணவர்களின் பல்வேறு தேவைகளை அறிந்து இனம் கண்டு அதற்குப் பரிகாரம் காணுபவர் ஆசிரியரே. 'செவிப்பசிக்கு நல்ல வார்த்தைகள் தேவை' என்பது போல அறிவுப் பசிக்கு சிறந்த கருத்துக்களையும் தேடல்களையும் வழங்குபவர் ஆசிரியரே. சில மாணவர்கள் தனக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டுவிட்டால் தனக்குப் பிடித்த ஒரு ஆசிரியரையே தேடிச் செல்வான். தன் தாயை விட ஆசிரியரில் அவ்வளவு விசுவாசம், பாசம், நம்பிக்கை, ஆசிரியன் வாக்கு 'தேவவாக்கு' என்பதே மாணவர்களின் கருத்து.

அத்துடன் மாணவர்களை நற்பிரஜையாக உருவாக்கி சமூகத்திடம் ஒப்படைப்பது ஆசிரியரின் பணி. இன்றைய கல்விக் கொள்கையின் முக்கிய நோக்கம் மாணவர்களைத் தேர்ச்சியடைய வைப்பது மாணவர்களிடம் என்ன என்ன தேர்ச்சிகள் காணப்படுகின்றனவோ அத்தகைய தேர்ச்சிகளை வெளிக்கொணர்ந்து சமூகத்துக்கேற்ற பிரஜையாக உருவாக்குதலே கல்விக்கொள்கை. இதற்காகவே இன்றைய கல்வியும் தேர்ச்சி மையக் கல்வி என்று கூறப்படுகின்றது. ஏழு வகையான தேர்ச்சிகள் முன்வைக்கப்படுகின்றன. மாணவர்கள் புத்தகப் பூச்சியாக மட்டும் இருக்கக்கூடாது. பல்வேறு திறமைகள் கொண்டவர்களாக மாறவேண்டும். தேர்ச்சிகளாவன தொடர்பாடல் தேர்ச்சி, சமயமும் ஒழுகலாறும், விளையாட்டும் பொழுதுபோக்கும், சுற்றாடல் சார் தேர்ச்சி, கற்றலுக்காக் கற்றல், ஆளுமை, வேலையுலகிற்குத் தயாராகுதல், இத்தகைய தேர்ச்சிகளைக் கொண்டதே இன்றைய கல்விக் கொள்கை

ஆசிரியர்களுக்கும் சமூகத்துக்கும் 'நெருங்கிய தொடர்புண்டு மாணவர்களை சமூகத்துடன் இணைப்பவர்களே ஆசிரியர்கள். சமூகத்தின் பாலமாக செயற்படுபவர்கள் ஆசிரியர்கள். வேறு எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும் ஆசிரியர் பணி போல் சிறப்புப் பெற்றதெதுவுமில்லை. ஆசிரியர்கள் இறைவனுக்கு அடுத்தபடியாக மதிக்கப்படுபவர்கள்.

மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி இன்றியமையாதது. வைத்தியரோ, பொறியியலாளரோ மாணவர்களுடன் நீண்ட நேரம் உறவாடும் சந்தர்ப்பம் இல்லை. எனவே தான் ஆசிரியர் பணி மகத்தானது என்று கூறப்படுகின்றது. மாணவர்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுபவர்கள் ஆசிரியர்களே. ஏன்? இன்றைய கல்வித்திட்டத்தில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதாவது 'வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும்' என்ற பாடம் தரம் 6-9 வரையான வகுப்புக்களில் இப்பாடம் கற்பிக்கப்படுகின்றது. இப்பாடத்தினூடாக மாணவர்களுக்கு பல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. பல வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே இப்பாடத்தினூடாக ஆசிரியர் மாணவர்களுக்கு எத்தனையோ நல்ல கருத்துக்களை முன் வைக்கின்றனர். பாடசாலையில் பல்வேறுபட்ட சூழலில் இருந்து வரும் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இவர்கள் யாவரையும் ஒன்று சேர்த்து வகுப்பறை என்ற ஒரு சூழலுக்குள் கொண்டு வரவேண்டியது ஆசிரியரின் பணி. நெறிபிறழ்வான மாணவர்களும் இருப்பார்கள். அவர்களையும் ஒரு முகப்படுத்தும் சமவயதுக் குழுக்களுடன் ஒத்துப் போவதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குபவர் ஆசிரியரே. குறும்புத்தனமான மாணவர்கள், மீத்திறனான மாணவர்கள் மந்தபுத்தியுடைய மாணவர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள் என்று பல தரப்பட்ட மாணவர்கள் ஒரு வகுப்பறையில் இருப்பார்கள். இவர்கள் அனைவரையும் வழிப்படுத்தி ஒருமுகப்படுத்தி வகுப்பறையில் கற்பித்தலில் ஈடுபட வைப்பவர் ஆசிரியரே! அதாவது 'மகிழ்ச்சிகரமான கற்றல்' என்ற வகைக்குள் ஆசிரியர் மாணவர்களைக் கொண்டு வரவேண்டும். எனவே 'மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி' இன்றியமையாதது

மாணவப் பருவத்தில் பாடசாலையில் காலடி எடுத்துவைக்கும் பிள்ளைகளை வைத்தியர்களாக, பொறியியலாளராக, விவசாயியாக, சட்டத்தரணியாக, வழக்கறிஞராக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக, சிறந்த குடும்பப் பெண்ணாக, சிறந்த குடும்பத் தலைவியாக உருவாக்குபவர்கள் ஆசிரியர்களே. சமூகத்துடன் நேரடியாக இணைபவர்கள் ஆசிரியர்கள். எனவே தான் ஆசிரியப் பணி மகத்தானது எனப் போற்றப்படுகின்றது. அர்ப்பணிப்புள்ள, தாராள மனப்பான்மையுள்ள ஆசிரியப்பணி சிறந்தது எனப் போற்றப்படுகின்றது. இந்தவகையில் தான் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் உலக ஆசிரியர் தினமும் கொண்டாடப்படுகின்றது. நாட்டுக்கேற்ற நற்பிரஜைகளை உருவாக்குவதும், உன்னதத் தலைவர்களை உருவாக்குவதும் ஆசிரியர்களே,'அறியாமை என்ற இருளை நீக்கி அறிவு என்ற ஒளிக்கண்ணைத் திறப்பவர்கள்' ஆசிரியர்களே. மெழுகுவர்த்தி தன்னை உருக்கி உலகத்துக்கு ஒளியைக் கொடுப்பது போல் ஆசிரியர்களும் தங்களை உருக்கி மாணவர்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றுகின்றார்கள். எனவே 'மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர்பணி' அவசியமானது. இவ்விடத்தில் ஆசிரியர் பணி சிறப்புப் பெறுகின்றது. மகத்துவம் பெறுகின்றது. அத்துடன் ஆசிரியர் தொழிலும் புனிதமானது. உன்னதமானது. அத்தகைய புனிதம் நிறைந்த ஆசிரியர்களால் மாணவர்களது வாழ்க்கையும் உன்னதம் பெறுகின்றது. மாணவர்களுக்கு ஆசிரியர்கள் ஏணிப்படியாக இருந்து மாணவர்களை படிப்படியாக முன்னேற்றுகின்றார்கள். ஏணிப்படி, மாடிப்படி என்பன ஒவ்வொரு படியாக எவ்வாறு மனிதர்களை உயர்த்திக் கொண்டு போகின்றதோ அது போல ஆசிரியர்களும் மாணவர்களை படிப்படியாக உயர்த்திக் கொண்டு சென்று அவர்களது உன்னதமான வாழ்வுக்கு வழி காட்டுகின்றார்கள். எனவே தான் மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி அவசியமாகின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மாணவர்களைக் கற்றலை வழங்குவது மட்டுமல்ல. அவர்களை நெறிப்படுத்துவதும், வழிப்படுத்துவதும் ஆசிரியர்களே. விளையாட்டு மூலமும் பல்வேறு செயற்பாடுகள் மூலமும், பல்வேறு கதைகள், சம்பவங்களை எடுத்துக்காட்டுவதன் மூலமும் மாணவர்களை உன்னத வாழ்வுக்கு இட்டுச் செல்வது ஆசிரியர்களே. முன்னோடிகளாக வாழ்ந்த சில பெரியார்களின் வாழ்க்கை அனுபவங்களைக் கூறுவதன் மூலம் சில மாணவர்களை சிறந்த வழிக்கு இட்டுச் செல்லலாம். எனவே இவ்வாறு மாணவர்களை நாளாந்தம் வழிநடத்திச் செல்லக்கூடியவர்கள் ஆசிரியர்களே. மாணவர்களுடன் நேரடியாக உறவாடுபவர்கள் ஆசிரியர்களே. எனவே 'மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர் பணி' சிறந்ததாகும் என்பதில் எவ்வித சந்தேககமும் இல்லை.

வாழ்க ஆசிரியர் பணி
வளர்க ஆசிரியர் பணி

**Mrs.K.Kamalendrakumar**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்துமாவின் அழுகை

Mrs.Reetta Fernando,
T/St.Loudes R.C.School.

பல வேளைகளில் நிழல்கள் நிஜங்களாவது இல்லை நேற்றைய பொழுதுகள் நாளைக்கும் வராதா? பெருமூச்சு பெரிதாகி படுக்கையே சுமையாகி தூக்கத்தை தொடரமுடியாமல் இடையில் எழுந்த அமர்ந்த அமிர்தா மேசை மீது வைக்கப்பட்டிருந்த கடிகாரத்தை இரவு விளக்கின் குறையொளியில் பார்த்து "இன்னும் விடிய நேரமிருக்கே என்னசெய்வது"என்று முணுமுணுத்தபடி மேசையின் மறுபுறம் இருந்த தண்ணீர்ச்செம்பு மூடியை திறந்து நீரை அண்ணார்ந்து குடிக்கின்றாள் நீரின் குளிர்மை தொண்டையை நனைக்க சில்லென்ற உணர்வு நெஞ்சுக்குள் இறங்கிஅவள் மனதை தொடுகின்றது வவ்----லல்----வவ் தூரத்தே நாயொன்றின் குரல் ஓங்கி பின்னர் குறைவடைந்து போவதை உணர்கின்றாள் மூலை வீட்டு பாக்கியம் மாமியின் சேவல் கொக்கரக்கோ ---என இழுத்து கூவி "பொழுதே விரைவாக விடி" என்னும் சங்கதி சொல்வதாக அமிர்தா உணர்ந்தாள் மேசையில் எழுதி முடித்தபடி இருந்த பாடக்குறிப்புக் கொப்பி மின் விசிறியின் வேகத்தால் புரண்டு புரண்டு சத்தம் எழுப்புகிறது சோம்பல் முறித்தபடி நடந்த அமிர்தா யன்னல் கதவு ஒன்றைத் திறந்து கம்பியை இறுகப்பிடித்தபடி வெளியே நோக்குகிறாள் இரவு பூத்த மணம் பரப்பிய மல்லிகையின் மணம் காற்றோடு கலந்து மூக்கை வருடிச் செல்ல கண்களை மூடி அந்த சுகத்தை உணர முயன்று தோற்றுப்போய் கண்களை விரைவாக திறக்கிறாள் காலை 4.00மணியை கடிகாரம் தொட அலாரம் அடிக்கின்றது உடலை சரித்து அதை நிறுத்தியபடி வழமை நாள் தியானம் செய்ய கதவைத்திறந்து மொட்டைமாடியை நோக்கி நடக்கிறாள் கால்கள் முன்னே செல்ல---நினைவுகள் கடந்த இனிப்பான நாட்களை நோக்கி பின்னே நகர்கின்றன

உயர்ந்த உருவம் நிமிர்ந்த தோள்கள் கண்ணாடிக்குள்ளும் கனிந்து நோக்கும் கண்கள் தூரப்பார்வை கொண்ட எண்ணங்கள் முன்வழுக்கைத் தலையில் எட்டிப்பார்க்கும் வெண்கம்பிகளாக நரைமுடிகள் முழுவெள்ளை உடையில் இன்னும் பள்ளி மாணவனாய் வலம் வரும் அதிபர் மாணிக்கம்பிள்ளை இடமாற்றம் பெற்று பதினைந்து நாட்கள் கடந்துவிட்டன காலைமுதல் மாலைவரை பாடசாலைக்குள்ளேயே வலம் வரும் அவர் பாதங்கள் அவர் சொந்த ஊருக்கே மாற்றம் பெற்றது என்ன நியாயமோ எட்டு ஆண்டுகள் ஐந்து மாதங்கள் அவரது பணி பாடசாலையில் பல வடிவங்களில் வியாபித்து இருந்தது மூன்று அடுக்கு என்றும் இரண்டு அடுக்கு என்றும் பல கட்டடங்கள் நிமிர்ந்து நிற்கின்றது அவரதுஓடியாடி தேடிய முயற்சியால் ஒவ்வொரு கட்டடத்தின் முன்னும் பினனும் அமைந்த பூஞ்சோலையும் காய்கறித்தோட்டமும் பூத்துக் குலுங்கி காய் பரப்பி நிறைந்து நிற்கின்றது எங்குபார்த்தாலும் மகிழ்ந்தும் புகழ்ந்தும் பேசும் நிலையில் கதை பேசும் கல்விக்கூடமாக மங்களபுரத்து வித்தியாலயம் பேசப்படுவதற்குமுழுக்காரணமே ----அதிபர் மாணிக்கம்பிள்ளை தான் அவருக்கு பிடிக்காத யாருமில்லை ஒருவேளை அவரைப்பிடிக்காதவர்கள் இருந்திருக்கலாம் ஆனால் அது வெளியே தெரியக்கூடியதாக இருக்கவில்லை கண்டிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு கூட கனிவு காட்டியே கண்டிப்பது அவரின் கை வந்த கலை முன்னே புகழ்ந்து பின்னே வசை பாடும் பழக்கத்தை அவரிடம் காணமுடியாது ஆரம்பம் முடிவு அது எங்காயினும் சரி பாடசாலை தொடக்கம் முடிவு நிகழ்வுகள் ஆரம்பம் நிறைவு என்பதை சரியான நேரப்படி நடத்த பலர் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும் ஆயிரம் ஒத்திகைகள் அரங்கேறும் விடயம் சரியாகும் வரை ஓயவே மாட்டார் "என்னடா மனிசன் சாப்பிடுதா தூங்குதாஎப்ப பார்த்தாலும் பள்ளிக்கூடம் என்றே சாகுதே" என்று அங்கலாய்க்கும் பலர் உண்டு ஏன் அமிர்தா கூட "சேர் அதிகம் கஷ்டப்படாதீர்கள் சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையமுடியும்" என்பாள் யார் என்ன கூறினாலும் புன்னகையை பதிலாக்கி கண்ணியமாக வாழ்ந்த மனிதன் புகழ் போதைக்கு அடிமையான சிலரால் வஞ்சிக்கப்பட்டாரோ என்று எண்ணத்தோன்றுகிறது

"டாண்டாண்"மொட்டைமாடித்தியானத்தில் அமர்ந்திருந்த அமிர்தா மாதா கோவில் மணியோசையால் "நேரம் ஐந்தாகி விட்டதேஇவ்வளவுநேரமா? அமர்ந்து விட்டோம்" அம்மா எழுந்து இருப்பாவா? என மனதுக்குள் முணங்கியபடி மாடிப்படியால் கீழே இறங்குகின்றாள் அண்ணா தம்பி அக்கா என மூவரோடு பிறந்து அமிர்தா எல்லோரும் ஐரோப்பாவின் அகதியாக புலம்பெயர தான் மட்டும் மண்வாசனை வேண்டும் என்று பற்று உறுதியோடு விதவைத் தாயின் காவலில் பதினேழு வருட ஆசிரிய சேவையுடன் மங்களபுரத்து வித்தியாலயத்தின் மூன்றாண்டு கால சேவையை பூர்த்தி செய்து பம்பரமாக சுழன்று பணி செய்யும் ஒரு சகலகலாவல்லியாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றாள் ப்ரூ கோப்பியின் மணம் அம்மா சமையலறையில்வேலை தொடங்கிவிட்டாள் என்பதை பறைசாற்ற "குட்மோனிங் அம்மா" நிமிர்ந்து பார்த்த தாய் மேகலம் என்னடா சரியா நித்திரை கொள்ளவில்லையா? கண்ணெல்லாம் சிவந்து போய் வந்து இருக்கிறாய் என்று சொல்ல இதமாக அவளைப் பார்த்தஅமிர்தா குளியல் அறைக்குள் செல்கின்றாள்

ஸ்கூட்டி ஹோன்னை அடித்தபடி நிறுத்துமிடம் நோக்கி திரும்பிய அமிர்தாவை நோக்கி சிரித்தபடி வரும் மாணவ மழலைகள் "குட்மோனிங்"பூக்களை உதிர்த்த வண்ணம் பறக்கின்றன கள்ளம் கபடமற்ற இந்தப்பிஞ்சுகளின் மென்வதனம் தான் எத்தனை ஆறுதலைத் தரும் "ஆண்டவா அறுபதுகளை கடந்தும் கூட பணி செய்து அடுத்த பிறவி இருப்பின் அதிலும் என்னை ஆசிரியபணிக்கே அழைத்திடு" என மனமுருக வேண்டியபடி மோட்டார் சைக்கிளை நிறுத்தி அலுவலகம் நோக்கி செல்கிறாள் அமிர்தா ஏழுமணிக்கு கடந்து செல்லும் கல்முனை பஸ் வேகமாக செல்கிறது கையொப்பமிட்டபடி வெறுமனே இருக்கும் அதிபர் கதிரையை நோக்குகிறாள் மனது அழுகிறது தந்தையாக நோக்கும் பார்வை அங்கு இல்லை தனயனாக வழிநடத்தும் மனிதர் இல்லை சிறுவயதில் தந்தையை இழந்த அமிர்தா தன் தந்தையாக அதிபர் மாணிக்கம்பிள்ளையை பார்த்து இருக்கிறாள் அவரும் தந்தையற்ற பிள்ளை என்று அக்கறை காட்டி இருக்கிறார் "எப்போ ரீச்சர் கலியாண சாப்பாடு போட போறீங்க இனி வயது காணும் இனி துணை வேண்டும் மகள்" எனும் போது அவரின் தந்தைக்குரிய பாசம் தெரிவதை அமிர்தா மறந்தவள் இல்லை

பாடசாலையில் எதற்கும் பஞ்சமில்லை பரீட்சை முடிவுகள்ஆயினும் சரி போட்டி முடிவுகள் ஆயினும் சரி விளையாட்டு மோதல் எனினும் சரி மங்களபுரத்து வித்தியாலயம் முன்னால் என்ற போக்கு ஏனைய இடங்களில் கூறப்படும் ஆனால் கடந்த க.பொ.த சா1த முடிவுகள் சற்று மாறுபாடாய் இருந்தன மாணவர்கள் நூறு சத வீதம் சித்தி எனினும் எதிர் பார்த்த பரீட்சை முடிவுகளை அந்தப்பாடசாலை பெறவில்லையே என்ற ஆதங்கம் எல்லோரிடமும் இருந்தது தொடர்ந்து வெற்றியை சந்தித்த மனிதர்களால் தோல்வியை எண்ணவே முடியாதது சாதாரண விடயம் தானே! சரியான பாடஆசிரியர்கள் அமையவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அதனை கவனிக்கவில்லை என்றார்கள் சிலர் பிள்ளைகளை கண்காணிக்க திட்டம் இருக்கவில்லை என்றார்கள் பலர் ஆசிரியர்களை அதிபர் இன்னும் தட்டிக்கொடுத்து முயற்சி செய்து இருக்கலாம் என்றனர் ஓரிருவர் சொந்த மாவட்டத்திலேயே அதிபர் தரங்களோடு பாடசாலை தேடி நுழைய காத்து இருந்த பல அதிபர்களின் கவனம் மங்களபுரத்து வித்தியாலயத்தை ஈர்க்க தவறுமா? கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி பலர் குறுக்குவழியில் முயற்சிக்க முயன்றனர் பெற்றோர் பலரும் சேர்க்கப்பட்டனர் கடமை கண்ணியம் காக்க அவதிப்படும் சில ஆசிரியர் பட்டாளமும் சேர்ந்தது மாணவர்களில் வளர்ந்தோர் பலரின் தலை சலவை செய்யப்பட்டது பழைய மாணவர்கள் பலர் நியாயம் பற்றி பேசினாலும் ஈற்றில் விலை போயினர் அதிபர் மாணிக்கம்பிள்ளை வேதனைப்பட்டார் நம்மத்தியில் நன்றி உடைமை அற்றே போனதா? சோர்ந்து போனதா? ஒரு மாணவன் கூட "ஒன்பது ஏ" எடுக்கமுடியாது என் தவறா பதினேழு பேர் "எட்டு ஏ" க்களுடன் உள்ளனரே! கடவுள் சதி செய்து விட்டாரா! அதிபரால் தலையை நிமிர முடியவில்லை ஏன் இப்படி நடந்தது? தொலைபேசி அழைப்புகளின் கேள்விகளாக இருந்தன போட்டதிட்டத்தை ஆய்வு செய்யுங்கள் அதிகாரிகளின் ஆலோசனை ஒலித்தது கல்விமட்ட குழுக்களின் பரிசோதனைகள் படை எடுத்தன எல்லோரும் தன்னைப் பழிவாங்குவதாக உணர்ந்தார் மாணிக்கம்பிள்ளை என்ன செய்வது என்று சிந்திக்க தெரியாதவர் போல் இருந்தார்

ஆசிரியர் ஓய்வறையில் தலை கவிழ்ந்து படுத்திருந்த அமிர்தா சக ஆசிரியத் தோழி கவினயாவின் தொடுகையால் நிமிர்ந்தாள் "எனக்கு புது அதிபர் வர இருக்கிறாராம் சுப்ரமணியம் சேர் சொன்னார்" மெல்லிய குரலில் கூறிய கவினயா மணியொலிக்க வெளியேறுகிறாள் வருபவர் யாராக இருக்கும் எமது அதிபர் போன்று இருப்பாரா? மனதுக்குள் எழுந்த கேள்வியை அடக்கியபடி நேரசூசிஸ்ய அவதானித்து 10ஏற்கு பாடம் ஏற்றபடி இலக்கணத்தொகுதியையும் எடுத்துக்கொண்டு வகுப்பை நோக்கி நடக்கிறாள் எதிர்ப்பட்ட மாணவத்தலைவி "சசிரேகா" மிஸ்--- நம்மட முன்னையஅதிபர் சீரியஸா ஆசுபஸ்திரியில் இருக்கிறாராம் விநாயகம்மிஸ் அழுதபடி சொன்னாங்க உங்களுக்குத் தெரியாதா? தூக்கிவாரிப்போட அமிர்தா மீண்டும் அலுவலகப்பக்கம் திரும்பி பார்க்கிறாள் பலர் பரபரப்பாக ஓடித்திரிவது தெரிகிறது கடவுளே என்ன இது? சோதனை தானாக இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து இறுதி நாட்களில் சரி என் சொந்த ஊரில் பணிசெய்து ஓய்வு எடுக்கப்போகிறேன் என்றவருக்கு என்ன வியாதி? ஒருநாளும் அவர் நோய்வாய்ப்பட்டதாக கேள்விப்படவில்லையே கண்களைமூடி கவலை மறைக்கவழி தேடுகிறாள் அமிர்தா மனம் கடவுளை நோக்கி மன்றாடுகின்றது ஒருநல்ல மனிதரை இன்னும் சில நாட்களாவது வாழவிடு இறைவா! கல்வி சமூகத்திற்கு மட்டுமல்ல அவர் மனைவி பிள்ளைகளுக்காவது பிழைக்க செய் அவளின் கண்கள் அழுகின்றன யார் மறைந்தாலும் யார் ஒழிந்தாலும் எவர் புரண்டாலும் கடல் மட்டும் ஓய்வதில்லை அதிபர் மாணிக்கம் பிள்ளையின் பணிமட்டும் யாராலும் அழிக்கவோ ஒழிக்கவோ முடியாதஒன்று அவருக்காக மகளாக நல்ஆசானாக துடிக்கின்ற அவளின் ஆத்துமா அழுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையின் பழக்க வழக்கத்திறனில் பெற்றோரின் பங்களிப்பு

இறைவன் எமக்களித்த அருள் கொடைகளில் பிள்ளைச் செல்வமும் ஒன்றாகும். இவ்வாறான பிள்ளைகள் பிறக்கும் போது நல்லவர்களாகவே இருக்கின்றனர். அது நல்லவர்கள் ஆவதும் கெட்டவர்கள் ஆவதும் அவர்கள் வளர்க்கப்படுகின்ற முறையிலேயே தங்கியுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. இவ்வாறான பிள்ளைகள் பிறந்த உடனே வாலிபனாக மாட்டான். அவன் குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம், கட்டிளமைப்பருவம் என்றவாறு பல்வேறு பருவங்களைப் படிப்படியாகக் கடந்து வருவான். அவ்வாறான படிகளில் அவனுக்குச் (பிள்ளைக்குச்) செய்ய வேண்டிய பணிகளையும் வழிகாட்டல்களையும் அவ்வப்போது வழங்க வேண்டும். அத்துடன் அன்பு, காப்பு, கணிப்பு, உடலியக்கத் தேவைகள் போன்ற இயற்கை ஊட்டச் சத்துக்களையும் அவ்வப்போது வழங்கிவந்தால் நாம் எதிர்பார்க்கும் நற்பிள்ளை. ஒன்று இச்சமூகத்திற்கு அருளாக, ஒளியாகக் கிடைக்கும். மாறாக எமது பிள்ளையின் வழிகாட்டலில் இடரும் போது மறுதலையான ஒரு பிள்ளையே பெற்றோர்கள் இச்சமூகத்திற்கு வழங்குவார்கள்.

பாடசாலைச் சூழலிலும் வெளிச் சமூகச் சூழலிலும் சிறுவர் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவது நாள் தோறும் கூடிக்கொண்டே செல்கின்றது. அவர்களை நெறிப்படுத்துவதற்காக பெற்றோர்கள் சில வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். சிறுவர்களின் (பிள்ளைகளின்) நற்பண்பு பழக்க வழக்கங்கள் உருவாகும் இடங்களாக குடும்பச்சூழல், பாடசாலைச் சூழல், சமூகம் என்பன பங்களிப்பு செய்கின்றன.

குடும்பச்சூழல் நல்ல குழந்தைகளை பெற்றுத்தரும் ஆனால் முதலில் தீய பழக்கம் ஏற்படுவது குடும்பச் சூழலில் எனினும் குழந்தையின் உரிமையாளர் இருப்பதனால் அதிக அளவான கண்காணிப்பை எதிர்பார்க்கலாம். அதே போன்று குடும்பச்சூழலில் உருவான சிறுவர்களே பாடசாலைக்கு வருகின்றனர். எமது பாடசாலைச் சிறுவர் என்ற முறையில் ஓரளவான ஈடுபாட்டினை பாடசாலைச் சூழலில் அவதானிக்க முடியும். ஆனால் சமூகச் சூழலில் பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக்க உரிமையாளர் இல்லை. எனவே தான் இங்கு பிள்ளைகள் நெறி தவறுகின்றார்கள்.

இவ்வாறான நிலமையால் பெற்றார், பிள்ளைகளை சமூகத்தில் உலவ விட்டு பார்த்திருக்க முடியாது. பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும். இல்லாவிட்டால் பிள்ளைகள் சமூகச் சீரழிவில் சிக்கிவிடும் பிள்ளைகளை உரிய முறையில் வளர்ப்பது பெற்றாரின் கடமையும் பொறுப்புமாகும். அவ்வாறான பிள்ளைகளின் பழக்க வழக்கத்தில் வளர்ச்சி பெற பெற்றோர்கள் செய்ய வேண்டிய சில நடவடிக்கைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளைக்கு முதலில் அன்பையும் அரவணைப்பையும் கொடுக்க வேண்டும். அதன் மூலம் பிள்ளைக்கு பெற்றோரின் உபதேசமும் தண்டனையும் தனது நன்மைக்கே என்பதை குழந்தை உணர ஆரம்பிக்கும்
- முடிந்தளவு சிறு வயதிலிருந்து நல்ல பழக்க வழக்கங்களை காட்டிக் கொடுத்தல் அது மிக இலகுவான செயலாகும். 'பால் அருந்தும் எல்லாக் குழந்தைகளையும் பயிற்றுவிக்கமுடியும்'
- எந்த வயதிலும் பிள்ளை எங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது
- எப்போதும் தலைமைத்துவம் உங்கள் கைகளிலேயே இருக்க வேண்டும். எப்போதும் பிள்ளை உங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்
- முடிந்தளவு உங்களால் (பெற்றோர்களால்) தவறுகள் நடைபெறாது இருக்கும்படி செயல்பட வேண்டும். உங்களால் எடுக்கப்படும் தீர்மானங்கள் சரியானவையா என்பதை இருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்களின் பிழையான செயல்களினால் நீங்கள் பெற்றெடுத்த குழந்தைகளின் வாழ்வு சீரழிவு ஏற்றுக் கொள்ள முடியாத காரணமாகும்.
- ஆரோக்கியமான குடும்ப வாழ்வு நடத்த முயலுங்கள், தாய் தந்தை பிள்ளைகளின் உறவு சுமூகமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் கருத்து சொல்வதற்கு இடமளித்தல்
- தாயும் தந்தையும் எதிர்மாறான ஆலோசனை சொல்லக்கூடாது. இவ்வாறான வித்தியாசமான கருத்துக்களை பெற்றோர் கொண்டிருந்தால் பிள்ளைகள் அதனை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும்.
- ஒருவர் பிள்ளையைத் தண்டிக்கும் போது மற்றவர் பிள்ளைக்கு ஆதரவு காட்ட வேண்டும். ஆனால் அதனை விமர்சிக்காது அதைத் தீர்க்கும் முறையில் செயற்பட வேண்டும். இதனால் மனம் பாதித்தல் பிள்ளைக்கு ஆறுதல் கிடைக்கும்
- பழக்க வழக்க தேர்ச்சிக்காக வயதுக்கு ஏற்ப வேலைகளைக் கொடுக்க வேண்டும். இதனால் அவர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படும்
- சிறுபராயத்திலும் தேவையற்ற முறையில் இரக்கம் காட்டக்கூடாது.
- இளம்பராயத்தினரை வழி நடத்தும் போது மிகக் கவனமாக செயற்படவேண்டும்.
- பிள்ளைகளின் வாழ்க்கை கல்வியில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. 1. ஓய்வு 2. உல்லாசம் 3. மனமகிழ்ச்சி 4. சமூகத்துடன் உறவு என்பன அவசியமாகும். கல்வி கற்றலில் வெறுப்பின் நடத்தை கவனிக்க வேண்டும். கல்வியில் கசப்பு என்பது துன்ப நிலையாகும். ஆனால் முடிந்தளவு பிள்ளை சந்தோசமாக வாழ இடமளிக்கவும். அதனால் அவர்களது மனம் ஆரோக்கியமாகவும் பிரகாசமாகவும் இருக்கும். கற்பதற்கு ஞாபகசக்தி மிக அவசியம். அதை வளர்ப்பதற்கு ஆரோக்கியமும் மகிழ்ச்சிகரமான மன நிலையும் அவசியம்
- சிலவேளைகளில் பிள்ளை உங்களின் வசதிக்கு ஏற்ப வழிப்படுத்த முடியாத நிலை ஏற்படும். சூழலில் காண்பதும் கேட்பதும் பிள்ளையின் பழக்கவழக்கங்கள் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் அதில் ஒன்று தான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீங்கள் சொல்லும் நல்ல கருத்துக்கு விரோதமான கருத்துக்களை தொலைக்காட்சி மூலம் பெறுவர். அதற்காக அதனை தடைசெய்யாது பிள்ளை கொள்ளும் பருவத்தில் அதை தெளிவுபடுத்துவதே நல்லதாகும்
- நீங்கள் பிள்ளையை சமூகத்துடன் சேரவிடாது தடுத்து விட முயற்சி செய்தால் அது பிள்ளை உங்களுக்கு விரோதமாக செயல்படும் நிலையை உண்டாக்கும். ஏனெனில் ஒத்த வயது பிள்ளைகளின் சுதந்திரத்தை தான் அனுபவிக்கின்றோமோ என எண்ணிப்பார்க்கும்.
- பிள்ளைகளின் நல்ல அல்லது தீய செயல்களின் பலாபலன் முதலில் கிடைப்பது பெற்றோருக்கு பின்னர் அதன் பலாபலன்களை சமூகம் அனுபவிக்கும். அதனால் பிள்ளைகளை எச்சரிப்பதை விட முன் மாதிரியாக நடப்பதே சிறந்த முறையாகும்.
- பிள்ளைகளிடம் காணப்படும் நற்செயல்களில் அவர்களை பிரகாசிக்கச் செய்வதன் மூலம் தீய செயல்களை நிறுத்திவிட முடியும். அத்துடன் அவர்களுக்கு பொருத்தமான செயல்களை செய்விப்பது மிகவும் சிறந்த முறையாகும்.
- அன்பும் ஆதரவுடனும் கூறும் அறிவுரைகள் கண்டித்தும், தண்டித்தும் கூறும் அறிவுரைகளை விட பயன்தரும் மேலும் ஆரம்பத்தில் நல்ல பழக்கங்களைப் பழக்காவிட்டால் 'நகத்தால் செய்யும்' வேலையை விடுத்து கோடரியை பயன்படுத்துவது போன்றதாகும்.

எனவே எமது குழந்தைகளை நற்பழக்க வழக்கமுடையவர்களாக ஆக்குவது எமது கையிலேயே உள்ளது. நம்முடைய பிள்ளைகளுக்கு மற்றவர்கள் வழிகாட்டும் முன் நாங்களே வழிகாட்ட வேண்டும். ஏனெனின் அவர்கள் எமது சொத்துக்கள். இதனை செய்ய தவறுமிடத்து பிறரின் தேவைக்கு ஏற்றமுறையில் வளரும் பிள்ளைகள் மூலம் பிரச்சினைகள் ஏற்படுத்திக் கொள்ளும் முன் காலத்தை ஒதுக்கி செயற்படவேண்டும் நல்ல பிள்ளைகள் பெற்றோருக்கு பெருமை தேடித்தரும். சமூகத்திற்கும் நல்ல வளமாகும். அவர்களை ஒரே தடவையில் தேவையான முறையில் வளர்க்கமுடியாது. பொறுமை திட்டமிடல் முயற்சி என்பவற்றுடன் மீண்டும் முயற்சிக்க வேண்டும். பிள்ளைகள் நல்லவர்கள் என்ற மனநிலை எமது எண்ணத்தில் இருக்கவேண்டும். பெற்றோர்கள் என்னை நம்புகின்றனர் என்பதை பிள்ளைகள் அறிய வேண்டும். இதன் மூலம் அவர்களின் பழக்கவழக்கங்களில் மாற்றம் ஏற்படும். இதன் மூலம் பெற்றோரின் கடமைகளும் பொறுப்புகளும் நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

பிள்ளை வளர்ப்பு பயணம் கடினமானதானாலும் முடிவு பயனுள்ளதாக அமையும். எமது குழந்தைகளுக்காக தியாகம் செய்வோம். தியாகத்தின் பயனை எதிர்காலத்தில் நாம் கண்டு கொள்ளமுடியும். சரியாக செயற்படாவிட்டால் அவர்கள் வீணாகிவிடுவார்கள். இன்று பிரகாசிப்பது என்று படிப்படியாக பொறுமையாக கட்டி எழுப்பியதால் ஆகும். நாமும் எமது பிள்ளைகளை நல்ல பழக்க வழக்க தேர்ச்சி உடையவர்களாக மாற்றுவதற்கு முயற்சிப்போம்.

பௌசுல் அமீர் றிஸானா (ஆசிரியர்)
தி/அல்-மின்ஹாஜ் மு.ம.வி
மட்கோவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி கலாசாரத்தில் ஆசிரியரின் நடிபங்கு

'அறிவால் அறிவைத் தேடு' என்றார் ஒரு கல்வியியலாளர். 'பாடையது ஏறினும் ஏடது கைவிடேல்' என்கிறது இன்னொரு பழமொழி. ஆம் அறிவியல் உலகம் மிகவும் வேகமாக வளர்ச்சி பெற்று வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் கல்விச் சிந்தனைகளும் பல்வேறுபட்ட வகையில் விருத்தி பெற்று வருவதை நாம் காணமுடிகிறது.

கல்விச் சிந்தனையின் வெளிப்பாடுகளை அரங்கேற்றுவதில் கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. அந்த வகையில் கல்வி நிறுவனங்களின் முக்கிய தொழிற்பாடாக விளங்குவது ஒரு மாணவனை சமூகத்துக்கு இயைபுடையவனாக மாற்றுவது. அக்கல்வி நிறுவனத்தின் பங்குதாரர்களாக அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் தொழிற்படினும் நெருங்கிய உறவினை பேணுவதில் ஆசிரிய மாணவ தொடர்புதான் பங்களிப்பு செய்கின்றது எனலாம்.

பிள்ளையின் வாழ்வில் பெற்றோர்கள் தவிர்ந்த ஏனையோர் பலர் தொடர்புபட்டு இருப்பினும், தனது ஆறு வயது தொடக்கம் பதினெட்டு வயது வரை அவன் காணும் முக்கிய உறவு ஆசிரியரே ஆகும். எனவே அவ் ஆசிரியர் அவனை ஒரு களிமண் போல கருதாது, உயிருள்ள ஜீவன் எனக் கருதி தன்னாலியன்ற அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும்.

பழைய காலத்தில் ஆசிரியனே சமூகத்தின் பாதுகாவலனாக, தூதுவனாக , ஆலோசகனாக திட்டமிடுபவனாக சமுதாயத்தில் மதிக்கப்பட்டான். அக்கால மக்களிடையே மதிக்கப் பெற்ற அவன் எது சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்குடைய சமூகம் ஒன்று இருந்து வந்துள்ளது. இது எதனை வெளிப்படுத்துகிறது என்றால் சமூகமும் ஆசிரியனும் எவ்வாறு இணைந்துள்ளனர் என்பதையேயாகும். அந்த வகையில் ஆசிரியரின் நடிபங்குளை வகைப்படுத்தும் போது ஓர் நல்லாசிரியன் தாயாக, நண்பனாக, மருத்துவனாக, ஆலோசகனாக, திட்டமிடல் அதிகாரியாக, விஞ்ஞானியாக, போதகனாக் , நீதிபதியாக எல்லாவற்றுக்கும் மேலாக வழிகாட்டியாக வாழும் போது, மாணவனும், தான் அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகப்பழகுவான்.

ஆரம்பப்பிரிவில் பாடசாலைக்கு வரும் முதல் நாள், ஓர் மாணவனின் வாழ்வில் மறக்க முடியாத நாளாக மாறக் காரணம் யாது? பிறந்த நாட் தொடக்கம் இதுவரை தனது வீட்டினுள் தாய், தந்தை, சகோதரர்கள் எனவும் பாட்டி, பாட்டன் எனவும் உறவினரை பார்த்துப் பழகிய அவன் முதன் முதலாக ஆசிரியரையும் அச்சூழலையும் காணும் போது புதிய அனுபவம் ஒன்றினை பெறுகிறான். அது அவனுக்கு மகிழ்வைத் தருகிறதா அல்லது துன்பத்தைத் தருகிறதா என்பது, அவனை வரவேற்கும் ஆசிரியர் கையிலேயே தங்கியுள்ளது. அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தாயாக மாறி அவனை வரவேற்று அன்பாக வார்த்தைகளை கூறி உபசரிக்கும் போது வீட்டில் சிலவேளை அவ்வார்த்தைகளை கேளாத அவன் ஆசிரியர் மீது அதீத பற்றுடையவனாக மாறுகின்றான். அவனுடைய வாழ்வும் மலர்ச்சியுடையதாக மாறத் தொடங்குகின்றது. எனவே ஆசிரியரின் பங்கு அங்கே தாயாக உருமாறுவதன் மூலம் அப்பிள்ளையின் மனப்பாங்கினை மாற்றுவதாகவும் அமைகின்றது.

எனவே ஆசிரியர் தனியே கல்வி அறிவினை மட்டும் சொல்லிக் கொடுக்கும் ஒரு போதகராக மட்டும் செயற்பட முடியாது. தனது சமூகத்துக்கு செய்ய வேண்டிய பணி யாது? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு மாணவனின் உள உடலியற் தேவைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். அவனை சமூகத்துக்கு பொருத்தப்பாடு உடையவனாக சமூக விழுமியங்கள் கலாசாரங்களை விளங்கிக் கொள்பவனாக, அவற்றை ஏற்று நடப்பவனாக மாற்றம் பெறச் செய்தல் வேண்டும். இதற்கு ஆசிரியருக்கு உறுதுணையாக கலைத்திட்டம் தொழிற்படுகின்றது. கலைத்திட்டத்தில் தமிழ்மொழி, விஞ்ஞானம், கணிதம், சமூகவியல், வரலாறு, சமயம், சங்கீதம், நடனம் என பல்வேறு பாடங்கள் சேர்க்கப்பட இதுவே காரணமாகும். முக்கியமாக ஒருவனின் தாய்மொழி அவனை கல்வியில் வல்லவனாகவும் நல்லவனாகவும் வாழத் தேவையான திறன்களை வழங்குகின்றது. அடிப்படைத் தேர்ச்சிகளான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் அடிப்படைத் திறன்களை பெற்றுக்கொள்ள தாய்மொழி அவசியமானது. தாய்மொழியை கற்பதன் மூலம் அவன் தனது சமூகத்தின் இலக்கு யாது? அதனை எவ்வாறு அடையலாம் அதற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பது பற்றி எண்ணத் தொடங்குகிறான். இதன் மூலம் கல்வி அறிவு மட்டுமல்ல கலாசார பண்பாட்டு அறிவினையும் பெற்றுக் கொள்கிறான்.

அதேபோல கணித பாடத்தின் மூலம் தர்க்கித்தல், பிரச்சனையை இனங்காணல், அதிலிருந்து விடுபடல், உருவாக்குதல் எனும் பண்புகளையும் பெறுகின்றான். விஞ்ஞான பாட அறிவின் மூலம் கண்டுபிடித்தல், தீர்வு காணல் போன்ற அறிவினையும் சமூகவியல் மூலம் சமூக பொருளாதார மாற்றங்கள் குறிக்கோள்களையும் இனங் காண்கின்றான். சமய பாடத்தின் மூலம் ஒழுக்கமும் விழுமியமும் உள்ள மாணவனாகவும் சமூகத்தில் அறநெறியுடன் அன்பு, கருணை போன்ற மனித நேயப் பண்புகள் உடையவனாகவும் தோற்றம் பெறுகிறான். அழகியல் பாடநெறிகளை கற்பதன் மூலம் அழகியல் உணர்வு பெற்றவனாக அதன் மூலம் ஆன்மபலம் பெற்றவனாக, புதியவற்றை படைப்பவனாக, சிந்தனையாளனாக, மன ஒருமைப்பாடுடையவனாக மாற்றம் பெறுகின்றான். இதன் மூலம் அறிவு, திறன், மனப்பாங்கு எனும் மூன்றும் வளர்த்தெடுக்கப்படுகிறது. இதனை உணர்ந்து ஆசிரியர்கள் கற்பித்தலை நிகழ்த்தும் போது மாணவன் உயிரோட்டமுள்ள ஒருவனாக சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஒருவனாக மாறுகின்றான்.

பாடசாலையின் புறக்கலைத்திட்டங்களை பார்க்கும் போது காலைக்கூட்டம், வகுப்பறைத் தூய்மை, ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் அவன் சமூகத்தில் நின்று நிலைக்கக் கூடிய ஒருவனாக மாற அவை துணை புரிகின்றன. பாடசாலையின் ஆரம்பத்தில் இறைவணக்கத்தோடு ஆரம்பிப்பது வழக்கம். அதைப் போல அவனும் தனது நாளாந்த கடமைகளை ஆற்றும் முன் இறைவணக்கம் செய்தல் எனும் கலாசார பண்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக் கொள்கின்றான். காலைக்கூட்டத்தில் அமைதியாக நிற்றல், பிறர் சொல்லும் கருத்துக்களைக் கேட்டல் என்பன வளர்த்தெடுக்கப்படுகின்றன. தலைமைத்துவ பண்பு அவதானிக்கப்படுவதால் அது அவனிடையே புகுத்தப்படுகிறது. இதன் மூலம் அவன் சமூகத்தில் தலைமை தாங்கும் பாங்கினைப் பெறுவான். எனவே இவ்வாறான செயற்பாடுகள் எல்லாம் அவனை ஓர் சமூக பொருத்தப்பாடுடையவனாக மாற்ற முனைகின்றது. இதன் மூலம் கல்வி அறிவினைப் பெற்றுக்கொள்ளும் அவனுக்கு, ஆசிரியர் ஓர் முன்மாதிரியாக செயற்படவேண்டியது மிகவும் அவசியம்.

சில வீடுகளில் பாடசாலை விட்டு ஆரம்பப்பிரிவு மாணவர்கள் வந்தவுடன் "என்னுடைய ஆசிரியர் வடிவான சாறி உடுத்தினவ. கழுத்துக்கு முத்துமால போட்டவ, என்ர நண்பனுக்கு சரியா இரத்தம் வடிய அடித்தவ" என்று பல்வேறு வாக்கியங்களை முன்வைப்பதைக் காணமுடியும். இது எதனைக் காட்டுகிறது. ஆசிரியரை மாணவன் எவ்வளவு அவதானிக்கின்றான் என்பதைத் தான் ஆகவே கற்பித்தலில் கலைத்திட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகளை செய்யும் போது ஆசிரியரும் ஓர் வழிகாட்டியாகத் தொழிற்பட முடியும்.

ஆசிரியர் தினமும் பாடசாலைக்கு நேரம் பிந்தாமல் வருவதை அவதானிக்கும் அவன் தானும் அவ்வாறு வரவேண்டும் என்பதை உணர்வான். மற்றவர்களோடு ஆசிரியர் உரையாடும் போது அதாவது ஆசிரியர் - ஆசிரியர் இடைத்தொடர்பு பேணுதல், அதிபர் - ஆசிரியர் இடைத்தொடர்பு, மாணவ ஆசிரியர் தொடர்பு என்பவற்றை அவதானிக்கும் மாணவனும் தானும் அவ்வாறு நடக்க முனைகின்றான். தனக்கும் பாடசாலைக்குமிடையில் இடைத்தொடர்புகளை பேணுவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். அவ்வகையில்

1. பாடசாலை மீது பற்றுறுதி கொண்டவராக,
2. பாடசாலை இலக்குகளை மதிப்பவராக
3. பாடசாலையின் விரிந்த சிந்தனைக்கு (Vision) மதிப்புக் கொடுப்பவராக
4. புதிய திட்டங்களை செயற்படுத்துபவராக
5. வகுப்பறையில் மாணவர்களிடையே ஒரு இணைப்பாளராக
6. பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொண்டவராக எல்லாம் தொழிற்படும் போது ஆசிரியரின் நடிபங்கு சிறப்புற முடியும்

வகுப்பறைக் கற்பித்தலின் போது எல்லா மாணவர்களும் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பதில்லை. அவர்களது வயது, குடும்பநிலை என்பன அவர்களது கற்றலைத் தீர்மானிக்கின்றன. இந்த நிலையில் வகுப்பறையில் பின் தங்கிய மாணவர்களின் உள , உடல் வேறுபாடுகளை அறிந்து கல்வி போதிக்க வேண்டியது அவசியம். தனியே நூலை வாசிப்பதை விடுத்து கதைகூறல், கலந்துரையாடல், வினாக்கள் எழுப்புதல், குடும்ப நிலவரங்களை அறிதல் மூலம் அவனுடைய கற்றல் தேர்ச்சியை மேம்படுத்தலாம்.

பாடசாலையில் இடம்பெறும் விழாக்கள், குருபூசை தினங்கள் போன்றன அவர்களது கலாசார பண்புகளை வளர்க்கக் கூடியதாக அமையும். மாணவர்களிடத்து இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்தை தூண்ட வேண்டுமாயின் ஆசிரியர் இலக்கிய ஆர்வலராக இருப்பதோடு, இலக்கியங்களை கற்று அவர்களுக்கு கதை சொல்பவராக மாறுவதோடு இலக்கியங்களை வாசித்தறிய தூண்டுபவராகவும் இருத்தல் வேண்டும்.

கற்பித்தலில் மட்டுமல்ல நடை, உடை, பாவனை என்பவற்றிலும் முன்மாதிரியாக நடந்து கொள்ளவேண்டும். தூய்மையான ஆடைகளை உடுத்தல், பாடசாலையின் கலாசாரத்தை மதிக்கத் தக்க வகையில் ஆடை அணிதல் என்பவற்றையும் முன்மாதிரியாக செய்து காட்டல் வேண்டும். ஒரு பாடலை சொல்லிக் கொடுக்கும் போது ஆசிரியர் தான் ஒரு பாடகனாக , நடிகனாக மாறி கற்பிக்கும் போது மாணவன் சிறந்த ஆளுமைப் பண்புடைய ஒருவனாக மாற்றம் பெறுகிறான்.

நவீன அறிவியலில் கல்விச் சிந்தனைகள் நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருவதற்கு ஏற்ப ஆசிரியன் தேடல் உள்ளவனாகவும், வாசிப்புத் திறன் பெற்றவனாகவும் மாறவேண்டியது கட்டாயமானதாகும். ஏனெனில் மாணவர்கள் அறிவுத் தேடலில் விரைவாக வளர்ந்து வருவதை காணமுடிகின்றது. அதனடிப்படையில் ஆசிரியரிடம் பிரச்சனைகளை சொல்லும் போது பிரச்சினை தீர்த்தல், விடுவித்தல் எனும் வழிமுறைகளை கையாள வேண்டியது அவசியம். மேலும் கற்றலின் போது நமது சமூகத்துக்கு அவசியமான பண்புகளை அதாவது விட்டுக் கொடுத்தல், பிறருக்கு உதவுதல், அன்பாகப் பேசுதல் போன்றவற்றையும், கடைப்பிடித்தல் வேண்டும். ஆசிரியர் மாணவனுடன் அன்பாக உரையாடும் போது மாணவன் சகமாணவனுடன் உரையாடுவது எப்படி என்பதை அறிவான். மகாத்மா காந்தி, பிளேட்டோ வேல்ஸ், இளவரசி டயானா போன்றோர்களைப் போல வாழ்வில் வருவதற்கு என்று சமூகத்தில் போட்டி போடுவதில்லையா? அதைப் போல ஆசிரியர்களும் மாணவர்களுக்கு கற்பிக்கும் போது இவை அனைத்தையும் அறிந்து கற்பித்தால் அவன் சிறந்த நற்பிரஜையாக நாட்டில் உருவாக்கப்படுவான். உண்மை, நேர்மை, பொதுநலம், அழகுணர்ச்சி, அறிவுத்திறன் என்பன சமூகத்தில் செல்வாக்குப் பெறுவதற்கு துணை செய்யும். சமூகத்தோடு ஒட்டி உறவாடக்கூடிய, சமூக கலாசார விழுமியங்களை மதிக்கக்கூடிய சமூகத்தின் மீது பற்றுறுதி கொண்ட ஒருவனாக உருவாக்குவதற்கு ஆசிரியர் சுயநலமற்ற, பரந்த, பொதுநல நோக்குக் கொண்ட எல்லோரையும் சமமாகப் பேணக் கூடிய, சமூக சிந்தனையுள்ள ஓர் வழிகாட்டியாக மாறுதல் அவசியம். ஓர் அறிவியற் சமூகத்தில் கல்வியியலாளர்களால், கல்விச் சிந்தனைகளால், அரசியலால் ஏற்படுத்த முடியாத மாற்றங்களை ஓர் நல்லாசிரியர் மூலம் ஏற்படுத்த முடியும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

திருமதி. இ. ரகுந்திரராஜா B.A Dip in Edu (Mierit)


ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)

வலயக் கல்வி அலுவலகம்,

திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்பித்தலில்

**Mr.A.J.Mohamed Sally**
**Jamaliya Muslim M.V**

வரண்டு போகும்
மனித வாழ்க்கையின்
சின்னச் சின்ன
வசந்தங்கள் தான்
கொஞ்சம்
சிலிர்க்க வைக்கிறது

இந்தத் தினமும்
அப்படித்தான்
கொஞ்சம் மாலைகள்
கொஞ்சம் மகிழ்ச்சிகள்
வருத்தங்கள் மறந்த
சில கணங்கள்

ஆசிரியன் வாழ்க்கை
என்பது
தரையோடும் கரையோடும்
போராடும் ஒரு
சிறிய யுத்த களம் தான்
அதிலொரு சின்ன
வித்தியாசம்

இங்கு பழிவாங்குதல்கள்
இல்லை
வழிகாட்டுதல்கள் மட்டும் தான்

சம்பளத்திற்கு
வேலை பார்க்கும்
சம்பிரதாயத்திற்கு
அப்பாற்பட்ட சமூகம்
இந்த ஆசிரியர்
சமூகம்
பொறுப்புகள் இல்லாத
பொறுப்புகள் நமக்கு

நல்ல கல்வி
என்பது
நமது சிந்தனையோடு
ஒன்றைப் பொருத்திக்கொள்வதல்ல
நமது சிந்தனையைத்
திருத்திக் கொள்வது
ஒன்றின் திருத்தம்
இன்னொன்றின்
அனுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளையை மட்டும்
நிரப்பி
கரங்களைப் புறக்கணிக்கும்
கல்வி முறை
நவீன யுகத்தின்
நலிவுற்ற வழிமுறை
அதையும் தாண்டிய
கற்பித்தல் முறையொன்றில்
கட்டாயம்
பயணம்
செய்வது
நமது கட்டாய கடமை
இங்கு

எவரும் கற்கலாம்
எதையும் கற்கலாம்
ஒழுக்கமான கல்விதான்
உயர்வைத் தரும்
கற்பித்தலின் முழுமை
ஒழுக்கம் என்பதும்
ஒழுங்காக உணர்தல்
உயர்வின் இன்னொரு
உபாயம்
இதையெல்லாம் கற்பிக்க
வேண்டும் இங்கு

மாணவ சமூகத்தின்
மன்னர்கள் நாங்கள்
வகுப்பறை என்ற
குட்டி இராச்சியத்தின்
சொந்தக்காரர்கள்
கற்பித்தல் என்ற
நல்லாட்சி ஒன்றை
நாகரிகமாக வழங்குவது
நமக்கு
பொறுப்பு இங்கு

அறிவின் முதலாளி
ஆசிரியன்
மாணவன் என்ற
கொள்வனவாளனை
மகிழ்ச்சிப்படுத்தல் தானே
இந்தக் கல்வி
வியாபாரத்தின்
நேர்மை நிறைந்த
வழிமுறை

சின்னஞ் சிறுவர்கள்
அவர்கள்
எண்ணங்களை பறக்கவிட்டு
ஏக்கத்துடன் நிற்பவர்கள்
தங்கள் உலகத்தில்
தாவ நினைப்பவர்கள்
ஏமாற்றங்கள் எழுந்திடாமல்
எழுந்து நிற்க
வழியமைத்தல்...
எமக்குள்ள பெருங்கடமை

T/Vipulananda College
SCHOOL LIBRARY RESOURCE CENTRE
TRINCOMALEE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறைக் கற்பித்தல்
எம்மை வழிநடத்தும்
புதியதொரு வழி அது
மகிழ்ச்சியும் புகழ்ச்சியும்
மாறி மாறி எழுந்திட
கற்பித்தலில் கவனம்
கொள்ளல்
காலத்திற்கு பொருத்தம்
இங்கு

விஞ்ஞானம்
வீறுநடை போடும்
அறிவியலின் அந்தத்தில்
உலகம் நகர்கிறது
உண்மையும் அது தான்
ஆசிரியருக்கு
கற்பிக்கும் அறிவு
மாணவனிடம்
அதிகம் நிறைந்துள்ளது

சோடை போகும்
ஒரு நிலைமையை
சொந்தம்
கொண்டாடிடாமல்
கற்பித்தலில்
புது நுணுக்கத்தை
கண்டுபிடித்தல் வேண்டும்


நல்லாசிரியனாக
நாம் வாழ
நன்றாக
தேடல் வேண்டும்

அடிமனத்தின்
ஆழத்திலிருந்தும்
கேள்வி தொடுக்கும்
மாணவர் பலருக்கு
அதிரடி பதில்
சொல்லும்
ஆக்கத்திறனும்
வேண்டும்

அப்போது தான்
இந்தக் கற்பித்தல்
எல்லாம்
எவ்வுலகிற்கும் பொருத்தமாகும்
பொருத்திக் கொள்வோம்
பொருந்திக் கொள்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සතුටින් උගනිමු.

කෝම්පිට්ටු සාදලා
වැලි බත් ගෙන උයාලා
බෝනික්කෝ නලවලා
නෑගම් යනවා

එකයි දෙකයි කියනවා
සියඹලා ඇට ගනිනවා
කොළ ගුලි කර අලවලා
ගණන් කරනවා


ඔංචිලි චිලි චිල්ල මලේ
ගී කියමින් පදිමු මලේ
දුවලා පැනලා නටලා ගයලා
සුවෙන් සිටිමු යාළුවේ.

ම-යනු ල-යනු මල කියමු
එකයි දෙකයි ඇට ගනිමු
සිංදු කියලා සතුටු සිතින්
සැහැල්ලුවෙන් ඉගෙන ගමු.

එම්.එස්.තිලකසිලි
ගුරු උපදේශක(ප්‍රාථමික)
කලාප අධ්‍යාපන කාර්යයාලය.
ත්‍රිකුණාමලය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு ஆசிரியர்களின் பணி

இறைவனின் படைப்புகளுள் மிகச் சிறந்த படைப்பு மனித இனமாகும். இறைவன் உலகை மிக அழகாகப் படைத்து, அதனை அனுபவிக்க மனித உயிர்களைப் படைத்தான். அம் மனிதனுக்கென்று மிக அழகிய குணங்களையும் வழங்கினான். அவற்றை முன் மாதிரியாகக் கொண்டு மனிதன், தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்தலே படைப்பின், பிறப்பின் பயனாகும்.

இம்மானிடப் பிறவி, உலகில் பல்வேறு விதங்களில் தன் பங்களிப்பினை செய்து வருகின்றது. அவற்றின் எதிர்விளைவுகளும் பல்வேறு வகையில் அமைந்து விடுகின்றது. எனினும், ஆசிரியர் பணியின் மகத்துவத்தைப் போன்று, அதன் எதிர்விளைவினைப்போன்று மனிதனின் பிற பங்களிப்புகள் எதுவும் அமைந்து விடாது எனலாம்.

உலகிலுள்ள ஏனைய தொழில்கள் அனைத்தும் தொழில்கள் எனப்பட, மருத்துவமும் ஆசிரியர் பணியுமே பணிகள் எனப்படுகின்றன. ஏனெனில், அவை தன்னலங்கருதாது ஆற்றப்படும் சேவையாக அமைந்துள்ளன. மருத்துவம் உயிர்களைக் பாப்பது போல ஆசிரியப் பணியும் உலகிலுள்ள பலகோடி உயிர்களைப் பாதுகாக்கின்றது.

ஆசிரியர் ஒருவர் தனது வல்லமையின் மூலம் மாணவர் சமுதாயத்தை சிறந்த வகையில் மாற்றி அமைத்திட முடியும். அச் சேவையின் தாற்பரியத்தை உணர்ந்து ஒவ்வொரு ஆசிரியர்களும் சேவையாற்றுகின்ற போது ஆசிரியர் சேவையின், அப்பணியின் பெறுமதியினை உணர்ந்து கொள்ள முடியும்.

மாணவர்கள், ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டிருக்கும் நம்பிக்கைக்குரிய சொத்துக்கள். அம் மாணவச் செல்வங்களைப் பாதுகாத்து மீளவும் சமுதாயத்திடம் கையளிக்கும் கடமை ஆசிரியர்க்கு உள்ளது. எனவே, ஆசிரியர்கள், தங்களை மாணவர்களின் பாதுகாவலர்களாகக் கருதி, அவர்களை மிக அவதானத்தோடு வழி நடத்துதல் வேண்டும். தம்மால் இயன்றவரை ஒரு தாயின் பரிவோடு அரவணைத்து வழிநடத்துதல் சாலச் சிறந்ததாகும்.

முன்னைய காலம் போன்றதல்ல, இன்றைய சூழல், மிக அண்மைக்காலமாக சமுதாயம் அதிவேக மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. இதனால், மாணவர் சமுதாயம் பலத்த சவால்களை எதிர்கொள்ள வேண்டிய, தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

நாகரிக மோகத்துக்கு அடிமையாகுதல் மனித வரலாற்றில் புதியதல்ல."பழையன கழிதலும் புதியன புகுதலுமே கால வகையினானே" எனப்படுகின்ற போது, அம்மாற்றங்களை மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொண்டாக வேண்டிய நிலை இருக்கின்றது. எனினும், இந்நூற்றாண்டில் இளம் சமுதாயம் வழிகெட்டுப் போவதற்கும் இப் புதியன புகுதலே காரணமாக இருக்கின்றது.

உளவியலாளரின் கருத்துப்படி, மாறுகின்ற இளமைப் பருவமே மிகச் சிக்கல் வாய்ந்தது. இப்பருவத்தை ஒருவன் கடந்து விட்டால் அவன் வாழ்க்கையில் வெற்றிபெறும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும். எனவே, மாணவரின் இவ்வாறான பருவ கால கட்டத்தின் போது அவர்களைச் சிறந்த முறையில் வழிநடத்த வேண்டிய தார்மீகக் கடமையும், பொறுப்பும் ஆசிரியர் மீதே சுமத்தப்படுகின்றது.

இன்று இளம் மாணவர் மத்தியில் பல்வேறு விரும்பத்தகாத நடத்தைகள் வெளிப்படுவதை நாம் வெளிப்படையாகக் காணலாம். ஆசிரியரை அவமதித்தலும் எதிர்த்தலும் ஊடகங்கள் மூலம் நாம் அறிந்து கொள்வது மட்டுமல்ல சில சந்தர்ப்பங்களில் நாமும் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகளாக அமைந்து விடுகின்றன.

இவ்வாறான எதிர்மறையான சூழ்நிலைகளில் ஆசிரியர் நிதானத்தைக் கைக்கொள்வது இன்றியமையாதது. ஆசிரியரைப் பற்றி சிலர் குறிப்பிடும் போது கடவுளின் பிரதிநிதி என்பர். எனவே ஆசிரியர் தனக்குரிய இயல்பான குணங்களை கைவிட்டு மாணவரின் நன்னடத்தைக்கு வழிகோலும் வகையில் நடந்து கொள்ளல் வேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள், பெற்றோர்களைவிட ஆசிரியர்களையே தமக்கு எல்லாமாக நினைக்கின்றனர். பெற்றோர் சொல்கின்ற சில கருத்துக்களை விடவும் ஆசிரியர் சொல்வதை தெய்வவாக்காக கொள்கின்றனர். அது போன்று, தம்மால் கட்டுப்படுத்த முடியாத பிள்ளையை அல்லது தமக்குக் கட்டுப்படாத பிள்ளையை ஆசிரியரைக் கொண்டு திருத்த முடியும் எனக் கருதும் பெற்றோர், தமது பிள்ளையைப் பற்றி ஆசிரியரிடம் முறையிடுகின்றனர் அப்படியென்றால், ஆசிரியரால் முடியாதது எதுவுமில்லை என்றாகிறது அல்லவா?

கண்டிப்பும் கனிவும் ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும். மாணவன் தவறு செய்கின்றவேளை அவனை அன்போடு கண்டித்தல் வேண்டும். "நல்ல குருநாதர் வருத்துவது கொல்லவல்ல" என்பதை மாணவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

மாணவர் வாழும் இன்றைய சூழல் அவர்களை பாதை மாறச் செய்கின்றது. அவர்களுக்கு சிறந்த ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் ஆசிரியர் வழங்க வேண்டும். உண்மையில், அவர்கள் பிள்ளைகள் மட்டுமே என்பதை ஆசிரியர் உணர வேண்டும். வேறொரு வகையில் சொல்வதனால் மாணவர்கள் களிமண்ணைப் போன்றவர்கள். அக் களிமண்ணில் கடவுள் வடிவத்தையும் செய்யலாம், குரங்காகவும் செய்யலாம். ஆனால், கடவுள் வடிவத்தை மட்டுமே செய்ய வேண்டும் என்ற எண்ணமே ஆசிரியருக்குள் ஊடுருவியிருக்க வேண்டும்.

நாளைய சமூகத்துக்கு நல்ல இளம் சமுதாயத்தை வழங்க வேண்டிய மாபெரும் பொறுப்பு ஆசிரியர் சமூகத்துக்கு உள்ளது. ஆசிரியர் தனக்குள்ள பொறுப்பினை, அதன் கனதியினை உளப்பூர்வமாக உணர்ந்து கடமையாற்ற வேண்டும். தனது சேவையின் மூலம் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் மேன்மை பெறுகிறது என்று கருதிக் கொள்வது, ஆசிரியர் தம்மை நெறிப்படுத்திக் கொள்ள உதவியாக அமையும்.

இன்று பல்வேறு ஊடகங்களிலும் நலம் அறியக்கூடியதாக அமைந்துள்ள செய்திகள், ஆசிரியர்களின் தவறான நடத்தைகள் தொடர்பானவையாகும். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல மாணவர்கள், நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கைச் சொத்துக்கள் என்பதை ஆசிரியன் உணர்ந்து நடப்பானேயாகில், இத்தகைய தவறுகள் நேர இடம் ஏற்படாது.

பல்வேறு சூழ்நிலைகளிலிருந்தும் பாடசாலைக்கு அனுப்பப்படும் மாணவர்கள், ஆசிரியர் சமூகத்தை நம்பியே பாடசாலையில் தரிக்கின்றனர். அவர்களுக்கு அநீதம் செய்ய நினைப்பது மாபெரும் துரோகமாகும். ஆசிரியப் பணிக்கே அவமானத்தை ஏற்படுத்தி, அதன் கௌரவத்துக்கே உலை வைக்கும் செயலாகும் என்பதை ஒவ்வொரு ஆசரியர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

மாணவன் ஒருவனை நல்வழிப்படுத்தி, இப் பூவுலகில் நன்றாக வாழவைக்கும் மனமகிழ்வுக்கு ஈடாக எதனையும் சொல்ல முடியாது. நம்மால் கற்பிக்கப்பட்ட மாணவன் ஒருவன் மற்றவர் புகழும் வகையில் நம்முன் வந்து நின்று,"நான் உங்கள் மாணவன், உங்கள் பிள்ளை" என்று கூறும் உன்னத மதிப்பினைப் பெற ஆசிரியர் அயராது உழைக்க வேண்டும்.

பெரியவர் தவறு செய்யும் சந்தர்ப்பம் இருக்கின்ற போது இளம் பிள்ளைகள் தவறு செய்வது பாரதூரமான குற்றமல்ல. ஆனால், அப் பிள்ளையை ஆசிரியர் பாராமுகமாய் விட்டுவிடுவது குற்றமாகும்.

ஆசிரியர் ஒருவர் மாணவருக்கு தாயாக, தந்தையாக, தோழனாக இருத்தல் விரும்பத்தக்கது. அன்பு காட்டுவதில் அன்னையாகவும். கண்டிப்பில் தந்தையாகவும் வழிகாட்டுவதிலும் உதவுவதிலும் தோழனாகவும் இருத்தல் வேண்டும். தவறான பாதையில் மாணவன் செல்லும் போது அவனை, அவன் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கருத்துக்களைக்கூறி வழிப்படுத்த வேண்டும்.

"அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பர். ஆசிரியரின் விடாமுயற்சியே மாணவரை நல்வழிப்படுத்தும், தன் முயற்சியில் மனந்தளராத விக்கிரமாதித்தன் போல மாணவர்களை வழிப்படுத்துவதில் ஆசிரியர் வெற்றிகாண வேண்டும்.


மாணவரிடம் காணப்படும் குற்றங்களைக் களைபவனே, ஆசிரியன். அப்படியிருக்க, ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்தும் செயலில் சோர்வடைவது நல்லதல்ல. அவர்களது குற்றங்குறைகளை எடுத்துக்கூறி நேர்வழி காட்டுவது நல்லவற்றைச் செய்கின்ற போது பாராட்டுவதும் ஆசிரியருக்கு உகந்த செயல்களாகும். எனவே, ஆசிரியப் பணியின் மகத்துவத்தை உணர்ந்து மாணவர்களின் உன்னத வாழ்வுக்கு வழி வகுப்போம்

**Mrs.S.M.Lafeer**

**Kumbrupiddy MMTMS**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ඇඳුරිඳු සඳකි නුඹ ලොව එකලු කළ.........................

ගුවන් තලයේ ගුරු ගෙදර වෙත නුඹෙ පා යුග එසවුනා
පුංචි තරුවකි නුඹ එවක මට නිවි නිවි දිලිසුනු මනා
සිප් අහස තරණය කළත් නුඹ දුරයි මඟ තව නොදැනෙනා
තබම් පා යුග නුඹෙ අත් පොඩි සමඟ දස අත සරමිනා

නැණ පහන් සිළු දල්වතොත් මා නුඹ දිවිය ඉන් සැරසුනා
ගගන සිව්දෙස සිසාරා තරුකැට ලෙසින් නුඹ දිලිසුනා
තරු පොකුර නුඹ අහස් තලයේ සඳේපහසට නතු වුනා
සඳේ කිරණින් ගගන තරු පොඩි දැනුම සයුරේ සැනහුනා

අඳුරු ලොවේ ආලෝකය විහිදන්න
පුත නුඹ සඳකි ඒ අහසේ බබළන්න
තරු කැට වෙමින් එළි දසතම විහිදන්න
දිව රෑ වෙහෙසවෙමි නුඹ නිසිමඟ යවන්න

සිප් කිරි පොවා නුඹ යහ මඟ ගෙනයන්න
දුසිරිත් අකටයුතුකම් මඟ හරවන්න
ගුණ නුවණින් පිරිපුන් ලොව තනන්න
අධිටන නුඹව අහසෙහි ඉම බබලන්න

විඳු මව් තුරුලේ සැතපුන දූ පුතුනි මගේ
ආ මඟ කොටිය යා යුතු මඟ දුරය පුතේ
අවිඳු අඳුර දුරු කළ යුතු මඟ දෙපසේ
පෙන්වමි නුඹට නොපැකිල මා සිප් අහසේ

අනෙක දුක් ගැහැට මැද නුඹෙ ලොව තැනුවා
කුසගිනි සහවාගෙන නුඹ කුස පිරෙව්වා
නුඹෙ ලොව දිනන්නට නිති වෙරවීරි දැරුවා
මව්පියතරමටම ගුරු මව වෙහෙස වූවා

හෙට ලොව රජ කිරුළ හිමි නුඹටයි කියලා
යා යුතු මඟ සිළුවක් දල්වාලා
ලොව දිනනා පැතුම සිත තුළ පහන් වෙලා
මගේ දූ පුතුනි නුඹෙ ජය වැඹ එකාලු කළා

ගුරු මව් පියවරුන් මුර දේවතා එළි
නුඹ යා යුතුය ඒඅතරින් නොකර මැලි
යන මඟ දෙපස ඇති වන පහන් සිතුවිලි
පහසකි නුඹෙ ගුරු මව් පිය හට නොසැලි

සොඳනහස දැනුම අවබෝධය ලබා දෙමින්
විඳු මව් තුරුලේ උණුසුම අත් විඳිමින්
විල පිපි තඹර නුඹය ජය ශෝභා නගමින්
හිරු රැස් කිරණ විහිදයි පවන සරසමින්



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

විදු ලොව පරතෙරට යන මහ පෙන්වූවා
හරිත ලොවක තැබුමට මා වෙහෙසවූවා
අඩියෙන් අඩිය පියවර නුඹ එසවූවා
දරුවනි නුඹෙ නැණ පහන මා දැල්වූවා

**503**

කවියක මිහිරි බව දන්නා මිනිසුන්නේ
හදවත ඔබෙ මිහිරි ද මම නෑ දන්නේ
කවි සිත කියවලයි මම කවි අදින්නේ
කවිකම් දන්න සිත නෑ මම හඳුනන්නේ

කවියට පෙම් බදිම් මට නැත කිසි බාධා
මා දියවී වියකුණත් කවියට මා පෙම් බැන්දා
ලස්සන සිතුවිලි උන් ලියනා හන්දා
මා තුඩ ලියයි ඒ කවි තොසින් සදා

අරුමෙකි මිනිසුනේ උඹලගේ ජීවිතය
විටකදි සිනාසෙයි හදවත් පිවිතුරුය
හඩන විටදි කඳුලින් ලියවෙයි කවිය
තරහ සුසුම් පෙම් සිතවිලි සුන්දරය

මම වියතෙකැයි විටකදි මම හිනැහෙනවා
ඇයි මට ඔහුගේ සිතුවිලි හැම හඳුනනවා
හොඳ හෝ නරක හදවත් මේ ලොව නැතුවා
විටකදි හොඳත් නරකත් හද අමතනවා

කවි සිත මනරම්ය සිතුවිලි ලියනා අකුර
ලියැවුණේ කවිමයි ගැඹුරෙන් හොඳ හෝ නපුර
පා කර හරියි කවියා සිතුවිලි සයුර
අටලෝ දහම ඉදිරියෙන් ඇත කවි පවුර

සෙනෙහින් සවිය වූ තටු ඇති වියඟුන්නේ
අත්තටු රිදෙන්නට පියෑඹූ සියොතුන්නේ
නුඹෙ හද ගගන පිරාලා ඇවිදින්නේ
කවිකම් බැරි නෑ උඹ ඒවය මම ලියන්නේ

සාමය සතුට අයදින මිනිසුන් සිටින
ලෝකෙක මමත් ආසයි සැමදා ඉන්න
යුද ගිනි දැල් එපා කී උන් සිත් දැහැන
අගයමි පෑන් තුඩ මම ඒවා ලියන

සිත් කතරට වැහි බිඳුවක් ආදරය
නිම කළ නොහැක ලියලා එය විසිතුරුය
මව් පිය දෙපල සොහොයුරු පෙම සුන්දරය
පෙම් කවි ලියන කවි සිත හරි පෙම්බරය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ஆசிரியர்கள்: பிரச்சினைகளும் அறைகூவல்களும்

## அறிமுகம்

பாடசாலை என்ற சமூக நிறுவனத்தின் மையச் சக்கரமாகத் தொழிற்படுபவர்கள் ஆசிரியர்களே. கல்வி அமைச்சு, தொழிற்சங்கங்கள், பெற்றோர், பாடசாலை முகாமைத்துவம், மாணவர்கள் போன்ற பல வகைப்பட்ட பொறுப்பு மிக்கவர்கள் பாடசாலையின் தொழிற்பாடுகளில் பங்கேற்கின்றனர். எனினும் அவர்கள் அனைவரையம் விட ஒரு படி உயர்ந்தவர்களாக ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

எனினும் அண்மைக் காலத்தில் அரசியல்வாதிகள், சமூக உளவியலாளர்கள், நீதித்துறையினர், பொருளியலாளர்கள், கல்வித்திட்டமிடலாளர் போன்ற அனைவரும் கல்வி முறைமையின் தோல்வி, குறிப்பாக பாடசாலைக் கல்வி முறைமையின் குறைபாடுகள் பற்றி அதிகமாகவே பேசி வருகின்றனர். அத்தகைய விவாதங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் "ஆசிரியர் பலவீனங்கள்" என்ற கருப்பொருளைச் சூழ்ந்தனவாக அமைந்து விடுகின்றன.

ஆசிரியத்தொழில், பாடசாலைக்கல்வி, மாணவர் செயற்பாடுகள் என்பவற்றுடன் எவ்வகையிலும் தொடர்பற்ற நிறுவனங்கள், நபர்கள் கூட ஆசிரியப்பணி பற்றியும் ஆசிரியர் பண்பு நலன்கள் பற்றியும் விமர்சிப்பதையும் எழுந்தமானமாக புத்திமதிகள் கூறுவதையும் காண முடிகின்றது. சமூக நிறுவனங்களான பாடசாலைகள் சமுதாயத்துக்காகவே பிள்ளைகளை வடிவமைக்கின்றன. இந்த வகையில் சமூகப் பிரஜை உள்ள எவரும் ஆசிரியர் பற்றிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

எனினும் அவர்களது பக்கத்திற்கு சிறிது நகர்ந்து சென்று அவர்களது கண்ணோட்டத்தின் படி பார்த்தால் அவர்களது பிரச்சினைகள், உள நெருடல்கள், அறைகூவல்கள் என்பனவற்றைப் புரிந்து கொள்ள முடியும். ஆசிரியர் பற்றி நடுநிலையான நியாய பூர்வமான விமர்சன சூழலை உருவாக்குவதற்கு அவ்வாறான புரிந்து கொள்ளல் அவசியமாகிறது.

இந்தப் பின்னணியில் தான், ஆசிரியர்களின் பிரச்சினைகள் மற்றும் அறைகூவல்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

## பாடசாலையும் ஆசிரியரும்

கல்வி என்றவுடன் தொடர்ந்து நினைவுக்கு வரும் மற்றொரு எண்ணக்கரு பாடசாலையாகும். சமூக செயன்முறையின் இன்றியமையாத ஒரு படிமுறை பிள்ளைகள் கல்வி கற்பதும் அதன் வழியாக சமூக இடைவினையுறவுகளை விருத்தி செய்வதுமாகும். பாடசாலையும் ஒரு சமூகக் குழுமம் தான். பல்முனைப்பட்ட தொடர்பாடல்களும் தொடர்புகளும் பாடசாலை ஊடாக, விருத்தி செய்யப்படுகின்றன. மனித உறவுகள் பற்றி விஞ்ஞான பூர்வமான பொதுமையாக்கல்களை, மனித் தொடர்புகள் பற்றிய விஞ்ஞான பூர்வமான பொதுமையாக்கல்களை கல்வி முறைமையினுள் உருவாக்குவதில் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற முறைசார் நிறுவனம் பெரும் பங்காற்றுகிறது. பாடசாலையின் பங்களிப்பை பின்வருமாறு ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியும். (Brook over and gottlieb 1964)

1. குறித்த கலாசார சூழலுக்கு அமைவாக சமூக வலு மற்றும் கட்டுப்பாட்டுக்கு ஏற்ற முறையில், சமூக, பொருளாதார மாற்ற செயன்முறைக்குரியதாக, சமூகவர்க்கம், அந்தஸ்து நிலைகளின் படி இன, மொழி, ஏனைய குழுமங்களுக்குரிய வகையில் செயற்படுவதன் மூலம் சமூகமயமாக்கலை ஏற்படுத்துகின்றன.
2. நிறுவனக்கட்டமைப்பு முறைமைக்குள்ளேயே தெளிவான மாணவ கலாசாரத்தை பாடசாலை தொழிற்படும் சமூக கட்டமைப்புக்கு இசைவுடைய முறையில், விருத்தி செய்கிறது. விழுமியம், உளப்பாங்கு, நடத்தை என்பவற்றைத் தேவையான வகையில் ஒழுங்குபடுத்துகின்றது.
3. பாடசாலைக்கும் ஏனைய சமூகக் குழுக்களுக்கும் இடையில் ஒழுங்கு முறையான இடைவினையுறவை விருத்தி செய்கின்றது. சமூகத்தின் பிரதிமை என்ற வகையில் பாடசாலைச் சமூகக் குழுக்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தவல்லது. பாடசாலை சாராத சமூக முறைமையை தன் தொழிற்பாடுகளினூடாக பாதித்து சூழல் மற்றும் குடிசனவியல் காரணிகளுக்கு அமைவாகத் தொழிற்படுகிறது.

இத்தகைய பாடசாலையில் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானதும் தாக்க விளைவுகளை ஏற்படுத்தவல்லதுமாகும். ஆசிரியர்கள் எத்தகைய சமூக பின்னணியைச் சார்ந்தவர் என்பதும், அவர்களது வயது, பால்வகை, திருமண வாழ்வு முறை, அவர்களது கல்விப் பின்னணியும் தொடர் கல்வி நாட்டமும் எவ்வாறமைந்துள்ளன என்பதும் முக்கியமானது. தொழில் பற்றிய நோக்கு, தொழில் ஈடுபாடு, தொலை நோக்கு, விழுமிய நம்பிக்கைகள் என்பவற்றுக்கேற்ப அவர்களது பாடசாலைப் பணி அமைகிறது.

இலங்கைப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களான இரண்டு இலட்சம் பேரும் கிராம, நகர பாடசாலைகளில் தொழில் புரிபவர்களே. பெருமளவுக்கு அரச நிதியில் அரச கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் இயங்கும் பாடசாலைகளில் பணிபுரிபவர்களே. அரச உத்தியோகம் என்ற நோக்கில் பாதுகாப்பு மிக்க சுதந்திரம் மிகுந்த தொழிலாக நேரடி முகாமைத்துவக் கட்டுப்பாடற்ற தொழிலாக இலங்கையர்கள் ஆசிரிய தொழிலை நோக்குகின்றனர்.

தாதியர் தொழில் போன்றே ஆசிரியத் தொழிலும் பெண்களால் விரும்பித் தெரிவு செய்யப்படும் தொழிலாக விளங்குகிறது. வளர்முக நாடுகள் பொரும்பாலானவற்றில் இதே போக்கு தென்படுகிறது. அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட காலத்தால் முந்திய ஆய்வு (National Survey, USA 1956) ஒன்று பெண்கள் ஆசிரியர்களாக பெருமளவு விரும்பிப் பணியாற்றுதற்கு பின்வரும் காரணங்களை இனங்கண்டுள்ளது.

- ❖ தாய்மைப் பண்புடன் தொடர்புடையது.
- ❖ இளையோரை– சிறார்களை சமூக மயப்படுத்துவது.
- ❖ இளையோருக்குப் பயிற்சியளிப்பது.
- ❖ இளையோருடன் பணிக்காலம் முழுவதும் வாழ்வது

இலங்கையிலும் ஆசிரியப் பணியில் பெருமளவுக்கு பெண்களே உள்ளனர். ஒரு ஆசிரியரையே வாழ்க்கைத் துணைவராக பெற விரும்புகிறனர். இதனால் குடும்ப, வாழ்வுத்தொழிலாக "கற்பித்தல்" அமைந்து விடுகிறது.

இவ்வாறே இளைய வயதினரும் உயர் கல்வி மற்றும் மிக பயிற்சி கொண்டவரும், சொந்தப் பிரதேசங்களிலேயே வாழ்நாள் முழுவதும் வசதிமிக்க பாடசாலைகளில் கற்பிப்பவர்களுமான தொகுதியினர் உள்ளனர். இவர்கள் பாதுகாப்பும் வசதியும், மகிழ்ச்சியும் கொண்டவர்களாக இனங்காணப்படுவர்.

மற்றொரு தொகுதியினர் வயதில் கூடியவர்களாகவும், உயர் கல்விக்கான வாய்ப்புக் கிட்டாதவர்களாகவும்,குடும்பங்களை விட்டு விலகி தொலைதூரக் கிராமங்களில் வசதிகளற்ற பாடசாலைகளில் தீங்குறு சமூகத்தின் பிள்ளைகளுக்கு வசதி வாய்ப்புக்களற்ற சூழலில் வாழ்நாள் முழுவதும் கற்பிக்கின்றனர். இவர்கள் கவனிக்கப்படாதவர்கள். தமது பிரச்சினைகள் தேவைகள் பற்றி வெளிப்படுத்துவதற்கு ஊடாக செல்வாக்கும், அரசியல் செல்வாக்கும் அற்றவர்கள், புதுமையான கல்வி பற்றிய உணர்வுகளுக்கு உட்படாமலே தமது வாழ் தொழிலை நிறைவு செய்பவர்கள்.

இந்த இரண்டாவது தொகுதி ஆசிரியர்களே அதிகளவுக்கு பிரச்சினைகளையும் அறைகூவல்களையும் எதிர்கொள்கின்றனர். இதன் கருத்து, முதல் தொகுதியினருக்கு இத்தகைய தடைகள் இல்லை என்பதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறைகூவல்களும், பிரச்சினைகளும்**

ஆசிரியர்கள் தெளிவானதும், மிக இறுக்கமாக பின்பற்றப்படுவதுமான விதிமுறைகளின் படி ஏற்பாடுகளும், அரசியல் ஆதரவும் இன்று வரை முறையாக வளர்க்கப்படவில்லை. சமூக முரண்பாடுகள், அரசியல் தேவைப்பாடுகள் என்பன தொடர்பாக எழக் கூடிய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக தொழில் வாய்ப்பு வழங்கக் கூடிய வசதி மிக்க துறையாக ஆசிரிய நியமனம் விளங்கு கிறது. வேறு வகையில் கூறுவதானால் ஆசிரியத் தொழில் நியமனம் சார்ந்த நெகிழ்வுப் பண்புகளே இத்தொழிலை பலவீனமானதாக்கி சமூக மதிப்பும், வலுவும் குறைந்ததாக்கியுள்ளது.

இத்தகைய பலவீனான துறையினுள் இணைந்து கொண்டவர்கள் எவ்வாறு பலமானவர்களாக – வல்லாமை மிக்கவர்களாக தொழிற்பட முடியும்? இது ஆசிரியத் தொழில் முறைமையின் கட்டமைப்புப் பற்றிய பற்றிய பலவீனமும் பிரச்சினையுமாகும்.

பெரும்பாலான ஆசிரியர்கள் பொருளாதார ரீதியில் பலவீனமான்; உளவியல் ரீதியில் தாழ்வுணர்ச்சிக்குட்பட்டவர்கள்; நேர் கோட்டிலான நிலைக்குத்து மாதிரி தொழில் முன்னேற்ற வாய்ப்பு அற்றவர்கள்; ஆசிரியர்கள் தொடர்பான நிறுவனங்கள் மற்றும் உயர் அலுவலர்கள் தொடர்பாக எதிர்மறை உணர்வு – அவ நம்பிக்கை கொண்டவர்கள்; தமது சொந்த உணர்வு, கருத்து என்பவற்றை வெளிப்படத் தயங்குபவர்கள்; அதற்கேற்ற நிறுவன முறைப்பலம் அற்றவர்கள்; தொழிற்சங்க செயற்பாடுகளிலும் அரைகுறை நம்பிக்கையுடையவர்கள்.

இவ்வாறு பலவீனமான தொழிற்துறையினராக ஆசிரியர்களை மாற்றிய வலுமிக்க காரணிகளை இனங்காண வேண்டும். அவை தான் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் அறைகூவல்களும் பிரச்சினைகளுமாகும். இவற்றைப் பின்வருமாறு குறிப்பிட முடியும்.

**கல்விச் சீர்திருத்தங்களும் பாடம் தொடர்பான மாற்றங்களும்**

இலங்கை அனுபவத்தில் கற்பிக்கப்படும் பாடங்களின் உள்ளடக்கம், தொடர்பாக பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. சில பாடங்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. சில பாடங்களில் சில பகுதிகள் அகற்றப்படுகின்றன. முற்றிலும் புதிதாக சில பாடங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இதற்கான முன் பயிற்சி போதிய கால அவகாசத்துடன் வழங்கப்படுவதில்லை. அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டு நியமிக்கப்படுவதில்லை. முழுமையான வாண்மைத் துறையாக வளர்ப்பதற்கான விதிமுறைகளும், வள ஒதுக்கீடும், நிறுவன நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனால் கற்பிக்கும் ஆசிரியர் அதிக நெருக்கடிக்குள் உள்ளாகின்றனர். கற்பித்தலில் மன நிறைவு ஏற்படுவதில்லை. மாணவர்களிடமும் பாடசாலை நிர்வாகத்திடமும் திருப்தியை ஏற்படுத்த முடிவதில்லை. வேண்டாத மன உழைச்சலுக்கும் உட்படுகின்றனர். 1972 கல்விச் சீர்திருத்தத்தின் போது சமூகக்கல்வி ஆசிரியர்கள் இத்தகைய நெருக்கடிகளை எதிர்கொண்டனர். 1997 இல் அறிமுகப்படுத்தப்பட்டு 2000 ஆண்டளவிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய கல்விச் சீர்திருத்தத்திலும் இணைந்த கணிதம், உயிரியல் பாடங்கள் தொடர்பாகவும் இதே நெருக்கடிகளை எதிர் கொண்டனர்.

வேறு பல சந்தர்ப்பங்களில் கற்பித்தல் முறைகளிலும் புதிய மாற்றங்கள் வேண்டப்படுகின்றன. அதற்கும் உரிய காலத்தில் பயிற்சிகளை வழங்குவதற்கு ஒழுங்கான ஏற்பாடுகள் இருப்பதில்லை. புதிய கணிதம், ஆங்கில பாடபோதனை தொடர்பாக அப்பாட ஆசிரியர்கள் இதேவகை நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்தனர். சில மாற்றங்கள் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் மூலமாகவே அறிவுறுத்தப்படுகின்றன. குறுகிய கால பயிற்சிகள் அவ்வப் பிரதேசங்களில் சேவைக் கால ஆலோசகர்களினால் நடாத்தப்படுகின்ற போதிலும் எல்லாப் பாடசாலைகளிலும் கற்பிக்கும் அதே பாட ஆசிரியர்கள் அனைவரையும் ஒரே நாளில் பாடசாலை நிர்வாகம் அனுப்புவதில்லை. பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பது இதற்குக் காரணமாகும். ஆனால் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லாமலே கற்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர். இது ஆசிரியர்களால் தவிர்க்க முடியாத பிரச்சினையாகும்.

**பாடநூல் கிடைத்தல்**

தெற்கில் நகரங்களிலுள்ள பாடசாலைகள் தவிர்ந்த பெரும்பாலான பாடசாலைகளுக்கு குறிப்பாக வடகிழக்கு பிரதேச பாடசாலைகளுக்கு பாடநூல்கள் உரிய காலத்தில் எல்லா மாணவர்க்கும் போதியளவில் வழங்கப்படுவதில்லை. ஆனால் தேசிய பாடத்திட்ட நடைமுறை என்ற வகையில் பாடப்புத்தகங்களின்றி கற்பித்தல் பொருத்தமற்றது. கலைச்சொற்கள், எண்ணக்கருக்கள், புள்ளிவிபரங்கள், விளக்கப்படங்கள் என்பன எவ்வித முரண்பாடுகளுமின்றி கட்டாயமாக கற்பிக்கப்படவேண்டுமெனவற்புறுத்தப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய நூல்கள் வழங்கப்படாத நிலையில் ஆசிரியர் வகுப்பறைச் சூழலை ஒழுங்குபடுத்த முடிவதில்லை. பாடக் கவன இழப்புக்களுக்கு ஆளாகின்றனர். அவர்களது சுயகௌரவம் பல சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படுகிறது. இவை அனைத்தும் பெரும்பாலும் அனைத்து ஆசிரியருக்குமான நெருக்கடியாகும். தொடரும் பிரச்சினையாகும். இதனால் அதிகம் மனம் நொந்து போன தொழில் அணியினராக ஆசிரியர்கள் இயங்குகின்றனர். ஆசிரியர்களின் சுயதேடல் இன்மையும் இதற்கு ஒரு காரணமாகும்.

### முகாமைத்துவ உபாயங்கள்

பாடசாலையின் உள்ளேயும், பாடசாலைக்கு வெளியே கோட்ட, வலய, மாகாண, மத்திய அலுவலக, மற்றும் அமைச்சு மட்டத்திலும் முகாமை செய்யப்படுபவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர்.

முகாமைத்துவக் கோட்பாடு உபாயங்கள் நுட்பங்கள் என்பவற்றுக்கு அமைவாகவே எந்த மட்டத்திலும் முகாமையாளர்கள் செயற்படுகின்றனர். பாடசாலை அதிபர், பணிப்பாளர் போன்றோர் அவ்வாறே தொழிற்பட வேண்டுமென வற்புறுத்தப்படுகின்றனர். இதனால் பல முறைசார் வழிமுறைகளும் முறைசாராத வழிமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. நிலவுகின்ற பொருளாதார, சமூக, அரசியல் முறைமைக்கு அவர்கள் சிலவற்றை மாற்றியும், விடுத்தும் செயற்படுகின்றனர். அவர்களது நோக்கில் இவை சரியானவை.

ஆனால் பாடசாலை ஆசிரியர்களை பல சமயங்களில் அவை பாதிக்கின்றன. பகுதித் தலைவர், பிரதி அதிபர், உப அதிபர் பதவிகளும் தமக்கு தகுதிப்படி கிடைத்தல் வேண்டும் என்றும், ஆனால் அவ்வாறு நிகழ்வதில்லை என்றும் பல ஆசிரியர்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர். தனிநபர் செல்வாக்கு, பணித்துறை உயர்நிலைத் தொடர்புகள், தொழிற்சங்கத் தொடர்புகள், பிரதேச உணர்வுகள் போன்ற பல காரணிகள் தமது பதவியுயர்வைத் தடை செய்வதாக குறைப்படுகின்றனர்.

இவற்றை இயன்றளவுக்கு ஒழுங்குபடுத்தி அவர்களது நம்பிக்கையை முகாமை வென்றெடுக்க வேண்டும். வெளிப்படையான அணுகு முறைகளைக் கடைப்பிடிப்பதனால் மனித உரிமை மன்றங்களில் ஆசிரியர்கள் முறையிடுவதைக் குறைக்கலாம்.

### பாடசாலை ஆசிரியர் வசதிகள்

பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியர்களுக்கு ஈர்ப்பை அதிகரிக்க முடிவதில்லை. கற்பித்தலில் வினைத்திறனையும் பேண முடிவதில்லை.

உரிய வசதிகள் பற்றிய அக்கறையும், செயற்பாடும் போதியளவில் இருப்பதில்லை. ஆசிரியர் அறை, வாகன தரிப்பிடம், கழிவறை, தேனீர்ச்சாலை, குடிநீர் வசதி போன்ற எதுவுமே சீராக வழங்கப்படாத அனேக பாடசாலைகள் உள்ளன. கிராமப் புற சிறிய பாடசாலைகள், நகர்ப்புற சிறிய வறிய பாடசாலைகள் பலவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்கள் நாளாந்தம் இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

வசதிகளை வழங்காமல் எவ்வாறு பாடசாலை அவர்களது கடமைகளை வற்புறுத்த முடியும்? அது எவ் வகையில் நியாயமானது?

தொலை தூரத்திலிருந்து பயணம் செய்யும் ஆசிரியர்கள், குறிப்பாக பெண் ஆசிரியர்கள் அதிக துன்பப்படுகின்றனர். இதனால் அதிக நாட்கள் லீவு எடுக்கின்றனர். வயது முதிர்ந்த ஆசிரியர்கள், கர்ப்பிணியான ஆசிரியர்கள், நோய்க்குட்பட்ட ஆசிரியர்கள், உடல் ஊனமுற்ற ஆசிரியர்கள் போன்ற அசாதாராண நிலையில் உள்ளோர்க்குக் கூட எவ்வித வசதியும், பாதுகாப்பும் பாடசாலைகள் பலவற்றில் இல்லை. அதிகளவு துயரங்களுடனும் கற்பிக்கின்றனர். அவர்கள் அர்ப்பணிப்பும் வினைத்திறனும் கொண்டவர்களாகப் பணியாற்ற முடிவதே இல்லை. வடகிழக்குப் பாடசாலைகளில் இன்று வரை இத்தகைய அசௌகரியங்கள் அகற்றப்படவேயில்லை.

பெற்றோர் ஆசிரியர் சங்கம், வெளிநாட்டில் வசிக்கும் பழைய மாணவர்,அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் உதவியைப் பெற்று பாடசாலை நிர்வாகம் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முயலவேண்டும்.

### போக்குவரத்தும் இடமாற்றங்களும்

ஆசிரியர் பிரச்சினைகளில் தேசிய ரீதியாகவே முக்கியமானது இடமாற்றம் தொடர்பான பிரச்சினை தான். எனினும் வடக்கு வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் இது ஒரு அரசியல், சமூக பிரச்சினையாகவும் வடிவெடுத்து பலமடைந்துவிட்டது. அமைச்சும் தொழிற்சங்கங்களும், கல்வித் திட்டமிடுவோரும் இணைந்து ஒழுங்கான இடமாற்றச் செயற்றிட்டங்களை வடிவமைக்க வேண்டியுள்ளது.

பல ஆசிரியர்கள், வசிப்பிடங்களிலிருந்து தொலைவில் உள்ள பாடசாலைகளுக்கு செல்கின்றனர். அதிக தொலைவானால் குடும்பத்துடன் சென்று வசிக்க வேண்டும். அவ்வாறன்றி 20 -25 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாடசாலைக்கு பெண் ஆசிரியர்கள, வயது முதிர்ந்த ஆசிரியர்கள் வாரத்தில் ஐந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் பயணம் செய்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். அயலிலிருந்து அதே பாடசாலைக்கு வருபவர்களை விட அதிக நேரம் பயணத்தில் செலவிடுகின்றனர். மேலதிக பணச்செலவு ஏற்படுகிறது. காலை மற்றும் மதிய உணவு உண்பதில் ஒழுங்கீனம் ஏற்படுகிறது.

குடும்பத்திற்கு உதவும் வாய்ப்பு அற்றுப்போகிறது. துணைவருமானத்திற்கான பொருளாதார மூலங்களைக் கைவிட வேண்டியுள்ளது. இத்தகைய பிரச்சினைகளை ஏற்று கற்பிக்கும் ஆசிரியர்க்கு உரிய வசதிகள், உதவிகள், ஊக்குவிப்புக்கள், பதவியுயர்வுக்கான வாய்ப்புக்கள், உயர் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுவதில்லை.

பாடசாலை நிர்வாகம், பெற்றோர், கல்வித் திணைக்களம், போக்குவரத்து ஏற்பாட்டாளர் சங்கம் ஆகியோருடன் கலந்துரையாடி சீரான போக்குவரத்தினை நியாயமான கட்டணத்தில் ஏற்பாடு செய்தல் அவசியம். தங்கியிருப்பதற்கான வாடகை ஏதுமற்ற வதிவிட வசதிகளும், சுகாதாரமான சத்துள்ள மதிய உணவு பெறும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டால் அவர்கள் விரக்தியைக் குறைக்க முடியும்.

நியாயமான பதவியுயர்வுகள், உயர்கல்வி வாய்ப்புக்கள் அவர்கள் பெறுவதற்கான ஒழுங்கான புள்ளித்திட்டங்களை ஏற்படுத்தி நேர்மையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அவர்களுக்கு உண்மையான நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஏற்படுத்தி அவர்கள் மன விரக்தியை அகற்றி உண்மை ஈடுபாட்டை கற்பித்தலில் ஏற்படுத்துவது அவசியம். அதை நிறைவேற்றாத வரையில் அவர்களிடம் வினைத்திறனையும், விளைதிறனையும் எதிர்பார்க்க முடியாது தானே.

## நீடித்த வேலை நேர உடன்பாடு

பாடசாலை ஆசிரியர்கள் வருடத்தில் சராசரியாக 1200 மனித மணித்தியாலயங்களே பணியாற்ற வேண்டியுள்ளது. இதில் புறப்பாடத்திட்ட செயற்பாடுகளுக்குரிய நாட்களைத் தவிர்ப்பின் கற்பித்தலுக்கான நாட்களும் பாடவேளையும் போதாது. ஒழுங்கான வரவு இல்லாத மாணவர், மெல்லக் கற்கும் மாணவர், உடல் பாதிப்புக்குட்பட்ட மாணவர் ஆகிய சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்க்கு பரிகாகரக் கற்பித்தல், மேலதிகக் கற்பித்தல் மேற்கொள்ள வேண்டும். இதற்காக ஆசிரியர்கள் ஒருநாளில் மேலதிகமாக இரண்டு மணித்தியாலமேனும் ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு கற்பிப்பவர்களுக்கான மேலதிக உதவிகள், வசதிகள், மதிப்பு, முன்னுரிமை பாடசாலை மட்டத்தில் பல சமயங்களில் வழங்கப்படுவதில்லை. இது எல்லாப் பாடசாலைகளுக்கும் உரிய குறைபாடல்ல. எனினும் பாடசாலை ஆசிரியர்களின் ஊக்கமின்மைக்கு இதுவும் காரணமாகியுள்ளது. பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஏற்படும் நிதி நேர விரயங்களைப் பாடசாலை முகாமை கண்டு கொள்வதில்லை. உள்ளார்ந்த பதவி நிலைகளும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

பாடசாலை முகாமையாளர் இவற்றுக்கென சிறப்பான ஏற்பாடு ஒன்றைச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். விளம்பரப் பலகை ஊடாகவும், ஆசிரியர் கூட்டங்களின் போதும் அவர்களுக்கு உரிய மதிப்பையும், ஊக்குவிப்பையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு செய்யத் தவறும் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் நீடித்த நேரம் பணியாற்றுவதை விரும்புவதில்லை. ஒழுங்காகப் பாடசாலைக்கு வருவதையும் விரும்புவதில்லை. பாடசாலைக்கு வெளியே தான் தமது திருப்தி, முன்னேற்றம் என்பவற்றை எதிர்பார்த்துச் செயற்படுகின்றனர். இத்தகைய நிலை தொடர்வது மாணவர்க்கும், சமூகத்திற்கும் உகந்ததல்ல. இது விரும்பத்தக்க நிலையுமல்ல.

## பெற்றோர் தொடர்பு

மாணவர் பிரச்சினைகளை அவர்களது குடும்ப மட்டத்திலான தேவைகளை பெற்றோர் பலர் நிறைவு செய்வதில்லை. இது அவர்களது அறியாமை, பொருளாதார பலவீனம், குடும்ப சமநிலையின்மை போன்ற பல நிலைமைகளுடன் தொடர்புடையது. இவற்றை அகற்றுவதில், அதனடிப்படையில் மாணவர் - குடும்ப இடைவினையுறவை வளர்ப்பதில் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்வதால் ஆசிரியர் தம் தொழிலை எளிமையாகவும், வினைத்திறனுடனும் ஆற்ற முடியும்.

இதற்கு ஆசிரியர்கள் அப்பாடசாலையின் பெற்றோருடனும், அப்பிரதேச சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளுடனும், உறுப்பினர்களுடனும் காலத்திற்குக் காலம் கலந்துரையாடுவதற்கு பாடசாலை நிர்வாகம் ஏற்பாடு செய்தல் வேண்டும். இதனால் தமது பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த முடியும். அப்போதுதான் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள், ஆளுமைச் சிதைவுகள் தொடர்பாக ஆசிரியர் வகை கூறக் கடமைப்பட்டவர்களாக முடியும். இதனைச் செய்யாது – அவர்கள் தம் கருத்துக்களை வெளிப்படுத்த வாய்ப்பளிக்காது அவர்களைப் பாடசாலையின் தோல்விக்காக குற்றம் சுமத்துவது மட்டும் நியாயமாகாது. இதனால் பல ஆசிரியர்கள் விரக்தியுடன் உறக்கமின்றி பணியாற்றி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முன்னேற்றத்திற்கு உதவுதல்

பாடசாலை ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் மேல் உயர்வதற்கு உதவும் உயர் கல்வி, மேலதிக வருமானம் பொறும் வாய்ப்பு, மேலதிக சமூகத் தொடர்பு, பதவி உயர்வு போன்றன தொடர்பான விளம்பரங்களை ஆசிரியர்களுக்காகத் தேடிப் பெற்று உரியகாலத்தில் உரிய விபரங்களுடன் பாடசாலை முகாமை வழங்க வேண்டும். அதற்காக உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவுதல் வேண்டும்.

இத்தகைய சிற்தனை மற்றும் செலலூக்கம் பல பாடசாலை முகாமையாளர்களிடம் காணப்படுவதில்லை. இத்தகைய ஊக்குவிப்புக்கள் பற்றி அறியாத அல்லது அறிந்தும் நடைமுறைப்படுத்தப்படாத பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொழில் உயர்ச்சியை இழந்து விரக்தியுடன் வினைத்திறனின்றிப்பணியாற்றி வருகின்றனர்.

இத்தகைய பல்வேறு அறைகூவல்கள் மற்றும் பிரச்சனைகள் ஆசிரியர்களின் வினைத்திறனையும் விளைதிறனையும் தொடர்ச்சியாகவே பாதித்து வருகின்றது.

### முடிவுரை

பாடசாலை மட்டத்தில் இத்தகைய பல்வேறு நெருக்கடிகளை இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர் கொள்கின்றார்கள் எனினும் உண்மையிலே மேலே விபரிக்கப்பட்ட "பலவீனமான ஆசிரியாகளே" அதிகம் பாதிக்கின்றனர். குறிப்பாக இரண்டு தசாப்த காலமாக தேசிய விருத்தி வெளிச்சம் படாதுள்ள வடக்குக் கிழக்கு ஆசிரியர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இவற்றில் கவனயீர்ப்பை ஏற்படுத்துவதே இக்கட்டுரையாளரின் இலக்காக அமைந்தது. இவை தொடர்பாக தெளிவான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன் அடிப்படையில் செயற்றிட்டங்களும் அவற்றை உள்ளடக்கிய நீண்டகால ஆசிரிய விருத்தித் திட்டங்களும் தயாரித்து கட்டம் கட்டமாக, இன நிலை மதிப்பீட்டு செய்முறைகளின் படி மாற்றியமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் -படல் வேண்டும்.

இத்தகைய விளைவுகளை உறுதிப்படுத்தும் தொழிற்பாடுகள் மற்றும் செயல்கள் பற்றி பின்வருவோர் ஆழமாக கவனம் செலுத்த வேண்டும்.

* ஆசிரிய கல்வி நிறுவனங்கள் -பல்கலைக்கழகங்கள்(திறந்த பல்கலைக் கழகம் உட்பட) தேசியக் கல்வி நிறுவகம், கல்வியியற் கல்லூரிகள்
* மாகாணக் கல்வி அமைச்சு – பல்வேறு செயலமர்வுகளை ஏற்பாடு செய்து சிறியளவில் பிரச்சினைகளைக் கண்டறிய வேண்டும். பொருத்தமான பணிக் குழுக்களை அமர்த்தி செயற்றிட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
* தொழிற்சங்கங்கள் - தமது நிதிவளம், கட்டமைப்பு ஆளணி, அதிகார முன்னுரிமை என்பவற்றைப் பயன் படுத்தி ஆசிரிய தொழிற் சங்கங்கள் ஆசிரிய நெருக்கடிகளைக் குறைப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
* அரச சார்பற்ற நிறுவனங்கள் - உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது சமூக அபிவிருத்தித் திட்டங்களுடனும், பாடசாலை ஆசிரியர்களை இணைப்பதன் மூலம் அவர்களது நெருக்கடிகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தலாம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய நிறுவனங்களில் சுதந்திரமும் சக்தியும் நிறைந்தனவாய் உள்ளன.
* ஊடகங்கள் - வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், அரங்கு என்பன இத்தகைய ஆசிரிய அறைகூவல்களை சமூகத்திற்குத் தெரியப்படுத்தி அவர்களது கவன ஈர்ப்பை ஆசிரியர்கள் பால் அதிகரிக்க வேண்டும். தமது வளங்களில் ஒரு பகுதியை அவர்களுக்கு ஒதுக்குவதற்கு உதவுவதற்கான உளப்பாங்கினை அவர்களிடம் விருத்தி செய்தல் வேண்டும்.

இத்தகைய முயற்சிகள் ஒன்றிணைக்கப் படுமாயின் ஆசிரியர்களை உறக்கம் நிறைந்த சமூகப் பொறுப்பு மிக்கஉயர் வாண்மைத் துறையினராக உயர்த்த முடியும். பாடசாலைகளின் வினைத்திறனும் விளைதிறனும் அதிகரிக்கும். சமூகம் பாடசாலைகளை சமூகத்தின் இன்றியமையாத சொத்துக்களாக ஏற்று அதனை வளர்க்க முன்வரும். இதுவே பாடசாலைகளை வெற்றிகரமான நிறுவனங்களாக மாற்றுவதற்கான புதிய உபாயமும் வழிமுறையும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்பித்தலில்

கற்பித்தலில் மாற்றம் வேண்டும் காலமிது
தப்பித்தல் ஒன்றும் நல்ல கற்பித்தல் அல்ல
அப்பன் படித்த கொப்பி மகனுக்கு உதவாது
சிற்பம் போல் மாணவரைச் சீராக்கும் சிற்பியே
நுட்பம் சொல் இந்நூற்றாண்டை வெற்றிகொள்

ஆசிரியர் கொடுப்பதற்கும் மாணவர்கள் எடுப்பதற்கும்
கல்வி ஒன்றும் கொள்ளல் கொடுத்தல் கணக்கல்ல
நீ சிறிது நான் பெரிது என்று நிலை நிறுத்த
பாடசாலை ஒன்றும் பாசிச ஆட்சியின் கூடாரமல்ல
செய்கூலி உண்டிங்கு சேதாரம் இல்லை

தலைகை - இருதயம் மூன்றும் ஒன்றாய்
மலர்வது தான் கல்வி என்றார் மகாத்மா - இன்று
முதுகுக்கும் அல்லவா மூட்டையைக் கொடுத்து விட்டோம்
பாரம் சுமக்கும் வண்டிகள் ஆனார் மாணவர் - எப்போது
பறந்து திரியும் வண்டுகள் ஆவார்?

ஐந்தாம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சை
சிறுவர் தினத்தினிலே சித்திப்புள்ளி அறிவிப்பு
ஏன் தான் பிறந்தோமென்று பிள்ளை எண்ணுமுன்னே
கற்றல் - கற்பித்தல் கட்டாயம் மாறோணும்
நாம் தான் முயலவேண்டும் கல்வி நல்லநிலை எய்தோணும்

மூன்று மணி நேரம் முற்றாய் முழுவாழ்வை
மாற்றுகின்ற இந்தப் பரீட்சை முறை மாறோணும்
தாண்டுகின்ற போது தடுக்கிவிழும் மாணவர்க்கு
ஊன்றுகோலாய் ஒரு பாடத்திட்டம் வேண்டும்
கற்பித்தல் முறை கூடக் கட்டாயம் மாறோணும்

வகுப்பறையில் புதுக்கோலம் வண்ணற்ற அலங்காரம்
வலயத்திலை இருந்து ஆரோ வருகினமாம்
அதுக்கென நீ அன்றாடம் கற்பிப்பதைக் காட்டு
புதுக்க நீ ஏதும் செய்தால் பிள்ளைக்கே சிரிப்பு வரும்
எதுக்கு இவ்வேலை? பிள்ளையை நினைக்கலை! நிலைக்கலை!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுமுறைக் கற்பித்தல்கூட நல்லதுதான் அதுக்காக
முழுதாக மாணவர்க்குப் பழுவைச் சுமத்திவிட்டு
சொகுசாக இருந்தால் சோலி முடிந்திடுமா?
இயங்காத மாணவரை செயலில் நிலைநிறுத்த
தயங்காதே தவறுகளைத் திருத்தச் சுணங்காதே

திட்டியும் தீர்த்தும் எப்பவும் பயனில்லை
கட்டிளம் பருவம் கட்டாயம் தடம் மாறும்
பத்திரம் அவர்க்குச் சொல்லிட நுட்பமுண்டு
சித்திரம் சிறுகதை கவிதை என்று நீ
அத்திசை திருப்பிட அப்புறம் மனம்மாறும்

ஏழ்மை உலைந்து எட்டிப்பார்த்தாலும்
வாண்மை விருத்திக்கு கதவைப் பூட்டாதே
நாளை உனக்கொரு நல்ல காலம் வந்துவிடும்
முயற்சியை மட்டும் முற்றாய் நீ நம்பிவிட்டால்
வளர்ச்சியை மட்டுமல்ல வெற்றியும் தந்துவிடும்

வழிகாட்டி நீ இன்று மாணவரைக் கரைசேர்க்கும்
படகோட்டியாய் நின்று – என்றும் நீ
நண்பனாய் நல்லாசிரியனுமாய் அன்பில்
தந்தையாய் தாயாய் தவறிழைக்கும் போது
என்றுமே இனிய பணி புரிந்திட வேண்டும்

புதுப்பித்தல் என்றும் கற்பித்தலில் வேண்டும்
அதுக்குத்தான் உண்டு கணினியும் கைத்தொலைபேசியும்
சலிப்பும் அலுப்பும் எப்போது சங்கமிக்குமோ
அப்போதே ஓய்வெடு வீடு செல் தப்பல்ல
கற்பதும் கற்பிப்பதும் தவமின்றி வேறல்ல

புதுமை என்றும் கற்பித்தலில் புகுத்திட
இனிமை மாணவர் கல்வியில் இணைந்திட
வருக நீர்! மாற்றமும் ஏற்றமும் தருகவே!!

**Mr.Uthesh Vickneshwaramoorthy**
**T/Sri Shanmuga Hindu Ladies College**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கல்லூரிகளும் ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சிகளும்.

இலங்கையின் ஆசிரியர் கல்வி நீண்ட வரலாறு கொண்டது. பண்டைய இந்து, பௌத்த கல்வி மரபுகளின் அடிப்படையில் குருகுலக்கல்வி நீண்டகாலமாக முக்கியத்துவம் பெற்றிருந்தது. குருகுலக் கல்வியானது ஆசிரியர் தனது நன் மாணாக்கருக்கு அறிவையும், அனுபவத்தையும், பாரம்பரியத்தையும் பாரப்படுத்தும் செயற்பாடாக அமைந்திருந்தது. குருவின் இல்லத்தையும், பன்சாலை, பிரிவெனாக்கள் போன்றவற்றையும் சூழ்ந்ததாக ஆசிரியர் மையங்கள் அமைந்திருந்தன. இன்றைய கல்வியின் தோற்றமும் வளர்ச்சியும் இவற்றிலிருந்தே ஆரம்பமானதாகும். ஐரோப்பியர் வருகையின் பின்னரே ஆசிரியர் கல்விமுறைமை பாரம்பரிய கல்வி முறையிலிருந்து வேறுபட்டு மேற்கத்திய கல்வி முறைக்கு மாற்றங்காண ஏதுவாயிற்று.

ஒல்லாந்தர் காலத்தில் நோமல் பாடசாலையென்ற ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை எழுதுவினைஞர், போதகர்கள், பிரசாரகர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் போன்றோர்களை பயிற்சியளிக்கும் நோக்கில் நிறுவப்பட்டது. 1845களில் ஆங்கிலேயர் தமக்கேற்ற தமது நாட்டுமுறையிலான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை ஆரம்பித்தனர்.

1943ஆம் ஆண்டில் கன்னங்கரா குழுவினர் தமது அறிக்கையில் ஆசிரியர் பயிற்சிக்கு முன்னுரிமை அளித்தனர். அதன் பிரகாரம் 1949இல் இலங்கையில் பல்கலைக்கழகமும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 'கல்வி டிப்ளோமா' வழங்கும்பொறுப்பினை ஏற்றுக்கொண்டது. இலவசக்கல்வி அறிமுகத்துடன் அதிக அளவில் அதிகரித்த பாடசாலைகளில் ஆசிரியர்களும் அதிக அளவில் சேர்க்கப்பட்டனர். 1960களில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் அரசுடமை ஆக்கப்பட்டதனால் ஆசிரியர் பயிற்சி தொடர்பான முழுப்பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டியதாயிற்று.

முன்னரே இருந்த நிலையங்களில் ஆசிரிய பயிற்சிக்கேள்வியினை கொடுக்க முடியாத நிலைமை காணப்பட்டதனால் பல புதிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் அக்கல்லூரிகளில் பல வித பாடநெறிகளும் புகுத்தப்பட்டன. அத்தோடு கல்வி அமைச்சு தபால் மூலமும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி முகவர் நிலைய மூலமும் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

எனினும் இவ்வாறான நிலையங்கள் அமைத்தும் ஒன்றிணைத்து ஆசிரியர் பயிற்சித் தேவைகளைத் திருப்தி கரமாகப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் ஆசிரியபயிற்சித் தேவை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இதேவேளை புதிதாக நியமிக்கப்பட்ட முதன்மை ஆசிரியர்கள் (Master Teachers) மாவட்ட ரீதியாக விசேட பாடத்துறையூடாக சேவையுள் பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு அளிக்கலாயினர். இவர்களுக்கு ஒன்றிணைந்த ஆரம்பக்கல்வி, இடை நிலைக்கல்வி போன்றவற்றில் கல்வி அமைச்சால் அறிவுறுத்தல்களும் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இவர்களே தற்போது ஆசிரியர் ஆலோசகர்களாக (In Service Advisor - ISA )வலய, கோட்ட மட்டங்களில் கடமையாற்றுகின்றார்கள். இவர்களது செயற்பாடுகளைக் குறித்து வாதப்பிரதிவாதங்கள் உண்டு. 1985ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகம் (NIE) அமைக்கப்பட்டது. அதுமுதல் ஆசிரியர் கல்வி பயிற்சி முறைகளில் மாற்றங்கள் உருவாகுவதற்கான சூழல் முன்னெடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>கல்விக் கல்லூரிகள்</u>

1985 வரை ஆசிரியபயிற்சி முறைமைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அவற்றால் எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் குறிப்பிடத்தக்கதாக இருக்கவில்லை என்பது பொதுவான அபிப்பிராயமாகும். 1980ஆம் ஆண்டுகளில் கல்விச் சீர்திருத்த வெள்ளையறிக்கையுடன் ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென தீர்மானித்த போது அனைத்து ஆசிரியர்களும் நியமனத்துக்கு முன்பே தொழில்சார் பயிற்சி பெற்றிருத்தல் அவசியம் என வலியுறுத்தப்பட்டது. மேற்கத்திய நாடுகள் சிலவற்றில் குறிப்பாக இக்காலத்தில் கல்விக்கல்லூரிகள் போன்றவற்றின் மூலம் வழங்கப்படும் ஆசிரிய சேவை முன் பயிற்சியின் முக்கியத்துவம் இங்கும் உணரப்பட்டது. இது ஆசிரிய சேவைக்கு நல்லதொரு எதிர் காலம் உண்டு என்றும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

இதன் பிரகாரம் முன்னாள் கல்வி, இளைஞர் விவகார தொழில் நுட்ப அமைச்சரும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் ஆலோசனையின் வெளிப்பாடாக கல்விக் கல்லூரிகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டன. 1985ஆம் ஆண்டு ஐப்பசி முதலாம் திகதி ஆறு கல்விக் கல்லூரிகள் தொடங்கி வைக்கப்பட்டன. அவற்றுள் களுத்துறையில் பஸ்துன்ரட்ட கல்விக்கல்லூரி ஆங்கில மொழிமூலமும், வெயாங்கொடை சியன்ன கல்விக்கல்லூரி, மீரிகம ஹாப்பிற்றிகம கல்லூரி, பண்டாரவளை ஊவா கல்விக்கல்லூரி மற்றும் நிட்டம்புவவில் சாரி புத்த கல்விக்கல்லூரி, உயன்வத்தை கண்டி மஹாவலி கல்விக்கல்லூரிகள் சிங்கள மொழிமூலமும் ஆரம்பிக்கப்பட்டன. மேற்படி இவ் ஆறு கல்விக்கல்லூரிகளும் முன்னரே ஆசிரியப்பயிற்சிக் கல்லூரிகளாக இருந்தமையே இவ்வாறு கல்விக் கல்லூரிகளாக மாற்றம் பெற்றது. புதிய முறையிலான ஆசிரிய சேவை முன்பயிற்சி நிறுவனங்களாகச் செயற்படத் தொடங்கின என்பதையும் குறிப்பிட வேண்டும்.

1986ஆம் ஆண்டு 30ஆம் இலக்க பாரளுமன்ற கல்விக் கல்லூரி சட்டத்தின் மூலம் இவற்றின் அமைப்புக்கு ஏகமானதான அங்கீகாரம் பாரளுமன்றத்தில் கிடைத்தது. இச்சட்டவாக்கத்தினால் முன்னரே அமைக்கப்பட்ட கல்விக் கல்லூரிகளுக்கு அதிகாரபூர்வ அந்தஸ்து அளிக்கப்பட்டது. இக்கல்விக் கல்லூரிகள் 1985இல் உருவாக்கப்பட்ட தேசியகல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் இயங்கும் வழிமுறைகளும் வகுக்கப்பட்டன. இக் கல்விக் கல்லூரிகளுக்கு "கற்பித்ததலில் தேசிய கல்வி டிப்ளோமா" பட்டம் வழங்கவும், படிப்படியாக கல்விமாணிப்பட்டம் வழங்கவும் ஏற்பாடுகள் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து 1987இல் அக்குரசையில் சிங்கள மொழி மூலம் நில்வள கல்விக் கல்லுரியும் தமிழ் மொழி மூலம் 1992இல் அட்டாளச்சேனையில் அட்டாளச்சேனை கல்விக் கல்லூரியும் 1993இல் வவுனியாவில் பூந்தோட்டத்தில் வவுனியா கல்விக் கல்லூரியும், 1995இல் மட்டக்களப்பில் மட்டக்களப்பு கல்விக் கல்லூரியும், 2000ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் கல்விக் கல்லுரியும், மற்றும்பேருவளையில் <u>தர்க்கா நகர்</u> கல்விக் கல்லூரியும் அமைக்கப்பட்டன. அத்தோடு ருவான்புர மற்றும் றுகுணு கல்விக் கல்லூரிகள் சிங்கள மொழி மூலம் ஸ்தாபிக்கப்பட்டன இன்று நாடளாவிய ரீதியான மொத்தம் பதினாறு கல்விக் கல்லூரிகள் ஆசிரியர் பயிற்சியை வழங்கி வருகின்றன. இவை அனைத்தையும் தேசிய கல்விக் கல்லூரிகள் என்று அழைக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் இக் கல்லூரிகள் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி ஆசிரியர்களுக்காக பயிற்சியை வழங்குகின்றன.

<u>தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு அனுமதித்தல்</u>

தேசிய கல்விக் கல்லூரி ஒன்றில் ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டுகள் சேவை முன் பயிற்சி ஒன்றைப் பயில்வதற்குத் தேவையான கல்வித் தகைமைகளையும், தகுதிகளையும் உடைய விண்னப்பதாரிகளிடம் இருந்து வருடா வருடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன்படி ஒருவரின் தகுதித் திறன்கள் மற்றும் அடிப்படைத் தகைமைகள் விண்ளப்பதாரியிடம் இருந்து எதிர்பார்க்கப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவுத்திறன்கள்: சகலவிண்னப்பதாரர்களும் இலங்கை பிரஜைகளாக இருப்பதோடு, சிறந்த ஒழுக்கமும் உடல், உள, நலம் உடையவராகவும் 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் கிறிஸ்தவ நெறிக்கு விண்னப்பிக்கின்ற மதகுருமாருக்கு வர்த்த மானியில் குறிப்பிட்ட திகதியில் 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். பௌத்தமத நெறிக்கு விண்ணப்பிக்கும் புத்தகுருமார் அல்லது பிக்குணிகள் 27 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரிகள் விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.

அடிப்படைக்கல்வித்தகமைகள் (1)க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒரேதடவையில் சித்திபெற்றிருத்தல்வேண்டும். ஸ்ரீபாததேசியகல்விக்கல்லூரிக்காக தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் இரண்டு பாடங்களைக் க.பொ.த (உயர்தரம்) கொண்டிருந்தால் போதுமானது.

(2) க.பொ.த (சா.தர) பரீட்சையில் கணிதம், சிங்களம்.'. தமிழ்மொழி உள்ளிட்ட பிரதான ஆறுபாடங்களில் இருதடவைகளுக்கு மேற்படாத அமர்புகளில் மூன்று திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். முதலாவது தடவையில் குறைந்த பட்சம் ஐந்துபாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியமானது.

பிரதான பாடங்கள் சமயம், முதலாம்மொழி, ஆங்கிலம், கணிதம், அழகியற்கலை (சித்திரம்,நடனம், சங்கீதம்,நாடகமும் அரங்கியலும்) இலக்கியம் -சிங்களம்,தமிழ்,ஆங்கிலம், அரபு அத்தோடு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக்கல்வியும் வரலாறும், தொழில் நுட்பப் பாடங்களில் விவசாயம் வியாபாரமும் . கணக்கீடும்,கைப்பணி வேலைகள் உள்ளடங்கும். மேற்படி பாடங்கள் இரு அமர்வுகளிலும் பூரணப்படுத்தாது விட்டால் மூன்றாவது அமர்விலே பூர்த்தி செய்தல் வேண்டும்.

(3) ஆங்கில மொழிப்பாடநெறி மற்றும் ஆங்கில மொழிப் பாடநெறிகளுக்கான ஆங்கிலமொழித்தேர்ச்சி.

1. ஆங்கில மொழிப்பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி (c) / ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி (s) பெற்றிருத்தல் வேண்டும்.

2. ஆங்கில மொழி பாடநெறிக்காக விண்ணப்பிப்போர் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் அதி விசேட திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் விசேட கவனம் செலுத்தப்படும். அத்தோடு க.பொ.த (சா.த) தோற்றிய பெறுபேறு கவனத்திற் கொண்டு விசேட சித்திக்கு 04 புள்ளிகளும் அதி திறமைச் சித்திக்கு 03 புள்ளிகளும் திறமைச்சித்திக்கு 02 புள்ளிகளும் சாதரண சித்திக்கு 01 புள்ளியும் வழங்கப்பட்டு மொத்தப் புள்ளிகள் கருத்திற் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

3. சித்திரம்/நடனம்/சங்கீதம்/நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய வருடத்தில் பெற்றுக் கொண்ட தரத்தின் அடிப்படையில் A சித்திக்கு 0.5 புள்ளிகளும் B சித்திக்கு 0.3 புள்ளிகளும் C சித்திக்கு 0.2 புள்ளிகளும் s சித்திக்கு 0.1 புள்ளியும் மேலதிக புள்ளி வழங்கப்படும்.

4. தகைமைகளை உறுதிப் படுத்துவதற்காக சமர்பிக்கின்ற அனைத்துக் கல்வி/தொழில் சான்றிதழ்களும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னரான தினமாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4)கல்வித் தகைமைகளும் வேறு விசேட தகைமைகளும்

தேசிய கல்விக் கல்லூரிகளில் உள்ள ஒவ்வொரு பாடநெறிகளுக்குமான கல்வித்தகைமைகளும் ஏனைய விசேட தகைமைகளும்.

பாடநெறி இல:01 ஆரம்பக்கல்வி: க.பொ.த (உ.த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அத்தோடு க.பொ.த (சா.த) சிங்களம்/தமிழ் மொழியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

பாடநெறி இல:02 விஞ்ஞானம்: (சிங்களம்/தமிழ்/ஆங்கிலமொழி மூலம்)

க.பொ.த (உ.த) பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் சிங்கள/தமிழ் மொழியில் சித்தி மற்றும் கணிதம் 32 அல்லது கணிதம் 42 இல் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் க.பொ.த (சா.த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பாடநெறி இல:03 கணிதம் (சிங்களம;/தமிழ்/ஆங்கில மொழி மூலம்)

க.பொ.த (உ.த)பரீட்சையில் பௌதீகவியல், இரசாயனவியல், கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் சிங்களம்/தமிழ் மொழியில் 34 விஞ்ஞான பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பாடநெறி இல:04 உடற்கல்வி (சிங்களம்.:.தமிழ்)

க.பொ.த (உ.:..த) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் க.பொ.த (சா/.த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, சுகாதாரமும் உடற்கல்வியும் மற்றும் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் அங்கிகரீக்கப்பட்ட மெய்வல்லுனர் போட்டிகள் ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு தொடர்பான தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். வேறுபட்ட விளையாட்டுக்கள் அல்லது நிகழ்ச்சிகள் மூன்றுக்கு ஆகக் கூடுதலான 75 புள்ளிகள் வர்த்தமானியில் குறிப்பிட்டவாறு புள்ளி 1 தொடக்கம் 25 புள்ளி வீதம் மூன்று நிகழ்ச்சிகளுக்கு வழங்க முடியும். அவை விண்ணப்பதாரி தனி/குழச் செயற்பாடுகளுக்கு தாம் பெற்ற இடங்களுக்கு ஏற்ப வழங்கப்படும்.

அத்தோடு க.பொ.த(சா.த) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்துக்கு தோற்றி பெற்றுக் கொண்ட தரத்துக்கு ஏற்ப A சித்திக்கு-05,Bக்கு-03,Cக்கு-02,Sக்கு-01 புள்ளி வீதம் மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

பாடநெறி இல:05 ஆங்கிலம்

க.பொ.த (உ.த) ஆங்கிலம் (பொது ஆங்கிலம் தவிர்ந்த) உட்பட்ட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ்,கணிதம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்/லண்டன் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தி.

பாடநெறி இல:07 இந்துசமயம்

க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் இந்துசமயம்,இந்து நாகரீகம்,சமஸ்கிருதம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அத்தோடு சைவ சித்தாந்த பண்டிதர் பத்திரம் பெற்றிருத்தல் அத்துடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம்,இந்து சமயம்,உட்பட பிரதான ஆறு(06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். மேற்படி மூன்று சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடநெறி இல:08 இஸ்லாம்

க.பொ.த (உ.த) ஒரே அமர்வில் இஸ்லாம்,இஸ்லாமிய நாகரீகம்,அரபு ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அத்தோடு அல் ஆலிம் ஆரம்ப-இறுதி பரீட்சைகளில் சகல பாடங்களிலும் சித்தி,மௌலவி சான்றிதழ்,உட்பட க.பொ.த (சா.த) பரீட்சையில் தமிழ்மொழி,கணிதத்துடன் இஸ்லாம் சமயம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். மேற்படி மூன்று சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பாடநெறி இல:09 றோமன் கத்தோலிக்கம்/கிறிஸ்தவம் (சிங்களம்/தமிழ்)

க.பொ.த(உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். மற்றும் சிங்களம்/தமிழ்மொழி,கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் பிரதான ஆறு(06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சையில் கிறிஸ்தவம் சாதாரண சித்தி அல்லது க.பொ.த (சா.த) பரீட்சையில் கத்தோலிக்கம்/கிறிஸ்தவ பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். அத்தோடு பங்குத் தந்தையின் உறுதிப்படுத்தலுடன் (கத்தோலிக்கர்), கிறிஸ்தவர்களுக்கான தேசிய கிறிஸ்தவ சபையினது சான்றிதழ் பெற்றிருத்தல்.

மேலும் இப்பாடநெறியின் தெரிவுக்கான வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக கத்தோலிக்க/கிறிஸ்தவ சபைகளினால் வழங்கப்படும் சான்றிதழ்கள் கவனத்தில் கொண்டு அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

பாடநெறி இல:10 விசேடகல்வி (சிங்களம் தமிழ்)

க.பொ.த(உ.த) பரிட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். மற்றும் க.பொ.த(சா.த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி,கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

இப் பாடநெறிக்கு தேர்வாகும் விண்ணப்பதாரிகள் பயிற்சியின் பின்னர் விசேட கல்வித்தேவையுடைய செவிடர், குருடர், மந்தபுத்தி, ஓடிசம், கற்றல் குறைபாடுகள் , பல்வேறு பலவீனங்கள் போன்ற துறைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். அதற்கான உடன்படிக்கை செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இப் பாடநெறிக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

பாடநெறி இல:11 விவசாயம் மற்றும் உணவுத் தொழில் நுட்பம் (சிங்களம்/தமிழ்).

க.பொ.த(உ.த) பரீட்சையில் விவசாயம் , உயிரியல் , இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.மற்றும் கணிதம் , விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த(உ.த) விவசாயம்/விவசாய தொழிநுட்பம்/உயிரியல்-வள தொழில்நுட்பம்/உணவுத் தொழில்நுட்பம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் கணிதம் , விஞ்ஞானம் மற்றும் விவசாயம்/ விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடநெறி இல:12 தொழில் நுட்பக் கற்கை (சிங்களம்/தமிழ்).

(A)ஆக்கவியல் மற்றும் தொழில் நுட்பவியல்

க.பொ.த (உ.த) பரீட்சையில் தொழில் நுட்பவியல் பாடத் தொடருக்குரிய வன் பொருள் தொழில் நுட்பவியல், உள்ளீட்டுக்குரிய சிவில் தொழில் நுட்பவியல்,,இயந்திரோபகரணதொழில் நுட்பவியல் ,மின்சாரம் மற்றும் இலத்திரனியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதாவதுஒன்று உட்பட மூன்று பாடங்களில் சித்தியெய்தியிருத்தல். அல்லது

க.பொ.த உ.த பரிட்சையில் எவையேனும் மூன்று மற்றும் க.பொ.த சா/த கணிதம்,சிங்களம்/தமிழ், நிர்மாணத்தொழில் நுட்பம் அல்லது இயந்திரத் தொழில் நுட்பவியல் அல்லது, ஆக்கவியல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் எதாவது ஒன்று உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல். மற்றும் பின்வரும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி/ தேசிய தொழில்நுட்ப பயிலுனர் சபை/ தொழில் பயிற்சி அதிகார சபை/ நெசவுக் கைத்தொழில் திணைக்களம்/ கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களில் மற்றும் ஏனைய மத்திய அரசு அல்லது மாகாணசபை ஒன்றின் அமைச்சு ஒன்றின் கீழ் பரிபாலிக்கப்படுகின்ற நிறுவனத்தின் முறையான சான்றிதழ் ( பத்துமாதங்களுக்கு குறையாத பயிற்சி ) பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.

(B) கலையும் கைப்பணியும் (சிற்பக்கலை)

க.பொ.த (உ.த) பரீட்சையில் எவையேனும் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். மற்றும் க.பொ.த (சா.த) பரிட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ்மொழிஉட்பட கலையும் கைப்பணியும் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். இப்பாடநெறிக்கும் ஆக்கவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பாடநெறிக்கும் வேண்டப்பட்ட பத்து மாதங்களுக்குக் குறையாத பயிற்சிநெறி கொண்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பாடநெறி இல: 13 சித்திரம் (சிங்களம்/தமிழ்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்திரபாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். மற்றும் க.பொ.த பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி/கணிதம் மற்றும் சித்திரம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்திரபாடத்தில் பெற்ற தரங்களுக்கமைய மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

பாடநெறி இல: 14 நடனம் (பரதம்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் பரதநாட்டியம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் தமிழ்மொழி மற்றும் பரதநாட்டியம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். க.பொ.த (உ.த) பரீட்சையில் நடனபாடத்தில் பெற்ற தரத்திற்கமைவாக புள்ளிகள் வழங்கப்படும்.

பாடநெறி இல: 15 சங்கீதம் (கர்நாடகம்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் கர்நாடக சங்கீதம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் தமிழ்மொழி/கணிதம் மற்றும் கர்நாடக சங்கீதம் உட்பட பிரதான ஆறு(06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். க.பொ.த (உ.த) பரீட்சையில் சங்கீதப் பாடத்தில் பெற்ற தரத்திற்கமைவாக மேலதிகபுள்ளிகள் வழங்கப்படும்.

பாடநெறி இல: 16 மேற்கத்தேயசங்கீதம் (ஆங்கிலம்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் மேற்கத்தேயசங்கீதம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச்சித்தி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில இலக்கியத்தில் சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி , கணிதம் மற்றும் மேற்கத்தேயசங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். மற்றும் கல்வியியல் நிறுவக சபையினால் மேற்கத்தேயசங்கீதம் தொடர்பாக ஐந்தாம் வகுப்பில் சித்திபெற்றிருத்தல்.

பாடநெறி இல: 17 நாடகமும் அரங்கியலும் (தமிழ்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் உட்பட மூன்று (03)பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

மற்றும் க.பொ.த (சா.த) தமிழ்மொழி , கணிதம் நாடகமும் அரங்கியலும்/ நடனம்/ சித்திரம்/ சங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

பாடநெறி இல: 18 தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (ஆங்கிலம்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்உட்பட மூன்று (03)பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல். மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச்சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி உட்பட கணிதபாடத்தில் திறமைச்சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையின் போது முன்னுரிமை அளிக்கப்படும்.

அல்லது

க.பொ.த (உ.த) எவையேனும் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல். மற்றும் க.பொ.த (சா.த) ஆங்கில மொழியில் திறமைச்சித்தி/ ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் கணித பாடத்தில் திறமைச்சித்தி உட்பட சிங்களம்/ தமிழ்மொழி யோடு பிரதான ஆறு (06) பாடத்தில் சித்திபெற்றிறுத்தல். மேற்படி விண்ணப்பதாரிகளுக்கு புறவய வகையான வினாக்கள் கொண்ட ஒன்றரை மணித்தியால வினாத்தாள் மூலம் தேர்வுகள் இடம் பெறும். இப்பரீட்சைக்கு சிங்களம் , தமிழ் , அல்லது ஆங்கில மொழி மூலம் தோற்ற வேண்டும்.

பாடநெறி இல: 20 தாய்மொழி (தமிழ்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் தமிழ் பாடத்தில் திறமைச்சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தி. மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் தமிழ்மொழியில் திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

பாடநெறி இல: 21 இரண்டாம்மொழி (சிங்களம்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் சிங்களமொழி மொழியில் திறமைச்சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தி மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்களமொழி கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். இப் பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும் போது க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டாம் மொழி தமிழ் பாடம் அல்லது அரசகருமமொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி தமிழ் உயர்பாடநெறி அல்லது விருப்பத்துக்குரிய தமிழ் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு ஒழுங்கு முறையில் முன்னுரிமை வழங்கப்படும்.

பாடநெறி இல: 22 இரண்டாம்மொழி (தமிழ்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் தமிழ்மொழியில் திறமைச்சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் கணிதம் , தமிழ்மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். இப் பாடநெறிக்குச் சேர்த்துக்கொள்ளும் போது க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்கள பாடம் அல்லது அரசகருமமொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி சிங்களம் உயர்பாடநெறியில் சித்தியடைந்த அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்துக்குரிய தமிழ் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு ஒழுங்கு முறையில் முன்னுரிமை வழங்கப்படும்.

பாடநெறி இல: 23 மனைப்பொருளியல் (சிங்களம் / தமிழ்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் மனைப்பொருளியல் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் மற்றும் விஞ்ஞான பாடத்தில் திறமைச்சித்தியுடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் கணிதம் , சிங்களம் /தமிழ்மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

பாடநெறி இல: 24 சமூகவிஞ்ஞானம் (சிங்களம் / தமிழ்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் வரலாறு , அரசியல் , புவியியல் ஆகிய பாடங்களில் எவையேறும் ஒன்று (01) உட்பட எவையேறும் மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் சமூகக்கல்வியும் வரலாறும் திறமைச்சித்தியுடன் சிங்களம் /தமிழ்மொழி மற்றும் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

பாடநெறி இல: 25 வணிகமும் கணக்கியலும் (சிங்களம் / தமிழ்).

க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணக்கியல் மற்றும் வணிகக் கல்வி உட்பட மூன்று பாடங்களில் சித்தி மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சையில் வணிகமும் கணக்கியலும் /முயற்சியான்மைக்கல்வி /கணிதம் எனும் பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தி மற்றும் ஆங்கில மொழியில் திறமைச்சித்தி உட்பட சிங்களம் /தமிழ்மொழியுடன் பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

இதுவரை பிரதானமாக கல்விக்கல்லூரிகளின் தோற்றம் மற்றும் அவற்றுக்கு ஆசிரியபயிலுனர்களை சேர்த்துக்கொள்ளும் போது கவனத்திற் கொள்ளும் நடைமுறைகள் பற்றி குறிப்பிடப்பட்டது. இந் நடைமுறைகள் காலத்துக்குக் காலம் கல்வி அமைச்சினால் தேவைக்கேற்ப மாற்றம் மேற்கொள்ளப்படும்.

இக் கட்டுரையின் நோக்கம் எமது தமிழ்மொழி மூல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுபுள்ளிகளைத் தாராளமாகக் கொண்டிருக்கும் கணிசமானோர் கல்விக்கல்லூரியையே நாடுகின்றார்கள். காரணம் தொழில் உத்தரவாதம் மற்றும் ஆசிரியர் தொழிலில் உள்ள ஆர்வம் என்பனவாகும். அதிலும் குறிப்பாக பெண்பாலார் கூடுதலாக விரும்பி ஏற்கும் துறையாக அமைகின்றது. அப்படி இருந்தும் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு பாடங்களை தெரியும் போதும் , பின்னர் க.பொ.த (உ.த) வகுப்புகளுக்கும் விசேடமாக கலைத்துறைப் பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் போது வளமான எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பாடங்களைத் தெரிவு செய்வதற்கு இக் கட்டுரை பயனளிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

எஸ். பாக்கியராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “සිසුන් සොයා යන ආලෝකය ඔබයි අප ගුරුතුමෙණී.”

එදවස පවා අප පාසලේ දුවපැන     එනවා
මතකයි තාම ඔබගේ මුව සිප     එනවා
ඒ සැම තුළම ඔබගේ උණුසුම     දැනුනා
මගේ ගුරුතුමෙනි සැමදා ඔබ     දිදුළනවා

ගුරුවරු යන්නෙහි වටිනා අරුත     අනේ
අඳුර- දුරු කරන්නා ලෙසටයි සැළ     කෙන්නේ
පාසලේ පවා සඳ මිනි පහනත්     ඔබනේ
එයිනුත් මගේ රට ජාතිය බැබ     ළෙන්නේ

අහස් තලේ හිඳ කියූ     වියදා
සත්සමු දුර දිය කඳ     යොදවා
කියා නිම කළ ගනු බෑ ගුරු     සොදවා
ඔබගේ ගුණ     සමුදා

සිසු පරපුරේ දී න මිඹබ පෙරමුණ     ගන්නේ
එහිදී සැවොම ඔබ හට අවනත     වන්නේ
ඔබ හට හිත රිදෙන වදනක් ඇතමෙක්     පවසන්නේ
එනමුදු ඔබේ නම් නෑ සිත කැළ     ඹෙන්නේ

මනමේ කුමරු සියකුල සිරිතට ද     පුතේ
ශිල්පය හැදෑරුවේ ඔහුගේ අඳුරන්ගෙන්ය     පුතේ
තුටු පඬුරවත් රැගෙන ගියේ ගුරුතුමන්     වෙතේ
තම රූපවත් දියණිය ඔහුහට භාර     වෙතේ

අටලෝ දහම කම්පා වෙන තැන දී     පවා
දවසින් දවස අළුතින් යම් දේ     එනවා
දෙලොවක් අතර මැද දී වුවද     දරුවා
එසැම සානුකම්පිතව බලනට ඔබ වෙර     දැරුවා



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


කෙතරම් දේ විද්‍යාවෙන් සෙව්වත්
ඒ සැම පරදවයි දරුවනි ආගමට අපෙත්
නිවනට යා යුත්තේ දරුවනි ඔබත් අපත්
හැදූ වැඩූ මව්පියන් ගුරුන් අපත්

දවසින් දවස අඳුර ඔබට අතවනයි පුතේ
නුඹ ලැබූ කිරේ මී පැණිවත් බේරවන් පුතේ
දහඩිය කඳුළු වැගුරුවා ගේ ළඟ වැට අයිනේ පුතේ
ඒ සැම පරදවයි ඔබේ ගුරුතුමා දුන් බව දනක් පුතේ


සිප්කිරි පෙන් වූ මුසිලයින් අද කාලේ
නව මං පෙතකට ආලෝකය උදා කලේ
අඳුර නොව දරුවනි එළියයි උදා කලේ
සැම දණ නමව් එතුමට අද කාලේ

ලොව ඇති මහා උත්තමයෙකි ඇඳුරුතුමා
ස්වර්ගය මෙන්ම නිරය ද පෙන්වා දුනි එතුමා
නිසිමඟ කියා දී අප හදවත විවර කලා
සැම දණ නමව් නිතරොම එතුමට පසහ තබා

දරුවන් ඔබගෙ ආලෝකය අමතනවා
දැනුමෙන් දහම නෙතු ඔ ,බඅප හට සෙත දෙනවා
සිරගේ නොගොස් සාපය ඔබහට නොදෙන්වා
තම චරිතය සුචරිවත් වී දරුවා සොදවේවා



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய பாடசாலைத் தலைவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் தீர்வுக்கான சில உபாயங்களும்

தரமான சமூக உருவாக்கத்திற்கான பாடசாலைச் செயற்பாட்டில் இன்று பாடசாலைத் தலைவர்கள் பல்வகை சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. தரமான சமூக உருவாக்கத்திற்கான கல்வி, மாணவர் மையக் கல்வி, ஆளுமை விருத்திக்கான கல்வி என பல்வகையில் கூறப்பட்டாலும் - இன்று பரீட்சைமைய – பெறுபேற்று மையக் கல்வியே எனும் நிலையுள்ளது. சமூக எதிர்பார்ப்பும் இதுவாகவே உள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகளே பாடசாலையின் நிலையை தீர்மானிக்கும் காரணியாக உள்ளது. இதனால் பல பாடசாலைகள் பரீட்சைப் பெறுபேற்றை சிறப்பாகப் பெறமுடியாமல் பாடசாலைத் தலைவர்கள் பல்வகை சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகளுக்கும் தேவையான வளங்களுக்குமிடையே தொடர்புகளுள்ளன.

பாடசாலைகள் பல்வகைத் தரங்களிலும், பல்வகைத் தரப்படுத்தலிலும் உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அவை மாணவர் தொகை, பிரதேச சனத்தொகை, அமைவிடங்கள், மற்றும் பௌதீக வளங்கள், தேவையான ஆளணிவளங்கள் முதலானவை இதில் செல்வாக்கு செலுத்துகின்றன. பலவகைத் தரங்களிலுமுள்ள பாடசாலைகளை இன்றைய அதிபர்கள் சிறப்பாக செயற்படுத்துவதற்காக முயற்சித்துக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. வினைத்திறனான செயற்பாடுகளிலிருந்தும் பாடசாலைச் சமூகம் எதிர்பார்க்கும் வினைதிறன் - பெறுபேறுகளை பெறமுடியாமையினால் பல்வகை சவால்களுக்கு முகங்கொடுக்க நேர்கின்றமை தவிர்க்க முடியாதுள்ளது.

பாடசாலைகளில் பல்வகைகளாக 1AB,1C வகை II, வகை III, தேசிய பாடசாலைகள் என்றும், நவோதய பாடசாலை, இசுறு பாடசாலை மற்றும் மகிந்தோதய 1000ம் பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தில் உள்ள பாடசாலைகளோடு 5000 (ஐயாயிரம்) ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தித் திட்டம் இதனுள் Child friendly பிள்ளை நேயப்பாடசாலைகள் போன்ற பல்வகைத் தன்மைகளாக பாடசாலைகள் இயக்கப்படுகின்றன. அத்துடன் நகரப் பாடசாலைகள், கஷ்டப் பிரதேச, அதி கஷ்டப் பிரதேச பாடசாலைகள் என்ற வகுதிகளும் உள்ளன. நகர்ப்புறத்திலும் ஏனைய வளங்கள் இருந்த போதும் சமூக வளம் குறைவான நிலையில் பின்தங்கிய நிலையிலும் சில பாடசாலைகள் உள்ளன.

பாடசாலை ஊட்டப்பிரதேசத்தில் வாழும் சமூகத்தின் கல்வி, பொருளாதார, சமூகக் காரணிகளின் செல்வாக்கு பாடசாலைகளின் அடைவுமட்டத்தில் தாக்கம் செலுத்துகின்றன. அத்துடன் பாடசாலையின் பௌதீக வளங்கள், ஆளணி வழங்கலும், அதிபரின் முகாமைத்துவத்திறன், தலைமைத்துவ பாங்குகளும் முக்கிய பங்காற்றுவதை அவதானிக்க முடிகின்றது.

பரீட்சைப் பெறுபேறுகள் குறைவடையும் போது பெரும்பாலான பங்கை அதிபரிடத்தில் சுமத்தப்படுவதையும், சிறப்பான பெறுபேறுகள் கிடைக்கும் போது அதிபர்களும் பாராட்டப்படுவதைக் காணலாம்.

சகல வளங்களுமுள்ள சிறந்த உள்ளீடுகளையுடைய பாடசாலைகள் தொடர்ந்து சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றன. மாறாக சமூக வளமின்றியும், பல்வகைத் தேவைக் குறைபாட்டுடன் இயங்கும் பாடசாலை அதிபர்கள் கூடுதலான நேரம் பல்வகை முயற்சிகளை மேற்கொண்டாலும் சிறந்த பெறுபேற்றையும் பெறமுடியாது அதிபர்கள் விரக்தியும் சோர்வும் அடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எமக்கு வளமான பாடசாலைகளத் தந்தால் தற்போது அப்பாடசாலைகள் பெறும் பெறுபேற்றிலும் கூடுதலான அடைவைக் காட்டுவோம்' என பின்தங்கிய பாடசாலை அதிபர்கள் கூறுவதில் உண்மையில்லாமலில்லை.

இன்று தேவையான பல வளங்களையும் கொண்டுள்ள நகர்ப்புற பாடசாலைகளின் பெறுபேறுகளிலும் வீழ்ச்சிப் போக்கை காண முடிகின்றது. கல்வி, பொருளாதார, கலாசார, சமூக அந்தஸ்து முதலான சமூக வளமும் - தேவையான பௌதீக ஆளணி வளங்களிலிருந்தும் பெறுபேறுகளில் வீழ்ச்சி காணப்படுகின்றமை அவதானிக்க முடிகின்றது.

எனவே பெறுபேற்றுகளுக்கும் - ஏனைய உள்ளீட்டு வளங்களுக்குமிடையிலும் பெரும்பாலான தொடர்பிருப்பினும் மாறாக – எதிர்மறையான விளைவுகளும் கிடைக்கின்றமை – முகாமைத்துவ – தலைமைத்துவ திறனின்மையே காரணம் எனக் கூறலாமா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதுள்ளது.

இன்று பாடசாலைகள் சிறந்த பெறுபேறுகளை பெற முடியாமைக்கான முக்கிய காரணிகளாக

1. சமூகக் காரணிகள்
   - i. பெற்றாரின் கல்வி , பொருளாதார, சமூக வளமின்மை, மாணவரின் வரவின்மை / வரவு குறைவு
   - ii. கற்பதற்கான வீட்டுச் சூழலின்மை
   - iii. பாடசாலை தவிர்ந்த வேளை கண்காணிப்பின்மை
   - iv. சமூக – கலாசார சீர்கேடுகளுக்குட்படுதல்
   - v. சகபாடிகளின் சீரற்ற தொடர்புகள்
   - vi. கல்வியில் நாட்டம் செலுத்தாமை
   - vii. சிறந்த பொழுதுபோக்கின்மை
   - viii. பாடசாலைக்குள்ளும் வெளியிலும் நெறிபிறழ்வான நடத்தைக் கோலங்கள்

   முதலான பல காரணிகளைக் காணலாம்.

2. பௌதீக வளக் காரணிகள்
   - i. பௌதிக வளப்பற்றாக்குறை

     கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், கணனி அறைகள், விளையாட்டு மைதானம் - உபகரணங்கள் நூலகம் கற்றலுக்கான துணைச் சாதனங்கள் இன்மை
   - ii. இவைகளை சிறப்பாக பராமரிக்கும் முகாமைத்துவ திறனின்மை
   - iii. பௌதீகவள முகாமைத்துவம் சரியாக கடைப்பிடிக்காமை

3. பாடசாலைக் காரணிகளாக
   - i. ஆசிரியர் பற்றாக்குறை
   - ii. தேவையான ஆசிரியரின்மை / இருந்தும் பயனின்மை
   - iii. விஞ்ஞான, கணணி ஆய்வுகூட பயிற்றப்பட்ட ஆளணியின்மை
   - iv. ஆசிரியர்களுக்கு சேவை பயிற்சியின்மை
   - v. பாடசாலை சீராக நடைபெறாமை
   - vi. ஒழுங்கு, ஒழுக்கம் பேணப்படாமை
   - vii. கற்றல் கற்பித்தல் நடைபெறாமை / குறைவாக நடைபெறுதல்
   - viii. பிள்ளை நேய முறைமைகள் கடைப்பிடிக்காமை
   - ix. பாடசாலைக் கவின்நிலை இன்மை
   - x. வகுப்பறைக் கவின்நிலையின்மை
   - xi. பாரபட்சமான – செயற்பாடுகள் பிள்ளைகள் பாதிக்கப்படல்
   - xii. முகாமைத்துவ , தலைமைத்துவ நுட்ப பயிற்றப்பட்டோர் குறைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xiii. கலைத்திட்ட முகாமைத்துவம் உரிய முறைப்படி நடைபெறாமை போன்ற பாடசாலைக் காரணிகளைக் குறிப்பிடலாம்

4. பாடசாலைச் சூழல் காரணிகள்
   - i. கஸ்டப்பிரதேச, அதிகஸ்டப்பிரதேச பாடசாலைகளின் நிலைகள்
   - ii. பாடசாலைக்கான சமூக வளம், ஏனைய வளங்களை பெறமுடியாமை
   - iii. நகருக்கும் பாடசாலைக்குமிடையேயான தூரம்
   - iv. போக்குவரத்து குறைவும் / இன்மையும்
   - v. ஆசிரியர்களுக்கான வதிவிட வசதிகள் மற்றும் அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்ய முடியாமை
   - vi. பாடசாலைச் சமூகம் பாடசாலையில் அக்கறையின்மை
   - vii. பாடசாலைக்கு சமூக பாதுகாப்பின்மை

போன்ற பல காரணிகள் இன்றைய பாடசாலை பரீட்சை பெறுபேற்றில் தாக்கம் செலுத்துவதால் பல அதிபர்கள் பல்வகைக் கஸ்டங்களுடன் கடினமாக உழைத்தும் சிறந்த பெறுபேறுகளை பெறமுடியாது விரக்தி நிலையில் உள்ளனர்.

இன்றைய பாடசாலைகளில் குறைவான பெறுபேற்றுக்கு பல்வகைக் காரணிகள் தாக்கம் செலுத்தினாலும் - பல சவால்களையும் வெற்றிகொள்ளக்கூடியதாக பல நுட்பமுறைகளை கடைப்பிடிக்கலாம்.

- பாடசாலைச் சமூகத்தை திசைக் கோட்படுத்தி சமூக பங்குபற்றலை தூண்ட வேண்டும்
- பாடசாலையின் ஊட்டப்பிரதேச சமூக, பொருளாதார, கல்வி நிலையை அறிந்து எதிர்கால மேம்பாட்டிற்காக சமூகத்தை மேம்படுத்தவும் செயற்றிட்டங்களை வகுத்து கல்வி, பொருளாதார நிலைகளை உயர்த்த தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கலாம்
- சமூகம் பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் உதவுதல் எனும் கூற்றை நிறைவுறச் செய்தல்

பாடசாலையின் பௌதீக வளங்கள், ஆளணி வளங்களைப் பெறுவதற்காக பாடசாலைச் சமூகத்தை பயன்படுத்தி தேவைகளை நிறைவு செய்தல்

பாடசாலைத் தலைவர்கள் ....

1. பாடசாலைக்கு பொருத்தமான தொலைநோக்கு (Vision) பணிக்கூற்றுகளை (Mission) பூரண விளக்கத்துடன் அமைத்தலும் செயற்படுத்தலும்

2. பாடசாலைக் கவின்நிலையை ஏற்படுத்துதல்
   பாடசாலைச் சூழல் அழகுடையதாயும், மாணவர்க்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் பாடசாலையில் விரும்பும் நாட்டமும் உடைய ரம்மியமான கவின் நிலையை தோற்றுவித்தல்

3. வகுப்பறைக் கவின்நிலைகள்
   வகுப்பறைகள் கவின்நிலையுடையதாயும் 'பேசும் சுவர்கள்' எனும் எண்ணக்கருவுக்கமைவாக – மாணவர்கள் விரும்புவதும் சுயமாகக் கற்கக்கூடியதாயும் அமைந்திருத்தல்

**முகாமைத்துவ நுட்பங்களை நடைமுறைப்படுத்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவம் என்பது 'இருக்கும் வள்ங்களைக் கொண்டு உச்சப்பயனைப் பெறுவதற்கான வினைத்திறனான செயற்பாடுகள்' எனலாம்.

பாடசாலைகளில் குறிப்பாக

மனிதவள முகாமைத்துவம்

பிரதி, உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள் முதலான ஆளணியினரை இன்றைய கல்வி நோக்கங்கள், குறிக்கோள்கள், கலைத்திட்டங்களை அறிந்தவர்களாகவும் சிறப்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை தெரிந்தவர்களாகவும் - மாணவர்களின் நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்தக் கூடியவர்களாக ஆசிரியர் அபிவிருத்தித் திட்டத்தில் நெறிப்படுத்தி செயற்படுத்துதல்

- மாணவர்களுடன் அன்பாகவும் அவர்களைப் பூரணமாக விளங்கிக் கொண்டவர்களாகவுமிருந்து உதவுதல்
- மாணவர்கள் சுயமாக தம்மை தாமே அறிந்தவர்களாகவும் தாம் இலக்கு வைத்து கற்கக்கூடியவர்களாகவும் (Student tract) செயற்படுத்துதல்
- உ-ம் - ஒருவரின் கணித பாட புள்ளி 25 எனின் அடுத்த பரீட்சையில் தான் அடுத்த கட்ட இலக்கை நிர்ணயித்து செயற்படுதல் 25 புள்ளியை 40 ஆக உயர்த்துதல் பின்னர் 50 ஆக உயர்த்தி தாமாக முயற்சிக்கக் கூடியவாறு வழிப்படுத்தல்
- கற்றல் திறன் Learning Skils மாணவர்கள் ஒவ்வொரு பாடத்தையும் எந்த முறையில் எவ்வாறு கற்க வேண்டுமென்று கற்கச் செய்தல் (உ-ம்) கணித வாய்பாடுகளை மனனம் செய்யத்தான் வேண்டும். கூடுதலான பயிற்சிகளை விரும்பி செய்யும் போது அவ்விடயம் பரீட்சையமாகிவிடும். பரீட்சைகளை இலகுவாக வெற்றி கொண்டு சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியும்

ஆசிரியர்களுக்கு

P.D.C.A, Action Reserch செயல்நிலை ஆய்வுக் கற்பித்தல் நுட்பங்கள் ஊடாக குறைநிலையிலுள்ள மாணவர்களை அடுத்த கட்டத்திற்கு குறிப்பிட்ட நாட்களுள் பிரச்சினையை தீர்த்து வைத்தல்.

வருட ஆரம்பத்தில் மாணவர்களின் நிலை 30% மாக இருந்தால் (சராசரிப்புள்ளி 30) ஒவ்வொரு மாதமும் குறைந்தது 5% த்தால் உயர்த்துவதற்காக திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். முன்னேற்றகரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதில் மாணவர், பெற்றார், ஆசிரியர்கள் கூட்டாக இணைந்து செயற்பட்டு வெற்றி பெற வேண்டும்.

பாடசாலைச் சமூகத்துடன் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்துதல் வேண்டும். குறைந்தது மாதாந்தம் வகுப்பு ரீதியாக பெற்றார், ஆசிரியர் மாணவர்கள் சந்திப்பு ஏற்படுத்த வேண்டும். மாதாந்தம் ஒவ்வொரு பாடரீதியாகவும் அலகுப்பரீட்சைகளை நடாத்தி மாணவர் நிலை பற்றி விடைத்தாள்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தி குறைகளை உடன் நிவர்த்தி செய்தல் வேண்டும்.

முரண்பாடற்ற முகாமைத்துவம்

அதிபர்

- பிரதி , உதவி அதிபர்கள் , ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றார்களுக்கிடையில் முரண்பாடற்ற நிலை காணப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Resfect Others மற்றவரை மதிப்போம் என்ற கல்வியமைச்சின் கூற்றுக்கமைவாக செயற்படல். அனைவரும் ஒரே அணியாக இணைந்து Team work இலக்கை நோக்கி செயற்படல்.
- அனைத்து விடயங்களிலும் வெளிப்படைத்தன்மையாக அதிபர் - பாடசாலை செயற்படவேண்டும்.
- நிதி முகாமைத்துவம் உரிய விதி முறைப்படி நடைபெறச் செய்தல்
- நேர முகாமைத்துவம் சிறப்பாக அமைதல்
- பாடசாலை ஆரம்பம் - மாணவர் ஆசிரியர்களின் வரவு உரிய நேரத்திற்கு முன்பாக அமைதல்
- வருடாந்த திட்டத்திற்கு அமைவாக உரிய காலத்தில் உரிய வேலைகளை முடிவுறுத்தல்
- 40நிமிட பாடவேளைகள் மிகவும் பயனுள்ள வகையில் செயற்படச் செய்தல்
- இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட அடிப்படையில் உரிய நேரத்திற்கு தொடங்குதல் முடித்தல் செயற்பாடுகள் ஒவ்வொரு நிமிடம் பயனுறுதியுள்ளதாய் அமைதல்

**பௌதீக வளமுகாமைத்துவம்**

இருக்கும் வளங்களையும், இனி வரவிருக்கும் வளங்களையும் சரியாக பராமரித்தல் வேண்டும் (Maintenance) 5S. 6S முறைகளை நடைமுறைப்படுத்தி வளங்களின் உச்சப்பயனைப் பெறுதல்

**கலைத்திட்ட முகாமைத்துவம்**

நேரசூசி, பாடத்திட்டம், பாடக்குறிப்புகள், கணிப்பீடுகள், மதிப்பீடுகள் தேர்ச்சிகள் விசேட செயற்திட்டங்கள், நவீன கற்பித்தல் முறைகள் , ஆசிரியர்களின் கற்பித்தல் அறிவுத் தேவைகளை இற்றைப்படுத்தல் கற்பித்தலில் நவீன தொழில்நுட்பங்களை – செயன்முறைகளை செயற்படுத்துவதற்கான திட்டங்களின் அடிப்படையில் நிறைவு செய்தல்

உள்ளக மேற்பார்வை மூலம் காணப்படும் நலிவுகளை மேன்மைப்படுத்த நடவடிக்கை எடுத்தல். வெளிவாரி மேற்பார்வையாளர்களை அழைத்து மேலும் உதவிகளைப் பெறுதல், கல்வியலாளர்களை, கல்வித்தொழில்நுட்பமுடையோரின் ஆலோசனைகளைப் பெற்று மேம்படுத்துதல்

பாடசாலைகளில் 3C யை செயற்படுத்துதல்

1. Communication - சிறந்த தொடர்பாடல்
2. Comitment - அர்ப்பணிப்பு
3. Change - மாற்றம்

இவை முகாமைத்துவகுழுவினர், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரிடத்தும் சிறப்பான செயற்பாட்டிற்கு இட்டுச்செல்ல வழிவகுக்கும்

ஒரு பாடசாலை மேற்கூறப்பட்ட சில நுட்பங்களை வினைத்திறனாக செயற்படுத்தின் பாடசாலையின் வெற்றி வெகுதூரத்தில் இல்லை.

'முடியாது என்று சொல்லாதே' 'இயலாது என்றும் ஒதுங்காதே' 'உன்னால் முடியும்' என சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கமைவாக பின்னிலைப் பாடசாலைகளை முன்னேற்ற முடியும்.

'சிறந்த பாடசாலைகள் சிறந்த சமூகத்தை தோற்றுவிக்கும்' சிறந்த சமூகம் சிறந்த பாடசாலைகளைத் தோற்றுவிக்கும்

திரு. ஆ.செல்வநாயகம்,
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,(கல்விமுகாமைத்துவம்)
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

People's Bank
Sisu Udana
An outstanding future generation

## "சிசு உதான" மாணவர் சேமிப்புக் கணக்கு

1. 1ம் ஆண்டில் பாடசாலையில் அனுமதிக்கப்படும் மாணவர்கள் அனைவருக்கும் ரூபா.500/- அன்பளிப்பு.
2. 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் 1ம்இ 2ம்இ 3ம் இடங்களுக்கு 25,000/-, 15,000/-, 10,000/- பணப்பரிசுகளுடன் சித்தியடையும் அனைவருக்கும் பரிசில்கள்.
3. மாதாந்த வட்டி புத்தகத்தில் பதிவு செய்யப்படுவதுடன் ஒவ்வொரு தொகைக்கும் மாணவர்களுக்கான உபகரணங்கள் அன்பளிப்பு.

## ஆசிரியர்களுக்கு

1. சகல தேவைகளுக்குமான கடன் ஒரு பிணையாளருடன் ரூபா.500,000/- வரை குறைவான வட்டி வீதத்தில்
2. அரச சலுகை வட்டி அடிப்படையிலான விரைவான வீடமைப்புக் கடன்கள்.
3. கையடக்க தொலைபேசி வங்கி சேவை, இன்ரனெட் வங்கி சேவை, பாதுகாப்பு பெட்டக வசதி ,கடன் அட்டை வசதி போன்ற உயர் தர இலவச சேவைகளும் உபசரிப்பும்.




**உயர் பாதுகாப்பிற்கும் தரமான சேவைகளுக்கும்**
**அரச வங்கியான மக்கள் வங்கியை நாடுங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்...



எமது கல்விவலயத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட CSDI பிரிவினர் இம்முறையும் நித்திலம் கல்விச்சஞ்சிகை வெளியீட்டினை மிகச் சிறப்பான முறையில் நிறைவுறச் செய்திருக்கின்ற இத்தருணத்தில் "தினைத்துணை நன்றிசெய்பினும் பனைத் துணையாகக் கொள்வார் பயன்தெரிவார்" என்ற வள்ளுவனின் வாக்குக்கிணங்க நன்றிநவில வேண்டியது எமது மரபாகும். இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளைக் கடந்து செல்கின்றது. இப்பிரிவின் செயற்பாடுகளில் பல புதிய செயற்பாடுகளை இணைத்து எமக்கு நல்ல ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி, எம்மை ஊக்கப்படுத்தி ஊக்குவித்த எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய வலயக்கல்விப்பணிப்பாளர் திரு. N.விஜேந்திரன் அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

எமது "நித்திலம்" சஞ்சிகைக்காக வாழ்த்துக்களையும் ஆசியுரைகளையும் மனமுவந்து வழங்கிய சமயப் பெரியார்கள், கௌரவ கல்வி அமைச்சர் (கிழக்குமாகாணம்), முதன்மைச் செயலாளர், கல்விச் செயலாளர் மற்றும் கிழக்குமாகாணக் கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் பல்வேறு வகையான ஆக்கங்களை வழங்கிய சிரேஷ்ட விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இக்கல்விச் சஞ்சிகை வெளியீடு தொடர்பான செயற்பாடுகள் அனைத்திற்கும் தேவைப்பட்ட நிதியுதவிகளைச்செய்துதவிய எமதுவலயத்திலுடைய கணக்காளர் செல்வி.S.அமுதா அவர்களுக்கும் அவருடன் சேர்ந்து தொழிற்பட்ட ஏனைய நல்லுள்ளங்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அலுவலர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் எமக்கு நிதியுதவிவழங்கிய திருக்கோணமலை பிராந்திய மக்கள்வங்கி முகாமையாளருக்கும் அவருடன் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கிய திருக்கோணமலை பிரதானகிளை முகாமையாளருக்கும், திருக்கோணமலை யாழ் சேவிஸ் ஸ்ரேசன் உரிமையாளர், திரு.T.பாஸ்கரன் அவர்களுக்கும், திருக்கோணமலை மாவட்ட சர்வோதைய இணைப்பாளர் ஏ.தீவராஜ் அவர்களுக்கும், E-Net நிர்வாக இயக்குனர் கலைச்செல்வன் அவர்களுக்கும், எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சஞ்சிகையைசரவை(Proof) பார்த்துசிறப்பாக வெளிவர உதவிய எமது கல்விவலய ஆசிரிய ஆலோசகர்களான திருமதி. R. அமிர்தலிங்கம், திருமதி. I. ரகுந்திரராஜா, செல்வி.த.சாரதா அவர்களுக்கும் எங்கள் அன்பு நன்றிகள்.

மேலும் இன்றைய கல்விச்சஞ்சிகை வெளியீட்டிற்காக பாடசாலையை தந்துதவிய அதிபர்.திரு.S.ஆனந்தசிவம் அவர்களுக்கும் அவர்களோடு ஒத்துழைத்த பாடசாலைச் சமூகத்தினர்க்கும் மாணவர்களுக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சஞ்சிகை அச்சுப்பதிப்பிற்காக எம்மோடு முன்னின்று உழைத்த ஆசிரியர் திரு.டே.மகரதன் அவர்களுக்கும் மற்றும் SS Digital's நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.கோ.செல்வநாயகம்,**
கோட்டக்கல்விப்பணிப்பாளர், (குச்சவெளி)
வலயக்கல்வி அலுவலகம்,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# National & International Qualifications at One Place in Trincomalee

# ENET

**Certificate, Diploma and Higher Diploma, Degree, Masters ...**

- IT, Computer Science, Computer Applications
- JAVA, C++, C#, .Net, VB, SQL,
- Video Editing, Web and Graphic Designing
- Management, Marketing, Accountancy, HRM-UK
- Finance and Banking – UK
- Accounting Packages Peachtree, Sage, Accpac, Tally, QB etc...
- AutoCAD (2D, 3D)
- Hotel and Tourism

**ACTS – Academy of Communications Theatre & Speech**

The emerging academy that offers courses in Communications theatre and speech in Trincomalee. **ACTS** offers English language courses for Students of all ages, School leavers, job seekers and professionals. **ACTS** curriculums are designed to offer the best to its learners to face the challenges of the fast moving market place. We are now collaborating with Institute for Examinations for Music & Speech IEMS Examinations (Pvt) Ltd, British Voice over festival and AWS institute of Education SL.

Registrations are open for IEMS, IELTS, TOEFL, Examinations, English for Teachers, English for Legal & Business Studies

www.open-the-door.eu www.voflanka.com





## TEST IT/ ICDL Sri Lanka  Accredited Testing and Training center

Certify your skills to the international standard!

International Computer driving License (UK) - More 160 countriesincluding Sri Lanka approved IT qualifications

The International Computer Driving License (ICDL) offers candidates an internationally - recognized certification that is supported by Governments, Education Systems, International organizations and Commercial Corporations alike. It is a high - quality, internationally recognized certification designed, and approved by academic and international experts from around the world. Each ICDL module consists of practical and up- to-date skills which are validated by a test www.testit.lk

Approved Test Centre

ICDL

## The Chartered Institute for Securities & Investment UK Accredited Testing and Training center

*The Chartered Institute for Securities & Investment (CISI) is the largest and most widely respected professional body for those who work in the securities and investment industry in the UK and in a growing number of financial centers globally. Evolved from the London Stock Exchange, we now h ave more than 40,000 members in 110 countries. In the past year, we set almost 37,000 examinations in 74 countries, covering a range of vocational qualifications. www.cisi.org*

CISI CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

## University of North West – Sri Lanka Campus (ENET College)

*ENET College of Business and Technology (ECBT) http://www.unw.ac/Contacts/campuses-page2.htm#Asia partnership with UNIVERSITY OF NORTH WEST – USA, UK www.unw.ac is creating opportunity for North and East youth and Professionals including government and Private sector to obtain an internationally recognized degree qualification in Sri Lanka. It also holds certificate of good standing, issued by US Department of Treasury. University of North West London Campus is registered with Department for Education & Skills (DfES)United Kingdom, which enables international students to secure visas as per the new regulations. All degrees can be verified by US State Department and embassy.*

## The Accelerated Skills Acquisition Programme (ASAP)Accredited Testing and Training center

*Endorsed by the United States Agency for International Development ( USAID ), and by the Ceylon Chamber of Commerce, ASAP is the only certified Soft Skills training programme in Sri Lanka. To ensure the continuity of the efforts undertaken to date to support the development of the young workforce in Sri Lanka, USAID has appointed "Skills for Life" as the Licensee for ASAP in Sri Lanka.*

**Young Workers Capacity Development – Career Success Skills for Workers,**
**Training for Young Entrepreneurs – Business/ Entrepreneurship Skills,**
**Comprehensive Curriculum – Career Skills/ English Language Skills/ Computer Skills**

Skills for Life

# ENET College of Business & Technology

Government Approved Training Centre (Reg No TVEC – P19/0035)

189, Thirugnanasampanther Street, Trincomalee, TP /Fax 0262226367, 0267211142, 077285286

enetcollege@gmail.com info@enetcollege.edu.lk , www.enetcollege.edu.lk

ENET Information Technology Management Systems (Pvt) Ltd.

**Our college is located in the EAST Link Communication Building, Next to Zonal Education Office Trincomalee, Close to Cargils Food City , ABANS & Central Finance PLC Trincomalee**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print By: SS Digital's - 0777695635